# சாமி. சிதம்பரனார் நூற் களஞ்சியம்

12



- சிதம்பரனார் சீர்திருத்தப் பாடல்கள்
- இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு
- உமர்கய்யாம் கவலையற்று வாழ்
- சிந்தனைச் செய்யுள்
- புதுக்குறள்
- அறிவு (கவிதை)

ஆசிரியர்
தமிழறிஞர் சாமி. சிதம்பரனார்

# சாமி.சிதம்பரனார் நூற் களஞ்சியம்

## 12

சிதம்பரனார் சீர்திருத்தப் பாடல்கள்

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு

உமர்கய்யாம் கவலையற்று வாழ்

சிந்தனைச் செய்யுள்

புதுக்குறள்

அறிவு (கவிதை)


ஆசிரியர்

**தமிழறிஞர் சாமி.சிதம்பரனார்**



**தமிழ்மண் பதிப்பகம்**

தியாகராயர் நகர், சென்னை - 600 017.

பேசி : 044-24339030

## நூற்குறிப்பு

நூற்பெயர் : **சாமி.சிதம்பரனார் நூற் களஞ்சியம் – 12**

ஆசிரியர் : **தமிழறிஞர் சாமி.சிதம்பரனார்**

பதிப்பாளர் : **கோ. இளவழகன்**

மறு பதிப்பு : 2013

தாள் : 16.0 கி. மேப்லித்தோ

அளவு : 1/8 தெம்மி

எழுத்து : 11.5 புள்ளி

பக்கம் : 8 + 424 = 432

படிகள் : 1000

விலை : உரு. **405/-**

நூலாக்கம் : டெலிபாய்ண்ட்
சென்னை - 5.

அட்டை
வடிவமைப்பு : கா.பாத்திமா

அச்சு : வெங்கடேசுவரா
ஆப்செட் பிரிண்டர்ஸ்
இராயப்பேட்டை, சென்னை - 14.

கட்டமைப்பு : இயல்பு (சாதாரணம்)

வெளியீடு : **தமிழ்மண் பதிப்பகம்**
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொ.பே : 24339030



தமிழறிஞர் சாமி.சிதம்பரனார்

பிறப்பு : 01.12.1900

மறைவு : 17.01.1961

# பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டு தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை சேர்த்த நூற்றாண்டாகும். இந் நூற்றாண்டில் தமிழுக்கு அருந் தொண்டாற்றியவர்கள் வரிசையில் **அறிஞர் சாமி. சிதம் பரனாரும்** ஒருவர். பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை 1939ஆம் ஆண்டு **தமிழர் தலைவர்** எனும் நூலினை முதன் முதலில் எழுதி அவரிடமே ஒப்புதல் பெற்று வெளியிட்டவர் **அறிஞர் சாமி.சிதம்பரனார்.** தந்தை பெரியாரின் தலைமையில் கலப்புமணம் செய்து கொண்ட சீர்திருத்த முன்னோடி.

இவர் எழுதி வெளிவந்த நூல்கள் 65 என்று அறிஞர்கள் பதிவில் காணப்படுகிறது. இதில் எங்கள் கைக்குக் கிடைத்த நூல் களை காலவரிசையில் பொருள்வழிப் பிரித்து **சாமி.சிதம்பரனார் நூற்களஞ்சியம்** எனும் தலைப்பில் தமிழ் உலகம் பயன்பெறும் வகையில் வெளியிட்டுள்ளோம். கைக்குக் கிடைக்கப் பெறாத ஏனைய நூல்களைத் தேடியெடுத்து எதிர்வரும் ஆண்டில் வெளியிட முயலுவோம்.

தம் எழுதுகோலை பொழுதுபோக்குக்காகவோ பிழைப்புக் காகவோ கையாளாத தன்மானத் தமிழறிஞர். தம் எழுத்தை இலட்சிய நோக்குடன் தமிழர்களின் நலனுக்காக எழுதியவர். **தனித்தமிழியக்கம் - நீதிக்கட்சி - திராவிடர் கழக** ஈடுபாடு கொண்டவர். பன்முகப் படைப்பாளி. புதிய பார்வையுடன் திருக்குறளின் அருமை பெருமைகளை ஆழ்ந்து அகழ்ந்து காட்டி யவர். சங்க நூல்களில் பரத்தையர் நட்பு கண்டிக்கப்படவில்லை என்பதையும், திருக்குறள் ஒன்றில்தான் முதன்முதலாகப் பரத்தையர் நட்பு கண்டிக்கப்படுகிறது என்பதையும் தம் நூல் களில் பதிவு செய்தவர்.சித்தர்களின் வாழ்க்கை முறைகளும், சித்த மருத்துவத்தின் அருமை பெருமைகளும் இவர் நூல்களில் மிகுந்து காணப்படுகின்றன.

பட்டமும் - பதவியும், செல்வமும் - செல்வாக்கும், இளமை யும் - அழகும், பொன்னும் - பொருளும் மாந்த வாழ்வில் நிலையற்றது. கல்வி அறிவு ஒன்றுதான் நிலைத்து நின்று மாந்தர்

வாழ்வில் புகழ் சேர்ப்பது என்பதை படிப்பவர் நெஞ்சில் பதியும் வண்ணம் எளிய தமிழில் தம் நூல்களில் பதிவு செய்தவர்.

**சிலப்பதிகாரம்** - அரசியல் புரட்சியை அறிவுறுத்த எழுந்த நூல். **மணிமேகலை** - சமுதாயப் புரட்சியை அறிவுறுத்த எழுதப்பட்ட நூல். **ஐம்பெருங்காப்பியங்கள்** புலவர்கள் போற்றும் பெருமைக்குரிய பழந்தமிழர் பண்பாட்டுச் செல்வங்கள், சாதி வேற்றுமையையும், பெண்ணடிமைத்தனத்தைக் கண்டித்தும். பிறப்பால் வேற்றுமைப் பாராட்டப்படும் கொடுமைகளுக்கு ஓங்கிக் குரலை கொடுத்தவர்.

> "பகுத்தறிவுப் பார்வையுடன் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாகத் தமிழ் மக்களின் வாழ்க்கையையும் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டையும், நாகரிகத்தையும் தெளிவு படுத்தியவர் இவர். முற்போக்கு இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராய்த் திகழ்ந்தவர். புலமை மிக்க தமிழ் அறிஞராக இருந்தபோதும் அவர் பழைமைவாதியாக இருக்கவில்லை. சமுதாய மாற்றத்தையும் பரிணாம வளர்ச்சியையும் கணக்கில் கொண்டு தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்தவர். பிற்போக்கு வாதிகளால் உருவாக்கி விடப்பட்ட பல கட்டுக் கதைகளையும் கற்பனைகளையும் இவருடைய கட்டுரைகள் தவிடுபொடியாக்கின."

என்று திரு.டி.செல்வராஜ் அவர்கள் இப்படி பதிவு செய்கிறார். (நூல் - சாமி.சிதம்பரனார் - வெளியீடு - சாகித்திய அகாதெமி)

காலமாற்றத்தை கணக்கில் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்யும் இவரின் பகுத்தறிவுப் பார்வை அறிஞர் உலகம் எண்ணத்தக்கது. இவருடைய எழுத்துக்களில் ஆழ்ந்த சமூக அக்கறையும், தொலைநோக்குப் பார்வையும் படிந்து கிடக்கிறது. தமிழ் இலக்கியம், பண்பாடு, நாகரிகம், தமிழர்களின் தொன்மை பற்றி ஆய்வு செய்ய முனைபவர்களுக்கு இந்நூற் களஞ்சியங்கள் பெரிதும் பயன்படும் என்ற நோக்கில் இதனைத் தொகுத்து வெளியிட்டுள்ளோம். இதனைத் தொகுத்தும். பகுத்தும் இந்நூற் களஞ்சியங்கள் வெளிவருவதற்கு எமக்குத் துணையாயிருந்த எம் பதிப்பகப் பணியாளர்கள், நூல்கள் கொடுத்துதவியவர்கள், கணினி, மெய்ப்பு, அச்சு, நூல் கட்டமைப்பு செய்து உதவிய அனைவருக்கும் எம் நன்றி.

**- பதிப்பகத்தார்**

# உள்ளுறை


## சிதம்பரனார் சீர்திருத்தப் பாடல்கள்

| | |
|---|---|
| *முன்னுரை* | *3* |
| *இந்நூல் உரிமை* | *4* |
| *வேண்டும்* | *5* |
| *அறிவுப்பகுதி* | *6* |
| *ஒற்றுமைப் பகுதி* | *17* |
| *புரோகிதப் பகுதி* | *28* |
| *பாட்டாளர் பகுதி* | *40* |
| *மாதர் பகுதி* | *58* |
| *மதப் பகுதி* | *82* |

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு

| | |
|---|---|
| *இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு* | *103* |

## உமர்கய்யாம் கவலையற்று வாழ்

| | |
|---|---|
| *முன்னுரை* | *131* |
| *சிறப்புரை* | *140* |
| *உமர்கய்யாம் பாடல்கள் (ரூபயாத்)* | *141* |

## சிந்தனைச் செய்யுள்

| | |
|---|---|
| *அணிந்துரை* | *187* |
| *சிந்தனைச் செய்யுள்* | *191* |
| *கடவுள் எங்கே?* | *234* |

| | |
|---|---|
| பஞ்சப் பேய் | 249 |
| கால மழையில்லை | 252 |
| சுழல் காற்று | 254 |
| மழை! கோடை மழையின் சிறப்பு | 256 |
| மழை ! மழை !! | 259 |
| உழுவோர் உரிமை | 261 |
| உழைப்போர் கண்ட உண்மைச் சுடர் | 264 |
| உழைப்பே உயர்வு | 267 |
| வெற்றி | 269 |
| சேர்ந்து வாழ்வதே சிறந்தவலிமை | 270 |
| வாழ்க சுதந்திரம் | 272 |
| உலகப் பெரியார் காந்தி | 274 |
| அண்ணலுக்கு அஞ்சலி | 277 |
| ஆ! என்ன அழகு! | 279 |
| இலக்கியச் சோலை | 280 |
| கலை உணர்ச்சி | 282 |
| திரைப்படத்தின் தெளிவுரை | 284 |
| இன்பநெறி | 287 |
| நாட்டின் மேன்மை | 288 |
| முந்துவோம் | 290 |

## புதுக்குறள்

| | |
|---|---|
| பதிப்பாசிரியர் குறிப்பு | 295 |
| நூலாசிரியர் முன்னுரை | 297 |
| 1. அரசியல் | 300 |
| 2. சமூகவியல் | 325 |
| 3. அறிவியல் | 350 |
| 4. பொதுவியல் | 367 |

## அறிவு (கவிதை)


| | |
|---|---|
| இந்நூல் உரிமை | 381 |
| தமிழ்ப் பெருமகனார் | 382 |
| அறிஞர். சாமி. சிதம்பரனார் | 384 |
| மறக்க முடியாத தமிழறிஞர் | 386 |
| திருக்குற்றாலம் தரும் நலம் | 388 |
| அறிவு “சீர்திருத்தப் பாடல்கள்” | 389 |
| கல்வியின் பயன் | 407 |
| கல்வி வளர்ப்பீர் | 409 |
| சுதந்தரக் கூத்து | 411 |
| ஆக்கமும் அழிப்பும் | 415 |

# சிதம்பரனார்
# சீர்திருத்தப் பாடல்கள்

(1929)

# முன்னுரை

*இதில் உள்ள பாடல்கள் பலவகைப்பட்டவை; கட்டுரை போல் படிக்கத் தகுந்தவை; இசை யுடன் பாடற்கேற்றவை; புதுக் கருத்துக்கள் பொலிவன; பழமைகளில் தீயனவற்றைக் கண்டிப்பன; புதுமையில் உள்ள நன்மை களைப் போற்றுவன. அதிதீவிரக் கருத்துக்கள் அமைந்தவை. இப் பாடல்கள் பலப்பலசமயங் களில் பாடப்பட்டவை; பலபத்திரிகைகளிலும் வெளிவந்தவை; அவைகளின் தொகுப்பே இவை. இந்நூலைத் தமிழர் படித்துச் சீர்திருத்த வாதிகளாக வேண்டும் என்பதே நமது ஆசை. இதன் இரண்டாம் பாகம் விரைவில் வெளி வரும். வேண்டுவது அன்பர்களின் ஆதரவே.*

*ஆசிரியர்,*

# இந்நூல் உரிமை

மனிதர்களைச் சுதந்தரராய்
        வாழ்விக்க மனங்கொண்டே
நனியுழைக்கும் நீர்திருக்க
        வீரர்களாம் நல்லறிஞர்
புனிதமுறு பெருந்தொண்டைப்
        போற்றுதற்கோர் அறிகுறியாய்
இனிமை மிகு செந்தமிழ் நூல்
        இதை உரிமை செய்கின்றேன்.

ஆசிரியர்

# வேண்டும்

இவ்வுலகதனில் இன்பவாழ் வடைவதற்கு
ஏற்றநல் நெறிகளை இயம்பும்
செவ்விய நலஞ்சேர் செந்தமிழ் மொழியைச்
சீர்பெறச் செய்திடல் வேண்டின்
பல்வகைப் புதிய கவிதைகள் கலைகள்
பண்புற ஆக்கிடல் வேண்டும்;
ஒல்வகை அறிஞர் ஆய்வுரை நூல்கள்
உதவிட முன்வரல் வேண்டும்.

*சாமி சிதம்பரனார்.*

# அறிவுப்பகுதி

## வெற்றி

1. நிச்சயம் வெற்றி கிடைத்திடும் உண்மை,
நினைக்கும் நினைப்பில் உறுதியும் கொண்டால்;
இச்சக மீதினில் சோர்வுகள் இன்றி
என்றும் முயற்சிகள் செய்திடல் வேண்டும்;
அச்சம் அடைந்திடும் தன்மை அழிப்பாய்!
ஆண்மை யுடன்செயல் செய்யமுன் நிற்பாய்!
கச்சையை நன்கு வரிந்து நீ கட்டி
காரண காரியம் கண்டு புரிவாய்!

2. நித்தமும் தோல்வி நிகழ்ந்திடு மேனும்
நின்மனம் சோர்ந்து குழைந்திடல் தீது;
எத்தனை தீமைகள் வந்தன வேனும்
என்செய்வோ மென்று தளர்வது நீக்கு!
சக்தியை நழுவிடச் செய்வது வேண்டாம்!
சந்ததம் ஊக்கம் கொண்டு முயல்வாய்!
எத்தொழில் செய்யினும் யாவினும் வெற்றி
எய்துதல் நிச்சயம் என்ப துணர்வாய்!

3. ஆத்திரம் கொண்டெதும் செய்திடல் வேண்டாம்
அறிவில் உணர்ந்தபின் செய்கை புரிவாய்!
நேத்திரம் யாவினும் சோர்வின்மை கண்டாய்!
நீ யிந்த உண்மை மறந்திடல் வேண்டாம்!

சாத்திரம் பார்த்து வினைசெயல் ஏனோ?
சமயம் இடம்பொருள் கண்டு புரிவாய்!
காத்திரன் ஆகியே வெற்றி பெறுவாய்!
கலக்கம் இன்றிநற் காரியம் செய்வாய்!

## அறிவே விடுதலை

### ஆனந்தக் களிப்பு
### பல்லவி

அறிவே விடுதலை என்போம் - அதுவே
அனைவர்க்கும் இன்பம் அளித்திடும் என்போம்.

### சரணங்கள்

1. ஆயிரம் ஆண்டுகள் செய்த - செய்கை
ஆயினும் அறிவற்ற தாயிடின் அவற்றைச்
சீயெனத் தள்ளி யிகழ்வோம் - மிகவும்
சிறப்புடன் வாழும் வழியறிவோமே (அறிவே)

2. மேதினி யில்வாழும் மக்கள் - யாரும்
மேன்மைக் குலத்தினில் ஒன்றெனக் கொள்வோம்
சாதி மதமெனும் பேய்கள் - தம்மைச்
சாடி யழித்துத் தகர்த்திடு வோமே (அறிவே)

3. சாதி மதங்களை நாட்டும் - கெட்ட
சாத்திர நயவஞ்சக் கோட்டைகள் யாவும்
ஆதி கடையொடும் போக - மிக்க
ஆத்திர மோடெரி மூட்டி யழிப்போம் (அறிவே)

4. அறிவுக்குச் சுதந்தரம் தந்தே - மக்கள்
அன்புடன் வாழ்க்கை நடத்திடின் இங்கே
வறியவர் ஆகித்துன் புறுவோர் - தங்கள்
வாழ்வைச் சுகம்பெற நடத்துவர் கண்டீர் (அறிவே)

5. பெருநிதி தான் என்ப தறிவே - இதைப்
பெரிதும் மனத்தினிற் கொள்ளுமின் இனிதே
அரும் பொருள் எத்துணை பெறினும் - இங்கே
அறிவினுக் கவையெல்லாம் ஒப்பல்ல காணீர்! (அறிவே)

6. ஆண்மையும் ஊக்கமும் அறிவே - அதுவே
அருஞ்செயல் பற்பல செய்திடத் துணையே
மேன்மையும் செல்வமும் அறிவே - பூமி
மீதினில் பொய்யிருள் நீக்கிடும் ஒளியே (அறிவே)

7. புத்தியில் காணாத தொன்றும் - இந்தப்
பூவுல கத்தினுள் இல்லையே என்போம்
எத்திசை நோக்கினும் இச்சொல் - எல்லார்
நெஞ்சிலும் சொல்லிலும் நிற்கவேசெய்வோம் (அறிவே)

8. அறிவிற்கு நலமென்று தோன்றும் - செயல்
ஆற்றுங்கால் ஆயிரம் துன்பங்கள் வரினும்
சிறிதும் பொருட்படுத்தாமல் - நாம்
சிந்தித்தப்படி செயல் செய்வதே ஆண்மை (அறிவே)

## அறிவு வளர்ப்போம்

("பாரத தேசமென்று பெயர்சொல்லுவார்" என்பதுபோல)

### பல்லவி

அறிவு வளர்ப்போம் நல்ல ஆண்மை பெறுவோம்
அன்புவளர்ப்போம்! மக்கள் துன்பம்ஒழிப்போம்! (அறி)

### சரணங்கள்

1. காலமென்னும் பெரு வெள்ளந்தன்னை எதிர்த்தால் - நாம்
கருதுகின்ற இன்பம் ஒன்றும் பெறமாட்டோம்
காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப - நல்ல
காரியங்கள் செய்துயர்ந்த வாழ்வுபெறுவோம் (அறி)

2. பூமிதனில் உள்ள பொருள் யாவும் காண்போம் - உயர்
புதுமைகள் மெஞ்ஞானங் கொண்டு தெளிவோம்
நாமினிமேல் தெய்விகப் பேச்சை நம்போம் - என்றும்
நடுநிலை நின்றுண்மைக் காட்சி காண்போம். (அறி)

3. நீலத்திரை மேல்உலவி நாடு காண்போம் - எங்கும்
நிற்கும் மலைத்தோற்றங்கண்டு புத்தி வளர்ப்போம்
மேலிருக்கும் வானில்ஒளிர் காட்சி காண்போம் - அதன்
மெய்மைகண்டு பகுத்தறி வாளர் ஆவோம் (அறி)

4. வழக்கத்தை விட்டுவிட மாட்டோம் என்றே - பிடி
வாதமிடும் மூடமதி கொல்லு வோமே
பழக்கமென வெறுஞ்செய்கை இனிச்செய்யோம் - கெட்ட
பாதைசென்று முட்டுப்பட்டுச் சாகமாட்டோம் (அறி)

5. முன்னவர்கள் செய்ததென்று முற்றும் கொள்ளோம் - பின்னர்
மூண்டசெயல் எனவொன்றும் தள்ள மாட்டோம்
என்னசெய லேனுமதைச் செய்வ தாலே - பெரும்
இன்பம்வரும் ஆயின்அது செய்து வாழ்வோம் (அறிவு)

6. மண்குதிரை தன்னைநம்பி நீரில் இறங்கி - உயிர்
மாளும்பேதை மனிதரைப் போலவே நாம்
எண்ணில்பெரும் பொய்யுலகம் காட்டி நம்மை - என்றும்
இன்னல் செய்யும் சாத்திரங்கள் நம்பமாட்டோம் (அறி)

7. பாலர் மரப்பாச்சிகளைத் தூக்கி நின்றே - இந்தப்
பாரில் விளையாடுவது போல நாமும்
மூலையெங்கும் கோவில்களைக் கட்டிப் பொம்மை - கொண்டு
மூட விழாச்செய்து பொருள் நட்டம் பண்ணோம் (அறி)

8. மக்களொரு சாதியென கண்ணிற் கண்டும் - இந்த
மாநிலத்திற் பலசாதி பேதம் செய்தார்
மிக்க முழு மூடர் அவர் வார்த்தை நம்போம் - நாம்
மேன்மைபெற ஒன்று பட்டு வாழுவோமே (அறி)

9. சாதிமத தேச நிற பேதம் நீக்கி - மக்கள்
சாதியொன்றே உண்மை யென்று கொண்டுவாழ்வோம்
தீது செய்யும் காரியங்கள் முற்றும் நீக்கி - இன்பத்
திரைக்கடல் மூழ்கிவிளை யாடுவோமே (அறி)

10. துன்பமின்றி நரமுலகில் வாழுமாறே - பல
தொழில்களும் யந்திரங்கள் கொண்டு புரிவோம்
இன்பசுவைத் தேனைவிட்டு வேம்பு நுகரோம் - மண்ணில்
எழும்விஞ் ஞானம்விட்டு மதங்கள் நம்போம். (அறி)

## பகுத்தறிவின் மாட்சி

(இராகம் - வராளி. தாளம் ஆதி.)

### பல்லவி

பாடுவோமே - துள்ளிப் பாடுவோமே
பகுத்தறிவுணர்ச்சியைப் பெற்று விட்டோமென்று (பாடுவோமே)

### சரணங்கள்

1. மூடு பனி போன்ற மதக்
கூட்டம் எல்லாம் - இங்கு
மூண்டபகுத் தறிவென்னும்
சூரியன் முன்னே
ஓடியொளிக்கின்றஒரு
காட்சி கண்டோம் - உண்மை
ஓங்கிவளர் விஞ்ஞான
மாட்சி கண்டோம் (பாடுவோமே)

2. சாதியழிந் தோடுகின்ற
காலம் வந்ததே - கெட்ட
சமயமழிந் தோடுகின்ற
காலம் வந்ததே

ஆதியழிந் தோடுகின்ற
காலம் வந்ததே - நல்ல
அறிவுளர்ந் தோங்குகின்ற
காலம் வந்ததே (பாடுவோமே)

3. சாத்திரங்கள் பொய்மொழியே
என்ப தறிந்தோம் - அவை
சஞ்சலங்கள் தந்தனவே
என்ப துணர்ந்தோம்
ஆத்திரங்கொண் டவையெல்லாம்
தீயில் எரிப்போம் - பெரும்
அன்புப்பயிர் ஓங்கிடவே
எங்கும் வளர்ப்போம் (பாடுவோமே)

4. கண்ணுமனங் காயங்கட்கும்
எட்டா ஒன்றே - இந்தக்
காசினியில் வாழ்வோரை
ஆட்டுமென்றே
மண்ணுலக வாழ்வுபோக
வார்த்தை பேசி - நம்மை
மயங்கவைக்கும் குருவென்போர்
வஞ்சம் போக்கி (பாடுவோமே)

5. எங்குஞ் சென்று சுதந்தர
நாதஞ் செய்வோம் - நாம்
எல்லோரும் ஒன்றெனவே
போதஞ் செய்வோம்
இங்குறையுஞ் சோம்பேறி
வாழ்க்கை போக்கி - மிக
இன்பமுடன் வாழ்ந்திருக்கும்
வாழ்வை யாக்கி (பாடுவோமே)

6. பொய்மொழிகள் பேசுவோரின்
வாழ்வு போச்சே - தர்ப்பைப்
புல்லினுக்குப் பணிவோரின்
தாழ்வு போச்சே
மெய்மொழிகள் பேசுவோரின்
வாழ்வும் ஆச்சே - இந்த
மேதினியில் எங்குஞ்சம
வாழ்வும் ஆச்சே (பாடுவோமே)

## அறிவே செல்வம்

("கற்பிற்சிறந்த எந்றன் கனியே" என்பது போல)

### பல்லவி

மண்ணில் உயர்வு நல்ல அறிவே
பெருந்திருவே! உயர்தருவே! அது குருவே!

### அநுபல்லவி

எண்ணிடில் இதனையே எதிர்க்கும்மோர் குணமே
இங்கே இலை மனத்தே நினைந்திடும் தினமே,
பொங்குறும் பெரிய சுகம் பொலிந்திடும் வனமே,
பொய்யை அறிந்தே மதி சேரும்
அன்பர்யாரும் துயர்தீரும் சுகம்ஆரும் (மண்ணில்)

### சரணம்

கல்வி யறவிழந்து கவலையுற்றீரே
தேவர் அருள் எனவே திகைப்புமுற்றீரே
கள்ளர் மொழிகள் நம்பி கருத்திழந்தீரே
கண்ட கொடுமை குறை யாதும்
பெருந்தீதும் இனிப்போதும் இதையோதும் (மண்ணில்)

குந்த இடமிழந்து கொடுமைப் பட்டீரே
நாளும் பிணி மிகுந்தே நலிவடைந்தீரே
இந்த நிலத்தில்மதி இழந்து பட்டீரே
இன்பஞ்சிறக்கும் இந்தக் காலம்,
இனிமேலும் அனுகூலம் பெருஞ்சீலம் (மண்ணில்)
உண்ணும் பொருளிருந்தும் உணவு மற்றீரே
ஈனஞ் செய் மனிதரால் இழிவு பெற்றீரே
பண்ணும் நலமும் இன்றி பலமிழந்தீரே
எண்ணும் உயர்ந்த மதிதேடும்
உண்மை நாடும் துயர் ஓடும் ஜெயம் கூடும். (மண்ணில்)

## உண்மை நாடுதல்

("பாண்டியன் ஈன்ற மீனாட்சி" என்பதுபோல)

### பாட்டு

நாடுவோம் உண்மை முன்னேற்றம் - இதனை
நாளும் நீர் போற்றும்!
கூடுவோம் ஒற்றுமை தோற்றும் - அடிமை
குலையுமே தேற்றம்! (நாடுவோம்)

### தொகை.

நமதுரிமை யறியாமல் வாழ்கின்ற வாழ்வினால்
நலமென்ன உண்டு சொல்வீர்!
சமரச மொடுகூடி மனிதர்கள் ஒன்றாகச்
சார்வதே இன்பம் கண்டீர்! (நாடுவோம்)

### பாட்டு

காணுவோம் மதஞ்செயும் சூது - அதன்பின்
வைதிக மிங்கேது?

பேணுவோம் அறிவைஎன் றோது - இன்றேல்
பெருகுமே தீது. (நாடுவோம்)

## தொகை

காட்சிக்கும் யூகைக்கும் ஒவ்வாத பொய்களைக்
கழறிடும் குருக்கள் மாரால்
மாட்சிவரும் எனநம்பிப் பொருள்தந்து துன்புறும்
மடமையை அகற்றுவீரே! (நாடுவோம்)

## பாட்டு

சீறுவோம் வஞ்சகர் காட்டும் - சாத்திரம்
சொல்லும் பொய்க்கூட்டம்;
சேருவோம் சுதந்தர நாட்டம் - அதுநம்
சிறுமையை ஓட்டும் (நாடுவோம்)

## ஆராய்ந்து பார்!

1. அவர்சொன்னார் இவர்சொன்னார் என்று நம்பி
அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்!
எவர் சொன்ன சொல்லேனும் அதனை உன்றன்
இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய்!
தவறான வழியினிலே ஓட்டி னாலும்
தான் போகும் விலங்கல்ல அப்பா நீதான்!
அவமானம் ஒன்றின்றி வாழ்வில் வெற்றி
அடைந்திடுவாய்! அறிவுதனைத் துணையாக்கொள்வாய்!

2. பாழான இருட்டறையில் புகுந்து நின்று
பலபொருளும் பார்த்தறிதல் கூடாதப்பா!
கீழாக உள்ளனவும் காண மாட்டாய்!
மேலாக இருப்பனவும் தெரியா தங்கே;
வாழாமல் நமையழிக்கச் சுயநலத்தார்

வைத்திட்டார் மதம் என்னும் இருட்டறைக்குள்;
ஆழாதே! அதற்குள்ளே, சொல்லிவிட்டேன்!
அறிவென்னும் வெளிச்சத்தை ஏற்றிப் பார்ப்பாய்!

3. மாறாத ஒருநிலையில் நிற்பாய் என்று
மதக்காரர் கூறும்உரை நம்பாதே நீ!
நேராகப் பார்த்தறிந்து பரிசோதித்தே
நிலைநாட்டும் விஞ்ஞான முறைகள் தேர்வாய்!
தேராமல் சுயநலத்தார் பேச்சைநம்பித்
தேசத்தார் முழுமூடர் ஆகிநின்றார்;
ஊரார்கள் எதிர்த்தாலும் அச்சமின்றி
உண்மையென அறிந்தபடி நடந்துகொள்வாய்

## மகிழ்ந்து வாழ்!

1. வாட்டமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கே
வழிகள்சில சொல்லுகின்றேன் கவனமாய்க் கேள்!
நாட்டினிலே உனைக் குறித்து மற்ற மக்கள்
நவில் உரைகள் நோக்காமல் கருமஞ் செய்வாய்!
“கூட்டு பலவீனமுடன் நோயடைந்து
குறையுற்றோம்” என வெண்ணிக் கவலை கொள்ளேல்!
காட்டுமுன்பு தலைவனிடம் பணிபுரிவாய்!
காலத்துக் கேற்றபடி நடந்து கொள்வாய்!

2. ஆண்மைதனை உயிரென்றே கொள்வாயானால்
அவனியிலே உனக் கென்றும் கவலையில்லை.
மாண்புதரும் மனைவி தான் எவ்விதத்தும்
மகிழ்ந்துன்றன் வசமொழுக நடந்து கொள்வாய்!
வீண் செயலே எதிர்காலங் குறித்துக் கேட்டல்;
விரும்பி முயல் வருநாளில் சுக முறவே;
நீண்ட வெதிர்காலத்தின் வாழ்வினையும்
நேர் மரணம் பற்றியும் நீ கவலைகொள்ளேல்!

3. இந்தவிதம் நீ வாழ்வு நடத்து வாயேல்
இளவெயிலிற் குளிர்காய்வார் போல் மகிழ்ந்தே
சந்ததமும் தேனுண்ட வண்டின் போல்
சாரிகம் பதநிசப்பண் பாடி நிற்பாய்!
அந்தரத்தில் உலவி வரும பறவை போல
அனுதினமும் துயரின்றிக் குதூகலிப் பாய்!
சிந்தை தனில் இவ்வுண்மை மொழியே கொள்வாய்!
சினேகிதர்க்கும் எடுத்துரைத்துக் கவலை தீர்ப்பாய்!

# ஒற்றுமைப் பகுதி

## வேடம் அழிப்பீர்

("கரும்புத் தோட்டத்திலே" என்பது போல)

1. வேடம் பலவணிந்தே - இங்கு
வேற்றுமை தோன்றிட வாழும மனிதரே!
நாடும் மனத்தினிலே; இந்த
ஞாலத்து மக்களுள் ஒற்றுமை செய்யவே
கூடும் சுகம் உடனே! - என்றும்
கொள்ளுங்கள் உங்கள் அறிவில் இவ்வுண்மையை;
ஓடுந் துயர் ஒழிந்தே - நல்ல
ஒற்றுமையோடு சமத்துவம் ஓங்குமே. (வேடம்)

2. உச்சிக் குடுமிகளால் - இந்த
உலகினில் வஞ்சகம் செய்கின்ற தேசதுக்கோ?
வைச்சு மயிர்தனையே - நீங்கள்
வளர்த்து முடிவதில் என்ன பயனுண்டோ?
சிச்சீ மயிர்தனிலே - பேதம்
செய்யும் வழக்கத்தை விட்டு விடுங்களே!
இச்சை கொள்ளும் மயிரால் - மண்ணில்
ஏதும்பலனில்லை வேற்றுமை போக்குவீர்! (வேடம்)

3. நாமம் குழைத்திடுவீர்! - சிலர்
நன்றென்று சாம்பலும் கரியும் அணிகுவீர்!
சேமம் வரும் எனவே - மனம்

சிந்தித்துக் குங்குமம் கோபியும் தரிப்பீர்!
தீமை கெடும் எனவே - பல
திலகங்கள் நெற்றியில் அப்பியே திரிவீர்!
பூமியில் வாழும் மக்காள்! - நீங்கள்
பூணும் இவ்வேடத்தால் பேதங்கள் செய்வதேன்? (வேடம்)

4. துளசியின் மாலையையும் - மரந்,
தோன்றிய ருத்திரக் கொட்டைஅணியையும்,
சிலுவைக் கயிற்றினையும், - தொங்கச்
செய்திட்ட லிங்கந் தொடுத்த கயிற்றையும்
நலங்கள் தருமெனவே - சிலர்
நாளுங் கழுத்தினில் மாட்டித் திரிவதேன்?
உளத்தினில் பேதங்கொண்டே - நீர்
ஒருவர் ஒருவரை ஏசிப் பகைகொள்வீர்! (வேடம்)

5. தாடியை வளர்த்திடுவீர் - அது
தானெங்கள் வேதம் உரைக்கும் மொழியென்பீர்!
ஆடை பலவிதமாய் - நீங்கள்
அணிந்ததன் மூலம்பல் சாதிகள் காட்டுவீர்!
கூடி வசிப்பதற்கே - இடம்ட
கொஞ்சமும் இல்லாமல் பேதங்கள் பண்ணினீர்!
மூட மதங்களினால் - இந்த
மோசங்கள் நம்மிடம் வந்து புகுந்தவே! (வேடம்)

6. பெண்களின் வேடங்களோ - அப்பா!
பேசவும் நாவெழ வில்லை; பலவகை!
கண்களைக் கவர்வனவாம் - நல்ல
கல்கள் பதித்தபொன் நகைகள் தரிப்பார்
எண்ணும் பலமுழம் சேர் - புடவை
எடுத்துப் பலவித மாகவே உடுப்பார்
மண்ணினிற் பேதத்தையே - இந்த
மாதிரி ஆடை அணிகொண்டு செய்திட்டீர்! (வேடம்)

7. மாதர்க்கும் ஆடவர்க்கும் - பல
மாறுதல் காட்டிடும் ஆடை அணிகளை
ஏதுக்குக் கொண்டிருப்பீர்! - இதனால்
என்ன பயனுண்டு சொல்லும் உகைத்தே?
நீதிகள் சிறந்திடவே, - நல்ல
நேசம் மனிதருள் தோன்றி நிலைக்கவே,
காதல் மனத்திற்கொண்டால் - இங்கு
காணும் மதசாதி வேடங்கள் அழிப்பீர் (வேடம்)

8. இந்த உலகினிலே - மக்கள்
யாவரும் ஒன்றெனக் காணும் வகையிலே
சந்து புரிந்திடவே - பல
சாத்திரம் சாதி மதங்கள் வழக்கங்கள்
நைந்து சிதைந்திடவே - நீங்கள்
நாடி ஒருவகை ஆடை அணிகொள்வீர்!
சிந்தைப் பயம்விடுத்தே - வீரம்
சேர்ந்தொன்று கூடுங்கள் இன்பம்பெருகுமே (வேடம்)

## ஒற்றுமை முரசு

### பல்லவி

கொட்டு முரசே வெற்றி கொட்டு முரசே
குவலயம் ஒன்றுகூடி விட்டதென்றே. (கொட்டு)

### சரணங்கள்

1. மாநிலத்தில் வாழும் மக்கள் யாரும் ஒன்றாய்
மகிழ்ந்து கூடி வாழ்க வென்று கொட்டு முரசே!
தீ நினைப்புக் கொண்டவர்கள் செய்கை மாயத்
தீர்த்து வெற்றிக் கூத்திடுவோம் கொட்டு முரசே!

2. நான்கு சாதிமக்களுக்குள் நாட்டிவைத்தார்;
நாலாயிர மாகியவை கூடினவே
நான்குடனே நாலாயிரம் சாதிமாயந்தே
நாசமாயிற் றென்று சொல்லிக் கொட்ட முரசே!

3. தோல்வருணம் தட்பவெப்ப பேதத்தாலே
தோன்றுமென்று கூறுவதே உண்மை யாமே;
மேல் வருணம் கீழ்வருணம் இல்லை; இங்கே
மேவு மக்கள் ஒன்றே என்று கொட்டுமுரசே! (கொ)

4. உணவு கொள்ளும் தானியங்கள் உண்டு பண்ணும்
உத்தமர்கள் வாழ்க வென்று கொட்டு முரசே
புணம் பறித்துத் துன்பமின்றி வாழுஞ் சோம்பர்
பாழடைந்து வீழ்க வென்று கொட்டு முரசே!

5. சாதி சொல்லும் சாத்திரங்கள்போக வென்றே
சாற்றி நின்று வெற்றியென்று கொட்டுமுரசே!
நீதியற்றார் சாதி பேதஞ் சொல்லி நிற்பார்
நீசரவர் மாய்க வென்று கொட்டுமுரசே (கொ)

6. மேற்குலத்தார் என்பவர்க்குள் மூட ரிலையோ
மேதையர்கள் கீழ்க்குலத்தில் தோன்றல் இலையோ!
ஏற்கும்அறி வோடு தீரம் ஊக்க மெல்லாம்
ஆர்க்கும் பொது வென்று கூறிக் கொட்டுமுரசே!

7. மாநிலமுந் தாழ்ந்தவரைத் தாங்க விலையோ!
மாரிவளங் கீழவர்க்குப் பெய்தல் இலையோ!
மேனிலையர் என்பார்க்கிவை வேறுமுளவோ?
மேலுமில்லை கீழுமில்லைக் கொட்டு முரசே! (கொ)

8. பசிப்பிணிகள் தூக்கமிவை யாவ ரிடமும்
பண்பெனவே நின்றிடுதல் பார்த்தி லீரோ!
நசிக்க வஞ்சர் கட்டி வைத்த சாதிபேதம்
நாட்டினின்றும் ஓட வென்று கொட்டு முரசே!

9. கலப்புமணம் ஓங்க வென்று கொட்டு முரசே!
காதல் மணம் வாழ்கவென்று கொட்டு முரசே!
பலத்த சாதி பேதம் போகக் கொட்டு முரசே!
பாரில் யாரும் ஒன்று சேரக் கொட்டு முரசே!

10. சாதி போயின் நீதியோங்கும் என்று முரசே
சப்தமிட்டு வெற்றியுடன் கொட்டு முரசே
வாதனைகள் நீங்கிநிறை இன்பமோடே
வாழ்க மக்கள் என்று நின்று கொட்டுமுரசே! (கொ)

## ஒற்றுமைக் கும்மி

1. ஒற்றுமை என்று சொல் போதினிலே - பெரும்
ஊக்கம் பிறக்குது நெஞ்சினிலே - இதை
வெற்றியுடனிங்கு கண்டிடவே - இந்த
மேதினி எங்கணுஞ் சென்றிடுவோம். (ஒற்றுமை)

2. வீர உணர்ச்சியாம் கோடாரியால் - பேதம்
விளைக்கும் மரங்களை வெட்டிடுவோம் - இந்தப்
பாருல கத்தினர் யாவரும் ஒன்றெனும்
பண்புப் பயிர்தனை வளர்த்திடுவோம். (ஒற்றுமை)

3. பிறப்பினுள் வேற்றுமை ஏதுமுண்டோ? - என்று
பேதையர் தங்களைக் கேட்டிடுவோம் - அன்றி
இறப்பினுள் வேற்றுமை ஏதுமுண்டோ - என
ஏழையர் தம்மையும் கேட்டிடுவோம். (ஒற்றுமை)

4. மாந்தரின் உட்புறக் கருவியெல்லாம் ஒன்றாய்
மன்னியிருப்பதும் பொய்யாமோ? - அவர்
ஏந்துடல் என்பு தசைநாரில் - சற்றும்
ஏற்றம் இழிவுகள் இல்லையன்றோ? (ஒற்றுமை)

5. உச்சி யிடத்துறை மாந்தர்களே - உங்கள்
உடலினுள் ஓடுதல் பொன்னீரோ - இங்கு

பச்சை படப்பதில் சொல்லிடுவீர் - பிறர்
பாழுடல் ஒடுதல் என்னீரே (ஒற்றுமை)

6. ஆதியில் வேற்றுமை கண்டதுண்டோ - இதை
அறிஞரும் வாழ்க்கையில் ஆண்டதுண்டோ - இங்கு
பாதியில் தந்நல வேட்கை கொண்டோர் - இதைப்
பாரினில் நாட்டியே வைத்தனரே (ஒற்றுமை)

7. சாதியில் வேற்றுமை யானதுவே - இங்கு
சமயமும் வேற்றுமை யானதுவே - பின்னர்
நீதியில் வேற்றுமை யானதுவே - அது
நிறத்திலும் வேற்றுமை யாதுவே. (ஒற்றுமை)

8. சிறப்பினில் வேற்றுமை யானதுவே - பின்பு
செல்வத்தில் வேற்றுமையானதுவே - சம
பிறப்பினுள் வேற்றுமை எண்ணியதே - இந்தப்
பேச்சுக்குக் காரணம் நண்ணியதே. (ஒற்றுமை)

9. சாதியும் நீதியும் செல்வமுமே - எங்கும்
சமத்துவம் ஆகெனச் சாற்றுதுமே - எட்டு
மாதிரம் எங்ஙணும் திரிவோமே - இந்த
மாநிலம் பொதுவென மொழிவோமே (ஒற்றுமை)

10. ஒற்றுமை செய்திட வேண்டுமென்றே - இங்கு
உளறுவ தில்பயன் ஒன்றுமின்றே - உண்மை
ஒற்றுமை வேண்டின் உலகுறையும் - எல்லா
உயர்வையும் தாழ்வையும் போக்கிடுவோம் (ஒற்றுமை)

11. ஏட்டினில் சர்க்கரைப் பேரெழுதி - நக்கின்
இன்சுவை அதனிலே காண்பதுண்டோ - இந்த
நாட்டினில் ஒற்றுமை என் றுவாயினால்
நவில்வதால் மாத்திரம் என்பெறுவோம்? (ஒற்றுமை)

12. சொல்வதைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோல் பிறர்
சொல்வதை நாமும் சொல்லி நின்றே - இங்கு
சோர்வின்றி ஒற்றுமை வேண்டும் என்றே பொய்
சொல்வதில் என்ன பயன் சொல்வீர்? (ஒற்றுமை)

## ஜாதி அழிப்பு

("அடைக்கலமே அடைக்கலமே" என்பதுபோல)

### பல்லவி

அழித்திடுவீர்! அழித்திடுவீர்!
அழித்து வேற்றுமை யெல்லாம்
ஒழித்து நலம்பெறுவீர்! (அழித்திடுவீர்)

### அநுபல்லவி

நீதி நெறி யிந்த நிலந்தனில் வாழ
நின்று கெடுக்குஞ் சாதி பேதம்போய் வீழ (அழி)

### சரணங்கள்

1. பிறப்பினில் மனிதருள் வேற்றுமையில்லை;
பேதையர் சாதிகள் பேசினர் தொல்லை;
சிறப்பினைத் தடை செய்து மறித்திடுங் கல்லை
சிதறிடத் துணைக்கொள்வீர் ஒற்றுமைச்சொல்லை (அழி)

2. வஞ்சகர் நலம்பெற வகுத்தனர் சாதி;
வைத்ததைக் கட்டியே அழுவதென் நீதி?
நஞ்சென நிலை நின்று நலிகின்ற பேதி
நசித்திட நாட்டினில் அறிவுரை ஓதி (அழிந்திடுவீர்)

3. மனிதருள் ஒற்றுமை வளர்ந்திடில் ஊக்கம்
மரமென வேர்கொண்டு செழித்திடும் ஆக்கம்;

இனிமையைக் கெடுக்கின்ற வதுமையின் நீக்கம்
எய்திடும் ஏனையா! உமக்கின்னும் தூக்கம்? (அழி)

4. வாழ்வுக்குத் துணைசெய்யும் தொழில்களில் பேதம்
வகுத்தத னாலிங்கே விளைந்தது சேதம்
தாழ்வுக்கு மனிதர்கள் நடந்திட போதம்
தந்தது மதமென்னும் ஒருபெரும் பூதம். (அழித்திடு)

## ஒன்று சேரும்!

("ஆத்ம தியாகம் பூர்த்தி செய்தார்" என்பதுபோல்)

### பல்லவி

ஆண்மை போக்கும் தீமை யெல்லாம்
அழித்திட ஒன்று சேரும்! சேரும்!! (ஆண்மை)

### அநுபல்லவி

மாண்பாகும் செய்கை தன்னையிங் காய்ந்து
மனங்கொளத் துன்பம் அழிவுறும் தேய்ந்து; (ஆண்)

### தொகை

பாரோர்கள் நடுநடுங்கிப் போர்வைக்குள்
புகுந்தொளிய வீழும் மேலே
ஏராள மானபனி எரிகதிரோன்
எழுந்துவர மறைதல் போலே,
ஆராயும் பேரறிவு பெற்றுவிடின்,
அனைவரையும் பிடித்ததாலே
தீராத தென்றெண்ணும் மதஞ் செய்யும்
தீதெல்லாம் தீர்ந்து போமே.

### பாட்டு

தெய்வீகம் என்றே சொல்லிடுஞ் சூது
தெரிந்திடின் உடனே நீங்கிடுந் தீது (ஆண்மை)

### தொகை

பெரியோர்கள் குழந்தைபால் தின்பண்டம்
பூச்சாண்டி காட்டி ஏய்த்தார்;
அறியாத பேர்கள் தமை ஏய்க்கவே
புரோகிதர்கள் தந்திரம் கோத்தார்;
தெரியாத சொர்க்கமுடன் நரகங்கள்
சொல்லி மிகத்தீங்கு சேர்த்தார்;
வறியோர்கள் இவைநம்பித் துயருற்று
வாழ் நாளில் இன்பம் நீத்தார்.

### பாட்டு

அச்சம் அறிவின்மை சோம்பலும் நீங்க
ஆக்கம் பெருக்கும் ஊக்கமும் ஓங்க. (ஆண்மை)

### தொகை

கூட்டினில் இரைவைத்தே எலிகள் தமைக்
கொலை செய்யப் பிடிப்ப தொத்தே,
பாட்டினில் சிற்பத்தே சித்திரத்தில்
பலபெரிய காவி யத்தே
நாட்டினர் பலமூடக் கொள்கைகளை
நானிலத்தில் நிலைக்க வைத்தே;
மாட்டினர் மனிதர்களைக் கொடுவிலங்கில்
ஈதறியார் மனமும் பித்தே.

### பாட்டு

உள்ளத்தின் உள்ளே உண்மையுண் டாகின்
தள்ளி யழிகின்ற தாழ்வுகள் போகும்; (ஆண்மை)

# சாதித் தீமை

(“காலமிதே கருணைமேவியே” என்பது போல)

## பல்லவி

சாதியே பெரிய தீயதே!
சாற்றின் ஒரு பேயதே!

## அநுபல்லவி

பாதியிலே தீய மக்கள்
படைத்தனர் இந்தச் சிக்கல்! (சாதி)

## தொகை

பாழான சாதியினால் மக்களும்
பிரிந்து நின்று தானே
கீழான மிருகங்கள் ஆகிச்
சண்டை தொடுத்தனர் வீணே. (சாதி)

## பாட்டு

வேறு வேறு வழக்கங்களால்
வேடம் பல ஆயினவே;
மாறுபட்டு மனிதர் அன்பை
மாய்ந்துவிடச் செய்ததுவே! (சாதி(

## தொகை

தீண்டாதார் என்று சிலர் தமைத்தள்ளி
மிக்க தீமை செய்தார்;
வேண்டாத இச்செய்கை யால் உலகம்
நம்மை வெறுக்கச் செய்தார். (சாதி)

### பாட்டு

யாவரும் உலகில் ஒரே
சோதரர் ஆகித் தொண்டு
ஆவலுடன் செய்வீர் செல்வம்
வந்திடும்; சுகமும் உண்டு. (சாதி)

### தொகை

வீட்டிலே பாம்புதேள் விஷங்களைக்
கண்டதும் கொல்லல் போலே,
நாட்டிலே தீண்டாமைப் பேதங்கள்
நாசம் செய்தல் மேலே. (சாதி)

### பாட்டு

ஒற்றுமை நதியின் வெள்ளம்
உடைப்பெடுத்தோட வைத்தே
ஏற்றுங்கள் ஜாதி யெல்லாம்;
ஏராள நன்மை கூடும். (சாதி)

# புரோகிதப் பகுதி

## புரோகிதர் சூழ்ச்சி!

1. குள்ளநரி போலிருந்து நம்மை யெல்லாம்
கூடாமற் செய்கின்ற குழுவொன் றுண்டு;
கள்ளமனத் தார், அவரால் நமது வாழ்வு
கலகலத்துப் பலபிரிவாய்ப் போன தப்பா!
உள்ளத்தே ஆண்மையெனும் நீரைப் பாயச்சி
உணர்வென்னும் பயிர்வளர்த்தால் உண்மை காண்பாய்
கொள்ளைகொளும் புரோகிதரே அவர்கள் ஆவார்;
கூறினேன் உரமிருந்தால் வெற்றி கொள்வாய்.

2. ஓங்கிவளர் மனிதர்குலக் களையாய்த் தோன்றி
ஒடுக்கினார் பகுத்தறிவை உலகத் துள்ளே;
யாங்கணுமே புரோகிதராம் நச்சுப் பூச்சி
“யாவருக்கும் பரலோக வாழ்வை நல்க
ஈங்கெம்மை ஆண்டவனே தூக்கிப் போட்டான்”
எனக்கூறி நமக்குள்ளே பிரிவு மூட்டித்
தீங்குதரும் கலகமெனும் குழியில் தள்ளி
தினந்தினமும் நமதுபொருள் கொள்ளை கொள்வார்!

3. நீதியின்றி நமதறிவைக் கொள்ளை கொண்டு
நிட்டூரம் செய்திட்ட நரிகள் கூட்டட்ம
“சாதியிலே நாம்பெரியம்” என்று சொல்லிச்
சகலரையும் முன்னாளில் மயக்கி விட்டார்

ஆதியிலே அவர்செய்த வஞ்சக் கோட்டை
அழித்துவிடப் புறப்பட்டார் இளைய வீரர்!
வீதியிலே சாத்திரங்கள் குப்பை வீசி
விரைந்ததற்குத் தீவைப்பீர் வீரர் ஆவீர்!

4. மக்களெனு மல்லிகைப்பூ வாடிச் சோர்ந்து
மணமிழந்து நிலத்தினிலே உதிர்ந்து போக
மிக்கசுடு வெயிலான குருக்கள் கூட்டம்
மேதினியைப் பாழ்படுத்திப் போட்ட தப்பா;
அக்கக்காய் உருண்டோடும் நெல்லிக் காய்போல்
அனைவரையும் திக்குதிக்காய்த் திருப்பி விட்டார்;
பக்கத்து நாடுகளை நிமிர்ந்து பார்ப்பாய்;
பதுங்காதே வெளியில் வா வீரன் ஆகி.

5. மாயத்தார் புரோகிதர்கள் செய்த வஞ்சம்
மண்ணோடு மண்ணாகி மடிந்து போனால்
தேயத்தார் எல்லோரும் குதூ கலிப்பார்;
தீரர்களும் வீரர்களும் தோன்றி நிற்பார்!
நேயத்தார் ஆயிந்த உலகர் எல்லாம்
நிலையான பேரின்பக் கள்ளை யுண்பார்;
காயத்தால் உழைப்போரே உண்மை காண்பீர்!
கடுகளவும் வஞ்சகர்சொல் வார்த்தை கேளீர்.

6. தலைநிமிர்ந்து நேராக நின்று பேசு!
தயங்காதே புரோகிதர்கள் சடங்கைக் கண்டே;
மலைபுரண்டு வீழ்ந்தாலும் கையால் தாங்க
மனத்திலே வீரமது தோன்ற வேண்டும்;
நிலையாக அவர்மறைத்த திரைகள் பார்த்து
நெருப்பிட்டுச் சுட்டுவிடு; அஞ்ச வேண்டாம்!
கலையாமல் மனிதர்குலம் ஒன்று சேரும்;
கண்கொள்ளாப் பெருங்காட்சி அதுதான் அப்பா.

## பொருளிழப்பீர்!

("பண்டித மோதிலால் நேரை" என்பது போல)

புத்தியில்லா மலே நீரும்
பொருளிழப் பீரே! (புத்தி)

### அநுபல்லவி

பொருளிழப் பீரே, பின்னர்
புலம் பிநிற் பீரே - ஓ (புத்தி)

### சரணம்

அண்டையில் உள்ளார்க் காக
ஆரவாரம் செய்து மிக்க
கண்டபடி செலவு செய்தே
கடனாளி யாவீர்! கடனாளியாவீர்!
பின்னர் கலங்கியே வாழ்வீர்! (புத்தி)

### தொகை

மோசத்தை யளிமூடச் சடங்குகள் தமையெலாம்
மெய் யென்று நம்புவீர்;
தாசிக்கும் கூத்துக்கும் பூசைக்கும் என்று நீர்
தாம் செலவு செய்குவீர்;
வாசித்து நும்மக்கள் திறமையுடன் வாழவே
வைக்கும் வகையறியீரே;
மாசற்ற நலம்பெற்று நும் மக்கள் திறமையுடன்
மாநிலந் தனில் வாழ
மனங் கொள்வீர் மனங் கொள்வீர்!

### பாட்டு

மானிடரை அடிமை செய்ய
முன்னனோர் எழுதி வைத்த

தீயமொழி சாத்திரத்தில்
தீயை மூட்டி! தீயை மூட்டி!
முற்றும் கொளுத்துவீர் ஓட்டி!
எள்ளளவும் அறிவிருந்தால்
இழிந்த செயல் இவைகள் என்றும்,
உயர்ந்தசெயல் இவையென்றும் உணருவீர்களே!
உணருவீர்களே சுகம் பெற்று
மகிழுவீர்களே! (புத்தி)

## வீண்செயல் புரியேல்!

(இராகம் - இந்து அசாவேரி. தாளம் - ரூபகம்)

### பல்லவி

இனியே வீண் செயலே புரியாதிரு! (இனி)

### அநுபல்லவி

பெரிதும் தீமைகள் நேரும் கார்யத்தால்
பிழை யெய்துமே மனதில் அறிவாய்! (இனி)

### சரணங்கள்

1. மோசம் புரோகிதர் சடங்குகள் தாமே!
முழுதும் பொருள்கள் அழிதற்கிடம் ஆமே
முனிவுடனே அவை செய்தி டாமல் நலம்
மூளும் வழிகளில் செல வாகும் படி செய்! (இனி)

2. நாசம் புரியும் விஷப் பூச்சிகள் போலே
நமது சமூகம் அடிமைப் படமேலே
நயவுரை சொலி நமையேயமுத்தும்
நலம் புரி யாத புரோகிதம் ஒழித்து (இனி)

3. ஆசை மொழிசொல்லி ஏய்த்தனர் அவரே!
ஆண்மை கெட நம்மை அமிழ்த்தி வைத்தனரே!

அறிவுடனே யும் மனதி லேகொண்டவர்
ஆவல் சிதைந்திடவே நாசம் புரிந்திடுவீர் (இனி)

4. சுகமுடன் வாழ்க்கை நடத்து வீர் என்றே
சொல்லி வலையினில் வீழ்த்தினர் அன்றே!
சோதனையே செய்யின் தீமையறிந்திடு வீர்!
சொல்லியதே உண்மை கண்டே யுணர்ந்திடு வீர்! (இனி)

## புரோகிதக் கொடுமை

(“மார்க்கத்திர்கண்ட கனி” என்பதுபோல)

1. தீயபுரோகிதர் செய்யும் கொடுமைகள்
எண்ணத் தொலையாவே; -அவை
தேர்ந்து மனத்தினிற் கொண்டவர் வஞ்சனை
தீர அழிப்போமே! (தீய)

2. மக்கள் மனத்தை மயக்கும் பல வஞ்ச
மாயம் புரிந்தாரே! - அந்த
மாயவலையினில் சிக்கிய மாந்தர்கள்
துன்பம் அடைந்தாரே! (தீய)

3. ஏழை மனிதரை ஏய்க்கும் வழிபல
செய்திங்கு வைத்தனரே! - அவை
இன்னும் உலகினில் நின்று பெருந்துயர்
மாரி பொழிந்திடுமே! (தீய)

4. சொல்லும் சடங்குகள் செய்திடின் நீர்பெருஞ்
“சொர்க்கம்” அடைந்திடுவிர்; என்று
நல்ல மொழிசொல்லிச் செல்வம் பறித்தவர்
நாசம் புரிவாரே! (தீய)

5. “ஆண்டவன்” தூதரே நாங்கள் எனப்பல
ஆசை மொழி புகல்வார்; - அவர்

ஆசை நிரம்ப வழியின்றிப் பாமர
மக்கள் நலங்கெடுப்பார். (தீய)

6. "மந்திரம்" என்றவர் சொல்லிப் பல கொடும்
காரியம் செய்திடுவார்; - அந்தத்
தந்திரம் தேராத மக்களுந் தம்பொருள்
தந்து தவித்திடு வார். (தீய)

7. பண்ணிய பாவங்கள் போக்கும் "பெரியவர்"
பாழும் புரோகிதரே - என்று
பாமரர் தம்மனத்தெண்ணிப் பொருள்தந்து
பரிதவிப் பார்களே! (தீய)

8. பாரமரத்தினில் புல்லுருவி வந்து
பாய்ந்து கெடுப்பது போல் - ஒன்று
சேரும் மனிதர் குருக்களின் சூழ்ச்சியால்
சேர்தல் ஒழிந்தனரே! (தீய)

9. செத்துப் பிறக்கின்ற செய்கை இயல்பெனச்
சிறிதும் மனந்தேறார்; அவர்
சிந்தை மயங்கிப் புரோகிதர் வஞ்சகச்
செயலில் மதியிழப்பார் (தீய)

10. கூறையில் ஏறியே கோணற் சுரக்காய்
கொய்யும் திறமில்லார் - அவர்
வானத்தில் வைகுந்தம் காட்டு வோமெனும்
வார்த்தையும் மெய்யாமோ? (தீய)

## புரோகித மயக்கம்

(கும்மி போன்றது)

1. நெஞ்சினில் ஆண்மையும் ஊக்கமும் இன்றிநீர்
நித்தம் புரோகிதர் பேச்சை நம்பி - என்றும்

அஞ்சியே நாழிகை நட்சத்திரங்களும்
அமிர்தாதி யோகமும் பார்த்து நின்றீர்!
வஞ்சனைக் காரர்கள் சொற்படியே செல்வம்
வாரிக் கொடுத்திங்கு வாழ்விழந்தீர் - அதனால்
கொஞ்சமும் நன்மைகள் பெற்றதுண்டோ உண்மை
கூறுங்கள் வைதீக மாந்தர்களே!

2. காதலைக் கைவிட்டுச் சோதிடத் தாலே பொய்க்
கற்பனைச் சடங்குகள் பலபுரிந்தே - இங்கு
தீதின்றி மணமக்கள்ஆக்கிய பேரெல்லாம்
தேக சுகங்கொண்டு வாழ்ந்தனரோ?
பாதியில் விதவைகள் ஆகிய பெண்மக்கள் - இப்
பாரினில் எத்தனை பேர்கள் உள்ளார்? - அவர்
ஓதிடும், மந்திரம் என்னும் புரட்டினால்
ஒன்றும் பயனில்லை என்றறி வீர்!

3. பேதங்கள் செய்தது புரோகிதமே நல்ல
பெண்ணை யிகழ்ந்தது புரோகிதமே!
காதலை மாய்த்ததும் புரோகிதமே நம்
கண்ணைக் கெடுத்ததும் புரோகிதமே
போதனை யாவையும் போக்கியதும் - உயர்
புத்தி வளர்ச்சிக்கு மார்க்க மின்றி
வேதனை செய்ததும் புரோகிதமே - பெரும்
வித்தை அழித்ததும் புரோகிதமே.

4. தெய்வீகம் ஒன்றொரு மாயத்தையே கொண்டு
தேசத்து மக்களைக் கட்டிவிட்டார் - அந்தப்
பொய்யுரை கொண்டுபல் காரியம் பண்ணிநாம்
போயினம் மோசப் படுகுழிக்குள் - இங்கே
கையில் வலுத்தவர் ஏழையர் வாழ்க்கையைக்

கஷ்டத்தில் தள்ளியே வைத்து விட்டார் - தம்
மெய்யில் வலியற்ற வஞ்சகப் புரோகிதர் - இந்த
மேதினி யாவையும் கொள்ளை கொண்டார்.

5. நம்மை யிழிந்தவர் ஆக்கிய குள்ளார்கள்
நல்லவர் போலவே வேடங்கொண்டார் - அவர்
தம்மைக் கடவுளின் புத்திரர் என்றிந்த
தாரணி எங்கணும் வலைவிரித்தார்;
இம்மையில் எங்களின் சொற்படி செய்யுங்கள்
எய்திடும் சொர்க்க பதவி யென்றே - கெட்ட
செம்மொழி பேசிநம் செல்வம் பறிக்கவே
செய்தனர் பற்பல சூழ்ச்சிகளே!

6. பொம்மைக் கலங்காரம் செய்வது போலிங்கே
பூரிப்பாய் மக்களைப் போற்றி வளர்ப்பீர் - பெரும்
செம்மை தருங்கல்வி தேர்ந்தவர் வாழ்ந்திடச்
சிந்தை யினிற் சற்றும் கவலை கொள்ளீர்!
நம்மைப் பெரும்வெறி நாய்களாய்ச் செய்திட்ட
நாசப் புரோகிதர் சொல்லை நம்பி - நீர்
உம்மை முழுமூடர் ஆக்கிக் கொண்டீர் இந்த
உரையில் பழுதில்லை என்றுணர்வீர்!

## மணமுறை

(ராகம் - அடாணா, தாளம் - திஸ்ரஏகம்)

1. செந்தமிழ் நாட்டிற் பிறந்து வளர்ந்திடும்
சீரிய ரானவரே - சில
செய்திகள் கூறிடு வேன்அதை உங்கள்
செவியினில் கொள்வீரே! (செந்தமிழ்)

2. நம்முடை வீட்டில் நடக்கும் செயல்களில்
நாம்செய்ய வேண்டியதே - பொருள்
நாசம் உறாவிதம் நாடியே சிக்கன
வாழ்வு கடைப்பிடிப்போம். (செந்தமிழ்)

3. தந்திரம் செய்துறை புரோகிதர் ஆனவர்
தம்மை அழையாதீர் - அவர்
தங்கள் நலத்தினுக் கென்று பொருள்களை
நம்மிடம் பற்றுவரே! (செந்தமிழ்)

4. அன்றியும் சற்றும் அவர்க்கும் நமக்குமே
அர்த்தம் புரியாதே - அவர்
ஆக்கிய வடமொழி மந்திரச் சொற்களை
உளறித் தொலைப்பாரே! (செந்தமிழ்)

5. காசு பறிப்பதற் கென்று சிலமக்கள்
கட்டிய சாத்திரத்தால் - நம்மை
மோசம் புரிந்திடும் போலிச் சடங்குகள்
யாவும் ஒழிப்பீரே! (செந்தமிழ்)

6. பண்டைத் தமிழர்கள் கண்ட முறைப்படி
ஆண்பெண் ஆவோர்க்கே - அவர்
கொண்டதோர் அன்புள்ள சம்மதங் கண்டதும்
கூட விடுவீரே! (செந்தமிழ்)

7. வீணிற் பொருள்செல விட்டுத் தரித்திரர்
ஆகுதல் வேண்டாமே - உங்கள்
ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி கொடுக்கவே
அப்பொருள் செய்வீரே! (செந்தமிழ்)

8. நாட்டில் உணவின்றி நாளும் பரிதவித்
தேங்கி உயிர்போக்கும் - மக்கள்
கூட்டம் சுகம்பெறக் காப்பதற் காகநும்
செல்வம் செலவழிப்பீர்! (செந்தமிழ்)

# ஏமாற்றும் புரோகிதர்!

(இசைந்தவாறு பாடுக.)

1. காலை எழுந்துவெறும் நீரையுண்டு - அவர்
கையினில் ஆயுதம் கொண்டு சென்று
மாலை வரையும் பணி செய்வாரங்கு - பின்பு
மனையை நோக்கிவரு வார்களிங்கு

2. வீட்டின் மனைமக்கள் சோறுமின்றி - மிகு
வேதனை யானுடல் சோர்ந்து குன்றி
வாட்டம் அடைந்திடும் துன்பங்கண்டு - இவர்
வாழ்க்கை வெறுப்புடன் சோர்தல் உண்டு.

3. உணவுக்கு வழியினி என்னவுண்டு - என
உள்ளந் தனில் துயர் மிக்க கொண்டு
பணம்எவ் வழியினில் இங்குபெறுவோம் - என்று
பரிதவித் திருப்பரே ஏழை மக்கள்.

4. இந்த வகைத்துன்பக் கடல் வீழ்ந்தே - மிக
ஏங்கித் தவிக்கின்ற வாறுகண்டும்
சிந்தை கல்லெனும் வஞ்சக் குருக்கள் - அவர்
சேர்த்த சிறுபொருள் கொள்ளை கொள்வார்.

5. இங்கு பெறுமின்பம் இன்பமன்றே - நீர்
இறந்து பரலோகம் சேர்ந்து பின்னே
அங்கு நினைக்கின்ற இன்பமெல்லாம் - மிக
அடைந்து சுகங்கொண்டு வாழ்வீர்!

6. அந்தப் பரலோகச் சாவிகொண்டே - மிக்க
அன்புடன் உங்களைக் காக்க நின்றோம்!
சிந்தைத் துயர்கொண்டு வாழுமக்காள் - உங்கள்
செல்வப் பொருள்களைத் தந்திடுவீர்!

7. நீங்கள் புரிந்திட்ட பாவங்கட்கும் - இந்த
நேரத்தில் மன்னிப்புத் தந்திடுவோம்
நாங்கள் அதற்கதி காரம் உள்ளோம் - என்று
நாளும் பொருள்களைக் கொள்ளை கொள்வார்.

8. இவ்வகை வஞ்சகம் பேசிநின்றே - நிதம்
ஏய்த்துப் பிழைக்கின்ற பாதகர்தாம்
செவ்வை மனமற்ற குருவென்பார் - இங்கு
சேர்ந்து வறியரைக் கொள்ளை கொள்வார்.

## போலிவைதீகர்

கிளிக் கண்ணிகள்

1. முதுமை வேண்டும் என்பார்
முற்றும் மறந்து நிற்பார்;
புதுமை நீங்கல் இல்லார் - கிளியே!
பொய்ம் மொழிக் காராடி!

2. சாதி உயர்வு சொல்வார்
சாத்திரம் காட்டி நிற்பார்;
நீதிகள் தேரார் அடி-கிளியே!
நேர்மை உணரார் அடி!

3. ஆண்டவன் மக்கள் ஆவார்
யாவரும் என்று சொல்வார்;
தீண்டாமை பேசி நிற்பார் - கிளியே!
தீமை புரிந்து நிற்பார்!

4. கல்லைப் பணிந்து நிற்பார்
கருணை யொழிந்து நிற்பார்;
தொல்லை யடையும் மக்கள் - கிளியே!
துயரைப் போக்கா ரடி!

5. சாமியை வேண்டி நின்றே
சாத்திரம் பேசி நிற்பார்;
காமியாய் வாழ்வா ரடி - கிளியே!
கருணை செய்யாரடி;

6. வேதாந்தம் பேசி நின்றே
வேலைகள் செய்தல் இன்றி
தீமைகள் செய்வார் தன்மை - கிளியே!
தேரார் மனித ரடி.

7. அன்பும் அறிவும் எண்ணார்
ஆண்மைக் குணமும் கொள்ளார்
இன்பம் விரும்பி நிற்பார் - கிளியே!
ஏதும் அடையா ரடி.

# பாட்டாளர் பகுதி

## ஏழை கண்ணீர்!

("காலக்கொடுமையால்" என்பதுபோல)

1. வேலை புரிந்திங்கே வாழ்ந்திடும் ஏழையர்
வீணில் மடிகின்றார் காணும்!
பாலை இழந்தவர் பாலகர் சாவதைப்
பார்த்துப் பதைக்கின்றார் பாரும்!

2. வாட்டும் வெயில் புகும் வந்த மழை விழும்
வாடைக் குளிர்மிகச் சேரும்
ஓட்டைக் குடிசையுள் ஒண்டும் இடமின்றி
உள்ளங் குழைகின்றார் பாரும்!

3. கன்னஞ் சுருங்கவே கண்கள் குழியவே
கவலை பெருகியே நாளும்
அன்னம் புசித்தற்கே ஏதும் வழியின்றி
அல்லல் படுகின்றார் காணும்!

4. எங்கள் தலைவிதி என்செய்வோம் என்றவர்
ஏங்கி அழுகின்றார் பாரும்!
தங்கள் சுதந்தரம் தாமறி யாமலே
தளர்ந்து கெடுகின்றார் பாவம்!

5. ஏழை மனிதர்கள் இவ்விதம் சாகவே
இன்னல் நிறைந்ததே தேசம்!

பாழும் அறிஞர்கள் இந்நிலை நீக்கவும்
பரிந்து வரவில்லை மோசம்!

6. நாட்டுக்கு நன்மைகள் செய்திடு வோமென்று
ஞாயங்கள் பேசியே நாளும்
ஓட்டுக்கு வந்தெங்கள் முன்னின்று கெஞ்சிடும்
ஊத்தை மனிதரே கேளும்!

7. தேசத்துள் யாவரும் சோதரர் ஆகவும்
தீய வறுமையும் தீரும்;
யோசித்து நன்மைகள் செய்திடத் திட்டங்கள்
உம்மிடம் ஏதுண்டு கூறும்;

8. கப்பல் கவிழ்கின்ற காலை அதில் உள்ளார்
கலக்கம் அடைவது போலும்,
இப்புவி வாழ்கின்ற ஏழைகள் என்பவர்
இன்னல் ஊறுகின்றார் மேலும்;

9. தூக்கத்தை விட்டேழை மக்களும் இப்போது
துன்ணென் றெழுந்தனர் காணும்!
நீக்குமின்! துன்பங்கள் வஞ்சனை பேதங்கள்
நேர்மை வழிதனைப் பேணும்!

10. உலகத்துள் எங்கணும் உண்மைச் சுதந்தரம்
ஓங்கி வளர்வதைப் பாரும்!
நலமுற்று வாழ்ந்திட அன்பெனும் செல்வத்தை
ஞாலம் பரப்புவோம் வாரும்!

## உணர்ந்தோம்!

1. ஊரெல்லாம் தமதாக்கி வளைத்துக் கட்டி
உயரத்தில் வாழ்கின்ற பெரிய கூட்டம்
பாரெல்லாம் பலமான வேலி போட்டுப்

பாழ் செய்தார் ஏழையர்கள் வாழ்க்கை தன்னை;
போரெல்லாம் தமக்ககாகப் புரியச் செய்தார்;
போசனத்திற் கில்லாமல் காயும் மக்கள்
மாரெல்லாம் அவர்வஞ்ச வலையில் மாட்டி
மாய்ந்தார்கள் இனியதுதான் பலிக்கா தையா!

2. ஒருவருக்கும் சொந்தமில்லா நிலத்தை யெல்லாம்
உடைமையென ஒருசிலர்கை ஆக்கிக் கொண்டார்;
பெருங்குலத்தார் நமையெல்லாம் அடிமை கொண்டே
பேச்சின்றி மூச்சின்றி அடக்கி வைத்தார்;
"வருவதுவும் போவதுவும் செல்வம்" என்றே
வறியவர்க்கே வேதாந்தம் சொல்லி வைத்தார்;
"குருவாவோம் யாம்" என்று சொன்ன குள்ளர்
கொடுத்தமத நஞ்சருந்தி மோசம் போனோம்.

3. மரம்செறிந்து, புதர்வளர்ந்து, கொடிகள் ஓடி,
மனிதர்புக வழியின்றிப், புலிகள், சிங்கம்,
குரல்உயர்த்தி ஊளையிடும் நரிகள், பாம்பு
குடியிருந்த காடெல்லாம் கழனி செய்தோம்;
உரம்அடித்துப் பயிர்செய்து தான்ய மாக்கி
உழைப்பற்ற வஞ்சகர்கைத் தந்து விட்டோம்;
இரக்கமிலார் அவர்தயவைப் பார்த்து நிற்றல்
இனியும்அறி வாகாது மடமை யாமே.

4. மேடுபள்ளம் சரிசெய்து மட்ட மாக்கி
மேகங்கள் புகுந்திருக்கும் சோலை செய்தோம்;
நாடுகளை உலகெங்கும் பண்ணிவைத்தோம்;
நாம் வாழும் ஊரெல்லாம் தோன்றச் செய்தோம்;
வீடுகளும் சமைத்திட்டோம்; வீதி செய்தோம்;
வெயில்இல்லை, மழையில்லை என்று ழைத்தோம்;
கேடுதரும் சுயநலத்தார் நம்மை யெல்லாம்
கீழாக்கித் தம்வாழ்வை நடத்து கின்றார்.

5. மாதர்எனக் கிளிபேசிக் குயில்கள் கூவி
மயிலாடும் சிங்கார வனங்கள் செய்தோம்;
மோதிவரும் நீர்ப்பெருக்கு நதிகள் தம்மை
மன்னின்றே உயிர்கொடுத்து வெட்டி விட்டோம்;
தீதுசெய அறியாத எம்மை எல்லாம்
தீச்சுட்ட புண்ணாகி வருந்த வைத்தீர்!
பேதமையால் ஆழ்ந்திருந்தோம் இந்நாள் காறும்;
பெருவெள்ளம் புரண்டது போல் இதோ எழுந்தோம்!

6. சுதந்தரச்சொல் காணாத நாளில் எங்கள்
சுகமெல்லாம் கைக்கொண்டு வாழ்ந்தீர்! போதும்!
பதம் பெற்று வாழ்வதற்கு முனைந்து விட்டோம்;
பகட்டுரையால் இனியடிமை ஆக மாட்டோம்;
மதம்உரைத்த, கலை உரைத்த, மகான்கள் சொன்ன,
"மாய்மால"க் கட்டுரைகள் சுட்டுப் போட்டோம்;
இதமான வாழ்க்கையினால் நாங்கள் வாழ
இப்பொழுதே வழிசெய்வீர்! சொல்லி விட்டோம்!

7. பரம்பரையாய் அடிமையினில் வாழ்ந்து விட்டோம்;
பாழான கடவுளையே நம்பிக் கெட்டோம்;
அரம்பையர்கள் பொன்னுலகம், அமிர்த பானம்,
அங்குண்டு நாம் தருவோம்" என்று சொல்லி
குரங்குகளைப் பழங்காட்டிப் பிடித்தல் போலே
குருமார்கள் நமைப்பிடித்து மடக்கி வைத்தார்;
உரம்பெற்றோம், உணர்வுற்றோம்; இனியும் இந்த
உலகத்தே கோழைகளாய் வாழ மாட்டோம்!

8. வஞ்சகத்தால் உமதுநலம் பெருக்கிக் கொண்டீர்!
வளர் செல்வம் முழுவதையும் வாரிக் கொண்டீர்!
பஞ்சைகளை எலும்புருவாய்ப் பண்ணிவைத்தீர்!
பகுத்தறிவை வளராமல் பாழே செய்தீர்!

நஞ்சாகி இவ்வுலக மனிதப் பூண்டை
நாசம் உறச் செய்திட்டீர் ஒருசொற்கேளீர்!
அஞ்சாமல் பட்டாளி மக்கள் நாங்கள்
அன்புதனை உலகமெலாம் பரப்ப வந்தோம்

## உண்மைச் சுடர்

(சிந்து)

1. எப்பொழுதும் உழைத்திருப்போம்,
இன்பசுகம் காணோம்;
தப்பிதங்கள் செய்தறியோம்
தாழ்ந்து விட்டோம் நாமே.

2. துன்பமெனும் கடல் கடக்கக்
கப்பல் துணை காணோம்;
இன்பமெனும் கரை சேர்தற்
கிச்சைமிக வுடையோம்.

3. கழனிகளில் உழைத்திடுவோம்
களைப்படைவோம் நாங்கள்;
பழஞ்சோறும் வயிறார
உண்டறியோம் நாங்கள்.

4. ஆலையினும் சாலையிலும்
பணிபுரிவோம் நாங்கள்;
காலமெலாம் பசிப்பிணியாற்
கருத்தழிவோம் நாங்கள்.

5. தரிசுநிலம் வளம்படுப்போம்
தானியங்கள் விளைப்போம்;
அரிசிகிடை யாமல்துயர்
அடைந்திருப்போம் நாங்கள்.

6. எட்டடுக்கு மாளிகைகள்
எழுப்பி வைப்போம் நாங்கள்;
கட்டிடங்கள் இன்றிவெய்யில்
கடுங்குளிரால் மாய்வோம்.

7. ஆடுகளும் மாடுகளும்
வளர்த்திருப்போம் நாங்கள்;
வாடுமிளங் குழந்தைகட்கும்
பாலூட்ட வகையறியோம்.

8. பூமியினுள் உள்ள பொருள்
கொணர்ந்திடுவோம் நாங்கள்
சேமமுடன் வாழ்தல் இலோம்
சிரமமுற்றோம் நாங்கள்.

9. கடல்கடந்து குடிபுகுந்து
நிதிவிளைப்போம் நாங்கள்;
உடல்இளைப்போம், உயிர் துடிப்போம்,
உணவுபெறோம் நாங்கள்.

10. காடுகளும் வளர்த்திடுவோம்;
கழனிகளும் செய்வோம்;
வீடுபெறும் வழியறியோம்;
வீணுழைப்பில் மடிவோம்.

11. பருத்திகளை விதைத்தெடுப்போம்;
பாடுபட்டு நூற்போம்;
திருத்தமுறும் உடைகள்பல
செய்திடுவோம் நாங்கள்.

12. உடுப்பதற்கும் உடைகள் பெறோம்;
உளம்வருந்தி வாழ்வோம்;
கடுங்குளிரைக் கைகளினால்
மெய் பொத்திக் கழிப்போம்.

13. ஒருவினைக்கும் உதவாத
பொருளை யெல்லாம் உழைப்பால்
பெருநலங்கொள் பலபொருளாய்ச்
செய்தமைத்தோம் நாங்கள்.

14. அப்பொருளை அனுபவித்து
மகிழ்வதில்லை நாங்கள்
எப்பொழுதும் வறுமையினால்
ஏங்கிடுவோம் நாங்கள்.

15. ஊரார்கள் உழைப்பினிலே
உயிர்வளர்க்கும் மாந்தர்
பேராசை கொண்டெம்மைப்
பெருந்துயரில் வைத்தார்.

16. கண்குழிந்து பல்நீண்டு
கன்னமெல்லாம் வற்றி
உண்ணுதற்கும் உணவின்றி
உடல்இளைத்தே அசைவோம்.

17. பாலரெல்லாம் பசித்தலறும்
பரிதாபக் குரலால்
நீலவிழி மனைவியர்கள்
நிலைகலங்கி அழுவார்.

18. மக்கள்மனை படுதுயரைப்
பார்த்தடியேம் மனத்துள்
அக்கணத்தே புரிவதொன்றும்
அறியாமல் அயர்வோம்.

19. சாக்கடையும் குப்பைகளும்
சார்ந்திருக்கும் குடிலில்
நீக்கமறும் பிணிகளுடன்
நிலைகுலைவோம் நாங்கள்.

20. மூட்டை கொசு விஷவுயிர்கள்
மூஞ்சூறும் எலியும்
ஓட்டைகளில் உறைபாழுங்
குடிசைகளில் வாழ்வோம்.

21. சாமிகளை நம்பி நின்றோம்;
சடங்குபல செய்தோம்;
நாமிவற்றால் ஒருசுகமும்
பெற்றறியோம்; சலித்தோம்.

22. உழைப்பவர்க்கே உலகசுகம்
என்றுமனங் கொள்வோம்;
பிழைப்பில்லை சோம்பருக்கே
என்றுவிதி செய்வோம்.

23. துன்பமுற்ற காலமெல்லாம்
போதுமினித் துயிலோம்;
இன்பமுறும் வாழ்வினுக்கே
போர் புரிவோம் இனிதே.

24. செல்வரிலை, வறியரிலை,
கொடியரிலை எனவே
நல்வகையில் உலகிருக்க
நாமுழைப்போம் இனியே.

## உழைப்போர் உணர்ச்சி!

("பந்தமுற்றெத்தனைநாள்" என்பதுபோல்)

1. அந்திப் பொழுதினைப் பார்! - மெல்ல
அசைந்திடுந் தென்றல் பார்!
சிந்தை களிப்புற வே - இங்கு
சிந்தும் நிலவொளி பார்!

இந்த உலகில் இவை - பெரும்
இன்பந் தருவதைப் பார்!
புந்திமகிழ்ச் திவற்றை - நாம்
பொதுவில் நுகர்ந்திட்டோம்!

2. திண்மையுடன் உழைத்தோம் - இந்தத்
தேசத்தில் செல்வம் வைத்தோம்;
நன்மை பல புரிந்தோம் - என்றும்
நாங்கள் துயரடைந்தோம்!
வன்மைமன வஞ்சர்தாம் - எங்கள்
வாழ்வு நலங் கெடுத்தார்;
உண்மையைக் கண்டறிந்ோம் - இனி
உறக்கத்தில் கிடவோம்.

3. செக்கிழுக்கு மாடுபோல் - இங்கு
செய்தனம் தினம் வேலை;
சிக்கினம் செல்வர் கையில் - எங்கள்
சிந்தை கலங்கிநின் றோம்;
திக்குகள் எங்கணும் போய் - இன்பந்
தேடும் பறவைகள் போல்
இப்புவி முற்றுஞ் சுற்றி - நல்ல
இன்பங்கள் துய்த்திடு வோம்!

4. தண்ணீர் நிறைகடல் போல் - இங்குத்
தங்கும் பெருநிதிகள்
மண்ணில் நிறைந்துளவே - அவை
மக்கள் பொதுப் பொருளே;
எண்ணும் இரக்கமிலார் - முந்தி
எம்மை யடிமைகொண்டார்;
கண்களைக் கட்டிவிட்டார் - எங்கள்
காலை மடக்கிவைத் தார்.

5. கண்கள் விழித்து விட்டோம் - எங்கள்
கஷ்டம் தொலைத்துவிட்டோம்;
மண்ணில் எமை யடிமை - செய்த
மக்கள் மடிந்துவிட்டார்;
விண்ணில் திசைகள் எங்கும் - சென்று
வெற்றி முரசடிப்போம்;
பண்தமிழ்ப் பாடி நிற்போம் - இந்தப்
பாரினுக் கிதஞ் செய்வோம்!

6. மன்னன் தன் மகன் மன்னன் - செல்வன்
மைந்தன்மக னுஞ் செல்வன்
என்னும் உரைபொய் யென்றே - உண்மை
இன்று தெரிந்து கொண்டோம்;
இந்நில வாழ்வினிலே - நம்முள்
இல்லை பிரி வெனவே
உன்னி உணர்ந்து கொண்டோம் - இனி
உள்ளங் கலங்கி யிரோம்!

7. நிலத்தில் விளை நிதிகள் - உப்பு
நீரினில் வரும் செல்வம்
நலத்தில் இழிந்ததே - என்று
நவில்பவர் யாருண்டு?
குலத்தில் இழிவு பண்ணி - நம்மைக்
கொடுமை விலங்கிட்டார்;
பலத்திற் சிறந்துழைக்கும் - மக்கள்
பாழில் மடிந்தனரே.

8. சாதல்மொழி அஞ்சோம் - இனி
சற்றும் அடிமைப் படோம்,
நோதல் பிறர்க்குச் செய்யோம் - இந்த
நோன்பு மனம் பதிப்போம்;

தாதன் தலைவன் என்றே - சொல்லும்
தன்மை தகர்த்தெறிவோம்;
நீதி உலகெங்கணும் - நின்று
நிலவ முயலுவோம்!

## ஏழையர்பால் இரங்கல்

("ஒய்நந்தனாரே நம்மஜாதிக்கடுக்குமோ" என்பதுபோல)

### பல்லவி

ஓ மனிதரே! உங்கள் மேன்மை இழந்துநீர்
துன்புறு வீரோ சொல்லும்?

### கண்ணிகள்

1. மக்களுக்குள் பேதமும் இல்லை - என்று
மனத்தில் அறிந்தீர்கள் இல்லை - நீங்கள்
மிக்க துயருடனே பல்லைக் - காட்டி
மேன்மையை இழந்தீர்கள் தொல்லை; (ஓமனிதரே)

2. சோலை கழனிகளும் மேவும் - காதல்
சொல்லும் குயில்கள் நின்று கூவும் - அங்கே
வேலை புரிவீர் அவை யாவும் - தளிர்
விட்டுச் செழிபபுடனே தாவும். (ஓமனிதரே)

3. ஆலையமை கரும்பு போலே - உங்கள்
ஆக்கையும் சிதைந்திட வேலை - என்றும்
சாலப் புரிதுமொரு வேளை - உண்ணச்
சாதம் அடைந்திலீர்இக் காலை. (ஓமனிதரே)

4. வேலை செய்பவர்கட் குரிமை -சுகம்
வேண்டும் எனச்சொலும் அருமை - போக
ஓலமிட் டுங்கள்தம் பெருமை - யாவும்
ஒழிய அடைந்தீர் சிறுமை. (ஓமனிதரே)

5. எத்தனை தினங்கள்தான் துன்பம் - நீங்கள்
எய்திடப் பறிப்பார்உம் இன்பம் - அவர்
பித்த மனத்தினிலே அன்பும் - வரப்
பரிதும் உழைமின்இதை நம்பும். (ஓ மனிதரே)

6. குந்தக் குடிசையொன்றும் இன்றி - பெரும்
குளிர்மழை வெய்யிலில் குன்றி தங்கள்
சிந்தை கலங்கிநிற்பார் இன்றும் - அவர்
சிறுமையை ஒழிப்பீர் என்றும். (ஓமனிதரே)

## வஞ்சகர் வலை, வறியவர் துயரம்

(ராகம் - பிலகரி)

### பல்லவி

துன்புறுவாரே - மக்கள் (துன்புறுவாரே!)

1. துன்புறுவாரே - இங்கு
துய்க்கும் உணவுகள் இன்றி மனிதர்கள்;
இன்பம் நினைந்தே - தினம்
ஏழையர் வேலைகள்செய்து மடிவார்;
என்பு முறிவார் - அவர்
ஏதுஞ் சுகமின்றி ஏங்கி அழிவார்;
அன்பு நினையா - மக்கள்
அவர் செய்யும் வேலைகள் நன்மை கவர்வார்; (துன்)

2. வஞ்சனை செய்வார் - இங்கு
வாழ்வு பெருகிட இன்பம் பெறுவார்;
நெஞ்சினில் தீமை - எண்ணார்
நித்தம் வறுமையில் நின்று தவிப்பார்;
நஞ்சென நின்றே - இந்த
நாட்டினர் தம்மை நலிவுறச் செய்வார்;

பஞ்சுகள் போலே - மக்கள்
பாடுபட்டுப் பறப்பதைக் காணார். (துன்)

3. ஒற்றுமை காண - இந்த
உலகில் ஒருவழி கண்டு தெளியார்;
கற்றவர் என்போர் - யாரும்
காசு குவித்திட மோசம் புரிவார்;
உற்றபல் தீமை - மிக
ஓங்கி நலங்குறைந் தின்பம் அழிய
சற்றும் அறியா - அற்பர்
சாற்றும் மொழிகளைப் போற்றி மகிழ்வார். (துன்)

4. உண்மைகள் காணோம் - இந்த
உலகினில் எங்கணும் தீமைகள் கண்டோம்;
திண்மை யுடையோர் - என்றும்
தீங்கு புரிவதில் முன்வந்து நிற்பார்;
வண்மையுடையோர் முன்பு
வாழ்ந்தனர் என்ற வார்த்தைகள் கேட்போம்;
தண்மை மனத்தோர் - இன்று
தாரணி தன்னில் யாரும் இலையோ? (துன்)

5. இந்த உலகை - ஓர்
ஈஸ்வரன் கண்டு படைத்தனன் என்பார்;
அந்தக் கடவுள் - அருள்
ஆகிய தோற்றம் அமைந்தவன் என்பார்;
எந்தவிதமாய் - நாம்
இந்த உரையினை ஏற்றுக் கொளலாம்?
சிந்தனை செய்தால் - அன்னார்
செப்புதல் யாவும் பொய் என்று முடியும். (துன்)

6. நீதிக்கடவுள் - என்று
நிற்கும் ஒரு பொருள் உண்டெனில் என்றும்

தீது வளரும் - இந்தத்
தேசத்தைப் பார்க்கக் கண்கள் இலையோ?
ஓதுவதுபோல் - அருள்
உருவான தெய்வமிங் கொன்றும் இல்லை;
ஏதும் அறியார் - தெய்வம்
எண்ணித்தினந்தினம் துன்பம் அடைவார் (துன்)

7. உலகினில் மாந்தர் - படும்
துன்பங்கள் யாவும் மக்கள் செயலே
பலமுள மக்கள் - இங்கே
பண்ணும் செயல் விதியாகியதே;
நலந்தீமை தேரார் - அதை
நம்பும் படிசெய்வ தற்கே கடவுள்
தலையினில் வைத்தார் - உண்மை
தானிது கண்டு தீரம் பெறுமின்! (துன்)

8. கடவுளும் இல்லை - அது
கண்டு செயுந்தொழில் ஒன்றும் இங்கில்லை;
மடையர்கள் கூடி - இந்த
மாநில மக்களைத் துன்புற வைத்தார்;
கடவுளும் உண்டேல் - அந்தக்
கண்கெட்ட மக்களைக் கேட்டிடும் அன்றோ?
படுதுயர் ஏழை - மக்கள்
பரிதாபம் பார்த்துந் தூங்கிடும் மோதான். (துன்)

9. பண்டு கடவுள் - இந்தப்
பாரில் பிறந்திட்டுத் துட்டரை மாய்த்தார்;
என்று புகல் நூல் - யாவும்
எண்ணி யுரைத்திட்ட பொய்யுரை காண்மின்!
முண்டர் இனமே - எல்லா
முதன்மையும் பெற்றனர் இன்பம் நுகர்ந்தார்;

மண்டு துயரால் - வறியர்
மாளும் படியவர் நன்மை பறித்தார். (துன்)

10. ஒன்று படுவோம் - மக்கள்
யாவரும் தன்னலப் பேயை ஒழிப்போம்;
நன்று புரிவோம் - இந்த
நானிலம் பொதுவெனச் செய்து மகிழ்வோம்;
தின்று கொழுப்போர் - சொல்லும்
தீமையும் நன்மையும் செய்யும் கடவுள்
இன்றி யழிப்போம் - நல்ல
இன்ப சமத்துவ வாழ்வு பெறுவோம். (துன்)

## ஏழைக்குச் சொல்லுதல்

("மாடுதின்னும் புலையா" என்பதுபோல)

1. ஆண்மை குறைந் தாயே - உனக்கும்
ஆசை ஏதுக் கேடா?
தீமைத் துன்பம் கொண்டே - இங்குத்
தேம்பித் திரிவாயே! (ஆண்மை)

2. சாதி தீமை என்றே - மனத்தில்
சற்றும் எண்ணு வாயோ?
வாதம் பேசி நின்றே - வீணாய்
வாழ்வைப் போக்கு வாயே! (ஆண்மை)

3. பாலில் விஷம் போலே - உனது
பகுத்த றிவின் பாலே
சாலப் பழுதும் உறவே - கொண்டாய்
சமயப் பித்தும் மிகவே. (ஆண்மை)

4. நெஞ்சில் வலிமை உண்டோ? - ஏழையுன்
உடலில் வலிமையுண்டோ?

அஞ்சி யஞ்சி வாழ்வாய் - நீதான்
ஆண்மை குன்றிச் சாவாய். (ஆண்மை)

5. மாடுபோல் உழைப்பாய்! - உனது
மானங்கெட விடுப்பாய்!
காடுகளில் விதைப்பாய்! - தினமும்
கஷ்டங் கொண்டு பதைப்பாய்! (ஆண்மை)

6. கையைக் கட்டிச் சாவாய்! - செல்வர்தம்
காலில் வீழ்ந்து வாழ்வாய்!
வையத் தின்பம் பேணாய்! - சுகமாம்
வாழ் விழப்பாய் வீணாய்; (ஆண்மை)

7. விளக்கைக் கையில் வைத்தே - கிணற்றுள்
வீழு வாரை ஒத்தே
அளக்கும் அறி வாலே - நலங்கள்
அடைதல் விட்டாய் நீயே! (ஆண்மை)

8. ஏமாறாது நீயே - இருப்பின்
ஏமாற்றுவர் ஆரே?
பூமி தன்னில் அறிவே - கொண்டுநீ
புதுமை செய்க இனிதே! (ஆண்மை)

## சோம்பேறி வாழ்வு

(ஆனந்தகளிப்பு)

1. சோம்பித் திரிகின்ற மக்காள்! உண்மைச்
சோதரத் தன்மையை மனத்தினில் எண்ணீர்!
தேம்பித் தவிக்கின்ற வாழ்வை - இந்தத்
தேசத்தில் மேலென்று சொல்லியே நிற்பீர்! (சோ)

2. உலகத்தைக் கண்கொண்டு காண்பீர்! - எங்கும்
ஒளிர்கின்ற காட்சிகள் யாவையும் பார்ப்பீர்!

பலவும் மயக்கென்றே கூறி - உம்மைப்
பாழ்செய்யும் தத்துவம் கேட்பது வேண்டாம். (சோ)

3. மாயை உலகென்று கூறி - உங்கள்
மனதைக் கெடுக்கின்ற பொய்யுரை தள்ளும்;
தாய்தந்தை சோதரர் மக்கள் - காதல்
தந்துரை மனைவியும் நண்பரும் பொய்யோ? (சோ)

4. நீலத்திரைக்கடல் பொய்யோ? - நம்முன்
நின்றுவளந்தரு மலைகளும் பொய்யோ?
சாலப் பெரும்புனல் ஓடி - இந்தச்
சகத்தைப் புரக்கின்ற ஆறுகள் பொய்யோ? (சோ)

5. பாடும் பறவைகள் கொய்யோ? - இன்பப்
பாட்டுகள் பாடிக் களிப்பதும் பொய்யே?
ஆடும மயிலினம் பொய்யோ? - நம்மை
ஆநந்தத் தாக்குந்தண் சோலைகள்பொய்யோ? (சோ)

6. பொற்கதிர்ச் சூரியன் பொய்யோ? - நம்முன்
பொங்கி வருங்குளிர்ச் சந்திரன் பொய்யோ?
அற்புத வானமும் பொய்யோ? - அங்கே
அமைந்தொளி வீசுமீன் கூட்டமும்பொய்யோ? (சோ)

7. இத்தரை மீதினில் வாழும் - நல்ல
இன்பங்கள் யாவையும் துய்த்திடல் இன்றி
புத்தி இழந்துறை மக்கள் - கெட்ட
புன்மைத் துறவினைப் போற்றியே நிற்பார்; (சோ)

8. மெய்யுணர் வில்லாத மூடர் - இங்கு
மேன்மைகொள் வாழ்வினைத் தீதென்று தள்ளி
செய்தொழில் யாதொன்றும் இன்றித் - துன்பம்
சேர்கின்ற சந்யாசி வேடங்கள் கொள்வார்; (சோ)

9. பிச்சை யெடுக்கின்ற வாழ்வே - மிக்க
பெரிதென்று பேசுதல் மதிகெட்ட தாழ்வே;

சிச்சீ இதை வெறுப்போமே! - இதைச்
சிறப்பிக்கும் நூல்களைத் தீயிடைச் சிதைப்போம்; (சோ)

10. உண்மைத் துறவறம் வேண்டில் - உங்கள்
உள்ளத்தின் தந்நலத் தீமையை ஓட்டி
திண்மை மனங்கொண்டு நிற்பீர்! - இந்தத்
தேசத்து மக்களின் துன்பம் தொலைப்பீர்! (சோ)

11. எட்டி மரத்தைப்போல் இன்றி - நீங்கள்
இன்சுவைக் கனிதரும் மாவென வாழ்வீர்!
துட்டத் தனஞ் செய்யும் பேயர் - வாழ்வைத்
தூவென்று துப்பி இகழ்ந்திடு வீதே (சோ)

12. சாம்பல் உடம்பெங்கும் பூசி - பிச்சைச்
சாதங்கள் பெற்றிடச் "சங்கரா' என்பார்
சோம்பல் மனிதர்கள் காண்மின்! தங்கள்
சுற்றத்தைக் காக்கும் திறமற்றோர் இவரே. (சோ)

13. 'நாராயணா" வென்று சொல்லிப் - பட்டை
நாமங்கள் சாத்தியே ஊரெங்கும் நண்ணி
ஏராள மாகவே தீமை - செய்யும்
இழிவுள்ள வாழ்வினை வெறுத்திடுவீரே! (சோ)

14. அடிமையில் மோகத்தை ஆக்கும் - சுத்த
அறிவற்ற வேதாந்தப் பேச்சுகள் வேண்டாம்;
கொடுமைகள் யாவையும் போக்கி - இந்தக்
குவலையம் இன்புறக் கூடி உழைப்பீர்! (சோ)

# மாதர் பகுதி

## மாதர் சுதந்தரக்கும்மி

1. கும்மியடி பெண்கள் கும்மியடி இன்பம்
கூட்டும் சுதந்தரம் பெற்றோம் என்றே.
நம்மைப் பற்றிய பீடைகள் போயின
நாமினிக் கூடிக் களிப்போம் என்றே. (கும்மி)

2. பேதையர் என்றெம்மைப் பேசி யிகழ்ந்திடும்
பித்தர் அனைவரும் மாய்ந்து விட்டார்!
வாதை தவிர்ந்தினி வாழ்ந்திடு வோமென
வாழ்த்திக் குதித்துக் கும்மியடி! (கும்மி)

3. கல்வியைப் பெண்கள் கற்பதுந் தீதெனக்
கருதி யிருந்தவர் தீர்ந்து விட்டார்;
பல்வித மாகிய சாத்திரங் கற்றுப்
பாரில் விளங்குவம் பெண்கள் எல்லாம்! (கும்மி)

4. வீட்டு விலங்கினம் போலவே நம்மை
வீணில் வதைத்தவர் வீழ்ந்துவிட்டார்;
நாட்டு நலங்களில் நாமுங் கலந்திங்கு
நாளும் களிப்புடன் தொண்டு செய்வோம்! (கும்மி)

5. சோறு சமைப்பது தானிந்தப் பெண்களின்
சொந்தத் தொழிலெனச் சொல்லி வந்தார்;
கூறு கெட்டவர் மாண்டனர் நாமினிக்
கூடும் தொழில்பல செய்திருப்போம். (கும்மி)

6. பட்டிக்குள் மாட்டை யடைப்பது போல் நமைப்
பாழும் மனைக்குள்ளே பூட்டிவைத்தார்;
வெட்டி விலங்கினைத் தூள்பண்ணி வாரி
வீசி வெளிவந்தோம் நாம் உலகில். (கும்மி)

7. வீர சுதந்தர வாழ்வுக்குப் பெண்கள்
விலக்கென்று கூறி விதித்து வைத்தார்
ஈரம் மனத்திலா மாந்தர்; இனியது
ஏகிட வென்றே கும்மியடி. (கும்மி)

8. ஆண்கள் புரிதொழில் அத்தனையும் செய்யும்
ஆண்மை படைத்தனம் பெண்கள் எலாம்;
காண்க இனி எமைக் கட்டி வைத்துத் துயர்
காணுதல் கூடும் காரியமோ? (கும்மி)

9. கல்வி பயில்வதும் காசினி யாள்வதும்
கைத்தொழில் செய்வதும் கன்னி யர்க்கும்
ஒல்லும்; எனச் சொல்லி முன்வந்தோம் இனி
ஓய்ந்திரோம் என்று கும்மி யடி (கும்மி)

10. ஆணுக் கொருவிதி பெண்ணுக் கொருவிதி
ஆக்கிவைத்தெம்மை ஆட்டி வைத்தார்;
வீணுக் குரிமையை விட்டிருந் தோமினி
வேதனை எய்தோம், கும்மியடி. (கும்மி)

11. காசினி அன்னைக்குப் பெண்களும் ஆண்களும்
காணும் இருவிழி ஆவர் அன்றோ?
மாசு படும்படி அவ்விழி ஒன்றுள்ளே
மண்ணையுந் தூவுதல் நன்றாமோ? (கும்மி)

12. பிள்ளையைப் பெற்றதைப் பேணி வளர்ப்பதே
பேதையர்க் கேற்ற வேலை என்றே
கள்ள மனத்துடன் கூறுவர்; சற்றும்
கல்வியும் செல்வமும் தந்தா ரிலர். (கும்மி)

13. காசுக்கு வாங்கிய கைப்பொருள் போல் நம்மைக்
கயவரும் கைக்குள்ளே போட்டி ருந்தார்;
மாசுக்குள் ளானவர் பெண்ணினம் என்றவர்
மாய மொழிகளைத் தள்ளி விட்டோம்! (கும்மி)

14. பெற்று வளர்த்திடும் அன்னையர், தம்மினம்
பேணற் குரியவர் என்றறிந்தும்,
சற்றும் அறிவற்ற மாந்தர்கள் பெண்களைச்
சந்ததம் துன்பத்துள் ஆழ்த்தி வைத்தார். (கும்மி)

15. "ஆண்களுக் கன்புடன் தொண்டு புரியவே
ஆண்டவன் பெண்ணைப் படைத்து விட்டான்
காண்க' எனச்சொலும் கல்லு மனத்தரைக்
காறி யுமிழ்ந்து வாழ்ந்திடுவோம்! (கும்மி)

16. சொத்துச் சுதந்தரம் ஆண்களுக் கேயன்றிச்
சோதரி மார்களும் கில்லை என்றார்.
பித்த மனிதர்கள் பேச்சின்றி வெட்குறப்
பெற்றீடு வோம்செல்வம்! கும்மி யடி (கும்மி)

## பெண் செய்நன்றி

இராகம் - பிலகரி

1. பெண்ணைப் பழித்துரைகள் பேசும் - கெட்ட
பேதை மனிதரே கேளீர்!
மண்ணில் உமையொத்த பேரே - இனி
மதிப்பை இழப்பர்கள் தாமே.

2. பத்து மாதம் உம்மைச் சுமந்தே- மிக்க
பரிவுடன் பெற்றதாய் மாரே
நித்தம் பெருந்துயர் ஏற்றே - உம்மை
நிமிர்ந்து நடக்கவே காத்தார். (பெண்)

3. தங்கள் உடல்நலம் இழந்தார்; - உங்கள்
தவிப்பு நீங்கிடப் புரிந்தார்;
பொங்கும் சுவைமிகு பொருளே - பல
புசிக்கக் கொடுத்துமை வளர்த்தார். (பெண்)

4. காளைப் பருவம் நீர் அடைந்தே - நல்ல
காதல் திறம் உணர் போதே
நீளும் விழிமட மாதே - உங்கள்
நெஞ்சில் உறைபவள் ஆமே. (பெண்)

5. காட்டை அழித்திடுந் தீயைப் பெருங்
கார் பெய்து தணிப்பது போலே
வாட்டி உமைச்சுடும் காதல் - தன்னை
வளர்த்துத் தணிப்பவள் மாதே. (பெண்)

6. வாழ்க்கைத் துணையுமக் காவாள் - நல்ல
வழியில் நடக்கவே செய்வாள்;
தாழ்க்கை உமையடையாமே - அவள்
தடுத்து மகிழ்சுகம் தருவாள். (பெண்)

7. வாழும் மலர்மணம் போலே - உங்கள்
வாழ்வில் கலந்துறை வாளே;
தாழும்படி துயர் செய்தீர்! - சற்றும்
தயவு மனந்தனில் கொள்ளீர்! (பெண்)

8. வெயில் இன்றிமழை உளதோ? - நல்ல
வேலை யின்றிச்சுகம் ஏதோ?
கொய்யும் மலர்க்குழல் மாதர் - தாங்கள்
கூட்டம் இன்றியுலகுண்டோ? (பெண்)

9. செல்வம் தருபவள் மாதே; மகிழ்
செய்தி தருபவள் மாதே;
கல்வி வளர்ப்பவள் மாதே; - சிந்தைக்
கனிவை யளிப்பவள் மாதே. (பெண்)

# பெண்மைக் காதல்

1. அண்களெல்லாம் தம்மனத்திற் சுயநலமே
மிக்கவராய் அறிவு கெட்டே
மாண்புநிறை பெண்ணினத்தைக் கொடுமைவலைக்
குட்படுத்தி மடக்கி வைத்தீர்;
வீண் பெருமையுடன் செருக்கித் தீவினைகள்
விளைத்திட்டீர்; விளம்புகின்றேன்
காண்கவினி; நீர் செய்த கள்ள மெல்லாம்
கண்டறிந்தார் மாதர் தாமே.

2. பொய்யான சாத்திரத்தால் மடந்தையரைப்
பொம்மைகளாய் ஆக்கி வைத்தீர்;
மெய்யான நிலையுணர்ந்தார்; இனியடிமை
வாழ்வுதனில் மேவமாட்டார்;
ஐயரவும் ஜம்பமினிப் பலியாதென்
றவர் கூறிச் சுதந்தரத்தைக்
கையாள முன் வந்தார்; இச்செயலை
நும்மனத்தேகருதி நிற்பீர்.

3. எத்தனை நாள் பெண்ணினத்தை ஏமாற்றல்
கூடுமென நினைந்து நின்றீர்;
சத்தியந்தான் சிலநாட்கள் மறைந்திடினும்
ஒருநாளும் சாதலில்லை;
உத்தமராம் கன்னியர்க்கும் உங்களுக்கும்
எவ்வகையில் உயர்வுதாழ்வு!
பித்தர்களே கூறுங்கள் பிழையின்றி
மனத்துணர்ந்து; பிதற்ற வேண்டாம்.

4. "கன்னியரே காமத்துக் குறை விடமாம்
அவர்துணையை மறக்க வேண்டும்
இந்நிலத்தில்" எனக்கூறும் ஏழையரே
இன்பநிலை உணர்ந்து காணீர்;

உன்னுவதும் கூறுவதும் உண்மையாயின்
    உலகில் நீர் வாழ்வதேனோ?
பின்னுமொரு பேச்செதற்குப் பேசாமல்
    உயிர் விட்டுப் பிரிந்துபோ மின்!

5. அன்புக்கும் அறிவுக்கும் உணர்ச்சிகட்கும்
    அழகுக்கும் ஊக்கமோடு
இன்புக்கும் உண்மைக்கும் இருநிதிக்கும்
    ஏனைமற்ற உயர்வுகட்கும்
பண்புக்கும் கருவியாகி நிற்பதுவே
    பெண்மை யெனும் பான்மை தேரார்
வன்புக்கு மனம் போக்கி நலமிழந்து
    வாய் பிதற்றி வாழுவாரே.

6. பெண்ணினத்தைப் பழிகூறும் பேதையரே
    அவரின்றேல் நமது வாழ்வு
மண்ணிலத்தின் என்பயனோ? மகிழ்ச்சியுண்டோ?
    அறிவுண்டோ? குணமுமுண்டோ?
எண்ணிவிடை புகன்றிடுவிர்; எழில் திகழும்
    பெண்மைநலங்கண்டு கொள்வீர்;
கண்ணிருந்தும் மூக்கிருந்தும் மலம் புசிக்கும்
    கயவர் போல் கழறலாமோ?

7. காதலுக்குக் கண்ணில்லை என்றுரைக்கும்
    பழமொழியைக் கருத்தமைக்கீர்;
தீது மிகப் புரிந்திட்டீர்; திரை சுற்றிப்
    போட்டதனை மறைத்துவைத்தீர்;
சாதிமதக் கட்டமைத்துத் தடுத்திட்டீர்;
    சங்கடங்கள் பல செய்தீர்;
பூதலத்தில் இனித்தீமை புரியவேண்டாம்
    காதலினைப் போற்றிவாழ்வீர்.

# பெண் ஆண் பேதம் பாராட்டல்

(சிந்து)

1. பெண்பிறவி பாவமென்று பேசுகின்ற தேனோ?
மண்தனிலே எவர் பிறப்பும் ஒன்றெனவே அறியீர்!

2. ஆணைபெற்ற கன்றிரண்டுகள் ஒன்றைக்கரி என்றும்
பூனையென்றும் வேறொன்றைப்புகலுதலும் உண்டோ?

3. ஒரு வயிற்றுள் பிறந்தவருள் உயர்ந்த பிறப் பாணாம்
சிறு பிறப்புப் பெண்களென்றே செப்புகின்றீர் ஏனோ?

4. இருகண்கள் தமில்ஒன்றை இழிவுசெயல் முறையோ!
ஒருதாயின் கண்களென்றே ஆண் பெண்ணை உணர்வீர்!

5. இழிந்தவர்கள் பெண்கள் எனும்எண்ணத்தினால் நீங்கள்
பழிகூறிப் பெண்ணினத்தைப் பாடு படச் செய்தீர்!

6. வாழைதரும் குலையதனை வளைத்திடுதல் போலே
தாழவைத்தார் தாயினத்தை ஆண்களென்பார் தாமே.

7. இல்லறமாம் தேர் நடக்க இரண்டுருளை வேண்டும்;
நல்லதொரு பெண்ணின்றேல் நடைபெறுமோகுடும்பம்.

8. உலகசுக வாழ்வு பெறும் பொறுப்பிலொரு பாதி
தலைசுமக்கும் மாதர்களைத் தாழ்த் திடுதல் அறமோ?

9. மனதடக்க வழியறியா மடையரெல்லாம் கூடி
வனிதையர்கள் காமத்தீ வளர்ப்பரென்று சொன்னார்.

10. காதல்வழி நடந்துலக சுக வாழ்வை அடையார்
தீதெனவே அரிவையரைத்திட்டி கவி சொன்னார்.

11. ஒத்தவர்கள் பொறுப்பினிலே இருவரும்என் றுணர்ந்தும்
பித்தர் சொல்லும் சாத்திரத்தால் பெரும்பழிகள் செய்தார்

12. இனியந்த சாத்திரஞ் சொல்இழிவுரைகள் அழிப்பீர்;
புனிதர்களே மாதர்களும் என்று நலம் புரிவீர்.

# பெண்ணன்றி கொல்லல்

கிளிக்கண்ணிகள்

1. பெண்ணை இழிவு செய்து
பேதமை பேசி நிற்பார்
அன்னை அவர்கள் என்றே - கிளியே
அறியாத பேய ரடி!

2. ஏறிய ஏணி யையே
எட்டி உதைப்பவர் போல்
சீரிய பெண்ணி னத்தைக் - கிளியே
சிறுமை புரிந்தாரடி!

3. பெண்ணுருக் கல்லில் செய்து
போற்றுவர் தெய்வம் என்றே
கண்காணும் பெண்ணி னத்தைக் - கிளியே
கருத்தில் மதியா ரடி!

4. பெற்று வளர்த்து நம்மைப்
பெரியவர் ஆகச் செய்தார்
குற்றம் அறியாப் பெண்கள் - எனவே
கொஞ்சமும் எண்ணாரடி!

5. செய்நன்றி சற்றும் இன்றிச்
சீரிய பெண்கள் தம்மை
மெய்யாய் அடிமை செய்வார் - கிளியே
மேன்மை அடைவ துண்டோ?

6. கல்வி அறிவும் இன்றிக்
காற்றும் வெளிச்சம் இன்றி
பல்வித மாகப் பெண்ணை - கிளியே
பாழாய் வருந்த வைத்தார்!

7. மூலையில் பெண்கள் தம்மை
முக்காடு போட்டு வைத்தே
சாலவும் துன்பஞ் செய்தார் - கிளியே
சாய்து மடிந்தா ரடி!

8. வாசனை வீசும் பூவை
வாட்டி முகர்வது போல்
நேசிக்கும் மாதர் களை - கிளியே
நிட்டூரம் செய்வா ரடி!

9. அறிவுத் துறைக ளிலும்
ஆண்மைச் செயல்க ளிலும்
பெரிதுந் திறம் படைத்தார் - கிளியே
பெண்மக்கள் என்றுணர் வாய்!

10. ஆண்கள் புரியும் எந்த
ஆக்கி னைக்கும் அடங்கி
வீணில் கிடந்த பெண்கள் - கிளியே
விரைந்தே எழுந்தனரே!

11. மாதரை இன்னும் இங்கே
மடக்கி அடிமை செய்தே
வாதனை செய்வோம் என்பார் - கிளியே
வாழ்வை இழந்தாரடி.

## பெண்மைக் கிரங்கல்

### கண்ணிகள்

1. வளங்குலவு செல்வ மெலாம்
 வனிதையர்கள் வடி வென்றே
உளம் பதித்தார் முன்னோரும்
 உரிமையை ஏன்நீர் மறுத்தீர்!

2. காதலெனும் பயிர் வளரும்
கழனிகளாய் நிற்போர்கள்
மாதரெனத் தெரிந்திருந்தும்
மதியிழந்து தாழ்த்துவதேன்?

3. அன்பு செயும் பெண்ணினத்தை
ஆதரியா வன்னெஞ்சர்
இன்ப சுகங் காணா ராய்
ஏங்குவர்காண் எந்நாளும்

4. காமுகர்கள் பெண்ணினத்தின்
கற்பழித்துத் தீமை செய்வார்;
சேமமுறு வகையுணரார்
சிறுமை பல செய்திருப்பார்.

5. கன்னியரைக் கடிந்து ரைக்கும்
கன்மனத்தார் எல்லோரும்
அன்னையரைத் துன்புறுத்தும்
அறிவிழந்தார் ஆவார் காண்!

6. மங்கையர்கள் வாழ்வின்றேல்
மாநிலத்தின் வாழ் வெங்கே?
இங்குணர்ந்து மெய்யுரைப்பீர்
ஏழை மதி மானிடரே!

7. மாதருடன் வாழ் வொழித்து
மன்னுதவஞ்செய்க வென்பர்
பேதை மதி கொண்டோர் காண்!
பெண்மைநலந் தேரார் காண்.

8. சாதிமதத் தீமை யெல்லாம்
சாய்ந்தழியும் காதலின் முன்;
மேதினியில் நல்வாழ்வும்
மிகவளரும் காணுமினே!

9. காதல் திறம் தேராத
கன்னிகையைப் புத்தியின்றிச்
சாகத்தைப் பார்த்து மணம்
செய்வதுவும் சரிதானோ?

10. எல்லார்க்கும் உணர்வொன்றே
என்றுமனங் கொள் வீரேல்
பொல்லாங்கில் மாதரினம்
பொருந்த வினை செய்வீரோ?

11. சோதரிகள் கைம் பெண் எனச்
சோர்ந்திருக்க வீட்டினுள்ளே
மாதருடன் நீர் கூடி
மனங்களித்தல் மதியாமோ?

12. நங்கையரை யடிப்படுத்தி
நலிவித்த நாள் போதும்;
இங்குரிமை இனியெய்த
விடுத்திடுமின் எழையரே!

13. வாழுமிரு கைகளிலே
வலது கரஞ் சோரவைத்தல்
தாழ்வன்றோ? மாதருக்கும்
தளர் வளித்தல் அத்திறமே.

14. ஆண்பெண்கள் சமத்துவமாய்
அருந் தொழில்கள் பல புரிந்தால்
வீண் துயரம் அழிவெய்தும்;
வேண்டுநலம் பெறுவோமே!

15. மாதரெல்லாஞ் சிறைப்பட்டு
மனங்கொதித்து வாடும் வரை
தீது தரும் நோயடிமை
தீராதிவ் வுலகத்தே.

16. கனியும் மனக் காரிகையார்
    களிப்பெய்தி வாழ்ந்திடவே
இனிமை மிகும் இவ்வுலகில்;
    எத்துயரும் அழிவுறுமே!

17. பெண்டிரும் ஆடவரும்
    பேரறிவு திறங்கல்வி
கொண்டிங்கு சமத்துவமாய்
    வாழநலம் குலவுறுமே!

18. சொத்துரிமை மணவுரிமை
    சுகம் பெருக்கும் பிறவுரிமை
ஒத்தினிது பெண்ணாண்கள்
    உவந்துகில் வாழியவே.

## அரிவையர் ஆநந்தம்

### பல்லவி

ஆடுவோமே வெற்றி பாடுவோமே - நல்ல
ஆநந்த சுதந்தர வாழ்வை யடைந்தே (ஆடு)

1. ஆடவர்க்கு நாமிளைப்போம்
    அல்ல வென்றே - பெரும்
ஆண்மையுடன் கூறி நின்று
    பாடு வோமே;
கோடி பொன்கள் வந்து நம்மைக்
    கூடினாலும் - இனிக்
கொஞ்ச மேனும் பஞ்சையாக
    வாழ மாட்டோம். (ஆடு)

2. இனி அடிமை செய்வார் சொல்
    நம்ப மாட்டோம் - முன்பு

ஏய்த்த கள்ளர் வஞ்னைகள்
கண்டு கொண்டோம்;
கனிந்தமொழி பேசிநம்மை
வீட்டின் உள்ளே - இரு
கால்மிருகம் போலவைத்தோர்
எண்ணம் அழிப்போம். (ஆடு)

3. எட்டுத்திக்கும் சென்று வெற்றி
கூறு வோமே - உடன்
இந்நிலத்தில் மாதர் ஒன்று
சேரு வோமே;
தட்டுக்கெட்ட சாதிமத
பேதம் எல்லாம் - இந்தத்
தாரணியில் மாதருக்குள்
இல்லை என்போதம். (ஆடு)

4. கரும்பு கொண்டு யானை கட்டும்
செய்கை போலே - இங்கு
காதல் அன்பு கற்பெனவே
வஞ்சம் பேசி
பெருந்துயரம் செய்து நம்மைக்
கொன்று போட்டார் - இந்தப்
பேச்சைநம்பி இனிமோசம்
போக மாட்டோம். (ஆடு)

5. அச்ச மடம் நாணம் பயிர்ப்
பென்ப வெல்லாம் - நம்மை
அடக்கி வைக்கச் செய்த வஞ்ச
விலங்கு காணீர்;
நிச்சயமே சுதந்தர
வாழ்வை நாடில் - இந்த

நீதியற்ற கட்டை யெல்லாம்
    வெட்டி யெறிவீர்! (ஆடு)

6. தேசவளம் கேணிவளர்
    தேரை தானும் - கண்டு
தெளிவதில்லை அதுபோல
    வீட்டின் உள்ளே
பேசுதற்கும் துணையின்றி
    வாழ்ந்து நிற்போர் - முழுப்
பேதையர்கள் ஆவர் இதில்
    ஐயம் உண்டோ? (ஆடு)

7. இவ்விதத்தில் யோசனை நாம்
    செய்து பார்த்தால் - மக்கள்
யாவருக்கும் பேதை முதல்
    நான்கும் இயற்கை
எவ்விதத்தில் பெண்கள் மட்டும்
    பேதை யாவார்? இனி
இம்மொழிகள் பேசவேண்டாம்
    என்று களைப்போம். (ஆடு)

8. பாலர்களை அன்பு கொண்டு
    பாலிப்போமே - நல்ல
பாடங்களை அவர்கட்குப்
    போதிப்போமே
மூலைகளில் இனிக்குந்திச்
    சாக மாட்டோம் - கெட்ட
மூடர்களின் கீழிருந்து
    வாழ மாட்டோம்! (ஆடு)

9. தேகக்கூறு சாத்திரங்கள்
    தேர்ந்து கொள்வோம் - இந்தத்

தேசம் உறை மக்கள் பிணி
    தீர்த்து வைப்போம்;
மோகமுற்று நம்மைத்துன்பம்
    செய்த மூடர்- இனி
மூச்சுவிட முடியாமல்
    ஆண்மை செய்வோம்; (ஆடு)

10. கட்டும் அணை பேர்த் தெழுந்த
    வெள்ளம் போலே - சற்றும்
கலக்க மின்றி நாமெழுந்து
    நாதஞ் செய்வோம்;
கெட்டவினை நச்சுமரம்
    வெட்டி வீழ்ப்போம் - இன்னும்
கீழென்று நம்மை வைவோர்
    தம்மை உதைப்போம்! (ஆடு)

11. வாசமலர் களைத்துணி யாலே மூடி - எங்கு
வைத்திடினும் அதன் மணம் வீசல் போலே
நேசமிகும் எம்மைவீட்டின் உள்ளே வைத்துப் - பூட்டி
நிறுத்தினும் சுதந்தரப் போரை மறவோம் (ஆடு)

## வீரப் பெண்

("முன்னை யிலங்கை அரக்கர்" என்ற பாரதி பாடல் போன்றது)

1. மக்கள் சுகத்தையடையும் வகையில்
மகிழ்ந்து வளர்த்தவர் ஆர்? - அன்பு
மிக்க அரிவையர் யாம் எனக் கூறல்
மிகையுரை ஆயிடுமோ!

2. நெஞ்சில் உரமும் உடம்பில் பலமும்
நிலைத்திடச் செய்தவர் ஆர்? - இங்கு

நீங்கள் அடிமை என்று நினைக்கின்ற
நேர்இழை மார்கள் அன்றோ!

3. சாண்பிள்ளை என்னினும் ஆண்பிள்ளை என்று
சாற்றிடச் செய்தவர் ஆர்? - நல்ல
சந்திர விம்ப முகங்கொள் வனிதையர்
சாந்த குணங்கள் அன்றோ!

4. அன்புமனத்தில் வளரும் விதத்தில்
அறிவுரை தந்தவர் ஆர்? - உங்கள்
அன்னையர் தம்சுவைப் பாலுடன் கூட்டி
அளித்தது பொய்யுரை யோ?

5. தங்கு தடையறக் காரியம் செய்திடத்
தயிரியம் தந்தவர் ஆர்? - அவர்
தம்மைத் திரை கொண்டு மூடி முடுககில்
தவித்திட வைப்து வோ!

6. கொஞ்சும் கிளிமொழி பேசி உமைநிதம்
குதுகலம் செய்பவர் ஆர் - அவர்
கோரும் சுதந்தர வாழ்வைக் கெடுக்கக்
குறுக்கிடு தலும் நன்றோ!

7. காதலை உம்மனக் கழனியில் விதை
காரிகை யார்தமையே - சற்றும்
காருண்யம் இன்றியே பேதையர் என்றீடில்
கண்டனஞ் செய்திடுவோம்.

8. எத்தொழில் என்னினும் செய்கின்ற நற்றிறம்
எங்களிடம் இல்லையோ? - இனி
இழிந்தவர் பெண் மக்கள் என்று மொழிய
இடமில்லை என்றுணர் வீர்!

9. கத்தி படை கொண்டு சண்டைகள் செய்யவும்
கற்றிருந் தோமுன்னே - இன்று
காகம் கரையினும் அஞ்சிடச் செய்தவர்
கண்ணற்ற ஆடவரே!

10. செவ்வி யளிக்கும்பல் கல்வி சிறந்து முன்
செய்தனம் பல்கலையே! - அந்தச்
செய்கைத் திறத்தினில் இன்னும் சலிப்பிலம்
சிந்தையினில் வைப் பீர்!

11. கனிமொழி மாதர் கலப்பின்றி யிந்தக்
காசினி வாழ்வது வே- இங்கு
கண்ணின்றிக் காரியம் செய்திடு வோமென்னும்
மணக்கில் முடிந்திடு மே.

12. தூரியம் இன்றியே சித்திரந் தீட்டத்
தொடங்குதல் ஒத்திடுமே - நல்ல
தோகையர் கூட்டுற வின்றி முடிக்கும்
தொழில்களில் வெற்றியுமே.

## விதவைக் கொடுமை

("தில்லை வெளியிலே கலந்து விட்டால்" என்ற மெட்டு)

1. கணவன் இறந்தபின் கன்னியர் தமையே
கைம்பெண் எனப்பழி பேசி - என்றும்
உணவும் உடையுமே இன்றித் துயர்கொள்ள
ஒடுக்குதல் நலம் ஆமோ?

2. பேழையுள் தீவைத்துப் பிறர் அறியாமல்
பேணில் அடங்கு மோதான் - நெஞ்சில்
சூழும் காதலும் கன்னியர் தங்கள் பால்
சேர்தலும் இல்லை யோதான்.

3. மனைவி இறந்தபின் மற்றொரு பெண்ணைஆண்
மணந்து சுகமுறும் போது - தங்கள்
கணவன் இறந்தபின் கைம்பெண் என்று வைத்து
கவலை படச் செயல் ஏனோ?

4. பச்சை யிளம்வய தானபெண்கள் தம்மை
பார்த்து மணம்புரி விப்பீர் - பின்னர்
இச்சகம் நீங்கி ஆடவர் மாண்டபின்
என் செய் வோம்விதி என்பீர்!

5. ஈன்ற மகள்தன்னை விதவைப் பெயர் சொல்லி
இன்பம் துறந்திடச் செய்வீர் - ஆசை
தோன்றி இளமைசெகாள் மாதை மணந்துநீர்
துயரின்றி வாழு வீரோ?

6. விதவையர் உதிரக்கண் ணீரி னால்உங்கள்
வீரம் அறிவும் போமே - என்றும்
உதவி அவர்களும் உலகின்பம் பெறவே
உங்கள் மனங்கனி வீரே.

7. கைம்பெண் உண்டெனக் கூறும்பொய் நூல்களை
கையில் எடுத்திட வேண்டாம் - அவர்
துன்பம் ஒழிந்திடப் பேசும் மெய்யுரைகள்
தூய தென்றுமனம் கொள்வீர்

8. கணவன் இழந்தஓர் மாதை எதிர்கண்டால்
காரியம் நடவா தென்றே - உங்கள்
மனது நடுங்கிய வீட்டை அடைகுவீர்
மடமைக் குணமிது அன்றோ?

9. விதவை களைமணம் செய்தல் தீதென்றே
விளம்பு வீர்அறி விழந்தே - வீட்டில்
நிதமும் அவர்கள் சோரத் தனஞ்செய்ய
நீங்கள் உடந்தையர் ஆவீர்!

10. காதல் ஒருவனைக் கைப்பிடித் தன்புடனே
களிப்புடன் வாழவே செய்வீர்! - இதனால்
தீது வருவதொன் றில்லை என்றறிவீர்;
தேசம் நலமுறும் பெரிதே!

## கற்புத்தளை

(ராகம் - அடாணா, தாளம் - திஸ்ரஏகம்)

1. கன்னியர் எங்களைக் கற்பின் பெயர் கொண்டு
கட்டுப் படுத்தினரே - அந்தக்
கட்டை யவிழ்த்திடக் கண்டு கொண்டோ மினிக்
கவலை யுற மாட்டோம். (கன்னியர்)

2. கற்பு நலந்தரு மாயின் அதையிரு
பாலருங் கைக் கொள் வோம் - அது
காளையர்க் கில்லை கன்னியர்க் கென்றிடில்
கட்டுப் படுவோமோ? (கன்னியர்)

3. ஆண்கள்தம் கற்பை இழந்திடிற் பெண்களும்
அருங்கற் பழியாரோ - இதை
ஆடவர் தங்கள் மனத்தினுள் எண்ணிடில்
அல்லல் உறுவோமோ? (கன்னியர்)

4. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்
பெருங்குணம் என்றிசைத்தே - நம்மைப்
பேதையர் ஆக்கிய காலம் கழிந்தது
பெண்மை சிறப் போமே! (கன்னியர்)

5. கற்றல் எனும் பொருள் கற்பெனும் சொல்லிது
கருதி யறியீரோ - உண்மை
காணும் உயர்கல்வி வீரம் அறிவுகள்
கற்று சிறப்போமே! (கன்னியர்)

6. கோழை மனத்தினர் என்றெம்மை யாடவர்
கூறித் திரிந்தனரே - அது
வீழும் படியிங்கு வீர உணர்வுடன்
வேலை புரிவோமே (கன்னியர்)

7. ஆடவர் காம இச்சை மிகுந்தெம்மை
அல்லல் புரியாமே - பெரும்
ஆண்மை யுடன் நம்மைக் காத்துக் கொளும்வழி
கண்டு மகிழ்வோமே! (கன்னியர்)

8. வஞ்சகம் பேசி மயக்கிடும் ஆடவர்
வார்த்தைகட் கேமாறோம்த - மண்ணில்
வாழுந் திறமெல்லாம் கண்டு தெளிந்துநல்
வாழ்வு பெறு வோமே! (கன்னியர்)

## பெண்கள் எழுச்சி

("சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே" என்பதுபோல)

1. இந்த நிலத்தினில் இன்னும் அடிமையாய்
வாழ்ந்திடோம் - நாங்கள் - தாழ்ந்திடோம்;
சிந்தை களிக்கும் சுதந்தர வாழ்வினை
சேருவோம் - வெற்றி - கூறுவோம்

2. பேதையர் பெண்கள் என்னும் இழிவையே
போக்குவோம் - துயர் நீக்குவோம்;
வாதனை செய்கின்ற ஆண்களின் கர்வத்தை
ஓட்டுவோம் - வீரம் காட்டுவோம்

3. அதிகாரம் செய்வதற் காண்மக்கள் என்பவர்
அறிவிலார் - நன்மை - புரிகிலார்
சதிகாரர் அவரதி காரத்தைப் போக்கவே
நாடுவீர் - வழி -தேடுவீர்!

4. உலகத்துப் பெண்கள் அனைரும் ஒன்றெனக்
கூறுவோம் - கட்டு - மீறுவோம்;
பலகத்தி எம்மை இகழ்ந்திடும் மூடரைச்
சீறுவோம் இன்பம் சேருவோம்.

5. எங்கள் சுதந்தரம் தன்னை இனிக்கெட
விட்டிடோம் - துயர் - பட்டிடோம்;
நங்கையர் நாமிதை நாடெங்கும் சுற்றியே
சொல்லுவோம் - துன்பம் வெல்லுவோம்.

6. நாம் பெற்ற மைந்தரும் நம்மை விலங்கிடல்
ஞாயமோ? - இனிச் சாயுமோ?
தீம்பற்ற ஒற்றுமை வாழ்வை அடைந்திட
முயலுவோம் ஆண்மை - பயிலுவோம்.

7. மெல்லிய லார்பெண்கள் என்றிடும் வார்த்தையை
ஓட்டுவோம் - பலம் - காட்டுவோம்;
வல்லமைக் காரியம் செய்து பயத்தையே
வாட்டுவோம் - புகழ் - நாட்டுவோம்

8. வான்வழி ஏகி உலகுறை நாடுகள்
சுற்றுவோம் - நன்மை பற்றுவோம்;
ஏன்இன்னும் தூக்கம்? எழும்பும் அடிமையை
வீழ்த்துவோம் - துன்பம் - தார்த்துவோம்.

9. சாத்திரம் கற்றவை உண்மையை யாவர்க்கும்
சாற்றுவோம் - அன்பு - போற்றுவோம்;
கோத்திரம் சாதிகள் கூறும் கடைமொழி
போக்குவோம் - சமம் - ஆக்குவோம்.

10. சொத்துச் சுதந்தரம் பெற்றுச் சமமுடன்
வாழுவோம் - ஒன்று சூழுவோம்;
பித்துப் பிடித்தவர் பெண்ணை இகழுவார்
பேசுவோம் - பயம் - விசுவோம்.

11. உயிரை இழப்பினும் உரிமை பறிகொடோம்
உண்மையே - இது - திண்மையே;
குயிலென நாமிந்த வீர மொழிதனைக்
கூவுவோம் - சுகம் - மேவுவோம்!

## ஆணுக் கொன்று, பெண்ணுக் கொன்று.

(நொண்டிச் சிந்து)

### பல்லவி

உண்மையை மனங் கொள்வீர் - இந்த
உலகினில் அனைவர்க்கும் நீதிகள் ஒன்றே!

### பாட்டு

1. பெற்றோர் எனப்படுவோர் - தங்கள்
பிள்ளைகட்கு மணஞ்செய்ய விருப்ப முற்றால்
மற்றவர் கருத்தினையும் - கொஞ்சம்
மதித்திடல் நலமென மனங்கொள்ளார்;
சுற்றம் பெரிதென்பார் - மணத்தின்
சுகதுக்கம் மக்கள் தமைச் சேருமென்றெண்ணார்;
சற்றும் உலகறியா - ஓர்சிறு
கன்னியைச் சடங்குக ளுடன் பிணைப்பார். (உண்)

2. மணவினை தெய்வீகம் - என்று
மதியினில்நினைந்தவர் அறிவிழந்தார்;
பணமிகச் செலவிட்டே - வீணில்
சாதகம் பொருத்தங்கள் பார்த்திடுவார்;
குணந்தனை மனங்கொள்ளார் - தங்கள்
குலம்பெரி தெனமணம் புரிந்திடுவார்;
கணமும் வாழ்வறியார் - உண்மைக்
காதலின் திறந்தனைக் கண்டுணரார். (உண்)

3. காதல் மனங்கொண்டே - இங்கே
கன்னியரும் ஆடவரும் கூடிவாழ்தல்
ஓதும் மனைவாழ்வாம் - என்றே
உணர்ந்தறி யாதவர் துயர் உறுவார்;
ஏதேதோ சொல்வார் - அவர்கள்
இயற்கையின் மாட்சியை அறிதல் இல்லார்;
வாதங்கள் பேசிநிற்பார் - உண்மை
வழிகளைத் தெரிந்திடும் அறிவுமில்லார். (உண்)

4. கன்னியர் தமக்கிழைக்கும் - கொடுமை
கண்கொண்டு பார்த்திடச் சகிப்பதன்றே;
எண்ணுவர் விலங்கெனவே - அவரை
இழுத்துப் பிறர்கையில் விற்றுவிடுவார்;
என்னதான் பெண்சொலினும் - மனதில்
இரக்கங்கொண் டவர்மொழி செவிபோடார்;
என்னே இவர்செய்கை - நல்ல
ஏந்திழை யார்களைத் துயரப்படுப்பார். (உண்)

5. ஆண்கள் எனுஞ்செருக்கால் மணந்த
அன்புகொள் மனைவியை அகற்றுவர், பின்
காண்பார் வேறுபெண்ணைக் - கண்டு
கடிமணம் புரிந்துநற் சுகமுறுவார்;
மீண்டொரு தாரமேற்பார்; - பின்னர்
மேல்மேல் பலபல மணம் பூண்பார்;
ஈண்டவர் விருப்பம் போல் - பலரை
மனைவியர் எனமணந் துறைந்திடுவார். (உண்)

6. தாரம் இழந்தோர்கள் - பின்னர்
தமக்கிசை மாதரை மணம்புரிவார்;
நூறு தரமேனும் - இந்த
விதஞ்செய்ய ஆடவர் பின்னடையார்;
வீரம் குறைந்தோரும் - மிகவும்

விருத்த வயதுள்ள கிழவர்களும்
பாரில் அறிவின்றி - இளமைப்
பாவையர் களைமணம் புரிந்து கொள்வார். (உண்)

7. இதுவே நீதியென்பார்; - முன்னோர்
இயற்றிய சாத்திர விதியென்பார்;
முதியோர் முறையென்பார்; - இந்த
முறைகளில் மாறுதல் செய்ய விரும்பார்;
மதிகொள் முகமாதர் - தமக்கும்
மணத்தினில் உரிமைகள் வேண்டுமென்றால்
கதுமெனச் சினங்கொள்வார் - உரிமை
கற்பினை யழித்திடும் எனப்புகல்வார். (உண்)

8. கைம்மை மணமென்றால் - மூடர்
கண்களில் நெருப்பெழச் சினந்திடுவார்;
தம்மைப் போல் அவர்க்கும் - உணர்ச்சி
தரணியில் உண்டெனக் கருத்தில் எண்ணார்;
செம்மை மொழி சொன்னால் - அவைகள்
செவிடன் தன் காதினில் ஊதுசங்கே;
அம்மம்ம இவர்கொடுமை - எண்ணி
அகத்தினுள் புழுங்குவர்மாதரெல்லாம் (உண்)

9. மாதரை ஒருவிதமாய் - ஆணெனும்
மக்களை ஒருவித மாய் வளர்ப்பீர்;
பேதம் செயல்வேண்டாம் - அவர்கள்
அறிவினில் வேற்றுமை இல்லை உணர்வீர்;
தீதறு மக்களென்பார் - தம்மைத்
திறமுற ஒருவிதம் வளர்த்தலன்றோ
தாதையர் கடனாகும் - இதனைத்
தவிர்த்து நீர் நடத்துதல் தவறன்றோ? (உண்)

# மதப் பகுதி

## மனிதசக்தி

1. மனித சக்திக்கெட்டா ஒன்றும் மாநிலத்தில் இல்லையே
மனித சக்தித் தேனையுண்டு மகிழ்ந்து துள்ளி ஆடுவீர்!
புனிதமற்ற கோழை மூட நம்பிக்கைகள் கூட்டத்தைப்
பனி யொழிக்கும் சூரியனைப் போலழித்துப் போக்குவீர்!

2. சாமியென்று பூதம் என்று சண்டைசெய்யும் பேதைகாள்!
சாமி பூதம் தோன்றியுங்கள் சண்டைபோக்க வில்லையேல்
சாமி பூதச் சண்டையிட்டு நாய்கள் கூட்டமாவதேன்?
சாமி பூதக் கட்டை புத்தி வாளைக் கொண்டு வெட்டுவீர்!

3. உங்கள் உண்டி இன்றேல் இந்த உலகில் நீரும் வாழ்விரோ?
தங்குதற்குப் பள்ளமின்றேல் நீர்நிலைத்து நிற்குமோ?
எங்கள் சாமி பூதமென்று பொங்கல் பூசை செய்வதால்
இங்கு மக்கள் உணவுபெற்றுச் சுகமடைந்து வாழ்வரோ?

4. காலப்போக்கை எதிர்த்து நின்று காரியங்கள் செய்யவோ?
மேலெழுந்து பாயுஞ் சிங்கந் தன்னை நரி வெல்லுமோ?
சீலமுள்ள செய்கை கண்டு செய்துயர்ந்து வாழவே
மேலுமேலும் ஊக்கங் கொள்வீர்! மிக மகிழ்ந்து வாழுவீர்!

5. சாமிபூதப் பேரொழித்த சக்தியுள்ள நாட்டினர்
சேமமாக ஒன்று கூடிச் செழிப்படைந்து வாழ்கின்றார்;
சாமி பூத மயக் கொழிக்கச் சக்தியற்ற நாட்டினர்
பூமி தன்னில் அடிமை பட்டுப் புண்டைந்து வாழ்கின்றார்;

6. ஏழைமக்கள் உண்டியின்றி உறையுளின்றி வாடவே
பாழுஞ்சாமி பூதமென்று பணம் அழித்து வீணிலே
ஏழுசுற்றுக் கோபுரங்களோடு கோயில் கட்டுவீர்
வீழுமுங்கள் பாவமென்று வீண் கனவு காணுவீர்!

7. இனிய பல அற்புதங்கள் எழும்பு மின்னல் சக்தியும்,
நனிபறக்கும் வான வூர்தி, மோட்டார், புகைவண்டிகள்,
சினிமாவுடன், கம்பியற்ற தந்தி, பாடும் பெட்டிகள்,
மனித சக்தி செய்த தன்றோ மனத்துணர்ந்து பார்மினோ!

8. சத்திரங்கள் கோயில்களும் கோடி கட்டியே
இத்தரையில் சோம்பர்கட்கே இருநிதியும் பூமியும்
வைத்தொழிந்த மன்னர் கூட்டம் வாழ்ந்த குலம் எங்குகாண்?
புத்தியற்ற இவர்கள் ஆட்சி போனவிடம் கண்டீரோ?

9. அறிவு சக்தி யென்றேறிந்தே அதை வளர்க்க முந்துவீர்!
அறிவு சக்தி பெற்றமக்கள் அருஞ்செயல்கள் ஆற்றுவார்;
அறிவு சக்தி பெற்றில்லாத மக்கள் துயர் எய்துவார்;
அறிவு சக்தி அவனியெங்கும் பரவும் வகை ஆற்றுவோம்.

## சங்க நாதம்

1. இத்தரைமீதினில் இன்பம் சுகித்திட
எண்ணாமல் தத்துவம் பேசி இருந்திடும்
பித்தர்கள் யாவரும் துக்கக் கடல்படி
பேதையர் ஆமென ஊதுசங்கே!

2. செத்தபின் சேருவோம் சொர்க்கமென் றெண்ணியே
சிந்தையும் தேகமும் ஊதுசங்கே!
இத்தலத் தில்லாத ஒன்றைப் பணிகுவோம்
என்பவர் மூடர்என் றூது சங்கே!

3. சிந்தை மொழிவிழி சொற்களுக் கெட்டாமல்
சேருங் குணங்குறி யற்ற தொருபொருள்

இந்த உலகமும் யாவும் காத்திடும்
என்றுரைப் பார்பதர்; ஊது சங்கே!

4. உண்மை இவையெனப் பொய்மை இவையென
ஓர்ந்து மதியினால் உண்மை வழிபற்றித்
திண்மை மனங்கொண்டு வாழுந் திறமிலார்
தேம்பித் திரிவர்; என்றூது சங்கே!

5. வெற்றியும் தோல்வியும் சேர்தல் இயல்பென
வீரியத் தோடெந்தக் காரியம் ஆயினும்
சற்றும் மனஞ்சலி யாமலே செய்பவர்
சாருவர் இன்பம் என்றூது சங்கே!

6. சாத்திரக் குப்பைகள் யாவும் சுயநலம்
சார்ந்தவர் கூறிய சொற்கள்என் றெண்ணார்
நேத்திரம் பார்த்தும் நெருப்பில் விழுந்திடும்
நேர்மையர் ஆவர்என் றூதுசங்கே!

7. தாம்பெறும் நன்மைகள் தீமைகள் யாவையும்
தன்செயல் தன்திறம் என்றுண ராதவர்
சோம்பர்கள் ஆகியே துன்பத் துறைந்திடும்
சுத்த மடையர்என் றுத சங்கே!

8. தீமையை வீழ்த்தி நலம்மனத் தெண்ணியே
தேசத்து மக்களைச் சோதரர் ஆம்படி
சேமம் அவர்க்கொன்றும் செய்திடமுன்வரார்
செத்தவர் போல்வர்என் றூது சங்கே!

## கோவிற் பயித்தியம்

### ஆனந்தக் களிப்பு

கோவில் பயித்தியங் கொண்டீர்! - அந்தக்
கோவில்களா லொன்றும் பலனில்லை கண்டீர்! (கோ)

1. மக்கள் வசித்திட இடமே - இந்த
மண்ணில் கிடைத்திடல் இன்றித் தவிப்பார்;
மிக்க பரப்புள்ள மண்ணில் - வீணே
மேவிடும் கோவில்கள் வைத்திங்கு பார்ப்பீர்! (கோ)

2. ஓட்மைடக் குடிசையில் மக்கள் - என்றும்
ஒண்டி வெயில்குளி ரால் நொந்து வாழ்வார்
பாட்டை மனதெண்ணிக் காணீர் - துன்பம்
பாலிக்கும் கோயிலைப் பார்த்திங்கு வாழ்வீர்! (கோ)

3. வானுயர் கோபுரம் கட்டி - அதை
வளைத்துப் பலமதில் வாய்ப்புறக் கட்டி
வீணில் எலியுடன் வெளவால் - பூனை
வீடென்று கொண்டங்கு வாழ்ந்திடச் செய்வீர் (கோ)

4. சோம்பேறி மாந்தர்கள் கூடி - கோவில்
சொந்தந் தமக்கெனக் கூறிக் கொண்டாடி
பாம்பினைப் போலவே பதுங்கி - வருவோர்
பணத்தைப் பறித்தங்கு பாதகம் செய்வார். (கோ)

5. வேசிகள் வாழ்ந்திடும் கோவில் - தீய
வேலை புரிந்துறை தரகர்கள் கோவில்;
நாசம் அடைந்திடச் செய்மின்! - அவை
நன்னிழற் சோலைகள் ஆகிடச் செய்மின்! (கோ)

6. காற்றுப் புகவழி யின்றிக் - கரும்
கற்களைக் கொண்டிங்குக் கோவில்கள் கட்டி
நாற்றம் நிறைந்திடப் பண்ணி - அங்கு
நண்ணும் மனிதர்கள் நோயுறச் செய்வீர்! (கோ)

7. உண்மை அறிவற்ற மக்கள் - தெய்வம்
உறையுது கோவிலில் என்றெண்ணி வந்தே
திண்மை குறைந்திடு வார்கள் - அவர்கள்
தேடிய செல்வங்கள் இழந்திடுவார்கள். (கோ)

8. கோவிலைத் தரைமட்டம் செய்வீர்! - அங்கே
கோகிலம் கூவிடச் சோலைகள் வைப்பீர்!
நேயம் மனிதருள் ஆக்கி - யாரும்
நிகரென்று சமசுகம் பெற்றிங்கு வாழ்வீர் (கோ)

9. ஆங்குறை செல்வத்தைக் கொண்டே - இந்த
அவனியில் துன்புறும் ஏழைகள் வாழ
ஓங்கிய கல்விகைத் தொழில்கள் - எங்கும்
உயர்வுற்று வாழ்ந்திடச் செலவுசெய் திடுவீர்! (கோ)

10. ஆயிரம் ஆயிரம் ஆண்டாய் - நாம்
அனைவரும் தெய்வத்தைப் போற்றினம் அன்றோ?
கோவிலும் செய்தனம்; சிலைகள் - வைத்துக்
கும்பிட்டும் நமக்கொன்றும் பலனில்லை கண்டீர்! (கோ)

## கோவில் பெருமை

## கும்மி மெட்டு

1. இன்பம் அழிவதும் கோவிலிலே - பெருந்
துன்பம் வளர்வதும் கோவிலிலே - நல்ல
அன்பு குறைவதும் கோவிலிலே - கெட்ட
ஆசை வருவதும் கோவிலிலே.

2. கள்வர் வசிப்பதும் கோவிலிலே - பெருங்
காமுகர் வாழ்வதும் கோவிலிலே - நந்தம்
உள்ளங் கெடுதும் கோவிலிலே - இந்த
உலகம் அழிவதும் கோவலிலே.

3. வேசிகள் வாழ்வதும் கோவிலிலே - நந்தம்
காச பறிப்பதும் கோவிலிலே - கெட்ட
வாசனை வீசுது கோவிலிலே - செல்வ
வாழ்வு கெடுவதும் கோவிலிலே.

4. சூது புரிவதும் கோவிலிலே - கெட்ட
சூழ்ச்சிகள் செய்வதும் கோவிலிலே - என்றும்
வாது புரிவதும் கோவிலிலே - நல்ல
வாய்மை அழிவதும் கோவிலிலே

5. அறிவு கெடுவதும் கோவிலிலே- மக்கள்
ஆண்மை கெடுவதும் கோவிலிலே - இங்கு
வறியர் மடிவதும் கோவிலிலே - அவர்
வாதை வளர்வதும் கோவிலிலே.

6. கற்புக் கெடுவதும் கோவிலிலே - நல்ல
கன்னியர் துன்பமும் கோவிலிலே - உண்மை
அற்புதம் ஒன்றில்லை கோவிலிலே - வீணில்
அறிவை இழக்கின்றீர் கோவிலிலே.

7. கொலைகள் நடப்பதும் கோவிலிலே - பொருள்
கொள்ளை யடிப்பதும் கோவிலிலே - சிலர்
கலைகள் விளங்குது கோவிலிலே - என்று
கருத்தை இழப்பதும் கோவிலிலே.

8. பாம்பும் எலிகளும் கோவிலிலே - சிறு
பல்லி வௌவால்கள் கோவிலிலே - பல
தீம்பு விளைவதும் கோவிலிலே - இந்தத்
தேசம் அழிவதும் கோவிலிலே.

9. சண்டை விளைவதும் கோவிலிலே - மக்கள்
சாந்தம் இழப்பதும் கோவிலிலே - பலர்
மண்டை உடைவதும் கோவிலிலே - அவர்
மாண்டு முடிவதும் கோவிலிலே.

10. காலிகள் வாழ்வதும் கோவிலிலே - வெறும்
கல்லைப் பணிவதும் கோவிலிலே - என்றும்
வலித் தரகரும் கோவிலிலே - நம்மைக்
கொள்ளை யடிப்பதும் கோவிலிலே.

# பின்னடையோம்!

## பல்லவி

பின்னடைதல் இல்லையினிப்
பின்னடைதல் இல்லையே

## பாட்டு

1. மன்னுமூட மதங்கள் தம்மை
மடித்தழித்துப் போக்கவே (பின்ன)
சொன்ன போலிச் சடங்குகளைச்
சுட்டழித்துத் தீர்க்கவே (பின்ன)
முன்னிருந்து செய்து வந்த
மூடவினை மாய்க்கவே (பின்ன)
துன்னும் வஞ்சர் செய்யுந்துன்பம்
தொலைந்தழியச் செய்யவே (பின்ன)

2. கன்னியர்க்கும் ஆடவர்க்கும்
காதல் அன்பைக் காட்டவே (பின்ன)
உன்னதங் கொள் ஒற்றுமையை
உலகில் நிலை நாட்டவே (பின்ன)
இன்னலொன்றும் இன்றிமகிழ்ந்
தின்ப செல்வம் எய்தவே (பின்ன)
பன்னலமும் பெற்று மக்கள்
பண்புடனே வாழவே (பின்ன)

3. என்ன சொல்லி உலக மக்கள்
இகழ்ந்து விட்ட போதிலும் (பின்ன)
வன்னெஞ்சத்துக் கயவர் பலர்
வந்தெதிர்த்த காலத்தும் (பின்ன)
மன்னரெங்கள் செய்கை தன்னை
மடித்திடற்கு வந்தாலும் (பின்ன)

இந்நிலத்தில் உண்மை யன்பை
எங்கும் நிலை நாட்டவே. (பின்ன)

## மத மொழிப்பு

("கற்பிற் சிறந்த என்றன் கனியே" என்பதுபோல)

### பல்லவி

அன்பைச் சிதைத்த கெட்டமதமே! இலையிதமே!
உன்றன்பதமே! இனி அதமே!

### அனுபல்லவி

கற்பனை மொழிதனில் கருத்தழிந்தனரே!
காணும் உருவையெல்லாம் கடவுளென்றனரே!
அற்புதம் பல நம்பி அறிவிழந்தனரே!
அந்தமதமும் இனிப்போதும்! அதை மோதும்!
அறிவோதும்! இலைதீதும்! (அன்பை)

### சரணம்

1. மோட்ச நரகமென்று முடிந்து வைத்தாரே!
மூடர்கள் இவைதம்மால் முதலிழந்தனரே!
காட்சி நிறையுலகில் கவலையுற்றாறே!
கண்டறிந்தனம் உண்மை நாமே இனிப்போமே!
மதம்தாமே! சுகம் ஆமே! (அன்பை)

2. மறுமைப்பிறவியில் மயக்கம் உற்றாரே!
மாநிலத்தில் இதனால் மகிழ்ச்சி கெட்டாரே!
அருமைச் சமத்துவம் அழிக்கலுற்றாரே!
அந்த வஞ்சகம் பலிக்காது! புவிமீது
மதம்தீது! உதவாது! (அன்பை)

3. பண்ணும் அருஞ்செயல்கள் பகுத்தறிவாலே;
பாவ புண்ய மொழியே பயஞ்செய்தாலே
உண்ணும்பொருள் இடமும் உடையிழந்தாரே
உற்ற துயரம் முற்றுந தீரும்! உண்மை தேரும்!
இதைப்பாரும்! நன்மை சேரும்! (அன்பை)

4. பொன்னில் அழுக்கையிட்டுப் புதைப்பது போல
போதனைப் பொய்யுரையால் புவியினில் மேலே
உன்னும் அறிவுதன்னை ஒளித்தனர்தாமே!
உள்ள மதங்கள் செத்துப்போகும்! துன்பம் ஏகும்!
நலமாகும்! உயர்வாகும்! (அன்பை)

## மதவெறி

### (நொண்டிச்சிந்து)

1. மனிதர்கள் அறிவினையே - இங்கு
மதமென்னும் கருத்திரை மறைத்ததுவே;
இனிமை கொள் மொழிகொண்டே - பற்பல
காவியம் கவிதைகள் புனைந்திட்டார்;

சனியன்கள் அவையெல்லாம் - மக்கள்
சமூகத்தை விலங்கிட்டு வைத்தனவே;
கனிகின்ற மனந்தன்னை - வலிய
கல்லெனப் புரிவது மதம் உணர்வீர்! (மனி)

2. சுயநல மிகுவேடர் - மக்கள்
சுதந்தரந் தனைவழி மறித்திடவே
பயங்கர மதவலையை - இந்தப்
பாருல கெங்கணும் பரப்பிவைத்தார்;
நயமொடு தீதுணரார் - சென்று
நாசவலை தனிற்சிக்கி நலிவுறுவார்;

செயலறி யாதவரும் - என்றும்
சிறுமையுள் பட்டிங்கு வாழ்ந்திருப்பார். (மனி)

3. தன்மதம் மெய்யென்பார் - இந்தத்
தரணியில் பிறமதம் பொய்யென்பார்;
நன்மைகள் ஒன்றெண்ணார் - பிறரை
நலிந்திடச் செய்துதம் மதம் வளர்ப்பார்;
அன்பே மதம் என்பார்; - தங்கள்
அடிபணியாதவர் வாழ்க்கை வண்டி
துன்பத்திற் சாய்ந்திடவே - நெஞ்சத்
துணிவுடன் படுகுழி வெட்டி வைப்பார். (மனி)

4. மாந்தர் இவ் வுலகினிலே - மிக்க
மகிழ்வுடன் ஒருகுலம் ஆகிநின்றே
வாழ்ந்திடத் தடையாகி - உலகில்
வளர்ந்தன பெரும்புதர் மதக்காடே;
தீய்ந்திடும் மதப்புதரே - நல்ல
தீயெனும் அறிவினை மூட்டிடு வீர்;
காய்ந்திடும் குணநீங்கி - நாமும்
களிப்புடன் ஒருகுலம் ஆயிடுவோம். (மனி)

5. மதவெறி என்னும் நஞ்சால் - இங்கே
மனிதர்கள் பிணிபட்டு நிலைகுலைந்தார்;
இதம்புரி வோம்என்பார் - என்றும்
ஏழையர் வோம்என்பார் -என்றும்
விதம் வித மாய்ப்பலவாம் - தெய்வம்
விதித்தனர் புராணங்கள் புனைந்து வைத்தார்;
சதமென அவைநம்பி - தமக்குள்
சண்டைகள் புரிந்தவர் மண்டையுடைவார். (மனி)

6. பெருந்துயர் தரும் பூதம் - மக்கள்
பேதமை வளர்த்திடும் விஷ நீரே;

சரிந்திட ஒற்றுமையின் - வேரைச்
சந்ததம் அறுத்திடும் எலிக்கூட்டம்;
புரிந்திடும் மிகு பேதம் - அறிஞர்
புத்தியை மயக்கிடும் அபின் - அதுவே;
அறிந்திடும் மதம் இதுதான் - இந்த
அவனியில் ஏன் இன்னும் இதில் அழிவீர்! (மனி)

7. மக்களை விலங்கினமாய்ச் - செய்ய
மதமெனும் கொடுமதில் தனையெடுத்தே
மிக்கவர்தந்திரத்தால் - அறிவில்
மேலவர் என்பவர் கோட்டை வளைத்தார்;
இக்கணம் அக்கோட்டை - தகர
எறிந்திடும் அறிவென்னும் வெடி குண்டால்;
துக்கமாம் கடல் கடந்தே - நீங்கள்
துரிதத்தில் இன்பமெனும் கரைசேர்வீர்! (மனி)

8. சாதியாம் கருஞ்சேற்றை - நல்ல
சந்தனம் எனவுடல் முற்றும் பூசி
பேதமே உருக்கொண்டு - நித்தம்
பெரும் பெரும் கலகங்கள் செய்திடுவீர்;
நீதிதான் இதுவன்றே - என்னும்
நினைப்பினை மறந்திடச் செய்ததுவே;
சேதமே பலவிளைத்தே - இந்தச்
செகத்தினை ஆட்டிடும் மதவெறியே (மனி)

## புதுமுறை தேர்வீர்!

1. உலகத்தில் யாவரும் நலம்பெற வென்றே
உற்பவம் செய்தனர் மதந்தனை முன்னோர்;
கலகத்தை விதைத்திடக் காரண மாகிக்
காரியம் யாவையும் கெடுத்திடும் இந்நாள்;

நலமற்ற வாழ்வினை ஏழையர்க் காக்கி
நாட்டினில் வஞ்சகர் இன்புறச் செய்யும்;
பலமற்ற இச்செயல் கண்கொண்டு பார்த்தும்
பாழும் மதந்தனை வளர்ப்பதும் ஏனோ!

2. தரித்திரச் சேற்றினில் ஆழ்ந்து கிடப்போர்
தாம் செய்த முன்வினை யதுவென்று கொள்வார்;
கருத்தினில் தம்நிலை காணுதல் இன்றிக்
கார் இருள் செய்தது மதமென்று கொள்வீர்!
வருத்தங்கள் தந்தும்மை வாட்டிடும் நோயை
வற்றிடச் செய்வது பகுத்தறி வாமே!
ஒருத்தரும் இனித்துயர் உற்றிட வேண்டாம்!
ஒழித்திடும் மதமென்னும் பேயைஇந் நாட்டில்

3. மதமென்னும் மாயை மடிந்திங்கு விழ்ந்தால்
மாநில மெங்கும் குதூகலம் சேரும்;
கதைகளைப் பேசியே காலங்கள் போக்கீர்!
கண்டிடும் விஞ்ஞான உண்மைகள் யாவும்!
உதவிடும் அவையிந்த நாட்டினிற் செல்வம்;
ஓங்கிய கைத்தொழில் வாணிகம் வளர்க்கும்;
நிதநிதம் வளர்ந்திடும் அதிசயம் காண்பீர்;
நின்று தவித்திங்கு மடிவுற வேண்டாம்!

4. எண்ணற்ற சாதிகள் செய்திங்கு வைத்தே
இன்னறு நீர்ச்சுனை ஒற்றுமை தூர
மண்ணை யிடித்ததிற் கொட்டியே மூடி
மாபழி செய்தது மதப்புயற் காற்றே;
கண்ணில் துணிகட்டிக் காட்டினில் விட்டுக்
கஷ்டம் புரிந்திடும் காரியம் போலும்
புண்ணை யளித்தது மதமென்று கொள்வீர்!
புத்தியில் தைரியம் கொண்டு மகிழ்வீர்!

5. பொத்தலும் நாற்றமும் பொருந்திய சட்டை
போடுதற் கினியுத வாதென்று கண்டால்
இத்தரை மீதினில் யாரது தரிப்பார்!
இதற்கிணை யாகவே மதத்தையும் வைப்பீர்!
சத்தியம்சாந்தம் மதம்என்று சொல்வீர்!
சங்கடம் செய்தது போதும் புவிமேல்;
சொத்தை விழுந்திட்ட கத்தரிக் காயைச்
சுகமென்று கறிசெய் மனிதரும் உண்டோ?

6. கந்தையைப் போர்த்தியிங் கெத்தனை நாள்கள்
காலங் கழித்திடக் கூடும் புகல்மின்!
சிந்தையில் சோதி விளக்கொன்று வைப்பீர்!
சிறுமைகள் செய்திடும் மதவினை காண்பீர்!
மந்தையாய் ஆடுகள் செல்வது போலே
மதவழி பற்றிய காலமும் போச்சு;
வந்தனர் நல்லுண்மை வழிகளைக் காண
வாழ்வினில் இனியிலை தீதெனக் கொள்வீர்!

7. எத்தனை நாளுங்கள் பொய்மதக் கோட்டை
இவ்வுல கத்தினில் ஆட்சி புரியும்?
அத்தனை கோட்டைகள் அடிப்படை யாவும்
ஆட்டமுங் கண்டிங்கு விழ்ந்தன காணீர்!
பித்தர்க ளாகிநீர் பிதற்றிட வேண்டாம்!
பேதமை வாழ்குடில் மதமென் காண்பீர்!
சத்தியம் இவ்வுரை; சந்ததம் மறவீர்!
சாருவீர் யாவரும் புதுமுறை தேர்வீர்!

## மதவிளக்கம்

1. ஏழையரைக் கழுதைகளாய் உழைக்க வைத்தே
இவ்வுலகில் ''நாம் பெரியார்'' என்று தங்கள்

பாழ்வயிற்றைக் குதிராக்கிக் கொண்டு நிற்கும்
பாவியர்கள் மதப்பாட்டு பாடி நிற்பார்;
தாழ்வான காரியங்கள் செய்து வாழ்வார்
தரணியிலே அவை மறையத் தருமஞ்செய்வார்;
கூழினுக்கு வகையின்றி வாடிச் சோரும்
கும்பல்களை வசப்படுத்தி ஆட்சிசெய்வார்.

2. பாம்புதேள் பூரான்கள் ஆகிநின்றே
பாமரர்கள் வாழ்வெல்லாம் அழியும் வண்ணம்
வீம்புபுரி மதக்கூட்டம் சாம்பலாக
விரைவுடனே தீமூட்டி எரிப்போமாயின்
நாம் புவியில் ஒன்றாகி மகிழ்ந்து நின்று
நலம் என்னும் பெருநிலவில் மகிழ்ந்து நிற்போம்;
சோம்பல்பிணி நமைவிட்டு மறைந்து போகச்
சுகம் அளிக்கும் ஊக்கத்தால் உயர்ந்துவாழ்வோம்.

3. இவ்வுலகில் மிகவருந்திச் செல்வம் ஈட்டும
ஏழையரை வசப்படுத்த மதத்தின் பேரால்,
எவ்வின்பம் நினைந்திடினும் எய்தும் என்றே
இயம்பினார் சுவர்க்கமென ஒரு சொல்தன்னை,
"திவ்வியமாய் ஆங்குற்றே யின்பந்துய்க்கத்
தேடுகின்ற பொருள்எல்லாம் கொடுப்பீர்" என்றே
ஒவ்வாத பொய்யுரைகள் பலவுஞ்சொல்லி
ஒடுக்கினார் மதத்தலைவர் உலகையெல்லாம்

4. அழுகின்ற குழந்தைகளை அடங்கச்செய்ய
"அதோபார் பூச்சாண்டி" என்றாற்போல
விழுகின்ற கொடுநகரம் பலவாய்க் காட்டி
வித்தையிலா மாந்தர்களை நடுங்கவைத்தார்;
தொழுகின்ற பேச்சதனை விட்டுத் தள்வீர்;
துண்ணென்று கிளம்பிமத மயக்கந்தீர்வீர்;

எழுகின்ற சுதந்தரமாந் தேனையுண்பீர்;
இன்பமுடன் விடுதலையாம் களிப்பில் வாழ்வீர்!

5. நல்லொழுக்க வாழ்வுக்குத் துணையாய் நின்று
நாட்டினரை மேம்படுத்தும் மதமே என்பார்;
வல்லவர்கள் அறிவொளியை அடக்கச் சொன்ன
வார்த்தையிது ஆகா! நீர் நம்பவேண்டாம்!
தொல்லைதரு மதவெறியால் உலகந்தன்னில்
தொடர்ந்தபல போர் மூண்ட கதையைக் காணீர்!
எல்லை யிலாப் பெருங் கொடுமைக் காற்றாய் வீசி
இவ்வுலகில் மனிதர்குலம் பிரித்ததையா!

6. குடியிருக்க வொண்ணாத ஓட்டை வீடு;
குந்தினால் பிடுங்கிவிடும் விரியன் பாம்பு;
வடிகட்டி நீர் போக்கித் தங்கி நிற்கும்
வண்டலிது; உள்ளெல்லாம் போரையாகி
அடிசாய நிற்கின்ற மரமே யாகும்
அணுகாதீர் அதனருகில் ஆபத்துண்டு!
படியிலே இவ்வுண்மை தேர்ந்து கொள்வீர்
பாழான மதமொழிக்க முந்து வீரே!

7. மதமான பெருநெருப்பு வெப்பந் தன்னால்
மனிதர் குலம் சோர்வடையும் உண்மை காணீர்!
இதமில்லை; அதனாலே என்று கண்டும்
இன்னுமதைக் கட்டியழும் மூடமக்காள்!
உதவாத கோயில்களை எழுப்பிவைத்தீர்!
உள்ளுக்குள் தெய்வங்கள் உறையும் என்பீர்;
நிதம் பூசை செய்திடுவீர்; அதனால் இந்த
நிலவுலகில் கடுகளவும் நன்மையுண்டோ?

8. நாடகங்கள் காவியங்கள் கலைகளெல்லாம்
நசித்திடவே மதவூசி குத்திப் போட்டீர்!

கூடகத்தே மயில்வருந்த அடைத்து வைத்துக்
　　கொலை செய்யும் கணக்கினிலே மாதர் கூட்டம்
வீடகத்தே துயரமுறச் செய்து விட்ட
　　வீணான மதப்பேயைத் துரத்துமையா!
கேடுதரும் இருட்டறையில் வாழலாமா?
　　கிளர்ச்சியுடன் வெளியேறிச் சிறந்து வாழ்வீர்!

## தீதுகெடுக!

### (ராகம் பிலஹரி)

கெடுகவே - கெடுகவே - கெடுகவே!

1. மனிதர்களை யடிமைகொண்டு
வாட்டிநிற்கும் மக்களும்
மகிழ்ச்சிகொள்ளும் உரிமையில்லை
என்று சொல்லும் தீயரும்,
தனி மனிதர் ஆட்சிசெய்ய
வேண்டுமென்று கூறியே
தகுதியற்ற செயல்கள் செய்யும்
மாந்தர் வாழ்வும் கெடுகவே! (கெடுகவே)

2. மக்கள் பகுத் தறிவுதன்னை
மக்கிய நிற்கும் மதங்களும்,
மாசுமிக்க பொய்யுரைக்கும்
மாண்பு கெட்ட கலைகளும்,
மிக்கசாதி வேற்றுமையைப்
போற்றிநிற்கும் நூல்களும்
மேதினியில் வாழ்விழந்து
பேரழிந்து கெடுகவே! (கெடு)

3. போலிவேடம் பூண்டு நின்று
புத்தியற்ற பாமரர்

தாலிதன்னை யறுத்துவாழும்
தகுதியற்ற தடியரும்,
வாலிதான செய்கைவிட்டு
வஞ்சங்கள் பண்ணியே
காலியாகத் திரீயுங் கெட்ட
கயவர் வாழ்வும் கெடுகவே! (கெடு)

4. பிச்சை வாங்கு செய்கை எங்கள்
பிறப்புரிமை என்றிடும்
பேதை மாந்தர் செய்த வஞ்சத்
திரைகள் அற்று வீழ்கவே;
இச்சகத்தில் பெண்ணடிமை
என்று சொல்லும் இழிஞரும்
என்றும் நன்மை செய்தற் கெண்ணா
எவரும் அழிந்து கெடுகவே! (கெடு)

5. வேலைக்காரர் தம்மிடத்தில்
வேட்கை சற்றும் இன்றியே
காலை மாலை என்றும் கடுமை
காட்டுகின்ற தீயரும்,
சீலமின்றி அவர்கள் செல்வம்
பறித்துக் கொள்ளும் சிறீயரும்
சீரழிந்து பேரழிந்து
சிறுமையுற்றுக் கெடுகவே! (கெடு)

## அன்புடன் வாழ்வோம்

"இவ்வுலகில் மக்கள்பெறும் இன்னல்களைக் கண்டுநாம்
எவ்வழியில் துயர் நீக்கி இன்பத்தை வளர்த்திடலாம்"
என்று பல விதமாகச் சிந்தித்தோம் இந்நாளில்
நன்றுவர வேண்டுமெனில், சொல்கின்றேன் நான் ஒன்று;

ஒன்றுபட இவ்வுலகைப் புதுவுலகம் ஆக்கிடுவோம்;
கொடுமைகளை வளர்க்கின்ற கொள்கை எவையானாலும்
முடுகிஅவை களைமாய்க்க முந்துவதே அறிவுடைமை;
உலகெல்லாம் தோழர்களாய் உறைவதற்கு வழிகாட்டும்
நலமெதுவே ஆயிடினும் நாம் அதனைக் கைக்கொள்வோம்;
மாசுமறு வில்லாமல் மனத்துள்ளே சிந்தித்துத்
தேசுதரும் வழிகண்டு நடப்பதற்கு முந்துங்கால்
“அடடா! நம் பழமைதனை அழியவிடல் மாபாவம்!
கெடுவீர் நீர் புது வழக்கம் பின்பற்றின் கிளையுடனே”
எனக் கூறிப் பயங்காட்டும் அறிவீனர் சொல்வெறுப்போம்
ஓகோ! கோ இன்னுமொரு சொற்கேளீர் உலகத்தீர்
சாகாத தோழமைதான் சகத்தில் நிலைபெற வேண்டில்
நமையெல்லாம் வெறியர்களாய் ஆக்கிவரும் மதக்கள்ளை
இமைப் பொழுதில் கவிழ்த்திடுவோம்! எதிர்ப்புகளுக்குக் கஞ்சிடோம்
தடையாகும் முள்வேலி மதம்என்றே தற்காலம்
முடிவாகக் கண்டறிந்தோம் மூதறிவால் நாமினிமேல்
அடியோடு மதம்போக்கி வாழ்ந்திடுவோம் அன்புடனே.

✸ ✸ ✸

# இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு

(1935)

# இராமலிங்க சுவாமிகள்
# பாடல் திரட்டு

1. இயற்கை உண்மையதாய் இயற்கை இன்பமும்ஆம்
அயர்ப்பிலாச் சிற்சபை அருட்பெருஞ்சோதி

2. சாதியும் மதமும் சமயமுங் காணா
ஆதி அநாதியாம் அருட்பெருஞ்சோதி

3. எண்ணிய எண்ணியாங்கு இயற்றுக என்றெனை
அண்ணிஉள் ஓங்கும் அருட்பெருஞ்சோதி

4. சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி

5. எவ்வகை உயிர்களும் இன்புற ஆங்கே
அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ்சோதி

6. களங்கம் நீத்துஉலகங் களிப்புற மெய்ந்நெறி
விளங்க என்னுள்ளே விளங்கும் மெய்ப்பொருளே

7. உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக
செயிர்எலாம் விடுகஎனச் செப்பிய சிவமே

8. அருளே நம்மியல் அருளே நம்உரு
அருளே நம்வடிவு ஆம்என்ற சிவமே

9. அருளே நம்அடி அருளே நம்முடி
அருளே நம்நடுவாம் என்ற சிவமே

10. அருளே நம்அறிவு அருளே நம்மனம்
அருளே நம்குணம் ஆம்என்ற சிவமே

11. அருளே நம்துணை அருளே நம்தொழில்
அருளே நம்விருப்பு ஆம்என்ற சிவமே

12. அருளே நம்பொருள் அருளே நம்ஒளி
அருளே நாம்அறி வாய்என்ற சிவமே

13. அருளே நம்குலம் அருளே நம்இனம்
அருளே நாம்அறி வாய்என்ற சிவமே

14. அருளே நம்சுகம் அருளே நம்பெயர்
அருளே நாம்அறி வாய்என்ற சிவமே

15. தூக்கமும் சோம்பும்என் துன்பமும் அச்சமும்
ஏக்கமும் நீக்கிய என்தனித் தாயே

16. மதத்திலே அபிமானங் கொண்டு உழல்வேன்
வாட்ட மேசெயும் கூட்டத்திற் பயில்வேன்
இதத்தி லேஒரு வார்த்தையும் புகலேன்
ஈயும் மொய்த்திடற்கு இசைவுறாது உண்பேன்
குதத்தி லேஇழி மலத்தினுங் கடையேன்
கோடை வெய்யிலின் கொடுமையிற் கொடியேன்
சிதத்தி லேஉறற்கு என்செயக் கடவேன்
தெய்வமே எனைச் சேர்த்துக்கொண்டு அருளே.

17. கானமே உழல் விலங்கினிற் கடையேன்
காமம் ஆதிகள் களைகணிற் பிடித்தேன்
மானம் மேலிடச் சாதியே மதமே
வாழ்க்கையே என வாரிக்கொண்டு அலைந்தேன்
ஈன மேபொருள் எனக்களித் திருந்தேன்
இரக்கம்என்பதோர் எட்டுணை அறியேன்
ஞானம் மேவுதற்கு என்செயக் கடவேன்
நாயகா எனை நயந்து கொண்டு அருளே!

18. சாதிமதம் சமயமெனும் சங்கடம்விட்டு அறியேன்
சாத்திரச் சேறாடுகின்ற சஞ்சலம்விட்டு அறியேன்

ஆதி அந்த நிலை அறியேன் அலை அறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத்து அமர்ந்திடவும் அறியேன்
நீதிநெறி நடந்தறியேன் சோதிமணப் பொதுவில்
நிருத்தமிடும் ஒருத்தர்திருக் கருத்தைஅறி வேனே!
ஏதிலர்சார் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும் அறிந்திலேனே

19. கூறுகின்ற சமயம்எலாம் மதங்கள்எலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலன்ஒன்றுங் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்
நீடுஉலகில் அழிந்துவிட நினைத்தேனோ நிலைமேல்
ஏறுகின்ற திறம்விழைந்தேன் ஏற்றுவித்தாய் ஆங்கே
இலங்குதிருக் கதவுதிறந்து இன்னமுதம் அளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

20. வேதநெறி ஆகமத்தின் நெறிபவு ராணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உள, அனைத்துங் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉணர்த் தினையே
ஏதம்அற உணர்ந்தனன்வீண் போது கழிப்பதற்குஓர்
எள் அளவும் எண்ணம்இலேன் என்னோடுநீ புணர்ந்தே
தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநட நாயகனே.

21. கலைஉரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கம்எல்லாம் மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கம்ஒன்றே நிலைபெறமெய் உலகம்
வாழ்ந்தோங்கக் கருதிஅருள் வழங்கினை என்தனக்கே
உலைவறும்இப் பொழுதேநல் தருணம்என நீயே
உணர்த்தினை வந்து அணைந்தருள்வாய் உண்மை உரைத்தவனே
சிலைநிகர் வன்மனங்கரைத்துத் திருஅமுதம் அளித்தோய்
சித்திசிகா மணியேஎன் திருநடநா யகனே.

22. சற்சபைக்கு உரியார் தம்மொடுங் கூடித்
தனித்த பேரன் புமெய் அறிவும்
நற்சபைக்கு உரிய ஒழுக்கமும் அழியா
நல்லமெய் வாழ்க் கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
தினந்தொறும் பாடி நின்று ஆடித்
தெற்சபை உலகத்து உயிர்க்கெலாம் இன்பம்
செய்வதுதான் இச்சையாம் எந்தாய்.

23. எவ்வுயிர்த் திரளும் என்உயிர் எனவே
எண்ணிநல் இன் புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வரும் இடையூற்றை
அகற்றியே அச்சம்நீக் கிடவும்
செவ்வையுற்று உனது திருப்பதம் பாடிச்
சிவசிவ என்று கூத்தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுறாது இங்கே
ஓங்கவும் இச்சை காண் எந்தாய்.

24. தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்த சன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில் கண்டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கம் நீடூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சை காண் எந்தாய்.

25. கருணையே வடிவாய்ப் பிறர்களுக்கு அடுத்த
கடுந்துயர் அச்சம் ஆதிகளைத்
தருணம்நின் அருளால் தவிர்த்துஅவர்க்கு இன்பம்
தரவும் வன்புலை கொலை இரண்டும்

ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
    உஞற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
    வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்.

26. மண்ணுல கதிலே உயிர்கள் தாம் வருந்தும்
    வருத்தத்தை ஒரு சிறிது எனினும்
கண்ணுறப்பார்த்தும் செவிஉறக்கேட்டும்
    கணமும்நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
    இசைத்தபோது இசைத்தபோது எல்லாம்
நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்கநல் வரந்தான்
    நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.

27. விண்டபோ தகரும் அறிவரும் பொருளே
    மெய்யனே ஐயனே உலகில்
தொண்டனேன் தன்னை அடுத்தவர் நேயர்
    சூழ்ந்தவர் உறவினர் தாயர்
கொண்டுடன் பிறந்தோர் அயலவர் எனுமிக்
    குறிப்பினர் முகங்களில் இளைப்பைக்
கண்டபோ தெல்லாம் மயங்கி என் உள்ளம்
    கலங்கிய கலக்கம் நீ அறிவாய்.

28. சீர்த்த சிற்சபை என் அப்பனே எனது
    தெய்வமே என் பெருஞ் சிறப்பே
ஆர்த்தஇவ் வுலகில் அம்மையர் துணைவர்
    அடுத்தவர் உறவினர் நேயர்
வேர்த்த மற்று அயலார் பசியினால் பிணியினால்
    மெய் உளம் வெதும்பிய வெதுப்பைப்
பார்த்தபோது எல்லாம் பயந்து எனது உள்ளம்
    பதைத்தது உன் உளம் அறியாதோ.

29. பரைத்தனி வெளியில் நடம்புரிந் தருளும்
பரமனே அரும் பெரும் பொருளே
தரைத்தலத்து இயன்ற வாழ்க்கையில் வருகுமச்
சங்கடப் பாவியால் வருந்தி
நரைத்தவர் இளையர் முதலினோர் எனை ஓர்
நண்பன் என்று அவர் அவர் குணங்கள்
உரைத்த போது எல்லாம் நடுங்கி என் உள்ளம்
உடைந்தது உன் உளம் அறியாதோ.

30. எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே
இலகிய இறைவனே உலகில்
பட்டினி உற்றார் பசித்தனர் களையால்
பரதவிக்கின்றனர்என்றே
எட்டிய பிறரால் கேட்டபோது எல்லாம்
உளம் பகீர் என நடுக் குற்றேன்
இட்டி இவ்வுலகில் பசியினால் எந்தாய்
என் உளம் நடுங்குவது இயல்பே.

31. கோபமே வருமோ காமமே வருமோ
கொடிய மோகங்களே வருமோ
சாபமே அனைய தடை மதம் வருமோ
தாமதப் பாவி வந்திடுமோ
பாபமே புரியும் லோபமே வருமோ
பயனில் மாற்சரியம் வந்திடுமோ
தாப ஆங் காரமே வருமோ என்று
ஐய நான் தளர்ந்ததும் அறிவாய்.

32. எளியரை வலியார் அடித்தபோது ஐயோ
என் மனம் கலங்கிய கலக்கம்
தெளிய நான் உரைக்க வல்லவன் அல்லேன்
திரு உளம் அறியும் எந்தாயே

களியரைக் கண்டு பயந்து என் பயந்தான்
    கடலினும் பெரியது கண்டாய்
அளியவர் பால் கொடியர் செய்த வெம்கொடுமை
    அறிந்த என் நடுக்கம் ஆர் அறிவார்.

33. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
    வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோறும் இரந்தும் பசி அறாது அயர்ந்த
    வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்து கின்றோர் என்
    நேர் உறக் கண்டு உளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்ச
    இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்

34. நலிதரு சிறிய தெய்வம் என்று ஐயோ
    நாட்டிலே பல பெயர் எட்டிப்
பலிதர ஆடு பன்றி குக்கிடங்கள்
    பலிக் கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
    புந்தி நொந்து உளம் நடுக் குற்றேன்
கலிஉறு சிறிய தெய்வவெம் கோயில்
    கண்ட காலத்திலும் பயந்தேன்.

35. நடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை
    நண்ணிடா அரயரை நாளும்
கெடு நிலை நினைக்கும் சிற்றதிகாரக்
    கேடரைப் பொய் அலால் கிளத்தாப்
படுநிலை யவரைப் பார்த்த போது எல்லாம்
    பயந்தனன் சுத்த சன் மார்க்கம்
விடுநிலை உலக நடையெலாங் கண்டே
    வெருவினேன் வெருவினேன் எந்தாய்.

36. சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்
நீதியும் நிலையும் சத்தியப் பொருளும்
நித்திய வாழ்க்கையும் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும் எல்லாம்
அருட்பெரும் சோதிஎன்று அறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீஅறிந்தது நான்
உரைப்பது என்அடிக்கடி உனக்கே.

37. பித்தெலாம் உடைய உலகர்தம் கலகப்
பிதற்றெலாம் என்றுஒழிந் திடுமோ
சத்தெலாம் ஒன்றென்று உணர்ந்த சன்மார்க்க
சங்கம்என்று ஓங்குமோ தலைமைச்
சித்தெலாம் வல்ல சித்தன்என்று உறுமோ
தெரிந்திலேன் எனத்துயர்ந்து இருந்தேன்
ஒத்தெலாம் உனது திருவுளம் அறிந்தது
உரைப்பதுஎன் அடிக்கடி உனக்கே.

38. புல்லலா மனத்தேன் என்னினும் சமயம்
புகுதவா பொய்ந்நெறி ஒழுக்கம்
சொல்லவா பிறரைத் துதிக்கவா சிறிதோர்
சொப்பனத் தாயினும் நினையேன்
கல்லவா மனத்தோர் உலவையும் கருதேன்
கனகமா மன்றிலே நடிக்கும்
நல்லவா எல்லாம் வல்லவா உனையே
நம்பினேன் கைவிடல் எனையே.

39. கொலைபல புரிந்தே புலைநுகர்ந் திருந்தேன்
கோடுறு குரங்கினில் குதித்தே
அலைதரு மனத்தேன் அறிவிலேன் எல்லாம்
அறிந்தவன் போற்பிறர்க்கு உரைத்தேன்

மலைவுறு சமய வலைஅகப் பட்டே
    மயங்கிய மதியினேன் நல்லோர்
நலைஅல எனவே திரிந்தனன் எனினும்
    நம்பினேன் கைவிடேல் எனையே.

40. இருளான மலம்அறுத்து இகபரம் கண்டே
    எல்லா உயிர்களும் இன்புற் றுவாழ
மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம்
    வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போகத்
தெருளான சுத்தசன் மார்க்கமது ஒன்றே
    சிறந்து விளங்வோர் சிற்சபை காட்டும்
அருளான வீதியில் ஆடச்செய் தீரே
    அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே.

41. இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
    இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்கள் ஆச்சிரம
    வழக்கம்எலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநல் நீதி
    சிறந்து விளங்கஓர் சிறப்பை காட்டும்
அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே
    அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே.

42. மதமென்றும் சமயமென்றும் சாத்திரங்கள் என்றும்
    மன்னுகின்ற தேவரென்றும் மற்றவர்கள்வாழும்
பதமென்றும் பதம்அடைந்த பத்தர்அது பவிக்கப்
    பட்டஅனு பவங்கள்என்றும் பற்பலவாவிரிந்த
விதம்ஒன்றுந் தெரியாத மயங்கியவன் றெனக்கே
    வெட்டவெளி யாய்அறிவித் திட்டஅருள்இறையே
சதம்ஒன்றும் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
    தனிநடஞ்செய் அரசேயென் சாற்றும்அணிந்தருளே.

43. தயைஉடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம்
சார்ந்தவர்கள் இங்கவர்கள் தம்மோடுங்கூடி
நயம்உறுநல் அருள்நெறியில் களித்துவிளையாடி
நண்ணுகவென்று எனக்கிசைந்த நண்புறுசற்குருவே
உயல்உறுமென் உயிர்க்கினிய உறவேஎன் அறிவில்
ஓங்கியபேர் அன்பேஎன் அன்பில்உறும் ஒளியே
மயல் அறுமெய்த் தவர்சூழ்ந்து போற்றும் மணிமன்றில்
மாநடத்தென் அரசேஎன் மாலையணிந்தருளே!

44. கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமும்அக் கூட்டத்தே கடவுகின்றகலையும்
கள்ளம்உறும் அக்கலைகள் நாட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரு கடவுளரும்எல்லாம்
பிள்ளைவிளை யாட்டென நன்கு அறிவித் திங்கெனையே
பிள்ளையெனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்ட பதியே
தள்ளரிய மெய்ப்படியார் போற்றமணி மன்றில்
தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும்அணிந் தருளே!

45. நால்வருணம் ஆச்சிரம ஆசாரம் முதலாம்
நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளையாட்டே
மேல்வருணந் தோல்வருணங்கண்டறிவார் இலைநீ
விருத்துஇதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே
கால் வருணங் கலையாதே விணில் அலையாதே
காண்பனவெல் லாம்எனக்குக் காட்டிய மெய்ப்பொருளே
மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வயங்குநடத் தரசேஎன் மாலையணிந்தருளே.

46. இயல்வேதா கமங்கள் புராணங்கள் இதிகாசம்
இவைமுதலா இந்திரசாலங் கடையாய் உரைப்பர்
மயலொருநூல் மாத்திரந்தான் சாலமென அறிந்தார்
மகனேநீ நூல் அனைத்தும் சாலமென அறிக

செயல்அனைத்தும் அருள்ஒளியாக் காண்கவென எனக்கே
திருவுளம் பற்றியஞான தேசிகமாமணியே
அயலறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே.

47. தோன்றிய வேதாகமத்தைச் சாலம்என உரைத்தேம்
சொற்பொருளும் இலக்கியமும்பொய் யெனக்கண்டறியேல்
ஊன்றிய வேதாகமத்தின் உண்மை நினக்காகும்
உலகறி வேதாகமத்தைப் பொய்யெனக் கண்டுணர்வாய்
ஆன்றதிரு அருட்செங்கோல் நினக்களித்தோம்நீயே
ஆள்கஅருள் ஒளியால் என்று அளித்த தனிச்சிவமே
என்றதிரு அமுதுஎனக்கும் ஈந்தபெரும் பொருளே
இலங்கும் நடத் தரசேஎன் இசையும் அணிந்தருளே.

48. நான்முகர்நல் உருத்திரர்கள் நாரணர் இந்திரர்கள்
நவில்அருகர் புத்தர்முதல் மதத்தலைவர்கள் எல்லாம்
வான்முகத்தில் தோன்றிஅருள் ஒளிசிறிதே அடைந்து
வானகத்தும் வையகத்தும் மனம்போனபடியே
தேன்முகந்து உண்டவர் எனவே விளையாடாநின்ற
சிறுபிள்ளைக் கூட்டமென அருட்பெருஞ்சோதியினால்
தான்மிகக் கண்டறிகவெனச் சாற்றியசற் குருவே
சபையின் நடத்தரசேஎன் சாற்றும் அணிந்தருளே.

49. கணக்குவழக் கதுகடந்த பெருவெளிக்கு நடுவே
கதிர்பரப்பி விளங்குகின்ற கண்ணிறைந்தசுடரே
இணக்கம் உறும் அன்பர்கள் தம் இதயவெளி முழுதும்
இனிதுவிளங் குறநடுவே இலங்கும் ஒளிவிளக்கே
மணக்குநறு மணமேசின் மயமாய்என் உளத்தே
வயங்குதனிப் பொருளேஎன் வாழ்வே என்மருந்தே
பிணக்கறியாப் பெருந்தவர்கள் சூழமணி மன்றில்
பெருநடஞ்செய் அரசே என் பிதற்றும் அணிந்தருளே.

50. சிதத்திலே ஊறித் தெளிந்ததென் அமுதைச்
சித்தெலாம் வல்லமெய்ச் சிவத்தைப்
பதத்திலே பழுத்த தனிப்பெரும் பழத்தைப்
பரம்பர வாழ்வையெம் பதியை
மதத்திலே மயங்கா மதியிலே விளைந்த
மருந்தைமா மந்திரந் தன்னை
இதத்திலே என்னை இருத்திஆட் கொண்ட
இறைவனைக் கண்டு கொண்டேனே.

51. கரும்பினின் சாற்றைக் கனிந்தமுக் கனியைக்
கருதுதகோற் றேன் நறுஞ்சுவையை
அரும்பெறல் அமுதை அறிவைஎன் அன்பை
ஆவியை ஆவியுள் கலந்த
பெருந்தனிப் பதியைப் பெருஞ்சுகக் களிப்பைப்
பேசுதற்கு அரும்பெரும் பேற்றை
விரும்பிஎன் உளத்தை இடங்கொண்டு விளங்கும்
விளக்கினைக் கண்டு கொண்டேனே.

52. சமயமும் மதமும் கடந்ததோர் ஞான
சபைநடம் புரிகின்ற தனியைத்
தமையறிந் தவருட் சார்ந்தமெய்ச் சார்பைச்
சத்துவ நித்த சற்குருவை
அமையவென் மனத்தைத் திருத்திநல் அருளார்
அமுதளித்து அமர்ந்த அற்புதத்தை
நிமிலநிர்க் குணத்தைச் சிற்குணாகார
நீதியைக் கண்டு கொண்டேனே.

53. அளவைகள் அனைத்தும் கடந்து நின்று ஓங்கும்
அருட்பெருஞ் சோதியை உலக்க
களவைவிட்டவர்தம் கருத்துளே விளங்கும்
காட்சியைக் கருணை அம்கடலை

உளவைஎன் றனக்கே உரைத்தெலாம்வல்ல
    ஒளியையும் உதவிய ஒளியைக்
குளவயின் நிறைந்த குருசிவபதியைக்
    கோயிலிற் கண்டுகொண்டேனே.

54. கலைநிறை மதியைக் கனலைச் செங்கதிரை
    ககனத்தைக் காற்றினை அமுதை
நிலைநிறை அடியை அடிமுடிதோற்றா
    நின்மல நிர்க்குண நிறைவை
மலைவறும் உளத்தே வயங்கும்மெய் வாழ்வை
    வரவுபோக் கற்றசின் மயத்தை
அலைவறு கருணைத் தனிப்பெருங் கடலை
    அன்பினின் கண்டுகொண்டேனே.

55. சாதியைநீள் சமயத்தை மதத்தை யெலாம்
    விடுவித்தென் றன்னை ஞான
நீதியிலே சுத்த சிவ சன்மார்க்க
    நிலைதனிலே நிறுத்தினா னைப்
பாதியை ஒன்றானவனைப் பரம் பரனைப்
    பராபரனைப் பதிய னாதி
ஆதியைச் சிற்றம்பலத் தென் அருட்பெருஞ்
    சோதியைப் பெற்றேன் அச் சோஅச்சோ.

56. படிப்படக்கிக் கேள்வியெலாம் பற்றறவிட்டடக்கிப்
    பார்த்திடலும் அடக்கிஉறும் பரிசமெலாம் அடக்கித்
தடிப்புறும் ஊண்சுவை அடக்கிக் கந்தம்எலாம்அடக்கிச்
    சாதிமதம் சமயமெனும் சழக்கையும் விட்டடக்கி
மடிப்படக்கி நின்றாலும் நில்லேன்நான் எனவே
    வனக்குரங்கும் வியப்பஎன்றன் மனக்குரங்கு குதித்த
துடிப்படக்கி ஆட்கொண்ட துரையே என் உளத்தே
    சுத்தநடம் புரிகின்ற சித்த சிகாமணியே.

57. ஆதி அந்தந் தோற்றாத அரும் பெரும் சோதியனே
அம்மேஎன் அப்பாஎன் ஐயா என் அரசே
ஓதி எந்த வகையாலும் உணர்ந்து கொளற்கு அரிதாய்
உள்ளபடி இயற்கையிலே உள்ள ஒரு பொருளே
ஊதியம் தந்து எனையாட் கொண்டு உள்ளிடத்தும்புறத்தும்
ஓவாமல் விளங்குகின்ற உடையவனே இந்தச்
சாதி இந்த மதமெனும் வாய்ச்சழக்கையெலாம் தவிர்த்த
சத்தியனே உண்கின்றேன் சத்தியத்தெள் அமுதே.

58. அச்சமெலாம் தவிர்த் தருளி இச்சையெலாம் அளித்த
அம்மே என் அப்பா என் ஐயா என் அரசே
துச்ச உலகு ஆசாரத் துடுக்கு அனைத்துந் தவிர்த்தே
சுத்த நெறி வழங்குவித்த சித்த சிகாமணியே
உச்ச நிலை நடு விளங்கும் ஒரு தலைமைப் பதியே
உகலமெலாம் எடுத்திடினும் உலவாத நிதியே
இச் சமயம் எழுந்தருளி இறவாத வரமும்
எல்லாஞ்செய் வல்ல சித்தின் இயற்கையுந் தந்தனையே

59. தத்துவப் பதியே தத்துவங் க்டந்து
தனித்ததோர் சத்திய பதியே
சத்துவ நெறியியில் சார்ந்த சன் மார்க்கர்
தமக்குளே சார்ந்த நற் சார்பே
பித்துறு சமயப் பிணக்குறும் அவர்க்குப்
பெரிது அரிதாகிய பேறே
புத் தமுது அளித்த என் உளத்திலே கலந்து
பொது நடம்புரிகின்ற பொருளே.

60. தன்மை காண் பரிப தலைவனே எல்லாம்
தரவல்ல சம்புவே சமயப்
புன்மை நீத்து அகமும் புறமும் ஓத்து அமைந்த
புண்ணியர் நண்ணிய புகலே

வன்மை சேர் மனத்தை நன்மை சோ மனமா
    வயங்குவித்து அமர்ந்த மெய் வாழ்வே
பொன்மை சார் கனகப் பொதுவொடு ஞானப்
    பொது நடம் புரிகின்ற பொருளே.

61. சிதத் தொளிர் பரமே பரத் தொளிர் பதமே
    சிவ பத அநுபவச் சிவமே
மதத் திடைத் தவிர்த்த மதி மதி மதியே
    மதி நிறை அமுத நல் வாய்ப்பே
சதத்திரு நெறியே தனி நெறித் துணையே
    சாமியே தந்தையே தாயே
புதப் பெரு வரமே புகற் கருந்தாமே
    பொது நடம் புரிகின்ற பொருளே.

62. மெய்ம்மையே கிடைத்த மெய்ம்மையே ஞான
    விளக்கமே விளக்கத்தின் வியப்பே
கைம்மையே தவிர்த்து மங்கலம் அளித்த
    கருணையே கரிசு இலாக் களிப்பே
ஐம்மையே அதற்குள் அது அது ஆகும்
    அற்புதக் காட்சியே எனது
பொய்ம் மையே பொறுத்தும் புகல் அளித்து அருளிப்
    பொது நடம் புரிகின்ற பொருளே.

63. மதம்பிடித் தவரெல்லாம் வாய்பிடிப் புண்டு
    வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே
    கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்
பதம்பிடித் தவர்எல்லாம் அம்பலப் பாட்டே
    பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ்சோதியென்
    ஐயயே பள்ளி எழுந்தருள் வாயே.

64. மருளொடு மாயைபோய்த் தொலைந்தது மதங்கள்
வாய்மூடிக் கொண்டன மலர்ந்தது கமலம்
அருளொளி விளங்கியது ஒருதிருச் சபையும்
அலங்கரிக் கின்றனர் துலங்கிவீற் றிருக்கத்
தெருளொடு பொருளுமேன் மேலெனக் களித்துச்
சித்தெலாம் செய்திட திருவருள் புரிந்தே
இருள்அறுத் தெனையாண்ட அருட்பெருஞ்சோதியென்
வள்ளலே பள்ளி எழுந்தருள் வாயே.

65. தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம் ஒன்றில்லார்
மேல்விளைவு அறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித்து அவர்கறிவு அருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே.

66. வெறிக்குஞ்சமயக் குழியில் விழ
விரைந்தேன் றன்னை விழாத வகை
மறிக்கும் ஒருபேர் அறிவளித்த
வள்ளற் கொடியே மனக்கொ டியைச்
செறிக்கும் பெரியர் உளத் தோங்குந்
தெய்வக் கொடியே சிவ ஞானங்
குறிக்குங் கொடியே ஆனந்தக்
கொடியே அடியேற்கு அருளுகவே.

67. மதத்திலே சமய வாழக்கிலே மாயை
மருட்டிலே இருட்டிலே மறவாக்
கதத்திலே மனத்தை வைத்துவீண் பொழுது
கழிக்கின்றார் கழிக்கநான் உன்பூம்

பதத்திலே மனத்தை வைத்தனன் நீயும்
பரிந்தெனை அழிவிலா நல்ல
பதத்திலே வைத்தாய் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே.

68. குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்து வீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கி யேமாந்து
நிற்கின்றார் நிற்க நான் உவந்து
வலத்திலே நினது வசத்திலே நின்றேன்
மகிழ்ந்துநீ என்னுளம் எனும்அம்
பலத்திலே நின்றாய் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே.

69. சாதிமதம் சமய முதல் சங்கற்ப
விகற்பம் எல்லாம் தவிர்ந்து போக
ஆதிநடம் புரிகின்றான் அருட்சோதி
எனக்களித்தான் அந்தோ! அந்தோ!!

70. மதமெனும்பேய் பிடித்தாட்ட ஆடுகின்றோர் எல்லாம்
மன்றிடத்தே வள்ளல்செய்யும் மாநடங் காண்குவரோ
சமமெனவே இருக்கின்றார் படுவது அறிந்திலரே
சாகாத கல்கவிற்குந் தரம்இவர்க்கும் உளதோ
பதமறியா இந்தமத வாதிகளோ சிற்றம்
பலநடங்கண் டுய்ந்தேனைச் சிலபுகன்றார் எந்தாய்
கதைமொழிநீ அன்றுசொன்ன வார்த்தையன்றோ இன்று
தோத்திரஞ் செய்து அங்காங்கே தொழுகின்றார் காணே.

71. எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும்பெருஞ் சோதியரே
இறைவர்என்பது அறியாதே இம்மதவாதிகள் தாம்
கவ்வைபெறு குருடர்கரி கண்டகதை போலே
கதைக்கின்றார் சாகாத கல்விநிலை அறியார்

நவ்விவிழி யாய்இவரோ சிலபுகன்றார் என்றாய்
ஞானநடங் சண்டறியேன்மெய்த் தேன்முதம்உண்டேன்
செவ்வைபெறு சமரசசன் மார்க்கசங்கத் தனிலே
சேர்ந்தேன்அத் தீமொழியும் கேமொழியாயினவே.

72. பெருகியபேர் அருள்உடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல் என்கின்றாய்
அருகர்புத்தர் ஆதிஎன்பேன் அயன்என்பேன் நாராயணன் என்பேன்
அரன் என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகுசதா சிவம் என்பேன் சத்திசிவம் என்பேன்
பரம்என்பேன் பிரமம் என்பேன் பரம்பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம்என்பேன் துரியநிறைவென்பேன்
சுத்தசிவம் என்பன் இவை சித்துவிளை யாட்டே.

73. சாதிசம யங்களிலே விதிபல வகுத்த
சாத்திரக் குப்பைகள் எலாம் பாத்திரம் அன்றெனவே
ஆதியில்என் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பால்இன்று அண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்
ஓதிஉணர்ந்தோர்புகழும் சமரசசன் மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாம்
சோதிநடத் தரசையென்றேன் உயிர்க்கு உயிராம்பதியைச்
சுத்தசிவ நிறைவைஉள்ளே பெற்றுமகிழ்ந்தேனனே.

74. மதியைக் கெடுத்து மரணம் எனும்
வழக்கைப் பெருக்கி இடர்ப்படும் ஓர்
விதியைக் குறித்த சமய நெறி
மேவாது என்னைத் தடுத்துஅருளாம்
பதியைக் கருதிச் சன்மார்க்கப்
பயன்பெற் றிடஎன் னுட்கலந் தோர்
கதியைக் கொடுத்தாய் நின்றனக்குக்
கைம்மா றேதுகொடுப் பேனே.

75. நிலத்தே யடைந்த இடர் அனைத்தும்
நிமிடத்து ஒழித்தே நிலைபெற்றேன்
வலத்தே அழியா வரம்பெற்றேன்
மணிமன்று ஏத்தும் வாழ்வடைந் தேன்
குலத்தே சமயக் குழியிடத்தே
விழுந்துஇவ் வுலகம் குமையாதே
கலத்தே சுத்தசன் மார்க்கம்
நாட்டா நின்றேன் நாட்டகத்தே.

76. அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து
இருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்தே அடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுதற் கென்றே எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே.

77. துன்பெலாந் தீர்ந்தன சுகம்பலித் ததுநினைச்
சூழ்ந்தது அருள் ஒளி நிறைந்தே
சுத்தசன் மார்க்க நிலை அநுபவம் நினக்கே
சுதந்தரம் அது ஆனது உலகில்
வன்பெலாம் நீக்கிநல் வழியெலாம் ஆக்கிமெய்
வாழ்வெலாம் பெற்று மிகவும்
மன்னுயிர் எலாங்களித் திடநினைத் தனையுன்றன்
மனநினைப் பின் படிக்கே
அன்பநீ பெருக உலவாது நீடூழி
விளையாடுக அருட்சோதி யாம்
ஆட்சி தந்தோம்உனைக் கைவிடோம் கைவிடோம்
ஆணைநம் ஆணை என்றே

இன்புறத் திருவாக்கு அளித்துஎன் உள்ளேகலந்து
 இசைவுடன் இருந்த குருவே
எல்லாஞ்செய் வல்லசித்து ஆகிமணி மன்றினில்
 இலங்குநட ராஜ பதியே.

78. பேருற்ற உலகில்உறு சமயமத நெறிஎலாம்
 பேய்ப்பிடிப் புற்ற பிச்சுப்
பிள்ளைவிளை யாட்டென உணர்ந்திடாது உயிர்கள்பல
 பேதம்உற்று அங்கும்இங்கும்
போர்உற்று இறந்துவீண் போயினார் இன்றும்வீண்
 போகாத படி விரைந்தே
புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
 பொருளினை உணர்த்தி எல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ
 என் பிள்ளை ஆதலாலே
இவ்வேலை புரிகஎன் றிட்டனன் மனத்தில் வேறு
 எண்ணற்க வென்ற குருவே
நீறுற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்
 நிறைந்திருள் அகற்றும் ஒளியே
நிர்க்குணா னந்தபர நாதாந்த வரையோங்கும்
 நீதிநட ராஜ பதியே.

79. காய்மனக் கடையனைக் காத்தமெய்ப் பொருளே
 கலைகளும் கருதரும் ஒருபெரும் பதியே
தேய்மதிச் சமயருக்கு அரியஒண் சுடரே
 சித்தெலாம் வல்லதோர் சத்திய முதலே
ஆய்மதிப் பெரியருள் அமர்ந்த சிற்பரமே
 அம்பலத்து ஆடல்செய் செம்பதத்து அரசே
தாய்மதிப் பரியதோர் தயவுடைச் சிலமே
 தனிநட ராஜஎன் சற்குரு மணியே.

80. பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடும் ஓர்
பவநெறி இதுவரை பரவியது இதனால்
சென்னெறி அறிந்திலர் இறந்திறந்து உலகோர்
செறிஇருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்து ஒரு பொதுநெறி எனும்வான்
புத்தமுது அருள்கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
தனிநட ராஜாஎன் சற்குருமணியே.

81. நண்ணிய மதநெறி பலபல அவையே
நன்றற நின்றன சென்றன சிலவே
அண்ணிய உலகினர் அறிகிலர் நெடுநாள்
அலைதரு நின்றனர் அலைவற மகனே
புண்ணியம் உறுதிரு அருள் நெறி அதுவே
பொதுநெறி என அறி வுறமுயலுகிநீ
தண்ணிய அமுது உணத் தந்தனம் என்றாய்
தனிநட ராஜஎன் சற்குருமணியே.

82. வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத்து ஆள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண்டு ஒட்டிஉள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே.

83. துன்மார்க்க நடையிடைத் தூங்குகின் றீரே
தூக்கத்தை விடுகின்ற துணை ஒன்று கருதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர்
சாவையும் பிறப்பையும் தவிர்ந்திட விரும்பீர்

பன்மார்க்கம் சொல்கின்ற படிற்று உளம் அடக்கீர்
பசித்தவர் தம்முகம் பார்த்துண வளியீர்
என்மார்க்கம் மெச்சுகம் யாதுநும் வாழ்க்கை
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே.

84. சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்றஉலகீர்
அலைந் தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம் இது கூவுகின்றேன் உமையே.

85. எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தேஎமது தெய்வம்எமது தெய்வம்என்று
கைவகையே கதறுகின்றீர்தெய்வம் ஒன்றென்றுஅறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
ஐவகைய பூதஉடம்பு அழிந்திடில் என்புரிவீர்
அழியுடம்பை அழியாமை ஆக்கும் வகை அறியீர்
உய்வகை என் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றுஇவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே.

86. நரைமரணம் மூப்பறியா நல்ல உடம்பினரே
நற்குலத்தார் என அறியீர் நானிலத்தீர் நீவிர்
வரையில் உயர் குலம்என்றும் தாழ்ந்தகுலம் என்றும்
வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக் காண்கின்றீர்
புரைஉறுநும் குலங்கள்எலாம் புழுக்குலம்என்றறிந்தே
புத்தமுதம் உண்டுஓங்கும் புனிதகுலம் பெறவே
உரைபெறும்என் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றுஅவண் உற்றிடுவீர் உண்மைஉரைத் தேனே.

87. துன்மார்க்கம் எல்லாம் தொலைத்துவிட்டேன் சுத்தசில
சன்மார்க்க சங்கம் தலைப்பட்டேன் - என்மார்க்கம்
நன்மார்க்கம் என்றேவான் நாட்டார் புகழ்கின்றார்
மன்மார்க்கத் தாலே மகிழ்ந்து.

88. பன்மார்க்கம் எலலாம் பசை அற்று ஒழிந்தனவே
சன்மார்க்கம்ஒன்றே தழைத்ததுவே - சொன்மார்க்கத்து
எல்லா உலகும் இசைந்தனவே எம்பெருமான்
கொல்லா நெறிஅருளைக் கொண்டு.

89. சாதிகுலம் என்றும் சமயமதம் என்றும்உப
நீதியில் ஆச்சிரம நீட்டென்றும் - ஓதுகின்ற
பேயாட்ட மெல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்
வாயாட்டந் தீர்ந்தனவே மற்று.

90. சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் பொற்காட்ட நேராவே - நேத்திரங்கள்
சிற்றம் பலவன் திருவருட்சீர் வண்ணம் என்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து.

91. வேதாகமங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர் - சூதாகச்
சொன்ன அலால் உண்மை வெளி தோன்ற உரைத்தல் இலை
என்ன பயனோ இவை.

92. கண்டதெல்லாம் நித்தியமே கேட்டதெல்லாம் பழூதே
கற்றதெல்லாம் பொய்யேநீர்களித்த தெல்லாம்வீணே
உண்ட தெலாம் மலமேஉள் கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும் உண்மை அறிந்திலீரே
விண்டதனால் என் இனிநீர் சமரச சன்மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள் நன்குணர்ந்தே
எண்தகுசிற் றம்பலத்தே எந்தையருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம் இன்பம் உறலாமே.

93. முயன்றுகில் பயன்அடையா மூடமதம் அனைத்தும்
முடுகி அழிந் திடவும்ஒரு மோசமும் இல்லாதே
இயன்றவொரு சன்மார்க்கம் எங்கும் நிலைபெறவும்
எம்மிறைவன் எழுந்தருளல் இதுதருணங் கண்டீர்
துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்றஎழு கின்றதிது தொடங்கிநிகழ்ந் திடும்நீர்
பயின் றறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே.

94. முன் உள மார்க்கங்கள் யாவும் முடிந்தன
மன் உள சுத்த சன் மார்க்கம் சிறந்தது
பன் உளந் தெளிந்தன பதி நடம் ஓங்கின
என் உளத்து அருட்பெரும் சோதியார் எய்தலே.

95. தூக்கமுந் துயரும் அச்சமும் மடமும்
தொலைந்தன தொலைந்தன எனைவிட்டு
ஏக்கமும் வினையும் மாயையும் இருளும்
இரிந்தன ஒழிந்தன முழுதும்
ஆக்கமும் அருளும் அறிவும் மெய் அன்பும்
அழிவுறா உடம்பும் மெய் இன்ப
ஊக்கமும் எனையே உற்றன உலகீர்
உண்மை இவ் வாசகம் உணர்மின்.

96. ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெரும் சோதி என் உளத்தே
நீதியிற் கலந்து நிறைந்தது நானும்
நித்தியன் ஆயினேன் உலகீர்
சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
சத்திய சுத்த சன் மார்க்க
வீதியில் உமைத் தான் நிறுவுவல் உண்மை
விளம்பினேன் வம்மினோ விரைந்தே.

97. கண்டேன் சிற்றம்பலத் தானந்த நாடங் கண்டு களி
கொண்டே னெல்லாம் வல்ல சித்தனைக் கூடிக் குலவியமு
துண்டேன் மெய்ஞ் ஞானஉரு வடைந்தேன் பொய்யுல கொழுக்கம்
விண்டேன் சமரச சன் மார்க்கம் பெற்ற வியப்பு இதுவே.

98. எவ்வுயிரும் பொது வெனக் கண்டிரங்கி யுப
கரிக்கின்றார் யாவ ரந்தச்
செவ்வியர் தஞ் செய லனைத்துந் திரு வருளின்
செய லெனவே தெரிந்தே னிங்கே
கவ்வை இலாத் திரு நெறி யத் திரு வாளர்
தமக்கேவல் களிப்பாற் செய்ய
ஒவ்விய தென் கருத்தவர் சீரோதிட வென்
வாய் மிகவு மூர்வதாலோ.

99. எத் துணையும் பேத முறா தெவ் வுயிருந்
தம்முயிர் போ லெண்ணி யுள்ளே
யொத் துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவ ரவ ருளந்தான் சுத்த
சித் துருவா யெம்பெருமா னடம் புரியு
மிட மென தான் தெரிந்தே னந்த
வித்த கர்த மடிக் கேவல் புரிந்திட வென்
சிந்தை மிக விழைந்த தாலோ.

100. கருணை யொன்றே வடிவாகி எவ்வுயிருந்
தம் முயிற்போற் கண்டு ஞானத்
தெரு ணெறியில் சுத்த சிவ சன் மார்க்கப்
பெரு நீதி செலுத்தா நின்ற
பொரு ணெறி சற்குண சாந்தப் புண்ணியர் தந்
திரு வாயார் புகன்ற வார்த்தை
அருணெறிவே தாகமத்தி னடி முடி சொல்
வார்த் தைக ளென் றறைவ ராலோ.

✸ ✸ ✸

# உமர்கய்யாம்
# கவலையற்று வாழ்
(1946)

# முன்னுரை

## 1

*இன்பம்! இன்பம்! இன்பம்! ஆம்! இதுவே மக்கள் விரும்புவது. இதை விரும்பியே உலக மக்கள் உழைக்கின்றனர்; வாழ்கின்றனர். இன்பத்தில் அன்பற்ற எரும் இவ்வுலகில் வாழ விரும்பார். மனித வாழ்வில் இன்பம் உண்டு. இன்பத்தைத் தேடிக் கொள்ளக்கூடிய சக்தி மக்களுக்கு உண்டு. இயற்கையை மாற்றி அமைத்துக்கொள்ளும் வலிமை மனிதனுக்கே சொந்தம். வேறு எவ்வுயிர்க்கும் இவ்வாற்றல் இல்லை. மற்ற உயிர்களைக் காட்டிலும் சிறப்பறிவு படைத்தவன் மனிதன் அன்றோ?*

*"எல்லா ஊர்களும் நம்முடைய ஊர்கள்; உலக மக்கள் எல்லோரும் நம்முடைய உறவினர். நமக்குத் தீமை வருவதும் பிறரால் அன்று; நன்மையுண்டாவதுஅம் பிறரால் அன்று; நாமே தீமைக்கும் நன்மைக்கும் காரணம். நாம் துன்ப மடைவதும் இன்பமடைவதும் அதைப்போல் தான்; இது ஒரு பழந் தமிழ்ப் புலவர் கருத்து. இக்கருத்துடைய பாட்டு:*

யாதும் ஊரே யாவரும் கேளிர்
    தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும்
    அவற்றோர் அன்ன. (புறநானூறு)

*இப்பாடல் மனித சக்தியைக் கண்ணாடிபோல் காட்டுகின்ற தன்றோ. இத்தகைய ஆற்றல் படைத்த மக்கள் ஏன் தங்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ளவேண்டும்? இன்புற்று வாழ்வதற்கு வழிதேட வேண்டாமா?*

## 2

*மனித வாழ்க்கையே துன்பமுடையது; பிறப்பின்றி இருத்தலே இன்பமுடையது; என்பர் சிலர்.*

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்

என்பது போன்றவைகள் அத்தகையோர் கூற்றைக் காட்டுவன. இதை நாம் ஒப்புக் கொள்வதற்கில்லை. துன்பம் இன்றேல் இன்பம் ஏது? கசப்பின் சுவைதெரிந்தால் அன்றோ இனிப்பின் இயல்பு தெரியும்.

தன்னம்பிக்கை யற்றவர்கள் தான் வாழ்க்கையைத் துன்பம் என்பர். உழைப்பில் - முயற்சியில் நம்பிக்கை யற்றவர்களே வாழ்க்கையை வெறுப்பர். எல்லாம் வல்ல தன்மை மனிதனிடம் உண்டு என்பதை உணர்ந்தோர் வாழ்க்கையை வெறுக்க மாட்டார்.

பல மக்கள் எல்லா இன்பங்களும் பெற்று உயர்ந்த வாழ்க்கை வாழ்வதைப் பார்க்கின்றோம். கோடிக் கணக்கான மக்கள் பட்டினி கிடந்து சாவதையும் பார்க்கின்றோம். இந்த நிலை மாற வேண்டும். உலகில் பிறந்த எல்லா மக்களும் துன்பம் இன்றி வாழவேண்டும். இதில் கருத்து வேற்றுமை யே இல்லை. பண்டும் இல்லை; இன்றும் இல்லை.

ஒருவன் துன்புறுவதும், பட்டினி கிடந்து மடிவதும் தலை விதி; முன் பிறப்பில் செய்த தீவினை. ஒருவன் அளவுக்குமேல் போக போக்கியங்கள் அநுபவிப்பதும் தலைவிதி; முன்செய்த நல்வினை. என்று தன்னம்பிக்கையற்ற மக்கள் கூறி விடுகின்றனர். இக்கூற்று பொருந்துமா?

திருவள்ளுவரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். கடவுள், மறுபிறப்பு, கர்மம், சுவர்க்கம், நரகம் எல்லாவற்றிலும் நம்பிக்கையுடையவர். அவர் கூறுகிறார். "பிச்சை எடுத்து உயிர்வாழும்படி உலகில் எந்த மனிதனும் படைக்கப்பட வில்லை. ஒருகால் பிச்சை புகுந்து தான் உயிர்வாழ வேண்டும் என்று ஒருவன் படைக்கப் பட்டிருப்பானாயின், இந்த இழிவான உலகைப் படைத்தவன் அடியோடு அழிக" என்று வசை மொழியை வீசுகிறார் படைப்புத் தலைவன்மீது.

இரந்தும் உயிர்வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்

*இதுவே மேற்கூறிய கருத்தை விளக்கும் குறள்.*

இன்னாமை வேண்டின் இரவு எழுக

*துன்பம் வேண்டுமானால் பிச்சையெடுக்கத் தொடங்குக என்றார் ஒருவர். பிச்சை யெடுப்பதைக் காட்டிலும் துன்ப வாழ்வு வேறில்லை என்பதே இவர் கருத்து. இதுதான் திருவள்ளுவர் கருத்தும்.*

*இதே கருத்தை பாரதியார், வேறு மொழியில் ஆவேசத்துடன் கூறி விட்டார்.*

தனியொருவனுக்கு
உணவில்லை யெனில் ஜகத்தினை
அழித்திடுவோம்

*என்றார். இதுவன்றோ மனித சக்தி. எ ல்லா மக்களையும் வாழ்க்கையில் இன்பம் நுகரும்படி செய்யும் சக்தி மனிதனுக்கு உண்டு. உலகத்தை அழிக்கும் சக்தியும் மனிதனுக்கு உண்டு என்று அன்று நம்பினார் பாரதியார். இன்று, அணுக்குண்டு இதை மெய்ப்பித்து விட்டது. அழிக்கும் கருவியைக் கொண்டு ஆக்க வேலைகள் பல செய்தல் கண்கூடு ஆதலின், மனிதப் பிறப்பே துன்பம் உடையது என்ற சோர்வு மனப்பான்மையை அடியோடு தொலைப்போம்.*

## 3

*"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றார். ஒருவர்" எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே, அல்லாமல் வேறொன்று அறியேன் என்றார் மற்றொருவர். இக்கருத்து இன்று நேற்று எழுந்தது அன்று. மனித சமூகம் அறிவு பெற்ற நாள் முதல், எந்நாட்டிலும், எச்சமயத்தாரும், இக் கருத்தை வெளியிட்டு வந்திருக்கின்றனர்.*

*முன்னோர், மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு அவ்வப்போது காட்டிய வழிகள் வெவ்வேறானவை. அவைகள் நிலையாக மனித சமூகத்தில் மகிழ்ச்சியை வளர்த்து விடவில்லை. மனிதவாழ்ககையை என்றும் இன்பமுடைய தாக்க இக்காலத்தினர் கண்ட முடிவு வேறு. முன்னோர், தருமம், பக்தி, கடவுள், நம்பிக்கை. பற்றின்மை, அன்பு, இரக்கம் ஆகிய சொற்களின் மூலம், ஏழை, பணக்காரன், உழைப்பாளி,*

சோம்பேறி எல்லோரும் அவரவர்கள் நிலையில் இருந்து கொண்டே இன்புற்றிருக்க வழி கூறினர். இக்காலத்தினர் அரசியல், பொருளாதாரம், ஆகியவைகளின் மூலமே மனித சமூகத்தை இன்புறச் செய்யலாம் எனக் கூறுகின்றனர். முன்னோர் கூற்று அனுபவத்தில் பயன் அளிக்கவில்லை; பின்னோர் கூற்று கண்கண்ட உண்மை. இதற்கே இன்று உலகம் உழைக்கின்றது. ஆதலின் அறிவுடையோர், ஆற்றலுடையோர், சமரச மனப்பான்மையுடையோர், முயன்றால் உலகத்தையே இன்ப மயமாக்கிவிட முடியும்.

## 4

துன்பத்தை மறக்க இன்பம் வேண்டும். இன்பத்தை ஆக்குவது மகிழ்ச்சி, உள்ளத்தில் தோன்றும் கவலையை மறந்தால் மகிழ்ச்சி தோன்றும். மகிழ்ச்சியின்முன், அதாவது சிரிப்பின் முன் எத்தகைய துன்பமும் தலை காட்டாது. துன்பத்திற்கு மருந்து மகிழ்ச்சியைத் தவிர வேறில்லை.

இடுக்கண் வருங்கால் நகுக,
அதனை அடுத்து ஊர்வது
அஃது ஒப்பது இல்

என்றார் வள்ளுவர்.

“துன்பம் வந்தால் அதனைப் பொருட்படுத்தாதே. இந்த இழவுக்கு என்ன செய்வோம் என்று தலையில் கையை வைத்துக் கொண்டு கவலைப்படாதே. ஏ துன்பமே! என்னிடமா வந்தாய்; பார் உன்னை மாண்டு மடியச் செய்கிறேன்! என்று கடகடவென்று சிரித்து விடு. அதன் பின் வருவது இன்பம். அந்த இன்பத்திற்கு நிகர் எதையும் கூற முடியாது.” இது மேலே காட்டிய வள்ளுவர் வாய்மொழியின் கருத்து. ஆகவே கவலையை மறப்பதற்கு முதல் வழிமகிழ்ச்சி, நகைப்பு, சிரிப்பு என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

## 5

மகிழ்ச்சி, பெறவழி யென்ன? கேள்வி எளிது; எல்லோரும் கேட்கக் கூடியது; ஆனால் பதில் கூறுவதுதான் அரிது. வெவ்வேறு போக்கில் உள்ளவர்கள் மகிழ்ச்சிக்கு வெவ்வேறு வழிகளைக் கூறுவர். “ஆண்டவனைத் துதிப்பதே ஆராத

இன்பம்'' என்பர் கடவுள் பக்தர். நாடகம், சினிமா, சங்கீதம் மகிழ்ச்சியுடன் பொழுது போக்க ஏற்றவை என்பர் கலாரசிகர். காவியம் கற்போம்; ஓவியம் பார்ப்போம்; விளையாடுவோம்; நண்பர்களுடன் கூடி நகைச்சுவையுடன் பேசி மகிழ்வோம்; காதல் செய்வோம் என்பர் பலர். உண்டு, களித்து, உறங்குவதே சுகமென்பர் சோம்பேறிகள்.

குடித்து வெறிப்பதே சுகமென்பர் குடியர். ஆம், குடியில் மகிழ்ச்சியில்லை யென்று எவரும் கூற முடியாது. மதுவானது வயிற்றில் பாய்ந்தவுடன், மனக்கவலையை மாற்றுகிறது. உணர்ச்சியை ஊட்டுகின்றது. தன்னை மீறிய மகிழ்ச்சி, களிப்பு தலைதூக்கி ஆடுகின்றது. களிப்பு என்னும் சொல்லே கள்ளிலிருந்து பிறந்தது. கள் என்னும் பகுதியே களிப்பு என்னும் சொல்லுக்குப் பிறப்பிடம். கள்ளுண்டு மகிழும் நிலைக்கே களிப்பென்னும் பெயர் சூட்டினர் முன்னோர்கள். கள் இன்றேல் பண்டைக்களிப் பென்னும் சொல் இல்லை.

பண்டை நாளில் மக்கள் வாழ்க்கையைக் களிப்புறச் செய்வதற்குக் கள் அவசியமாக இருந்தது. இக்காலத்தில் அது தேவையில்லை. கள்ளைக் காட்டிலும் களிப்புறச் செய்யும் பொருள்கள், நிகழ்ச்சிகள் செயல்கள் மலிந்து விட்டன.

பாட்டு, நாடகம், படக்காட்சி, சிறுகதை, பேச்சு, பொதுஜன ஊழியம், சுதந்தரப் போராட்டம், விஞ்ஞான ஆராய்ச்சி, இலக்கியம் ஆகியவை, கள் கள்ளைக் காட்டினும் களிப்பூட்டுவன. இவற்றை இப்போது எல்லோரும் எளிதில் காணலாம்; நடத்தலாம்; அனுபவிக்கலாம். இவைகள் பண்டைக்காலத்தில் எல்லோர்க்கும் கிட்டாதவை. ஒரு சிலர்க்கே கிடைத்தன. ஆதலின் எளிதில்கிடைக்கும் கள்ளைக் கொண்டு களிப்புறலாம் என்று நம்பினர்; நடந்தனர்.

பண்டைக்காலத்தில் தோன்றிய கவிதைகள் காவியங்கள், ஓவியங்கள், வீரத்தன்மை, வள்ளல் தன்மை எல்லாம் கள்ளின் மயக்கத்தால் பொங்கி வழிந்தவைகளே. நமது தமிழ் நாட்டுப் பெருநாவலர்களான, கபிலர், அவ்வையார் முதலியவர்கள் இந்தச் சுவையில் ஊறினவர்கள் தான். வள்ளல்களும் களிமயக்குடன் பொருளை வாரி வாரி இறைத்தவர்களே. அக்காலத்தில் உலக முழுதும் இந்த நிலையில் தான் இருந்திருக்க வேண்டும். இதில் ஐயமில்லை.

## 6

*"காலப் பறவை தங்காது; சிறகை விரித்துக் கொண்டு பறந்துபோய்விடும். பறக்கும் சமயம் நெருங்கிவிட்டது. விரைவில் மதுவுண்டு மகிழ்ச்சிகொள்."*

*"மதுவருந்துதல் பாவம் அல்ல. அதுவும் ஆண்டவன் படைத்த பொருள்களில் ஒன்று. தீமையானவற்றை ஆண்டவன் படைக்க மாட்டான்".*

*"கொடி நிழல், ரொட்டித்துண்டு, சுவையுள்ள திராட்சை ரசம், இனிய பாடல், பெண்ணின் சங்கீதம் இவையே எனக்கு இன்பம்."*

*என்பனபோன்ற கருத்துக்களை உள்ளத்திலிருந்து உதிர்த்திருக்கிறார் உமர் கய்யாம்.*

*ஏன் இந்தக் கருத்துக்கள் அவர் மனத்தில் தோன்றின? உலகம் நிலையற்றது. மக்கள் வாழ்வு அழியக்கூடியது; இன்று அழியுமோ, நாளை அழியுமோ, இரவில் அழியுமோ, பகலில் அழியுமோ, இப்பொழுது அழியுமோ, இன்னும் சிறிது நேரத்தில் அழியுமோ, என்று உறுதிகூற முடியாதது. இவ்வெண்ணம் உமர் கய்யாம் மனத்தில் ஊன்றி நின்றது. ஆதலால் "வாழ்நாளை வீண்நாளாகக்காதே! இருக்கும் வரையிலும் மகிழ்ந்திரு. களித்திரு, கவலையற்றிரு, இறப்பது ஒன்றே உண்மை! மற்றவைகள் மாயம். இறந்தபின் என்ன ஆவோம் என்பதும் தெரியாது!" என்றெல்லாம் மனித சமூகத்திற்குக் கூறினார்.*

வாழ்வாவது மாயம்,
மண்ணாவது திண்ணம்

*ஆகையால் முயற்சிவேண்டாம்; ஊக்கம் வேண்டாம்; உலக வாழ்வு வேண்டாம்; கண்மூடி மவுனியாயிரு; என்று சொல்வதைக் காட்டிலும், "இன்புற்று வாழ முயற்சிசெய்" என்று கூறுவது உயர்ந்த உபதேசம் அல்லவா?*

## 7

*உமர் கய்யாம் ஒரு பாரசீகக் கவி. கவிமட்டிலும் அல்ல, சிறந்த வான சாஸ்திரி. வான சாஸ்திரக் கணக்குகளை முடிவு கட்டுதற்கான சிறந்த நூல் ஒன்றை இவர் இயற்றியுள்ளார்.*

பாரசீக மொழியில் கணிக்கப்பட்டுள்ள பஞ்சாங்கத்தில் பெரும் பங்கு இவருடையது.

மதுவைப் பற்றியே புகழ்கிறாரே; நாக்கில் தண்ணீர் சொட்டும்படி எழுதியிருக்கிறாரோ; இவர் ஒரு நாஸ்திகரோ, என்று எண்ணிவிடவேண்டாம். கடவுள் நம்பிக்கை யுடையவர்; முஸ்லிம்; குரான் பயின்றவர்; மதநூல்களில் தேர்ச்சியுடையவர்.

இவர் உண்மையாகவே மதுதேவதைக்கு அடிமையாகி யிருப்பாரா? அதைப் பணிந்து இன்புறும்படி உலகிற்குக் கூறி இருப்பாரா? என்று சந்தேகப்படுவோர் பலர். ஆம்! நாமும் இச் சந்தேகத்தை ஆதரிக்கிறோம். பகுத்தறிவை, துன்பங்களைப் பொருட்படுத்தாத தன்மையை, உள்ளத்தில் சோர்வடையாத முயற்சியை, கவலைப்படாது மகிழ்ச்சியுடன் இருக்கும் தன்மையை மதுவாக - அதாவது திராட்சை ரசமாக உருவகம் செய்திருக்கலாம் என்பது அறிஞர் கருத்து. இதுவே உண்மையென நாமும் கொள்வோம்.

இவர் கி.பி. 11ம் நூற்றாண்டில் பாரசீகத்தில் வாழ்ந்தவர். இவர் பிறப்பிடம் நைசாப்பூர் என்பது. இவருடன் கல்வி பயின்ற தோழரே அக்காலத்தில் பாரசீக நாட்டு மந்திரியாயிருந்தார். அவர் தயவில் இவர் பெற்றது ஒரு சிறிய திராட்சைத் தோட்டம். அதிலேயே வாழ்ந்து வந்தார். ஆடம்பரமற்ற வாழ்க்கை தத்துவநூல், வானநூல் ஆராய்ச்சி, இவைகளே அவருடைய பொழுது போக்கு. இவர் மறைந்த காலம் 1133 என்பர்.

அவர் பாடிய பாடல்களுக்கு 'ரூபயாத்' என்று பெயர். எத்தனை பாடல்கள் அவரால் இயற்றப்பட்டன என்பது எவருக்கும் முடிவாகத் தெரியாது.

உமர் கய்யாம் காலத்தில் அவர் பாடலுக்கு மதிப்பில்லை. அவருக்கும் பொது ஜனங்களிடம் செல்வாக்கில்லை. மதப் பற்றுடையவர்களும், பொதுமக்களும், உமர் கய்யாமைத் தூற்றினர்; குடிவெறியர் எனப் பழித்தனர். புரட்சிகரமான கருத்துக்களை வெளியிடுபவர்களுக்குக் கிடைக்கும்த பரிசு என்ன? அதுதான் அவருக்கும் கிடைத்து வந்தது. இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

## 8

உமர் கய்யாத்தின் ரூபயாத்து மாசுபடிந்த மாணிக்கங் களாகக் கிடந்தன. அவைகளைக் கழுவி யெடுத்தவர் எட்வர்ட்

பிட்ஜெரால்ட் என்பவர். இவரே பாரசீக மொழியிலிருந்து ஆங்கிலத்தில் அவரது பாடல்களைச் சுவை துளும்ப மொழிபெயர்த்தார். 1809ம் ஆண்டில் 75 பாடல்கள் வெளிவந்தன. மீண்டும் 1883ம் ஆண்டில் இரண்டாவது மொழி பெயர்ப்பாக 110 பாடல்கள் வெளிவந்தன. இரண்டு மொழி பெயர்ப்புக்களுக்கும் சிறிது வேறுபாடு உண்டு.

எட்வர்ட் பிட்ஜெரால்டின் மொழிபெயர்ப்பே உலகுக்கு உமர் கய்யாத்தை அறிமுகம் செய்து வைத்தது.

அன்று இகழப்பட்ட அவர் இன்று உலகத்தாரால் தத்துவ ஞானியாகப் புகழப்படுகிறார். இலக்கியத்தில் இன்புறுவோரும் இவர் பாடல்களைப் பாராட்டுகின்றனர். வேதாந்திகளும் இவர்கருத்தைப் போற்றுகின்றனர்.

## 9

இத்தகைய சிறந்த நூலைத் தமிழில் இரண்டு அறிஞர்கள் கவியாகப் புனைந்துள்ளனர். ஒருவர் பழந்தமிழ் மரபு கெடாது புதுத்தமிழ்ப் பாடல்கள் தரும் தேசிக விநாயகம் பிள்ளை; மற்றவர் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை அள்ளித் தெளிக்கும் கவி. ச.து. சுப்பிரமணிய யோகி. ஒரு முஸ்லிம் தோழரும், ஒரு இந்துத் தோழரும் சேர்ந்து உமர்கய்யாம் பாடல்களை வசனமாக எழுதியுள்ளனர். அவர்கள் பெயர் நினைவில் இல்லை.

இம்மூவர் உமர்கய்யாத்தின் கருத்தைப் பாடல் களாகவும், வசனமாகவும் வெளியிட்டிருக்க, நீயும் இம் முயற்சியில் ஏன் ஈடுபட்டாய் எனக்கேட்கலாம். எனக்கு அந்தப் பாடல்களின் மேல் - அந்தப் பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்களின் மேல் உண்டான ஆசையே என்னையும் பாடத்தூண்டிற்று. இதுதான் எனது விடை.

நான் எழுதியுள்ள பாடல்களை உமர்கய்யாத்தின் பாடல்களின் நேர் மொழிபெயர்ப்பாகக் கொள்ள முடியாது. சில நேர் மொழிபெயர்ப்பு; சில அவர் கருத்தைத் தழுவியவை; சில அவர் கருத்தை மனத்துட் கொண்டு எழுதியவை. இவ்வளவுதான் கூறமுடியும். அவர் கூறிய ஊர்களையும், பெயர்களையும் முற்றும் மாற்றியுள்ளேன்.

பாடல்கள் தெளிவாக - நினைத்த கருத்தை விளக்கு வனவாக இருக்கவேண்டும் என்பது என்விருப்பம். முடிந்த

*வரையிலும், எளிய சொற்களில் இனிய ஓசைபொருந்தப் பாடல்கள் எழுதவேண்டும் என்பது பிற்காலத்தில் எனக்குத் தோன்றிய எண்ணம். இந்த எனது எண்ணத்தை இப்பாடல்கள் நிறைவேற்றி யிருக்கின்றனவா வென்பதை நான் எப்படி முடிவுகட்டுவது? இதைப் படிப்போர் தான் கூறவேண்டும்.*

*உமர்கய்யாமின் பாடல்கள் மூலம், மக்கள் உலக வாழ்வை இன்பமுடன் நடத்த ஊக்கங் கொள்ள வேண்டும் என்பதும் என் ஆசை.*

*மனிதன் இன்பம் அடையப் பிறந்தான். இன்பத்தை அனுபவிக்கவேண்டியது அவன் பிறப்புரிமை. இறந்தபின் இன்புறுதற்காக இப்பொழுது துன்புறுதற்கு அஞ்சக் கூடாது என்ற கொள்கை மாற வேண்டும்.*

*“இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, அன்றி எதுவருமோ” என்பது உண்மை. இன்றே முயல்க! இப்பொழுதே முயல்க! எல்லோரும் இன்புற்றிருக்க முயல்க! இதற்கு உமர்கயாம் பாடல்கள் உணர்ச்சியூட்டுவதாக.*

*இங்ஙனம்,*

*சாமி. சிதம்பரன்.*

*சென்னை,*<br>
*1-1-1946.*

# சிறப்புரை

1. உமர்கய்யாம் எனும் பெரியோன்
பாரசிக மொழிப் புலவன்
உலகநிலை ஆய்ந்த தூயன்
அமரஉளம் வாய்ந்திட் டோன்
ஆநந்த மாய் மக்கள்
வாழவழி அறிந்த வள்ளல்
கமகமென மணம் வீசும்
வாடாத மலர்கள் எனக்
கவிமலர்கள் உதிர்த்து வைத்தான்
"எமதுளத்தை மகிழ் விக்கும்
இவைகளென்ன" எல்லோரும்
எடுத்தழகாய் அணிந்து நின்றார்.

2. அவன் சொரிந்த மலர்களிலே
இனியசுவை மதுபானம்
அளவின்றி நிரம்பி நிற்கும்;
நவநவமாம் கற்பனைகள்
நடமாடும்; குடிப்பவர்கள்
உள்ளமெலாம் கொள்ளை கொள்ளும்;
சுவையறிவுப் பாடல்களுள்
அவன்பொதிந்த சோதிமணி
தேடியெடுத் தடையும் மாந்தர்
எவருக்கும் மேலான
பேரறிஞர்; இன்பமெனும்
மங்கையினை மணந்தோர் ஆவார்.

# உமர்கய்யாம் பாடல்கள்
# (ரூபயாத்)

1. உறங்காதே! விழித்தெழுவாய்;
மாறிவரும் புதுவுலகில்
உனதறிவு விழியைவைப்பாய்!
நிறைந்தஒளிச் சூரியனும்
நீலநிறக் கடல் மீது
பொன்பூசி நிமிர்ந்து தோன்றிக்
கறையிருளில் மினுமினுத்த
விண்மீன்கள் ஒளி மழுங்கக்
கதிர்வீசிக் கிழக்கே வந்தான்;
சிறந்ததமிழ்க் கரிகாலன்
அரண்மனையின் சிகரத்தே
தன்கிரணம் சிந்தி னானே.

2. இருள் அழியு முன், போலி
மனக்கோட்டை உருமாறி
இறந்தது;பின் அறிந்தேன் ஒன்றே;
பெரியதொரு சத்திரத்தின்
உள்ளிருந்து பேசியதோர்
குரலினமொழி உண்மை கேட்பீர்!
“அரிய எல்லா ஏற்பாடும்
கோயிலினுள் ஆனபின்னர்
துயில்மயக்கம் உள்ள அன்பன்

வெறுவெளியில் ஏன் இன்னும்
வீணாகக் காலத்தைக்
கழிக்கின்றான்'' என்ற ததுவே.

3. கதிர்காணச் சிறைக்கோழி,
களிப்புடனே கூவுங்கால்
சத்திரத்தின் முன்னே நின்றோர்,
இதுபொழுதே திறகதவை,
உள்நாங்கள் எத்துணைநாள்
இருந்திடுவோம் எனும் கணக்கும்,
புதிதாக ஒரு தடவை
புகுந்தவர்கள் மீளல் இலை
என்பதும்,நீ அறிந்த உண்மை,
அதிசயம்ஈது அன்று'' என்றே
இடியிடித்தார். இதுகேட்க
ஆதவனும் கிழக்கில் வந்தான்.

4. புத்தாண்டும் பிறந்ததவே,
போய்மறந்த பலநினைவும்
புதிதாக மனத்தில் ஊறக்,
கத்துகடல் அமைதியைப் போல்
கவலையிலா நிலைசேரும்
வழிகுறுகி நிற்கின் றேமால்,
இத்தரையில் வாழுயிர்கள்
மேலெல்லாம் இன்பமுறக்
கைவைத்தாள் அமைதி நங்கை,
உத்தமநாள் வந்ததென
உளமகிழ்ந்து மூச்சுயிர்த்தாள்
நமதன்னை உலக தேவி.

5. கனகசபை முட்செகாடியின்
மெல்வாசச் செம்மலரைக்
கரம்பற்றி நழுவி விட்டான்,

மனங்களிக்கும் மருந்தாகும்
எனக்கருதி மாதேவன்
மதுக்கிண்ணத் தொடும றைந்தான்,
அனவரதம் ஒளிவீசும்
செம்மணிபோல் திராட்சை தரும்
அருங்கனிகள் இரசம் சிந்தும்,
நனிசெழிக்க மலர்ப்பொழில்கள்
பாத்திவழி நன்னீரும்
பாயும் இதை நாடிக் காண்பீர்.

6. மதிநிறைந்த கவிக்கம்பன்
வாய்மூடி மொழியின்றி
மவுனியாய் மறைந்து நின்றான்;
புதியசுவைக் கவிரசமே!
கவிரசமே! கவிரசமே!
எனஏங்கிப் புகலுகின்ற
அதிதெய்வப் பேரரசை
அடங்கவில்லை, அவன்புரந்த
தமிழ்த்தாயின் அடியில் வீழ்ந்தே
கதிநீயே! எம்முளத்தைக்
கவிசெய்க! என்றறிஞர்
கைகூப்பி வேண்டி நின்றார்.

7. வசந்தமெனும் சுடர்நெருப்பில்
மழைகால வருத்தத்தை
வீசியெறி! பழத்தின் சாறும்
கசந்ததெனும் மொழிமாதே
மதுக்கிண்ணம் கையேந்தி
கண்சிமிட்டி அருகில் வாநீ;

விசைகொண்டு சிறகடித்துக்
காலப்புள் பறப்பதற்கு
வெகுநேரம் இன்னும் இல்லை;
திசைநோக்கிப் பறக்கஅது
தொடங்கிற்றே; தீந்தேனை
விரைவினிலே கிண்ணத் தூற்றே.

8. எண்ணரிய புகழ்மதுரை
வளநகரில் இருந்தாலென்?
இடுகாட்டில் வாழ்ந்தால் என்ன?
கிண்ணமுறை பழச்சாற்றில்
மிகவினிமை கிடந்தாலென்?
கசப்புகுடி யிருந்தால் என்ன?
மண்ணுலகில் நமதுயிராம்
மதுரரசம் துளித்துளியாய்ச்
சிந்துவதும், நமது வாழ்க்கை
என்னுமொரு மரத்தின்இலை
ஒவ்வொன்றாய் விழுவதையும்
கண்டுமனத் தெண்ணு வீரே?

9. காதலுக்கு நீரூற்றும்
இவ்வசந்த காலத்தின்
ஒவ்வொருநாள் இரவின் முடிவும்
போதுஅலர்த்தி நறுமணத்தை
நல்கும்எனப் புகல்கின்றாய்,
முந்தைநாள் மலர்கள் எங்கே?
சீதமது நிறைமலர்கள்
சிறந்தமணம் நமக்களிக்கும்
இவ்வசந்த காலமே,நாம்
தேவனையாம் தீவிழ
நண்பரையும் நமதரிய
கிளைஞரையும் வீழ்த்தும் அன்றோ?

10. காலமெனும் அக்கொடியன்
நண்பரையும் கிளைஞரையும்
கவர்ந்துபோக! நமக்கவர் தம்மால்
ஞாலம்இதில் பயன் என்ன?
வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும்
நமக்கொன்றே; பெருங்குரல் கொண்டே
"ஏலாநீ போர்க்கெழுக"
எனப்பகைவன் எதிர்நின்று
கூக்குரல்இட் டார்த்திட் டாலும்
"பாலகனே உணவுண்ண
வருக" வெனப் பரிந்தன்னை
அழைத்தாலும் பொருளாக கொள்ளேம்.

11. வாருங்கள் என்னுடனே,
வளங்கொழிக்கும் நாட்டினையும்,
முட்புதர்சேர் வனங்கள் தமையும்
வேறெனவே பிரிக்கின்ற
நெடுவழியில் விரைவாகக்
கைவீசி நடந்து செல்வோம்;
ஊறுசெயும் அரசடிமை
இல்லாது மகிழ்ச்சியுடன்
அமைதிநிலை உலகு புகுவோம்;
ஏறும்அறக் கட்டிலிலே
இருந்தரசு புரிபுத்தன்
அருளாளன் பெயர் தழைக்கவே.

12. வரிவண்டு மலர்தோறும்
தேனருந்திப் பண்பாடும்
வனத்தின்கண் செழித்து நிற்கும்
ஒருமரத்தின் பெருநிழலும்
சுவையுணவும், கனிரசமும்,
உயர்புலவன் பாடல் நூலும்,

இருண்டகுழல் கிளிமொழியே!
நான்வேண்டும் சுகவாழ்வு;
பிறிதொன்றில் இன்பம் உண்டோ?
எரிந்தமனம் குளிர்ச்சிபெற
அருகிருப்பாய்! இசைப்பாடி
இன்பத்தேன் பாய்ச்சு வாயே!

13. இவ்வுலகில் சிலபேர்கள்
பெருங்கீர்த்தி எய்தும்ஓர்
இச்சையுடன் செயல்கள் செய்வார்;
திவ்வியம்சேர் புத்தர்பிரான்
அடைந்ததொரு பெரும் பேறு
தேடிவரல் வேண்டும் என்பார்;
செவ்வையொடு சிறுமைகளும்
செறிந்தநில உலகே! நான்
சேர்த்தபணம் முற்றும் கொள்வாய்!
எவ்வகையும் சுயநலத்தை
இனிவிரும்பேன், ஏமாறேல்
ஓசையிலே, எனது நண்பா.

14. மன்னுயிரின் உடலழிக்க
வலைபின்னி உயிர்வாழும்
மாபாவச் சிலந்தி போலே
இந்நிலத்தில் வாழுவது
மௌடீகர் இயல்பன்றோ?
ஏன்இங்கன் வாழு கின்றோம்?
என்னபயன்? உள்மூச்சு
வெளிமூச்சாய் எழும்புமொரு
நிலைநம்மை அடையும் நேரம்
இன்னபொழு தென அறியோம்,
ஆர்ப்பாட்டம்,அகங்காரம்,
வீண்உரைகள் இயம்பல் ஏனோ?

15. கண்கவரும் வனப்பில் எமக்கு
இணையுண்டோ வெனக்கூறிக்,
கடிமணமும் சிறிது வீசி,
மண்மீது நமைச்சூழ்ந்து
மலர்ந்திருக்கும் வெளிர்சிவப்பு
மலர்கள் தரும் செடிகள் பாராய்!
எண்கொண்ட செம்பொன்நிறை
பைபிணித்த பட்டின் இழைக்
கயிறவிழ்ந்து நிலத்தில் வீழும்,
கிண்கிண்ணீர் எனப்பேசிப்
பணம்சிதறி மலர்வனத்தின்
கீழ்ஓடிக் கிட

16. தங்கத்தைக் குவியல்களாய்த்
தானியம்போல் களஞ்சியத்தில்
கணகளிக்கச் சேர்த்து வைப்போர்,
அங்கதனை மழைத்தாரை
எனஏழை மாந்தர்கரம்
சொரிந்துமனம் மகிழ்ந்து நிற்போர்,
இங்குலகில் ஒரு படித்தாய்
மண்ணோடு மண்ணாகி
இறக்கின்ற காட்சி காண்போம்;
எங்கவர்கள் எனத்தேடி
எடுப்பவர்கள் இவ்வுலகில்
எவர்உள்ளார் இயம்பு வீரே.

17. உலகின்ப நுகர்ச்சிகளை
நிலையெனவே மாந்தர் குலம்
உளங்கொண்டு மிகவும் நம்பி
அளவில்லாக் காதல் அவை
மேல்வைத்து மகிழ்கின்றார்,
அதுமுடிவில் சாம்ப லாகும்.

பலமாகிச் செழித்தாலும்
நிலைப்பதிலை; பாலைவனப்
பனிபோலச் சிறிது போதில்
நிலையழிந்து மறையும், இந்தச்
செய்தியினை நீலவிழிச்
கங்குயிலே நினைத்துப் பார்நீ!

18. காதலர்க்கு மகிழ்வூட்டும்
கருங்குயில்கள் குடியிருந்து
கூவும்மலர்ச் சோலை, பின்னர்
ஈதெனக்கண் டறிவதற்கோர்
சுவடின்றி மணல்வெளியாய்
எரிந்துபாழ் ஆகும், இந்தப்
பூதலத்தில், இரவுபகல்
முறைமாறி வருவனபோல்,
புகழ்கொண்டு வாழ்ந்த மன்னர்
சாதல்எனும் இருள்உலக
வழிநோக்கி முன்பின்னே
சார்ந்ததிறம் அறிந்து நின்றோம்.

19. நாற்றிசையும் ஜெயக்கொடிகள்
நிலைநாட்டி, நங்கையரின்
விழிவேலுக் குடைந்து வாழ்ந்த
ஏற்றமிகும் இராவணனார்
வாழ்ந்தவிடம் புலிகிடக்கும்
தூறாகி இருந்த தன்றோ;
கூற்றுவனும் நடுநடுங்கும்
கொடுவில்லன், இராகவனே
கொதிப்புரையோடு எழுப்பி னாலும்,
மாற்றம்எதிர் மொழியாத
பெருந்தூக்க நிலையடைந்தான்,
மன்னன்இனி விழித்தல் இல்லை.

20. தானேதான் இணையான
தமிழறிந்து வாழ்ந்த புகழ்க்
குலோத்துங்க சோழ மன்னன்
வானோங்கு கோபுரஞ்சேர்
மனைவாசல் பலமன்னர்
குழுக்கூடி வந்த காலை,
நான்நேரே கண்டதனை
நவில்கின்றேன்; கூகூகூ
வெனக்கூவும் குயில்கள் கண்டேன்!
தேனேபோல் அக்குயில்கள்
கூகூகூ எனப் பேசும்
தீங்குரலே மீண்டும் கேட்டேன்.

21. என்காதல் பயிர்வளர்க்க
இனியமொழி மழைசொரியும்
ஏந்திழையே காலம் தாழேல்!
முன்காலத் துயரினையும்,
மூண்டுவரும் எதிர்காலக்
கவலையையும் முழுது நீக்கும்,
இன்பாரும் மதுக்கிண்ணம்
அதைநிரப்பி, இப்பொழுதே
என்முன்னே கொணர்க நீதான்
அன்பாக நாளையென
அறைகின்ற மொழிமறக்க,
அறிவார்யார் நாளை நிலையே!

22. மனதார நாம்அன்பு
வைத்திருந்த மாந்தர் சிலர்
மகிழ்வுறுநற் குணங்கள் உள்ளார்,
கனமான சுவைநிறைந்த
திராட்சைரசம் போன்ற அவர்
வாழ்க்கையினைக், காலத் தச்சன்

தனதான கருவியினால்
தறித்திட்டான் விரைவினிலே.
தரைமீதில் அவர்கள் எல்லாம்
இனமாக ஒருவர்பின்
ஒருவர்எழுந்து இளைப்பாற
மெதுவாக ஏகி விட்டார்.

23. அன்புடையார் விட்டு அகன்ற
அறையிட்டதே, நாமெல்லாம்
அளவற்ற மகிழ்ச்சி யுடனே,
இன்பமிகும் இளவேனிற்
காலத்திற் கேற்றபுது
ஆடையணி புனைந்து வாழ்வேம்.
நண்பரெலாம் நலிவெய்த
நாமொருநாள் நிலத்தின்கீழ்ப்
படுக்கைதனை நண்ணல் வேண்டும்.
துன்பமுடன் நாமேயோர்
அமளிதனை அமைக்கின்ற
தொல்லையையும் எய்தி நிற்போம்;

24. காதலினால் நிலையழிந்த
கோவலனார் உடலிரத்தக்
கறைபட்ட நிலத்தில், இந்தத்
தாதுகுசெவ் விதழ்ரோசா
தழைத்தோங்கும் அலது, பிற
தரையிலே வளர்வதில்லை
ஈடுதனது சிலசமய
நினைப்பாகும், இக்காவின்
புதர்உச்சி மலர்கள் எல்லாம்,
சீதமதி முகத்தொருத்தி
சிரமிருந்து செடிகளின்மேல்
சிந்துமென எண்ணு வேனே.

25. நம்மனதை வசமாக்கும்
நதியோரம் அசைந்தோங்கி
நங்கையரின் தோற்றம் காட்டும்
இம்மலரின் கொடிமீது
சாய்கின்றோம், இன்பமெனும்
குன்றின்மிசை ஏறி நிற்போம்.
அம்மாநீ! அதுவழுந்தச்
சாயாதே! மென்கொடிதான்
அழகுநிறை எந்த மாதின்
செம்மைநிறை உதட்டின்மேல்
செழிப்பாகப் பிறந்ததுவோ?
அறிவார்யார் அதன் சிறப்பே.

26. வெறியளிக்கும் மதுபானம்,
சுவைப்பாடல், இசைபாடும்
வித்தகர்கள் உயர்வு முற்றும்,
ஒரு சிறிதும் நமைத்தொடராது
ஒழிந்துவிட, நாமொருநாள்
மண்ணாகி மடிதல் வேண்டும்;
பெருநிலத்தில் நமதுடலும்
பேதமற மறைகின்ற
நாள்அணுகு முன்னரே, நாம்
அரிதான காலத்தை
அமைதியுடன் மகிழ்வாக
நடத்தும்வகை அறிந்து கொள்வோம்.

27. இந்நாளே சிந்தனையின்
முடிவையெலாம் இயற்றிவிட
வேண்டுமென எண்ணு வோர்க்கும்,
பின்னாளில் ஆகட்டும்
எனநினைந்து பேதமையால்
ஏமாற்றம் எய்து வோர்க்கும்

உன்னாத மூடர்கள்!
இங்குமிலை அங்குமிலை
ஒருபயனும் உங்கட்கு" என்றே
மன்னாத கரியவிருட்
கோபுரத்தில் இருந்துவரும்
மனிதகுரல் ஒன்று கேட்டேன்.

28. கருங்கடல் மேல்சூரியனும்
ஒளிவீசி எழுங்காலைக்
"கடிமலர்கள் அவிழ்க" வென்னும்
ஒருகுரலைப் படுக்கைமேல்
கண்மூடி அமைதியுடன்
உறங்கும்போது உற்றுக் கேட்டேன்.
"விரிந்தமலர் மீண்டிங்கு
மலர்வதிலை, சோர்வுற்று
விழும்" எனும்மென்மை ஓசை,
மறுமுறைகண் விழித்தெழுந்த
பொழுதுஎனது செவிநுழைந்து
மறைந்ததனை நினைவு கூர்வேன்.

29. இரண்டுலக நிலைபற்றி
வழக்காடி இருந்தபெரும்
அறிஞர், தவம் முயன்றோர் எல்லாம்
மருண்டவர்கள், பெருமூடர்,
அவரும் இம் மண்ணுலகில்
வாழாமல் மறைந்து போனார்.
தெருண்டவர்கள் எனவிருந்து
தெளித்திட்ட அவர் சொற்கள்
தீதாகிச் சிதைந்த அன்றோ?
வறண்டபிணம் ஆகிஅவர்
வாய்முற்ற மண்நிரம்பி
வனமலர்போல் ஆயினாரே!

30. என்னிளமைப் பருவத்தே,
இணையற்ற பேர்அறிஞர்,
இறைவன்அருள் பெற்றோர் என்பார்,
இன்னவர்கள் தமைக்கூடி
இச்சையுடன் அளவில்லா
அரும்பொருள்கள் இயம்பல் கேட்டேன்
அன்னவர்கள் உரைத்தவழி
அடைந்திலேன் ஒரு சிறிதும்
அகத்து எழும்என் நினைப்பின் வழியே
பின்னரும்நான் நடக்கின்ற
பிடிவாதம் உடையஒரு
பெற்றிமையில் ஊறி நின்றேன்.

31. அறிஞருடன் நான்கூடி
ஞானவிதை தனையிந்த
அவனியிலே தெளித்து, மீண்டும்
பெரிதாகக் கரங்கொண்டு
நீர்ஊற்றி வளர்த்திட்ட
பின்னர்நான் அறுப்பு நாளில்
உரியபலன் பெற்றதனை
உரைக்கின்றேன், அதன் உண்மை
நிலையதனை உணர்ந்து கொள்வீர்;
விரைந்து,நீர் எனத்தோன்றிக்,
காற்றெனவே மறைந்திட்ட
விந்தைதான் கண்ட பலனே.

32. பள்ளத்தே நீர்பாயும்
பான்மைபோல், இங்கங்கே
பாய்ந்துநான் ஓடு கின்றேன்;
உள்ளத்தே, எதற்காக,
எங்கு,நான் செல்கின்றேன்
எனும் உண்மை உணர்தல் இல்லேன்,

கள்ளைக்கீழ் மலர்சிந்த
வீசிமறை காற்றேபோல்
காசினியை விட்டகல் வேன்
விள்ளத்தான் அறிந்திலேன்,
காற்றந்தப் புறந்தன்னில்
வீசுமோஉண்மை யாதோ?

33. எங்கிருந்து, கேளாமல்
இவ்வுலகில் என்னையார்
இழுத்துவந்து புகுத்தி னாரோ,
அங்கவரே எனைமீண்டும்
வினவாமல் எங்கேயோ
அறியாத இடத்தில் சேர்ப்பார்.
பொங்குபெரும் அன்புடைய
புனிதன்றான், நமைத்தூக்கிப்
போகும்அவர் செருக்கு தனையே
இங்குநினைப் பூட்டிவிட,
இனியசுவை பானத்தை
எமக்கென்று பரிசு தந்தார்.

34. இவ்வுலகில் வாழுயிர்கள்
மத்தியிலே யான்ஒருவன்
எவ்வகையோ வந்து தோன்றி,
எவ்வம்எனும் ஒருசிம்மா
தனத்தின்மேல் இருக்கின்றேன்,
இளைப்பாற நேரம் இல்லேன்;
கவ்வியெனைச் சூழ்சிக்கல்
முடிச்சுபல வற்றினையும்
கண்டுஅவற்றை அவிழ்த்தெறிந்தே
செவ்வையாய் மக்கள் இயல்பு
என்னுமொரு முடிச்சைநான்
சிதைக்கும் வழி மட்டும் அறியேன்.

35. போகும்வழி மறைக்கின்ற
கதவொன்றை நான்கண்டேன்
பூட்டிற்கு ஓர் சாவி காணேன்,
ஏகுபுற வழியில்ஒரு
திரைதொங்கிற்று, அதனிடையே
ஏதும்நான் அறிய வில்லை
வேகமுடன் நான்என்றும்
நீ என்றும் வீண்சொற்கள்
உதிர்கின்ற விந்தை கேட்டேன்.
தேகம்இது நொடிவீழும்
நீயும்இலை, நானும்இலை,
எனும் உண்மை தெரிந்துகொண்டேன்.

36. நான்எங்கே, நீயெங்கே,
எனும்கேள்விக் கொருவிடையும்
ஞாலத்தே தோன்ற வில்லை.
வானத்தில்வாழ் சுவர்க்கம்
வளங்குலவு திரைக் கடல்தாம்
ஒருபதிலும் வழங்க வில்லை.
காணும்ஒரு குறியற்ற
கடவுள் தமை வணங்கிடினும்
கண்டறிய முடிவ தில்லை.
ஏன்அறிவு மயக்கந்தான்,
என்உடற்பை உள்ளேநான்
தேடுபொருள் இருக்கும் அன்றோ,

37. நீங்காது என் உடற்குள்ளே
குடியாகி நிற்கின்ற
நிகர்அற்ற அன்பின் உருவே!
தூங்காத பேருலகத்
திரையின் பின் இருந்து என்றும்
தொடர்ந்து தொழில் செய்து வருவோய்!

"ஏங்காமல் இருள் வழியைக்
கடக்கவொரு சுடர்விளக்கை
எனக்கருள்க" என்று கேட்டேன்.
ஆங்கார முடன் ஏதோ
"அறிவின் ஒளி குறைந்தது" என
அறைந்த விடை ஒன்று கேட்டேன்.

38. சிற்றணுவின் திரள்சேர்ந்த
மண்பாண்ட உதட்டின்மேற்
சேர்ந்தேநான் சாய்ந்து நின்றேன்,
உற்றறிய வாழ்க்கையெனும்
கிணற்றுண்மை முழுவதையும்
உதட்டோடு என் உதடுவைத்தேன்,
"சற்றும் இனித் தாமதியேல்
சாகாத பொழுதே நீ
சலியாமல் குடித்து விடுவாய்,
அற்றுடலம் அழிந்ததன்பின்
மீண்டெழுதல் இல்லை" யென
மண்பாண்டம் அறைந்த தன்றே.

39. இவ்வண்ணம் நடுநடுங்கி
விடையளித்த, மண்பாண்டம்
இன்னுயிரோடு இருந்த நாளில்,
செவ்வண்ணம் கொண்டசுவை
மதுவருந்தி ஆனந்தம்
சிறந்திருந்து வாழ்ந்த தன்றே,
அவ்வண்ணம் மனம்பதிய
அப்பாண்ட உதட்டின்மேல்
அழுத்தியொரு முத்தம் வைத்தேன்
இவ்வண்ணம் முத்தங்கள்
பெறவும், பின் கொடுக்கவும் நான்
இயல்புடையேன் என்பது அறிந்தேன்.

40. நான்சென்ற வழியின்கண்
கண்டதொரு காட்சியினை
நவில்கின்றேன், குயவன் ஒருவன்
தான் கையில் ஈரமுள
மண்கொண்டு தட்டும் ஒலி
அதனைநான் நின்று கேட்டேன்,
“ஏன்என்னை நையும்வகை
புடைக்கின்றாய் மெதுவாக
மெதுவாக” எனவி ரந்தே
தேன்கொண்ட மழலைமொழி
தெளிக்கின்ற திறங்கண்டு
திகைப்போடு வழிநடந்தேன்.

41. மண்ணாகி உயிர்களெலாம்
மடிவதுவும், மீண்டும் அவை
உயிராகி மலரும் விதமும்,
முன்னாளில் இருந்துவழி
வழியாக நடக்குமென
மொழிவதிலோர் கவலை யில்லை.
எண்ணாகி, எழுத்தாகி
இருக்குமொரு பரம்பொருள்இவ்
வுலகிலுறை அணுக்க ளாலே
மன்னாத மெய்பெற்ற
மாந்தர்குலம் படைப்பித்தான்,
என்னுமொரு மாற்றம் அறிவீர்.

42. காய்ந்துமடி புல்மீது,
கைக்கிண்ண மதுர ரசத்
துளிசிந்தக் கவிழ்க்க மாட்டோம்,
பாய்ந்துவரும் ஒரு கண்ணின்
கோபத்தீ படுக்கும் வகை
அறியாது துளியுதிர்க் கலாம்.

தேய்ந்துவிட அறிவுதனைச்
செய்கின்ற தீயசினம்
தெரியாமல் உறையும் எங்கோ,
ஆய்ந்தறியின் விழியுளே
அதுநீண்ட நாளாக
அமைந்ததிறம் அறிந்தி லேன்நாண்,

43. உலையாத சுவர்க்கத்தின்
சுகமொத்த சுவை மதுவை
உட்கொள்ளும் ஆவ லோடே
மலர்வனவே மணம் வீசும்
வனமலர்கள், மாந்தர்களும்
இவ்வெண்ணம் உடையர் ஆவார்.
நலமான மதுவற்ற
கிண்ணத்தைத் தலைகவிழ
நாட்டுவதே போல, வுன்னை
நிலைவான இடைவெளியில்
ஒருவன் தான் மூடிவிட
நினைப்பதனை விரும்பு வாயோ.

44. ஒருசிறிது காலந்தான்
உனக்கிந்த உலகத்தே
வாழ்வுள்ளது என்ப தறிவாய்.
பெரியநிலத் தாய் உன்னை
கைநீட்டி எடுத்தேந்திப்
பிரியமுடன் அணைக்கு முன்னே,
வருகின்ற கவலையெலாம்
வறண்டுவிட மனத்துள்ளே
களிப்புமிக வளர்த்து நிற்பாய்.
கருதுசுவைத் திராட்சைதரும்
கனிகளையுன், கைக்கொண்டு,
கசக்கி மகிழ வெய்துவாயே.

45. அருந்துசுவை மதுக்கிண்ணம்,.
அதுபதியும் உன்னுதடும்
ஆனவிவை இரண்டு மேதான்,
பெருந்துயரம், நிறையின்பம்
இவையெல்லாம் பிறக்குமிடம்,
முடியுமிடம் ஆகி நிற்பின்;
இரும்புவியில் இதுகாறும்
எவ்வகைநீ வாழ்ந்தாயோ
அவ்வகையே இன்னும் இங்கே
பொருந்தியுளன் என்றுநினை,
இதினின்றும் கீழ்நிலையில்
போவதிலை உண்மை இதுவே.

46. 'பிறப்பேதும் யானஞ்சேன்
இறப்பதற்கென் செய்வென் எனப்
பேதமையால் வருந்தி நில்லேல்.
மறைப்பான இருள் அனைய
சுவைத்தெய்வம் மரங்கள் வளர்
நதியருகில் உன்னை நோக்கி,
'இறப்பென்னும் மதுக்கிண்ணம்
ஈகின்றேன்' எனவுன்றன்
இன்னுயிரை அழைக்கும் நாளில்,
சிறப்பென்று மனங்கருதிச்
செல்லுக நீ முன்னேறிச்,
சிறிதும்பின் அடைய வேண்டாம்.

47. வாழ்நாளின் கணக்கதுதான்
முடிந்ததன் பின் வனைந்தவனும்
என்செய்வான் என்று வாடேல்!
பாழாகும் நமைப்போன்ற
கணக்கில்லாக் குமிழிகளைப்
பரமன்தான் விளையாட் டென்னும்

ஆழ்சுவைசேர் மதுக்கிண்ணத்து
உண்டாக்கி ஆனந்தம்
அடைகின்றான், அதனை ஒத்தே
தாழாமல் மேன்மேலும்
செய்கிற்பான், தரையினிலே
உன்வாழ்வை இன்ப மாக்கே.

48. சாவென்னும் பெருந்திரையின்
அப்புறத்தே இருவேமும்
சார்வோம்,இவ் வுலக மட்டும்
மேவுமொரு தரமாக,
அழியாமல் வெகுகாலம்
நிலைத்திருக்கும் போது,நாமும்
பூவுலகில் வருவதையும்
போவதையும் குறிப்பாகப்
பார்த்திருப்பார் யாரே யுள்ளார்?
சாவதுவும் பிறப்பதுவும்
சாகரத்தின் மேலிட்ட
கல்லேபோல் ஆகும் அன்றோ.

49. ஒருநொடியில் அழிவென்னும்,
நெடுவனமும் ஒழிந்து விடும்,
அஃதேபோல் வாழ்க்கையென்னும்
சிறுகிணற்றின் சுவைநு கர்வும்
ஒருகணமே, சிந்தையிலே
இவ்வுண்மை வரைந்து வைப்பாய்
பெருநீல வான் வெளியில்
மீன் கணங்கள் பிரகாசம்
மறைந்தொழிதல் காணு கின்றோம்.
கருதியவை உடன்செய்வோம்,
தினம், கதிரோன் எழுவதையும்
விழுவதையும் கண்டு தேர்வீர்

50. இவ்வுலகப் பெருமயக்கை
இன்பமென நினைந்தழியும்
ஏழைமதி யுடைய மக்காள்,
எவ்விதம்இப் பிறப்பிறப்பின்
இரகசியம்என் றுணர்ந்திடவே
நாள்கழிக்க எண்ணு வீரோ,
அவ்விதமேல் உடன் துணிக,
அறிந்திடுவீர், பொய்மெய்யைப்
பிரிப்பதொரு மயிரின் இழையே,
செவ்வையுற உலகநிலை
தேர்ந்தவர்கள் சிந்தித்துச்
செப்புமொழி இவைகள் தாமே.

51. துயரத்தின் எல்லைதனை
ஆண்மையுடன் கடந்தவர்கள்,
சேரும்இடம் தூய்மை யான
உயர்ந்தபெரும் இன்பநிலை;
உண்மையிதே உளங்கொள்வீர்,
பொய்மெய்யை உணரு வீரேல்
பெயராத பெருஞ்செல்வக்
குவியல்நிறை வீட்டினையும்,
பெருங்கருணை நிரம்பி நின்றே
அயராமல் முத்தொழிலை
விளையாட்டாய் அணிந்துறையும்
தலைவனையும் அடைந்து நிற்பீர்.

52. ஒருமாவே தனித்தனியே
பலவுருவாய்ச் சுவைநிறைந்த
உண்பண்டம் ஆதல் போலே,
இருநிலத்தே அணுச்சேர்ந்து
பலவடிவாய் இறுதியிலே
அழிந்துவிடும் இயல்பு காண்போம்.

அருந்தலைவன், படைப்பின்வழி
பாதரசம் போல் விரைந்துன்
அல்லலினை அகற்று கின்றான்.
ஒருபொழுதும் அவன்மட்டும்
அழியாமல் உலகமெலாம்
உறைகின்ற உண்மை அறிவீர்.

53. இப்பிறப்பின் முன்னிருந்த
இடம்இன்ன தென்றறியேன்,
அறிந்தவர்கள் எவரும் இல்லை,
எப்படியோ இவ்வுலக
நாடகமாம் கடஇருள் நடுவில்
எனைப்புகுத்தி ஆடவைத்தான்,
உப்புடைய கடல்நீரை
உண்ணீராய் ஆக்குமவன்
விளையாட்டுக் கெல்லை உண்டோ?
ஒப்பரிய அவன்செயலை
உணர்ந்தவரும் உரைப்பவரும்
உலகில்எவர் கூறுவீரே.

54. கீழிடத்தில் அசையாத
நிலந்தொடங்கி மேலிடத்தே
கிஞ்சித்தும் திறக்க ஒண்ணாத்
தாழ்உடைய கதவுவரை
ஒரு வகையாய் நீவிழித்துக்
கூர்மையுடன் பார்ப்ப தாலே
சூழுமொரு பயனில்லை
எனில், நாளைப் பயனடைவது
எவ்வண்ணம் சொல்க, நீதான்.
வாழுவதும் நிச்சயமோ
நாளைக்கிவ்வுலகினிலே.
வாடியுதிர் மலர்கள் காண்பீர்!

55. மனிதர்குணம் என்பதையும்,
மாண்புமிகும் தெய்வீகத்
தன்மையையும் எந்த நாளும்
இனியவென நம்பாதே!
நாளைவரும் இன்னலினை
எண்ணிமனக் கவலை கொள்ளேல்!
நனிநம்பி நாளையினை,
நடுப்பகலில் மணல் வெளியில்
நீர்தோன்றி நிற்றல் போன்ற
புனிதமிலா உலகின்பப்
பெரும்புத ருள் நீமறைந்து
நிலையழிந்து புலம்பி நில்லேல்.

56. பயனளியா முயற்சிகளில்,
பலதுயருக் குள்ளாகும்
வம்புகளில் பாய்ந்து, நீயுன்
உயரியதோர் காலத்தை
வீணாக்கேல்! உண்மைகளைப்,
பொய்ம்மைகளை உணர்ந்து காண்பாய்,
நயமில்லாக் கசப்பான
பழம்தின்றோ, அலதொன்றும்
உண்ணாதோ நலிவு கொள்ளேல்!
விமன்சுவைகொள் திராட்சை தரும்
கனியருந்தி களிப்பென்னும்
விரிகடலில் மூழ்குவாயே

57. என்னில்லத் திருந்துபல
விவாதங்கள் நடத்துவேன்
என்றுரைகள் புகன்றது அறிவீர்,
முன்னுள்ள இவ்வுலக
போகமெனும் என்மனைவி
முழுமலடி யாகி விட்டாள்,

இன்னுமிவள் தருமின்பம்
ஏதுமிலை எனக்கருதி,
ஏகென்று தள்ளி, மதுவாம்
கன்னிஉயர் சுவைமகளைக்
கடிமணமே செய்துள்ளேன்,
களிப் புஇதன் மேலும் உண்டோ.

58. உண்டுஇல்லை, தாழ்வு,உயர்வே,
என்றுபுகல் தத்துவநூல்
ஆராய்ச்சி உரைகளை, நான்
கண்டித்தும் மெய்ப்பித்தும்
கட்டுரைகள் மொழிந் திட்டேன்;
ஆயினுமென் கவனம் எல்லாம்
அன்டினதே ஒன்றன்மேல்,
அதை மறிக்கும் வழியழியேன்,
அச்செய்தி கூறுகின்றேன்,
பண்டென்றும் அறியாத
இன்பமெனும் கடல் சேர்க்கும்
பழம்பிழிந்த ரசந்தான் அதுவே.

59. “ஆண்டனைத்தும் மக்கள்குல
வாழ்வுநிலை காணற்கே
அறிவெல்லாம் செலவு செய்வான்.
ஈண்டு” எனவே எனைப்பற்றி
மாந்தர்பலர் மொழிகின்றார்,
இதுவுண்மை யாகு மாயின்,
மாண்டொழிந்த நேற்றினையும்,
பிறவாத நாளையையும்
மக்கள்குலம் நினைவு கூர
வேண்டாமே, பஞ்சாங்கம்
தனில்இன்றி அவைகள் தமை
விலக்கிவிடல் நன்மை யன்றோ?

60. செங்கதிரோன் புவிமீது
பொற்கிரணம் சிந்துமொரு
மாலையினில், தேவ தூதன்
பொங்குபெரு வியப்பெய்த
புயமீதில் ஒருபாண்டம்
சுமந்துமனை தோன்றி நின்றான்,
அங்கவனும் தன் கலத்தில்
உள்ளபொருள் அருந்திருசி
அறியவெனை இரந்த ழைத்தான்,
மங்கலிலாச் சுவைப்பண்டம்
யாதென்னில் இன்பதரு
மனத்தில்வளர் மதுர ரசமே.

61. உண்மையெலாம் அறிகின்ற
திறமிந்த உலகத்தே
உயர்திராட்சை ரசத்தில் உண்டு,
திண்மையிலாத் தத்துவங்கள்
எவையேனும் அவைமுற்றும்
தீய்ந்தழியச் சிதைக்கு மதுவே,
நன்மையிலா ஈயமெனும்
நமதுதுயர் வாழ்க்கையினை
நலமாக விரைவில் மாற்றி,
பொன்மைபெறச் செய்யுமொரு
புதுவலிமைக் கருவியென
மதுவினையான் போற்று வேனே.

62. ஆண்டவனை யேபோற்றும்
திறலுடைய மாமூதும்
அரியசுவை மதுவின் முன்னே
நீண்டதனது உடைவாளைக்
காங்கொண்டு, சுழற்காற்றை
நிகர்க்கும்இது வென்ன வீசி,

பூண்டதனது ஆருயிரைப்
பிணிக்குமொரு நம்பிக்கை,
பொருந்துதுயர், அச்சம் இவைதாம்
ஈண்டுநிலை பெறாதபடி
சிதறும்வகை செய்கின்ற,
இயல்புதனை உணர்ந்து கொள்வீர்!

63. இறைவன்ஏன் இவ்வுலகில்
திராட்சைரசம் உண்டாக்கி
இனியசுவை அதனுள் வைத்தான்,
வெறுப்படைதற் குரியஇழி
வழக்கங்கள் பிடிக்கவென
விரித்தவலை யல்லஅதுவே,
பெரிதுநமக் காசிமொழி
வழங்குமதன் பயன்கொண்டு
பேரின்ப மெய்தல் வேண்டும்,
வறிதுநமைச் சபிக்கவொரு
பொருளினையும் கடவுள்தான்
வையகத்மதிற் படைக்க வெண்ணான்.

64. வாழ்வினிலே இன்பம்செய்
மருந்தினைநம் மனத்துள்ளே
உறுதியுடன்வைத்தல் வேண்டும்,.
சூழ்வதுதான் எதுவெனினும்
பரிசுத்த பானத்தைச்
சுகமெனவே நம்ப வேண்டும.
தாழ்வுதனை யழிக்கின்ற
திராட்சைரசச் சுவைபானம்
தங்கியதோர் கிண்ணம் இங்கே
பாழ்பட்டு மண்ணாகி
மடிந்துவிடும், அந்தோநாம்
பயன்பெற்று வாழ்தல் நன்றே

65. இனிமைதரு திராட்சைசுவைக்
கனிபழுத்த பசுங்கொடியும்,
எந்நாளும் உண்மை பேசும்
புனிதகுண மாந்தர்களும்
இல்லாத சுவர்க்கத்தில்
போகந்தான் உண்டோ சொல்வீர்,
மனிதர்மனம் கவர்கின்ற
மற்றபல பண்டங்கள்
மதுவைப்போல் இன்பம் சுரக்குமோ?
துனிதருமே' அங்கய்யின்
குவிப்பினிலே தோன்றிநிலை
சூன்யத்தை நிகர்க்கும் அதுவே.

66. நரகம் என நடுக்கமுறும்
பயமேகேள்! மோட்சமென
நம்புமொரு மனமே நீகேள்!
விரியுமலர் மறுமுறையும்
மலர்வதிலை, வீழ்ந்துவிடும்
வாடிநில மீதில் இங்கே,
வருமனித வாழ்க்கைநிலை
பெற்றதல, வற்றிவிடும்
மணல்வெளியில் பெய்த மழைபோல்
ஒரு சிறிதும் பொய்அல்ல,
உறுதி,இந்த உண்மையினை
உணர்ந்தவரே ஞானி யாவார்.

67. எண்ணற்ற பெருமக்கள்
முன்னாளில் இருட்டான
கதவின்வழி கடந்து போனார்,
இன்னதென அதுபற்றி
இயம்புவதற் கெனமீண்டும்
எவர்வந்தார்? ஒருவர் இல்லை.

எண்ணில்இது வியப்பன்றோ
இவ்வுலகில் வேறு நமக்குப்
பயன்உள்ள வேலை உண்டோ?
அன்னவர்கள் சென்றவழி
பின்பற்றி நாம்காணக்
கிளம்புவதே இயற்கை ஆமே.

68. பண்டுறைந்த பானடியார்,
அறிவுடையோர் பகர்ந்தபல
பரிசுத்த மொழிகள் எல்லாம்
கண்டுணரின் வெறுங்கதைகள்;
மாந்தர்க்குள் கலகமெனும்
பயிர்வளர்க்கும் விதைகள் ஆகும்.
மண்டுபெருந் தூக்கத்தில்
இருந்தவர்கள் எழுந்தார்கள்,
மனத்தெழுந்த நினைவு சொன்னார்.
எண்டிசையும் அதிரஒலி
முழங்கிடினும் எழாத பெரும்
உறக்கத்தில் மீண்டும் உற்றார்.

69. இச்சையொடு, வெறுபபுஇவைகள்
சுற்றங்கொண் டெழுந்தபல
குணங்களெலாம், நனைந்த ஈரக்
கச்சையினில் படிகின்ற
புழுதியெனக் காதலுறும்
நம்முயிரிற் படிந்து நிற்கும்;
நிச்சயமாய் அவ்வழுக்கை
நீக்கியிங்கு நிர்வாண
நிலையுறலே சுவர்க்கம் ஆகும்.
நச்சியினி மண்ணுலகில்
வாழ்வதுதான் நாணமுறும்
வாழ்வன்றோ நவிலப் போனால்.

70. சிறிதுநாள் இங்கு உறைவதற்குச்
செய்ததொரு கூடாரம்
இவ்வுடலே என்று தேர்வீர்,
ஒருமகிபன் மரணம் எனும்
உலகடைவான், உடனிங்கே
மறுமன்னன் வந்து சேர்வான்.
இருளினிலே அன்னவனும்
அடித்து அகற்ற ப்படுகின்றான்
இருந்தவிடம் அறிதற் கின்றி,
மறைந்தபொழுது உடன் முன்றாம்
மன்னவனும் மகிழ்ந்துறைதற்கு
ஆனசெயல் மக்கள் செய்வார்.

71. இறந்ததன்பின் உள்ளநிலை
என்னவெனும் செய்திமிக
மறைவாக இருப்பதாகும்.
மறையிருளில் என்னுயிரை
அனுப்பினேன் மாண்டதன்பின்
உள்ளநிலை யறிய வேண்டி;
திரும்பியது பலநாட்கள்
கழித்துவந்து தெரிவித்த
செய்தியிது வொன்றே யாகும்;
பெருமோட்சம், நரகம்எனப்
பேசும்வெறும் பேச்செல்லாம்
நானென்றே மொழிந்த தன்றே.

72. எண்ணுமொரு நினைப்பினிலே
வெற்றிதனை எய்திமனம்
இன்புறலே சுவர்க்கம் ஆகும்;
மண்ணில்உடல் தீப்பட்ட
உயிர்போல மனம்நொந்து
கலங்குவதே நாகம் ஆகும்

விண்ணகத்தே தனியுலகம்
பாதலத்தில் வேறுலகம்
என்றுகதை விளம்ப வேண்டாம்,
திண்ணம்இது பிறப்பெடுத்த
நாம்விரைவில் உலகத்தே
தீர்ந்தழிவோம் உண்மை இதுவே

73. பலனின்றி அசைவரிசைப்
பொருள்கள்என உருக்கொண்டு
பாரில்நாம் வளர்ந்து நின்றோம்
இலகுபெரும் கண்காட்சிச்
சாலையினில் அதன்தலைவன்
இருள்அகல விளக்கை ஏற்றி
நிலவுபொருள் காட்டல்போல்,
நீள்உலகிற் கதிரவனை
நிமிர்த்திஒளி தோன்ற வைத்தான்.
உலகுதனில் அவ்வொளியில்
உதித்துமறை தோற்றங்கள்
நாமும்என உணர்ந்து கொள்வீர்!

74. இரவுபகல் கோடுள்ள
சதுரங்க உலகத்தே,
எள்அளவும் சக்தி யில்லா
சிறுதாயக் கட்டைகளால்
விளையாடல் சிலபண்ணி
அலைகின்றான் இங்கும் அங்கும்.
ஒருசமயம் அசைவின்றித்
தடைப்படுவான், இறுதியிலே
உயிர்எய்தி மாள்வன், பின்னும்
வரிசைபெற இவ்வகையே
மானிடர்கள் வந்துஉலகில்
மறைகின்றார் அறையின் உள்ளே.

75. பந்ததுநான் இப்பக்கம்
அப்பக்கம் செல்வல் எனப்
பகர்வதுஒரு நாளும் இல்லை
எந்தவிடம் ஆடுபவன்
குறிப்பில்வைத்து உதைப்பானோ
எழும்பிவிழும் பந்தும் அங்கே.
இந்தவகை எவன்உன்னை
இவ்வுலக வெளிநோக்கி
எறிந்தனனோ, அவனே உன்றன்
சொந்தநிலை நன்கறிவான்,
பிறர்அறியார் அவன் அன்றிச்,
சொல்லவினி ஏதும் இன்றே.

76. உளம்வெதும்பி நிறைகண்ணீர்
உதிர்த்திடினும், தலைவிதியில்
ஓர்எழுத்தும் அழிவதில்லை.
துளங்குகாம் வரைந்துசெலும்,
வரைந்தபினும் தொடர்ந்தசையும்,
அசையாமல் நிற்றல் இல்லை.
விளம்புமன உறுதியினால்
அலது,மிகு திறமையினால்
விரைந்துகரம் பின்னி முத்துக்
கிளர்ந்தவரி தனிற்பாதி
அழித்திடவும் ஒண்ணாது,
கிளிமொழியே உண்மை அறிவாய்.

77. உண்மையறிவு வுடையோரும்
கலைஞர்களும் விதிவிலக்கை
உபதேசம் செய்து வாழ்க!
திண்மையொரு சங்கிலியின்
தொடர்பினிலே சிக்குண்டு
திகைப்பவர்கள் அவர்கள் ஆவர்;

எண்மையினில் அதைவிட்டு
விலகிடவோ அன்றிஅதை
முறித்திடவோ முடிவதில்லை.
மண்ணுலகில் அதைத்தாண்டி
முன்னேறிச் சென்றிடவும்
மற்றவரால் ஆவதில்லை.

78. வானம்என யாம்கூறும்
கவிழ்ந்தவொரு கிண்ணத்தின்
அடிப்பக்கம் அலைகடல்வாழ்
நானிலத்தில் எல்லோரும்
தவழ்ந்துறைந்து, முடிவினிலே
நம்ஆவி துறந்து விடுவோம்.
யான்உன்னைப் பணிகின்றேன்
எனக்கு அருள்க வெனக்கூறி
எடுத்துகரம் கூப்பி நில்லேல்,
நீனிறங்கொள் வானுநமைப்
போல்இங்கே வலுவின்றி
நின்றுசுழல் கின்றது அறிவீர்.

79. இந்நிலத்தே முதல்வந்த
மண்ணிடத்தில் இருந்துஇறுதி
மனிதஉரு இயற்றினார்கள்.
அந்நாளே அந்தத்தின்
அறுவடைக்காம் விதையினையும்
ஐயம் அறவிதைத்துவிட்டார்.
பின்னாளாம் முடிவினிலே
நாம்இந்தப் பேருலகில்
எவ்வண்ணம் உறைவதுஎன்று,
முன்னாளே படைப்பானது
உண்டான நேரத்தே
முடிவாக்கி விட்டதறிவீர்.

80. இன்றுவரும் அறிவீனச்
செயல், நேற்றை முயற்சியினால்
எழுந்ததொரு விளைவே ஆகும்.
நின்றுவரும் நாளைநமக்கு
அமைதியதோ, வெற்றியதோ,
நெஞ்சழிவோ, வருவதுஎதுவோ?
துன்றினைநீ எதற்காக?
எங்கிருந்து? துயர்உலம்
தொலைத்தெழுதல் தான்எங்கு எதற்கே?
என்றறிய மாட்டாய்நீ
இனிய சுவைத் தேன் அருந்தி
இவ்வுலகில் மகிழுவாயே,

81. பொறிஅமைக்கும் வல்லார்கள்
அமைத்தபொறி பழுதின்றி
இயங்குமொரு காலந் தன்னைக்
குறித்தெழுதி விடுவார்கள்.
அதுபோலக், குவலயத்தில்,
எனைப்படைத்த நாளி லேயே,
திருத்தமுற இன்னபடி
இருக்க,வெனத் தீர்மான
மாய்எழுதி அனுப்பி விட்டான்.
ஒருத்தருமே அவன்இயல்பை
உணர்ந்தறியார், உலகநிலை
உளம்தேறி வாழ்க நீயே.

82. துறைபோய வல்லோர்கள்
மனம்போன படிசொல்லித்
தூற்றிடினும் கவலை யில்லை.
நிறைஇரசக் கனிக்கொடிதான்
எனைச்சூழ்ந்து நிற்பதனை
நேரேநான் கண்டு விட்டேன்.

அறிவுக்கண் திறவாத
அசடன் அவன் வெளிப்பக்கம்
வீண்ஊளை யிட்டு நிற்பான்
கறைபடிந்த இவ்வுலகில்
இருந்தறிவுக் கதவுக்கோர்
சாவியினைக் காண லாமே.

83. உண்மையெனும் விளக்குஎன்மேல்
அன்புதனை ஊன்றிடினும்,
அன்றிஅதன் சுடரே என்னை
வன்மையுடன் எதிர்த்தாலும்,
அதன்வண்ணம் உள்ளத்தால்
வகுத்தறிதல் இல்லை யெனினும்,
சின்மை,புகழ், செறிந்தநில
உலகத்தே அதன்ஒளியைச்
சிறிதேனும் உணர்தல் நன்றே.
என்பதனை நான்முழுதும்
நன்றாக அறிந்துள்ளேன்,
இன்னலினை மறந்து வாழ்வேன்.

84. பயனற்ற செயல்களிலே
பாய்ந்திடினும், அவற்றுண்மை
என்மனதில் படிவ தில்லை,
உயர்ந்தமனச் சாட்சியெனும்
ஒளிதோன்றிச் "சேராதே
வீண்செயல்கள் ஊட்டும் மகிழ்வில்,
மயங்காதே, நஞ்சுபொதி
இனிமைகொள்ளேல்" என்றறையும்
மாற்றத்தை மதியா மக்கள்
தயவின்றித் தண்டனைகள்
பெறற்குரியர், தம்வினையின்
பயனைத்தாம் பெறுவர் அன்றோ.

85. இளங்கன்றைப் போல்துள்ளி
எத்திசையும் திரிந்துவிளை
யாடமனத்துளண்ணி நின்றேன்;
உளம்குமுற, என்காலைப்
பற்றி, துயர் தரும்பொறிகள்
ஒளித்திட்டாய், வழிகள் தோறும்
களங்கமறக் குயில்கூவிக்
காதல்விதை தெளிக்கின்ற
தளிர்வனங்கள் வளரும் உலகில்,
விளங்காத விதியென்னைத்
தீயவழி நுழைத்ததென
விளம்புவதும் விந்தை யன்றோ,

86. பிரிந்துசிதை அணுக்கொண்டு
மனிதவுரு பிறப்பித்தாய்,
பெருங்காதல் வளர்க்கும் தென்றல்
தரும்இனிய செடி, கொடிகள்,
மரஞ்செறியும் குளிர்சோலை,
வளர்த்துஅதிலே தவழ்ந்து சென்று
பெரும் படையும் நடுநடுங்கும்
படிசெய்யும் பாம்பினையும்
பிறப்பித்து வியப்புச் செய்தாய்,
எரியெனவே கொடுமைபுரி
மாந்தர்செயல் நின்செயலே,
இவர்தமைநீ வெறுத்தல் நன்றோ.

87. மண்ணுருவம் வனைகுயவன்
இல்லத்தே மறுபடியும்
தனியாகச் சென்று நின்றேன்,
கண்கவரும் கலங்கவிடை
யிருந்தரிய ஒலியெழுந்து
வரக்கண்டு கண்ப தித்தேன்.

புண்ணாகி எரிந்தழிந்த
நாவின்தூள் துடிதுடித்துப்
புரளுவது தெரிந்தது ஆங்கே,
எண்ணமதை இழுக்கும்வகை
அதிலிருந்து வந்தமொழி
என்செவியில் நுழைந்த தன்றே.

88. ஒரு பாண்டம் புகன்றமொழி
யிதுவாகும்; பயனின்றிப்
பாருலகில் இருந்து நான்ஓர்
உருவாக்கப் படவில்லை,
என்னால்இவ் வுலகிற்கும்
உபயோகம் உண்டு மெய்யே
சிறுவடிவ மாய்என்னைச்
செய்தவனே சிந்தித்து
மீண்டும்எனை மண்ண கத்தே
மருவிவிடத்துகள் ஆக்கி
அனுப்புவனோ? இவ்வுண்மை
மனிதகுலம் அறியு மோதான்.

89. மற்றுமொரு மண்பாண்டம்
அதற்கெதிராய் மொழிந்ததொரு
மாற்றத்தை மகிழ்ந்து கேளீர்,
சற்றுமனம் சலிப்பின்றி
உல்லாச மாய்வாழக்
குடித்தசுவைக் கோப்பை தன்னை
முற்றுமிவன் முரடன்எனப்
பெயர்பெற்ற வன்கூட
நுறுக்கிவிட முனைய மாட்டான்,
பற்றுடனே செய்தவன்பின்
சினங்கொண்டு பாண்டங்கள்
பாழாக உடைக்க எண்ணான்.

90. இதற்கான விடையொன்றும்
எழவில்லை, சின்னேர
அமைதியது செல்ல, ஆங்கே
ஒதுப்பான இடத்திருந்த
அழகற்ற உருவுடைய
ஒருபாண்டம் உரைத்தது இதுவே,
"புதிதாக எனைப்பார்க்கும்
எல்லோரும் நகைக்கின்றார்,
புன்மொழிகள் புகலுகின்றார்"
பதியான குயவன்எனைப்
பண்ணுங்கால் அவன்கரங்கள்
நடுநடுங்கிப் பதிந்த தேயோ.

91. உயிர்அற்ற பொருள்களுடன்
அஃதுள்ள பொருள்கள் தமை
ஒப்பிடலாம் குற்ற மில்லை
பயனென்ன? உவமித்தல்
எதற்கென்று? பரிந்துசிலர்
கேட்டிடவும் கூடும் என்றே
சுயமாக யான்எண்ணும்
போதில்ஒரு மண்பாண்டம்
சுடச்சுடவே கேட்டது இதுவே:-
குயவன்யார்? பாண்டம்எவை?
தயைசெய்தே உண்மையினைக்
கூறுங்கள் உணர விங்கே!

92. அச்சமயம் ஒருபாண்டம்
புகன்றமொழி "அறியாத
மக்கள்பல அபத்தம் பேசி,
இச்சகத்தில் நரகமெனும்
கரிமனிதன் முகத்தப்பி
இருதயமே நடுங்க வைப்பார்;

நிச்சயமாய்க் கொடியபல
சோதனைகள் நமக்குலகில்
உண்டென்று நிகழ்த்தி நிற்பார்;
உச்சநிலை உறைதலைவன்
மிகநல்லன் எத்தொழிலும்
ஒழுங்காக முடியும் இங்கே"

93. இவ்வமயம் மற்றொன்று
கூறியநல் மாற்றமிது:-
"மிகநீண்ட காலமாக
கவ்வியதோர் மறதியினால்
காய்ந்துவரும் என்உடலின்
மண்ணதனைக் கவர நிற்போர்
எவ்வகைய முயற்சிகளும்
செய்திடுக, எனைக்கனியின்
இரசத்தால் நிரப்பிவைப்பீர்,
இவ்வழியால் நாளடைவில்
உயிர்பெற்று வாழ்வல்என
என்னெஞ்சில் எண்ணு கின்றேன்"

94. பாண்டங்கள் ஒன்றோடொன்று
இவ்வாறு பலபேசும்
போதுஅவைகள் தேடி நின்ற
நீண்டபிறைச் சந்திரனை
ஒருபாண்டம் கண்டவுடன்
உடல்உரசி குலுக்கி அவைகள்
'ஆண்டவனாம் குயவன்றன்
முடிச்சவிழ்க்கும் அவ்வோசை
கீச்சென்னும் அண்ணே' என்ற
மீண்டவைகள் பேச்சில்லை,
யானுமவை மொழிகள்தமை
மிகநினைந்து திரும்பி வந்தேன்.

95. என்னுடலின் வெண்ணீறும்,
எனக்கின்பம் அளித்த சுவை
மதுபான போகம் தாமும்
விண்ணகத்தில் மறைந்திடுக'
விருப்பமுடன் நான்ஒளிந்த
கல்லறையின் பாங்கர் அணுகும்
பன்னரிய அன்புடையார்
தமைமயக்கி அறியாமைப்
படுகுழியில் வீழ்த்த வேண்டாம்!
அன்னவரை அறிவின்வழிச்
செலவிடுவீர்! அவர்உண்மை
பொய்மைகளை அறிந்து கொள்வார்.

96. உலகுதனில் இதுகாறும்
நான்விரும்பி மகிழ்ந்திருந்த
உருவங்கள் எல்லாம் ஐயோ
நிலவுபுகழ் தனைஎனக்கு
மாந்திரிடை நல்காமல்
நிந்தனையே யளித்த தன்றி,
இலகுபெரு மாண்புதனை
ஆழமிலாக் கிண்ணத்தே
இருக்கும்வகை அமுக்கி, என்றன்
நலநிறைந்த கீர்த்தியினை
ஒருபாடல் நவிற்சிக்கே
விற்கும்வகை செய்த தன்றே;

97. பாவங்கள் பொருட்டாகப்
பலகாலும் மனங்குழைவேன்,
உண்மையிது; பாசாங் கல்ல;
மேவினனோ சுயபுத்தி
யுடன் அங்கே யான் அறியேன்,
மீண்டெழுந்த நாளில் இந்தப்

பூவுலகில் பழிபாவம்
புரிவதிலை எனசத்யம்
புகல்கின்ற பொழுது பின்னர்,
தாவியதோர் வசந்தம் மணம்
சூழ்மலர்க ளுடன்வந்து
தவிர்த்ததே என் கவலை தனையே.

98. தன்வயமாய் எனை ஆக்கி
இவ்வுலக கவலையினைத்
தக்கணமே மறக்க வைக்கும்
இன்சுவைசேர் கனிரசத்தால்
என்பெருமை அங்கியினை
இழந்துரிமை மானம் விட்டேன்;
பொன்பெரிய தெனக்கருதிப்
பொருள்குவிக்கும் மதுவணிகர்
எல்லோரும் போட்டியிட்டே
முன்புகுந்து மதுவாங்கிச்
சேர்க்கின்றார்; இதுகண்டால்
மோகமுறா மனிதர் உண்டோ.

99. மணம்வீசி மகிழ்விக்கும்
மல்லிகையினொடுவசந்த
காலமது மாறி விடுமே;
இனியநலம் பொருந்துபல
செயல்செய்யும் இளம்பருவம்
எழுத்தின் மறைந்து போகும்;
நனைமலர்கொள் செடிவாழ
எங்கிருந்து வந்ததென
நவிலரிய இளங்குயில் தான்
மனம்விரும்பு பண்ணோடு
மறையுமிடம் யார் அறிவார்;
மயக்கம்இதில் ஒன்று மில்லை.

100. கடுங்கோடை தாங்காமல்
கருகியபல் செடிகொடிகள்
கரர்பொழியும் காலந் தன்னில்
விடுந்தளிரோடு எழுந்துவளர்
காட்சியென, வெயில்வாழும்
பாலைவன வழிநடப்போன்
கொடுந்துயர நடையிளைப்பைச்
சிறியதொரு நீரூற்றின்
குறைவான தோற்ற மாங்கே
கெடும்படியே செய்துவிடும்,
நீரூற்றைக் கண்டவுடன்
கிளர்ச்சிமிக எய்தி விடுவான்.

101. உலகம்இது மறுமுறையும்
உண்டாக்கப் உடல்உறுதி
எனநம்ப ஏது உண்டேல்,
தலைவிதியின் சுவடியினை
வரைவோனை, அதைநல்ல
ஏடுதனில் தயவு செய்தே
கலையாமல் எழுதவெனக்
கெஞ்சிடலாம், பின்இந்தக்
காசினியில் நமது பேரை
நிலையாகச் செதுக்கிடவும்
அழித்திடவும் கூடும், இது
நிசம், உறுதி, பொய்யும் அன்றே.

102. படுகின்ற சிறுதுளிகள்
பலகூடிப் பெருவெள்ளம்
ஆகின்ற பான்மை போல,
அடுகின்ற துன்பங்கள்
ஆண்டுகளின் எண்ணேற
மிகஅதிகம் ஆகும்; அதனால்

கொடுமைநுகர் உயிர்ஒன்றைக்
குவலயமாம் கடிதத்தின்
சுருள்விட்டு நீக்கி விடுவீர்,
நடுநின்று வினைசெய்யும்
பெருங்கருணைக்கனிதருவே
நன்மையிது ஒன்றே ஆமே.

103. வாழ்க்கைக்கோர் உறுதுதுணையாய்
வந்தடைந்து மதுரமொழி
வழங்கிசுகம் அளிக்கும் மாதே!
தாழ்க்காமல் சாவென்னும்
விதிப்பாம்பைத் தலைதூக்க
விடாதடித்தல் வல்லேம்ஆயின்
பாழ்க்காமல் நாம்உலகில்
எத்தொழிலும் செய்திறமைப்
பண்புடையோம் ஆகி நிற்போம்;
காழ்க்கொண்ட நெஞ்சினராய்க்
களிப்பென்னும் தண்காவில்
கலந்துவிளை யாடி வாழ்வோம்.

104. காலமதைக் கடக்கவழி
யறியாமல் காற்றில்மணம்
போல்அதனில் கலந்து விட்டோம்.
ஞாலமிதில் இருட்கறையை
நிலவென்னும் சுண்ணாம்பு
நீற்றாலே நன்கு பூசிச்,
சாலமகிழ் தருகின்ற
சந்திரனும் நடுநடுங்கி
மெதுவாகச் சலித்து வந்தான்;
தூலமிலா நமைத்தேடி
வனம்புகுந்தான்; இலைஇலையாய்த்
துருவியுடல் தேய்கின்றானே.

105. அன்புடையார் விருந்துண்ணக்
களித்து சேரும் அழகுபடி
இடத்தில்வளர் பசும்புல் நுனிகள்
கன்மினுக்க நிலவூற்றி,
வெள்ளிக்கால் தரையூன்றி,
மெதுவாக நடக்கும் மதியே!
இன்பமிக வளர்க்குமது
பானத்தை நீயருந்தி,
வெறுங்கிண்ணம் அதனை என்றன்
துன்பமெலாம் ஒழிந்தபுதை
குழிமீது கவிழ்த்துவிடு;
துதிபாடி மகிழுவேனே.

✸ ✸ ✸

# சிந்தனைச் செய்யுள்

(1956)

# அணிந்துரை

நம்மிடையே வாழ்ந்து மறைந்தவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் புரிந்த சாதனைகள், வழங்கிய போதனைகள் முதலிய வற்றின் மூலம் தமக்குப் பின்னால் நமக்கு என்ன பாரம்பரியத்தை, செல்வத்தை விட்டுச் செல்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் அவர்களை நாம் நினைவு கூர்கிறோம்; மதிக்கிறோம்; போற்றி வருகிறோம்... எனவேதான் "அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்று இலக்கணம் கூறினார் வள்ளுவர்.

தமிழறிஞர் சாமி. சிதம்பரனார் இன்று நம்மிடையே இல்லை, அவர் நம்மிடையே வாழ்ந்த காலத்தில் சமுதாயச் சீர்திருத்த இயக்கத்தோடும், சமதர்ம இயக்கத்தோடும், தமிழில் நல்லிலக்கியம் வளர வேண்டும் என்ற நாட்டங் கொண்ட எழுத்தாளர் இயக்கத்தோடும் சம்பந்தங்கொண்டு அவற்றில் வெறும் பார்வையாளராக மட்டும் நின்று விடாமல், பங்குதாரரரா கவும் பணிபுரிந்து வந்தவர்.

மேலும் ஒரு தலைமுறை காலத்துக்கும் மேலாகவே அவர் அரிய தமிழ்ப் பணியும் ஆற்றியவர். தமது வாழ் நாளெல்லாம் கற்றறிந்த தமிழ் செல்வத்தை மற்றோரும் அறிந்து கொள்ள வேண்டும், அனுபவிக்க வேண்டும் என்ற ஆர்வ விருப்போடு, அவர் தமிழ் இலக்கியச் செல்வத்தைத் தாம் அறிந்து கொண்ட புரிந்து கொண்ட விதத்தில் மற்றோருக்கும் அறிமுகப்படுத்தும் பணியாக, எட்டுத் தொகை நூல்கள் தொட்டு இராமலிங்க அடிகள் ஈறாக தமிழ் இலக்கியங்கள் பலவற்றைப் பற்றியும் 'இலக்கிய வரிசை' என்ற தொடரில் பல நூல்களை இயற்றித் தந்து சென்றிருக்கிறார். பாரபட்சமோ விருப்பு வெறுப்போ இல்லாமல் தமிழ் இலக்கியங்களின் தன்மையை உள்ளது உள்ள வாறே உணர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் எல்லோருக்கும் அவரது இந்த 'இலக்கிய வரிசை' நூல்கள் பால பாடமாகவும் மூல பாடமாகவும் விளங்கி வருகின்றன எனலாம்.

அவர் ஜீவிய வந்தராக இருந்த காலத்தில் வெளிவந்த நூல்கள் மட்டுமல்லாது, அவர் எழுதி வைத்துப் போனவற்றை யும் அன்னாரின் வாழ்க்கைத் துணைவியாரான திருமதி சிவகாமி சிதம்பரனார் தொடர்ந்து பதிப்பித்து தமிழ்ப் பெரு மக்கள் முன் படைத்து வருவதோடு, தமது வாழ்க்கைத் துணைவரின் நினைவையும் இதன் மூலம் தக்க விதத்தில் போற்றி வருகிறார்.

இந்தக் கவிதை நூல் அத்தகைய பணியின் தொடர்ச்சி யேயாகும்.

தமிழறிஞர் சாமி, சிதம்பரனார் தமது வாழ் நாட் காலத் தில் பல சந்தர்ப்பங்களில் எழுதிய தனிக் கவிதைகள் சில வற்றோடு, அவர் தமது இறுதிக் காலத்தில் எழுதிய சிந்தனைச் செய்யுள் என்ற 150 பாடல்களை கொண்ட ஒரு தனி நூலும் இந்த தொகுதியில் மகுடமாக விளங்குகிறது.

வாழ்க்கையை, அதன் தத்துவத்தை, சமுதாய தர்மத்தை, அவர் எவ்வாறு தெரிந்து கொண்டார் என்பதை வையத்தில் தனியொருவன் மட்டுமல்லாது சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அனைவருமே வாழ்வாங்கு வாழும் வகையை அவர் எவ்வாறு இனம் கண்டார் என்பதையெல்லாம் நமக்குப் புலப்படுத்தும் சிந்தனைச் செல்வமாக விளங்கும் செய்யுள் இது..

'வீடு பெற நில்' என்ற வாசகத்தின் உட்பொருள் என்ன? இதோ சாமி. சிதம்பரனார் புது விளக்கம் தருகிறார்;

பார்த்தறிவீர் அறிவொளியால்! 'வீடு பெற நில்' எனக் கூறும் பதப் பொருளின் உண்மை காண்பீர். ஆர்த்தெழுவீர், சுதந்திரமாய் வாழ்வதற்கே; அடிமையிலே ஆழாநீர் என்றே அர்த்தம்; தீர்த்தங்கள் கோயில்களே வீடுகாட்டும் என மயங்கித் திரிந்தறிவை இழக்க வேண்டாம்!

சரி வேதாந்தம் என்றால் என்ன? இதோ வருகிறது.

சிதம்பரனாரின் விளக்கம்.

கருத்தாலே அறிவதுதான் வேதமாகும்; கண்டறிந்து முடிவதுதான் அந்தமாகும். திருத்தமுறக் கண்டறிந்த உண்மை தன்னைத் தெரிவித்தார். வேதாந்தம் என்று முன்னோர் வருத்த முறுவாறிந்த உலக மக்கள் வாழ்வதற்காம் திட்டங்கள் கோரி

*இன்பம் ஒருத்தருக்கே உரியதெனும் பேதம் நீங்கி*
*ஒன்றாகி வாழ்வது வேதாந்தமாகும்.*

*இவ்வாறு வாழ்க்கையின் மர்மத்தைக் கட்டவிழ்த்து அதன் தர்மத்தைத் தாம் இனம் கண்ட உண்மையை எளிய நடை, பழகு தமிழ்ச் சொற்கள் முதலியவற்றின் துணை கொண்டு? பாக்களாக வடித்து, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உணர்வோடு நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார், சாமி. சிதம்பரனார்.*

*அந்த இன்பத்தை நீங்கள் அனுப்பவிப்பதற்கு நான் இன்னும் குறுக்கே நிற்பானேன்?*

சென்னை

*மார்ச், 78*

—ரகுநாதன்

# சிந்தனைச் செய்யுள்

சிந்தனைதான் எனைநோக்கிச் சொன்ன வெல்லாம்
செந்தமிழில் என்வாயால் கூறு கின்றேன்;
பைந்தமிழின் சுவையுண்டோ என்று பாரீர்!
பகருமொழிப் பொருள் காண்பீர்,; பொருத்த மானால்,
இந்தநிலத் தெல்லோரும் உணரச் செய்வீர்!
இணைந்தொன்றாய் இன்புறவே வழிஅ மைப்பீர்!
நிந்தனையும் மறைந்தொழியும்; நேசம் என்னும்
நீர்பெருகி நிலமெல்லாம் செழிக்கு மாமே. 1

எத்தனையோ மூதறிஞர் இந்த நாட்டில்
இருந்தார்கள் முன்னாளில்; அவர்கள் எல்லாம்
உத்தமர்கள்; அன்புடையார்; கருணை யுள்ளார்;
உலகறியப் பலகவிகள் பாடி வைத்தார்;
புத்தியிலார், நம் முன்னோர் புகன்ற உண்மை
புரியாமல், பலவழியில் பிரிந்து சென்றார்;
சத்தியமாய் யானறிந்த உண்மை யெல்லாம்
சாற்றுகிறேன் பாட்டினிலே உணர்ந்து கொள்வீர்! 2

உலகத்தார் ஒன்றாகி இன்பம் எய்த
உபதேசம் செய்தவர்கள் கணக்கில் இல்லை
பலநாட்டில் பலபேர்கள் பிறந்து ழைத்தார்;
பயனின்றி முடிந்ததென மூடர் சொல்வார்;
சிலர் அந்தப் பெரியோரைத் தெய்வம் ஆக்கிச்
சிந்திக்க இடமின்றி வணங்க வைத்தார்;

நிலைநிற்கும் அவர்மொழிகள் நினைத்துப் பார்மின்!
நிமிர்ந்தெழுவீர்; புதுவுலகம் ஆக்கு வீரே 3

சித்தர்எனச் சிலபெரியோர் வாழ்ந்தார் முன்னே;
சிறந்த பல செயல் செய்தார் திகைப்போம்,- கேட்டால்;
கத்துதிரைக் கடல் நீரில் நடந்து சென்றார்;
ககனத்தில் பறந்தார்கள்; கதையாய்ச் சொன்னார்.
புத்துணர்வும் கலையறிவும் நிறைந்த மக்கள்
புகழ்பெறுவார்; கடல்வானம் கடந்து செல்வார்;
ஒத்துறைய வழிசெய்வார். இன்றும் காண்போம்
உண்மையிவை சித்தர்களின் செய்கை தேர்வாய் 4

எண்ணத்தே எழுந்துவளர் உணர்ச்சி தம்மை
இவ்வுலகில் அடைந்திடலாம்; உறுதி கொள்வாய்!
திண்ணமுடன் அஞ்சாமல் ஊக்கங் கொண்டே
திறங்காட்டி உழைப்பவர்கள் வெற்றி கொள்வார்.
முன்உலகில் இவ்வழியே சித்தி பெற்றோர்
மூதறிஞர், சித்தரென, அவரைச் சொன்னார்;
உன்னுகநீ அவர்கள் தமை. சித்தத் துள்ளே
உதித்தவெலாம் பெற்றவர்கள் சித்தர் ஆவார் 5

தெய்வபதம் நம்புகநீ. நம்பி நின்றால்,
தெளிவான அறிவுதரும், உண்மை காட்டும்.
உய்யும்வழி செலுத்துவது தெய்வம் என்றே
உரைத்தார்கள் முன்னோர்கள் உண்மை, உண்மை!
மெய்யுருவாம் தெய்வந்தான் ஒளியே யாகும்,
ஒளிஉன்றன் பகுத்தறிவாம் உணர்ந்து கொள்வாய்!
மெய்யுடைய வழிகள் தமை உள்ளத் துள்ளே
பொருந்தும் ஒளித் தெய்வத்தால் புரிந்து கொள்வாய். 6

எண்ணற்ற தெய்வங்கள் என்று சொன்னார்;
இது நிலைக்கப் பல நூல்கள் எழுதி வைத்தார்..

கண்ணற்ற மூடர்எலாம் உண்மைத் தெய்வம்
காணாமல் கருத்தழிந்து கலங்கி நின்றார்
மண்ணற்ற இடத்தினிலே பயிர் உண் டாமோ?
மதியற்ற மனிதரிடம் தெய்வம் உண்டோ?
விண்ணற்ற இடத்தினிலே காற்றும் இல்லை.
வித்தையிலை இன்பமிலை, தெய்வம் இன்றேல். 7

நீரினையும் காற்றினையும் தெய்வம் என்றார்;
நிலத்தினையும் அதன்மேலே நிறைந்து நிற்கும்
ஏராள மானபொருள் எல்லாம் தெய்வம்
எனமுன்னோர் உண்மைதனை இயம்பி வைத்தார்.
தாராள மாயிதனை எண்ணிப் பார்நீ !
தரையிலே நமக்குதவும் எல்லாம் தெய்வம் !
ஆராய்வாய் ! சுகதுக்கம் அளிப்ப துன்றன்
அறிவன்றோ ! அதுவன்றித் தெய்வம் உண்டோ! 8

அறிவென்னும் தெய்வத்தின் ஒளியைப் பெற்றோன்
அவனேஇவ் வுலகத்தை ஆட்டி வைப்பான்.
பொறிவண்டு மலர்தோறும் தேனை யுண்டு
புலம்பும்ஒரு சோலையிலே புகுந்து வாழும்
கரியகுயில் போல் இனிய கானம் பாடிக்
கவலையிலா வானத்தே திரிந்து நிற்பான்.
வறியன் எனப் பிறர்பேச வாழ மாட்டான்;
வாழக்கையிது துன்பம்என வெறுக்கான் ஐயா ! 9

மாறாதே பழநிலையில் நிற்பாய் என்றே
மதம்பிடித்த சுயநலத்தார் எழுதி வைத்தார்.
தேராமல் அவர்பேச்சை நம்பி இந்தத்
தேசத்தார் முழுமூடர் ஆகி நின்றார்.
நேராகப் பார்த்தறிவாய் ! பரிசோ திப்பாய் !
நிலைநிற்கும் விஞ்ஞான முறைகள் காண்பாய் !

ஆரானால் உனக்கென்ன? தெய்வம் என்னும்
அறிவொளியை எப்பொழுதும துணையாக் கொள்வாய் 10

கல்லாலும் செம்பாலும் மரத்தி னாலும்
கண்மூக்குச் செவிசெய்து பதுமை யாக்கி,
'எல்லோரும் பாருங்கள், இவைகள் தெய்வம்'
என்றுபொருள் பாழாக்கும் ஏழை மக்காள்
பல்லாண்டு பல்லாண்டாய்ப் பூசை போட்டீர்
பாடுபட்டீர் வறுமையிலே ஆழ்ந்து நின்றீர்;
நில்லாமல் அழிந்துவிடும் அவைகள் எல்லாம்;
நிலைநிற்கும் உமதறிவாம் தெய்வம் ஒன்றே. 11

சக்திதனைப் பூசிப்போம் என்று சொல்வார்,
சாராயம் கள்ளருந்தி மயங்கி நிற்பார்.
பத்தியுடன் வாழ்கின்றோம் என்பார், அந்தப்
பாமரர்கள் உடல்வலிமை இழந்து நிற்பார்;
முத்தியெனும் சொற்பொருளை அறிந்து கொள்ளா
மூடர்எனச் சத்தியையும் உணர மாட்டார்.
இத்தரையில் மனவலிமை உடலில் சக்தி
இரண்டுமே சத்தியெனத் தெரிந்து கொள்வீர். 12

மாகாளி பராசக்தி என்று பாடி
மனோன்மணியே காக்கவென வணங்கி நிற்பார்.
ஆகாவுன் நெஞ்சினிலே சக்தி நின்றால்
அவனியிலே செஞ்சுடர்போல் விளங்கு வாயே;
சாகாத வலிமையினைக் காளி என்றும்,
சாற்றினார் பராசக்தி என்றும் இங்கே.
ஏகாத மனோசக்தி எவர்க்கும் வேண்டும்
என்பதற்கே மனோம்மணிஎன் றியம்பி விட்டார். 13

இவ்வுலகத் துயர்ஒழிக்கும் கருவி யாகும்
இணையற்ற தெய்வத்தை, சக்தி தன்னை,

எவ்விதத்தும் மறவாமல் இருந்து நம்மை
    புரிவோரே இன்பமது நுகர்ந்து வாழ்வார்;
ஒவ்வாத கொடுமையிலே தலைநிற் போரை
    ஒழிப்பார்கள் உலகமகிழ் செயல்கள் செய்வார்;
செவ்வானக் காட்சியென எல்லோ ருக்கும்
    அவர்தோற்றம் சிந்தையிலே மகிழ்ச்சி யூட்டும். 14

வார்த்தைகளில் பலசூழ்ச்சி பதித்து நம்மை
    வஞ்சகர்கள் மயக்கினார். அவற்றைக் கல்லிப்
பார்த்தறிவீர், அறிவொளியால். 'வீடு பெறநில்'
    எனக்கூறும் பதப்பொருளின் உண்மை காண்பீர்.
ஆர்த்தெழுவீர் சுதந்தரமாய் வாழு தற்கே;
    அடிமையிலே ஆழாதீர் என்றே அர்த்தம்.
தீர்த்தங்கள் கோயில்களே வீடு காட்டும்
    எனமயங்கித் திரிந்தறிவை இழக்க வேண்டாம். 15

காமத்தே கட்டுண்டு மயங்கி நிற்போர்
    கருத்தொளியை இழப்பார்கள்; அழிந்து போவார்.
ஆமென்றார் காமன் என ஆண்பால் ஆக்கி,
    அவன்மனைவி ரதிதேவி என்று சொன்னார்;
பூமியிலே இன்பமுற மாத ரோடு
    பூஞ்சோலைக் குயில்கீதம் நிலவு காண்பீர்!
சேமமுடன் வாழ்வார்கள் என்ப தற்கே
    செய்தார்கள் மன்மதனார் சரிதம் இங்கே. 16

தென்றலினை ஏறிவரும் தேராய்ச் செய்தான்;
    தேன்சொட்டும் வாசமலர் அம்பு கொண்டான்;
நன்றுசுவைக் கரும்புவில் ஏந்தி நின்றான்;
    நளிர்நிலவு பொழிமதியைக் குடையாய் வைத்தான்;
என்றும்உள கடல்ஒலியை முரசம் கொண்டான்;
    இனியகுயில் கீதஒலிச் சங்கம் ஊதி,

நின்றசையும் மயிலனைய மாதர் கூட்டம்
நிறைந்தபடை எனக்கொண்டான் காமன் என்றார். 17

மனங்குழம்பி உடல்வற்றி வாழும் மக்கள்
மாநிலத்தில் இன்பமுறார்; நீடு வாழார்
தினந்தினமும் அலைமோதக் கரையும் கல்போல்
தேகவலுக் குறைந்தவர்கள் மாண்டு போவார்;
உணர்வாய்நீ சாகுமொரு காலம் இங்கே
சார்ந்துவிடும் உளத்துயரால் என்று சொன்னார்;
தனியுருவாய்க் காலன் என ஒருவன் ஆக்கித்
தரணியில்வாழ் மக்கள் தமை அஞ்ச வைத்தார். 18

கற்றுவரும் தொழில்களெலாம் கலைகள் ஆகும்;
கலைகற்றோர் வறுமைத்தீ தணிந்து நிற்பார்.
உற்றுணர்க என்பதற்கே கலையின் பண்பை
உயர்தெய்வம் கலைவாணி என்று சொன்னார்.
வற்றியதோர் மரம்போல மக்கள் வீழ்வார்;
வாழ்வுதரும் கலைவளர்ச்சி உலகில் இன்றேல்;
சற்றுமிதில் ஐயமிலை; தொழில்கள் கற்பாய்;
சரசுவதி எனஏட்டை வணங்கி நில்லேல். 19

அழகுதனைத் திருவென்றார்; மனத்திற் கின்பம்
அளிக்கின்ற செல்வமெலாம் திருவென்றார்கள்;
நிழல்கொடுக்கும் சோலையிலே வீட்டின் உள்ளே
நிறைந்தபல தானியத்தில் விளக்கு ஒளியில்
குழல் அனைய மொழிமாதர் அன்பு தன்னில்
குளத்தில் மலர் தாமரையில் திருவும் வாழ்வாள்;
பழகுதமிழ்ப புலவர்இவை பகர்ந்தார் முன்னே;
பயன் அளிக்கும் மகிழ்ச்சிதரும், இவைகள் அன்றோ? 20

மூதேவி என்றொருத்தி இருப்ப தாக
மொழிந்தார்கள்; அவள் திருவின் மூத்தாள் என்றார்;

ஓதா தார் உள்ளத்தில் ஒளியே யில்லை;
ஒருநலமும் அவர்க்கில்லை; சோம்பர் ஆவார்.
பூதேவிக் கொருசுமையாய்த் தூங்கு வார்கள்,
புனல் அற்ற குளமாவர் என்பதற்கே
ஆதார மாய்க்கழுதை வாக னத்தே
அவள் உருவம் அமைத்திங்கே சித்தி ரித்தார். 21

உள்ளத்தே உடலினிலே உணர்ச்சி யின்றி
உலகத்தே கழுதையென வாழு மக்கள்
பள்ளத்தே வீழ்வார்கள், பறித்துத் தின்னும்
பழங்கண்டும் பட்டினியாய்க் கிடந்து சாவார்,
வெள்ளத்தே அகப்பட்ட குப்பை போல
வீணாவார், களிப்பின்றி ஒதுங்கிப் போவார்,
கள்ளத்தார் கைப்படுவார் என்று காட்டக்
கழுதையின்மேல் ஒரு தெய்வம் எழுதி வைத்தார். 22

யாத்திரையால் புண்ணியமாம் பாவம் போகும்
எனநம்பி ஊரெல்லாம் திரிந்து நிற்பீர் !
சாத்திரத்தின் பொருளறியீர்! சகத்தில் வாழும்
பலமாந்தர் சரித்திரத்தின் போக்கை எல்லாம்
நேத்திரத்தால் கண்டறிந்தே உண்மை யான
நிலையறிய யாத்திரைசெய் என்று சொன்னார்.
ஈத்திரளைப் போல்நீங்கள் ஆக வேண்டாம்
இன்பமுறும் மார்க்கத்தில் சென்று வாழ்வீர் ! 23

வானோங்கி வளர்ந்திருக்கும் மலைகள் மீதே
வழங்குபனித் துளி மழைநீர் ஒன்றாய்க் கூடித்
தேனோங்கு மலர்புனைந்து நெளிந்து பெண்கள்
திறம்உணர்த்தி அசைந்துவரும் நதிகள் காண்பீர்!
ஏனோநீர் அடிமைகளாய் இந்த நாட்டில்
இருக்கின்றீர்! இன்பமெலாம் இழந்து நின்றீர்!

வீணேஉம் பிறப்பென்றே அவைகள் சொல்லி
வீழ்ந்துநகைத் தோடுவது கண்டு வெட்கீர் ! 24

தனித்தனியே உறையுநீர்த் துளிகள் எல்லாம்
தகிக்கின்ற வெப்பத்தால் ஆவி ஆகும்,
பனித்துளிக ளேனும்அவை ஒன்றாய்க் கூடிப்
பெருகிவிடின் பாறைகளைப் புரட்டி வீழ்த்தும்.
நுனித்தறிவீர். இதுநதியாய் நுரைகள் வீசி
நுவலரிய பலவளங்கள் விளைக்கும் அன்றோ?
இனிச்சிறிதும் தாமதியீர் மனிதர் இன்றே
ஒன்றாவீர், இன்பநதி பெருக்கி நிற்பீர் ! 25

அந்தியிலே களைப்படைந்த மக்கள் கூட்டம்
அகங்களிக்கக் கடற்கரையை அணைந்து நிற்பார்;
நொந்தவர்கள் உடல்குளிர, மனத்தே நின்ற
நோய்நீங்கத், திரைக்கையால், அமுதம் நல்கும்.
எந்தவிதப் பலன்எய்தும் நோக்கம் இன்றி
எல்லோர்க்கும் நலம்செய்யும் கடலை காண்பீர்.
சந்ததமும் பிறர்வாழ நாமும் இந்தச்
சகத்தினிலே உழைப்பதுவே கடனென் றெண்ணீர்.! 26

மரத்திற்கு மரந்தாவி விந்தை காட்டும்
மந்திகளின் வாழ்க்கையிலே துன்பம் இல்லை;
கரத்தினால் அசைத்திலைகள் மலர்கள் சிந்திக்
களித்தூசல் ஆடிநிற்கும்; கனிகள் கொய்து,
சிரைத்தையுடன் மார்பிலே ஒட்டி நிற்கும்
சிறுகுரங்கின் வாயூட்டி மகிழ்ந்து வாழும்;
உரத்தும்மைக் கேட்கின்றேன்; அவைகள் மற்றோர்
உழைப்பினையே உமைப்போல் சுரண்டல் உண்டோ? 27

கருநீலத் திரைமீது பொற்கு டம்போல்
கண்கவரத் தோன்றிவளர் கதிரின் வீச்சால்,

பெரும்பனியால் நடுக்குற்றோர் குளிரின் நீங்கிப்
பேரின்பம் அடைவதை நாம் நேரே காண்போம்.
வருங்கால நிலையறிவார் மனத்தின் உள்ளே
வளர்கதிரால் வறுமைகுளிர் நீங்கி நிற்பார்.
ஒருவர்க்கும் தீங்கெண்ணார் உழைப்பார், என்றும்
ஒடுங்காத புகழ்பெறுவார், உலகைக் காப்பார். 28

காதலர்கள் பிணக்கினிலே கசந்து நோக்கிக்
கடுமொழிகள் வீசிமிகக் கனன்றா ரேனும்,
சீதமதி! உனைப்போல இன்பம் செய்வார்
செகத்திலே வேறில்லை; சிறந்து வாழ்க!
வேதனைகள்தீர்க ! வென வாழ்த்தி னாலும்
வெறுப்பின்றித் தண்ணிலவு சொரிந்து நிற்கும்
ஏதொன்றும் மாற்றமிலை, எழுந்த நாளில்
இவ்வுலகை ஒளியாக்கும் நிலவு காண்பீர்! 29

அறிவில்லார் வசைபோழிகள் வீசுவாரேல்,
அவை மனத்தில் வைக்காதே; அன்பு மாறேல்.
பெரியர் இவர் கொடைவள்ளல் அறிவில் வல்லார்
பேச்சாளர் எனத்தோண்டும் குழியில் வீழேல்;
சிறியர் இவர் பெரியர் இவர் என்னும் பேதம்
சிறிதின்றி எல்லோர்க்கும் இன்பம் செய்யும்
அரியநறுந் தென்றலென. அவனி வாழ்வார்!
அனைவோரும் நலமெய்தப் பணிகள் செய்வாய்! 30

'பாய்வதற்குப் பலமில்லை, என்ன செய்வோம்'
எனப் பதுங்கும் சிங்கத்தின் வாழ்வு பாழாம்!
சாய்வுற்றோம், பிணியடைந்தோம், உடலின் வன்மை
சரிந்ததுவே என்றெண்ணிச் சலிப்புக் கொள்ளேல்;
ஓய்வின்றி எறும்பைப்போல் உள்ளத் தாலும்
உடம்பாலும் உருவான பணிகள் செய்வாய்;

பாய்கின்ற வெள்ளமெச் செல்வம் ஓங்கும்;
    பாரதத்தார் இன்பத்தேன் பருகு வாரே. 31

தென்றலிலே துவளுமலர்க் கொடிகள் எல்லாம்
    தேன்சிந்தும் வாசமலர் பூத்து நிற்கும்;
அன்றலர்ந்த மலர்நோக்கி அரிவை மார்கள்
    அவைபறித்துக் கூந்தலிலே அணிந்து நிற்பார்.
நின் றலரும் அக்கொடிகள் மீண்டும் மீண்டும்
    நேரிழையார் பறித்ததனால் சினத்தல் இல்லை;
நன்றியுள செயல் காண்போம் நாமு மதுபோல்
    ஞாலத்தார் நலங்கருதி உழைத்து வாழ்வோம். 32

காலையிலே நீராடிக் கருமை யான
    சிறகுலர்த்திக் காட்சிதரும் காக்கைக் கூட்டம்
சீலமிக உடையனவே , உண்ணும் பண்டம்
    சிறிதளவே கிடைத்தாலும் இனத்தைக் கூவிச்
சாலமகிழ் வோடுண்டு களித்து வாழும்
    சகத்தோர்கள் இவ்வழியைப் போற்றல் வேண்டும்.
சோலையிலே காக்கையினம் ஒன்றாய்க் கூடிச்
    சுதந்தரமாய்க் குதூகலிக்கும் வாழ்வுகாண்பீர். 33

கதிர்வீசும் கிரணத்தால் ஆவி யாகிக்
    ககனத்தே படர்ந்தநீர் கருத்துக் கூடி
அதிரும்வெடிச் சிரிப்புடனே ஆத வன்தன்
    வெம்மையினை அடக்கிநீர் சொரிந்து நிற்கும்.
புதியநலம் உலகுபெற ஊட்டு கின்ற
    புகழ்காண்மின், மேகமெனப் புவியில் வாழ்வீர்!
எதிரில்வரும் தீமையெலாம் ஓடிப் போகும்
    இன்னல்வரும் போதுமனம் களித்து நிற்பீர்! 34

இலை தளிர்த்து மலர்பூத்துக் கனிக னிந்தே
    எல்லோரும் இன்பமுறப் பசுமைவீசிக்

கிளைபரப்பி வளர்மரத்தின் தளிர்கள் தம்மைக்
கிழித்தெறியும் கிளிகளுக்கும் கனிகள் ஊட்டும்;
தளர்ந்துவரும் உயிர்க்கெல்லாம் நிழலைச் செய்யும்;
தங்குமிடம் தனைநாடிப் பறவைக் கூட்டம்
அலைந்துதிரி வதுநோக்கிக் கைக ளாலே
அவைதடுத்துச் சுகமளிக்கும் காட்சி காண்பீர். 35

தன்னண்டை வளர்ந்துதனை நிமிர்ந்து நோக்கித்
தள்ளாடும் மலர்கொடியின் சோர்வு கண்டே.
என்னண்டைப் படர்வாய்நீ ! இனிய வாச
மலர்ஈவாய்! என்றுகிளைக் கைகள் நீட்டும்.
வன்னமுறு சிறைப்புட்கள் வாழு கின்ற
கனிமரத்தின் தன்மையினைக் கண்ணால் காண்பீர்.
இன்னலினால் துவள்கின்ற ஏழை மக்கள்
ஈடேறக் கைதந்து காத்தல் நன்றே. 36

வளர்கொடிகள் பிடித்தேறக் கைகள் தந்த
மரங்கள் தமை வான்கதிரோன் வருத்தா வண்ணம்,
தளிர்கொண்டு குடைபிடிக்கும் தாங்கள் ஈன்ற
மலர்க்கிண்ணத் தேன் அருத்தி மகிழ்ச்சி யூட்டும்.
உளமொன்று பட்டவர்கள் எந்த நாளும்
உயிரொன்றாய் உலகசுகம் கண்டு வாழ்வார்.
அளவின்றிச் செல்வங்கள் நிரம்பி நிற்கும்
அவனியெலாம் அவர்மனம்போல் வாழும் அம்மா! 37

நீவாழும் வீட்டின்வெளிப் புறத்தில் எல்லாம்,
நீர்நாறும் சாக்கடையும் மலமும் நின்றால்
ஆவாஉன் ஆரோக்ய வாழ்வு முற்றும்
அழியாதோ! உனைச்சுற்றி வாழும் மக்கள்
ஓவாத பிணிபசியால் உடலம் குன்றி
உளம்ஒடிந்தே உயிர்ப்பிணம் போல் வாழு வாரேல்.

மேவாது நலம் உனக்கும், துன்ப வெள்ளம்
மிகச்சூழும், கரைசேர வழியே காணாய். 38

வாசநறு மலர்சோலை , கனிகள் சிந்தி
வளர்மரங்கள், வற்றாத புதுநீர் ஓடை,
தேசுபெற உனதுமனை சூழ்ந்து நின்றே
தென்றலினை வீசிமகிழ் வூட்டு மாயின்,
மாசின்றி இன்புறுவாய் உடையில் நூல்போல்
மக்களெலாம் மகிழ்ந்தொன்று கூடி நின்றால்,
ஆசையெலாம் பெறுவார்கள். அல்லல் இல்லை.
அநவரதம் பூங்காவில் ஆடு வாரே. 39

தன்னலமே உருவான நாய்கள் கூட்டம்
தரணியிலே ஒருகுழுவாய் வாழ்வ தில்லை;
என்னதுயர் செய்தாலும் இரையிட் டோனை
இமைப்பொழுதும் பிரியாமல் வணங்கி வாழும்.
இந்நிலத்தில் யாம்வாழ்ந்தால் போதும் என்றே
எண்ணுவார் வாழ்வும் இதன்வாழ்வும் ஒன்றே
உந்நதமாம் சுதந்தரத்தின் வழிகள் காணார்.
ஒற்றுமையாய்ச் சுகவெளியில் உலவ மாட்டார். 40

பழகாத படித்துறையில் பாசி நிற்கும்
பாதங்கள் வைத்தவுடன் வழுக்கித் தள்ளும்
அழகாக உடைநகைகள் அணிந்து கொள்வர்
அன்புநெறி அறியாமல் தனித்து வாழ்வார்.
நிழலாக உமையடைந்தோம் காப்பீர் என்னும்
நிர்க்கதியார் துயர்க்கு மனம் இரங்க மாட்டார்
கழுகாக ஏழையரைப் பிடுங்கித் தின்பார்;
கடுநஞ்சைப் போல்துன்பம் பரப்பி வாழ்வார். 41

இவ்வுலகம் ஓர்மாயை, இதிலே தோன்றும்
எப்பொருளும் நிலையில்லை, என்று பேசும்

செவ்வையிலார் தெளிக்கின்ற நஞ்சை யுண்ணேல்;
சிந்தையெலாம் தடுமாறிச் சோம்பி நில்லேல்;
அவ்வுலகில் இன்பமென மொழிந்து நின்றார்,
ஆர்கண்டு திரும்பினார் சென்ன துண்டோ?
எவ்வுலகம் ஆனால் என்? எவரும் இங்கே
இணைந்திருந்து களிப்பதுவே இன்பம் ஆமே. 42

எவ்வூரும் நம்மூரே என்று கொள்வோம்
எல்லோரும் உறவினராய் இணைந்து நிற்போம்
இவ்வுலகில் துன்புறுதல் இன்பம் எய்தல்
எல்லாமும் நம்செயலே என்று தேர்வோம்;
ஒவ்வாத பேதமெனும் புதர்கள் சாய்ப்போம்,
உலகத்தில் சமம் என்னும் பயிரைச் செய்வோம்
இவ்வாறு புரிதற்குத் தடையாய் நிற்றால்
எதுவேனும் அதையறிவுத் தீயால் மாய்ப்போம். 43

அப்பாநீ இவ்வுலக நிகழ்ச்சி தம்மை
அறிவென்னும் கண்கொண்டே அளந்து காண்பாய்.
இப்புவியில் வெளுத்ததனைப் பாலென் றெண்ணேல்;
கறுத்ததனை இரவென்று கருதிக் கொள்ளேல்;
எப்போதும் துன்பமுறும் எளியார் தம்மை
ஏமாற்றித் தம் வயிற்றை நிரப்பி நிற்பார்
தப்பாமல் உனையடிமை யாக்கப் பார்ப்பார்
தாவிச்செல் அவர் வலையில் மாட்டிக் கொள்ளேல். 44

அவர்சொன்னார் இவர் சொன்னார் என்று நம்பி
அறிவிழந்து கண்மூடி அலைதல் வேண்டாம்;
எவர்சொன்ன மொழியேனும் நெஞ்சில் ஏற்றி
இழைத்தறிவாய் பகுத்தறிவுச் சாணைக் கல்லில்;
தவறான சகதிவழி ஓட்டி னாலும்
தான்செல்லும் விலங்கல்ல அப்பா நீதான்;

அவமானம் அணுகாமல் வாழ்வில் வெற்றி
அடைவாய்நீ ஆண்மையினை அகத்தே வைப்பாய். 45

பாழான இருட்டறையில் வெளிச்சம் இன்றிப்
பலபொருளும் பார்த்தறிதல் கூடு மோதான்?
தாழாமல் செல்பவர்கள் இடறி வீழ்வார்;
தலையிலே அடிபட்டு மயங்கு வார்கள்;
வாழாமல் நமையடிமைப் படுத்து தற்கே
வைத்தார்கள் கற்பனைகள் பலவும் இங்கே;
ஆழாதே அவற்றுள்ளே, சொல்லி விட்டேன்;
அறிவென்னும் விளக்கேற்றி உண்மை காண்பாய். 46

ஒளியுள்ள குடத்தினிலே இருளும் உண்டோ!
உரமுள்ள நெஞ்சினிலே பயமும் உண்டோ!
களிநிறைந்த உள்ளத்தே கவலை யுண்டோ!
கடல் ஒலியை அடக்கும்ஓர் ஓசை யுண்டோ !
தெளிவான அறிவுக்குக் கலக்கம் உண்டோ !
தேனுண்ட வண்டினம் போல்பண்கள் பாடி
வெளியார்கள் பிறமனிதர் என்று கூறி
வெறுக்காமல் துணைசெய்வார் தூய்மை யுள்ளார். 47

இனிதாகும் ஏகாந்த வாழ்க்கை என்பார்.
இவ்வுலகில் ஏகாந்த இடந்தான் ஏது?
மனிதரிலா இடமென்று சொல்லுவாரேல்
மண்முதலால் பூதங்கள் எங்கும் உண்டால்?
புனிதவிடம் என்றெண்ணி வனங்கள் தேடிப்
புகுந்தாலும் ஆங்குள்ள மரம்புற் கொடிகள்
தனிமையினை நீக்கிபெருந் துணைவ ராகித்
தண்தேனும் சுவைக்கனியும் அளிக்கும் அன்றே? 48

கலைச்செல்வம் வளர்த்திடுவோம் என்று பேசிக்
கவிமறந்து சங்கீதம் பாடி நிற்பார்;

விலைக்காகத் தம்முடலை விற்கும் மாதர்
விழிசிமிட்டிக் கைகாட்டி நடனஞ் செய்வார்;
அலைக்காமல் உடல் வளர்த்துச் சோம்பலோடு
அநவரதம் வாழ்கின்ற குள்ளர் கூட்டம்
பலைக்காட்டி அதுகேட்டுப் பார்த்து வாழ்வார்;
பாட்டாளிக் கொருயபனும் பாரில் இல்லை. 49

கற்பதுவே கலையாகும் என்னும் உண்மை
கண்டவர்கள் மாந்தரெலாம் வாழும் வண்ணம்
பற்பலவாம் தொழில் வளர்க்க முயற்சிசெய்வார்;
பயனுடைய பண்டங்கள் குவித்து வைப்பார்.
அற்புதமாம் விஞ்ஞானத் துறைகள் மூலம்
அனைவோரும் உணவுண்ணத் தானியங்கள்
உற்பத்தி செய்வார்கள்; உலகை வாட்டும்
ஒரு பகைவன் பசிப்புயலின் உயிரை மாய்ப்பார். 50

ஆடைக்குக் கலை என்றோர் பெயரை வைத்தார்
ஆதலினால் தொழில்கள் எல்லாம் கலைகள் ஆகும்.
வாடையிலே மெய்நடுங்கிக் கைகள் கட்டி
வருந்தாமல் எல்லோர்க்கும் உடைகள் செய்வீர்.,
கோடையிலே உடல்வருந்தி வேலை செய்வோர்
குந்திகளைப் பாறுதற்குக் குடில்கள் செய்வீர்
ஓடைகளில் நீர்பெருக்கி வயல்கள் எல்லாம்
உணவுக்காம் தான்யங்கள் விளைய வைப்பீர். 51

பொன்னாசை கொடிதென்று பாடி நிற்பார்,
பொருள் கவர்ந்து தமக்கென்று சேர்த்து வைப்பார்;
பெண்ணாசை பெருநரகில் சேர்க்கும் என்பார்,
பிறர் அறியா வகைகாமக் கடலில் வீழ்வார்;
மண்ணாசை மனங்கொண்டால் தீமை என்பார்,
மாநிலத்தைத் தமக்கடிமை யாக்கவேண்டி.

விண்ணாடு சுகபோகம் சுரக்கும் என்று
விளம்புவார், ஏமாற்றி வாழ்வார் இங்கே. 52

குள்ளநரி போலிருந்து நம்மை ஒன்று
கூடாமல் செய்கின்ற குழுவொன் றுண்டு;
கள்ளமனத் தார் அவரால் நமது வாழ்வு
கலகலத்து நிலைகுலைந்து பேனதப்பா!
உள்ளத்தே ஆண்மையெனும் நீரைப் பாய்ச்சி
உணர்வென்னும் பயிர்வளர்த்தல் உண்மை காண்பாய்.
கொள்ளையிடும் வஞ்சகரை முறியடிப்பாய்
கூறினேன் திடமிருந்தால் வெற்றி கொள்வாய்! 53

ஓங்கிவளர் மனிதர்குலக் களையாய்த் தோன்றி
ஒடுக்கினார் பகுத்தறிவுப் பயிரை யிங்கே;
யாங்கணுமே இக்கொடிய நச்சுப் பூச்சி
யாவருக்கும் பரலோக வாழ்வு நல்க
ஈங்கெம்மை ஆண்டவனே இறக்கி விட்டான்
எனப்பேசி நமதறிவை அடக்கி விட்டார்;
தீங்குதரும் கலகமெனும் குழியில் தள்ளித்
தினந்தினமும் நமதுரிமை பறித்து வாழ்வார். 54

நீதியிலே நாம்செல்ல நினைக்கும் போது
நிறுத்திநமைச் சிதைக்கின்ற வஞ்சர் கூட்டம்,
சாதியிலே மதத்தினிலே வாழ்வுண் டென்று
சகலரையும் முன்னாளில் மயக்கி விட்டார்;
ஆதியிலே அவர்புனைந்த மாய வீட்டை
அடியோடு தகர்த்துவிட ஆர்த்தெ ழுந்தோம்;
வீதியிலே சாத்திரங்கள் குப்பை வீசி
விரைந்ததற்குத் தீவைப்போம் வீரர் ஆவோம். 55

மக்களெனும் மல்லிகைப்பூ வாடிச் சோர்ந்து
மனமிழந்து நிலத்திலே உதிர்ந்து போக

மிக்ககடு வெயிலாகி வஞ்சர் கூட்டம்
மேதினியில் இன்பத்தை அழித்த தப்பா!
அக்கக்காய் உருண்டோடும் நெல்லிக்காய்போல்
அறிவுடையோர் என்போரும் பிரிந்து நின்றார்;
பக்கத்தார் வாழ்க்கைதனை நிமிர்ந்து பார்ப்பாய்
பதுங்காதே வெளியில்வா வீர னாகி. 56

மாயத்தார் நிருமித்த வஞ்சக் கோட்டை
மண்ணோடு மண்ணாகிச் சிதைந்து போனால்,
தேயத்தார் எல்லோரும் குதூக லிப்பார்,
தீரர்களாய் வீரர்களாய்த் திகழ்ந்து நிற்பார்;
நேயத்தார் ஆய்இந்த உலகில் வாழ்வோர்
நிலையான போன்ப மதுவை யுண்பார்;
காயத்தால் உழைப்போரே உண்மை காண்பீர்
கடுகளவும் வஞ்சகர் சொல் வார்த்தை கேளீர். 57

தலைநிமிர்ந்து நேராக நின்று பேசு;
தயராதே சுரண்டுவோர் சூழ்ச்சிக்கெல்லாம்;
மலைபுரண்டு வீழ்ந்தாலும் கையால் தாங்கு;
மனத்திலே வீரமது கொண்டு நிற்பாய்;
நிலையாத வஞ்சர்திரை அழிந்து போக
நெருப்பிட்டுக் கொளுத்துநீ, அஞ்சவேண்டாம்;
கலையாமல் மனிதர்குலம் ஒன்றாய் வாழும்
கண்கொள்ளாப் பெருங்காட்சி அதுதான் ஐயா! 58

மங்கையரின் காதல்மது வாரி யுண்டு
மனம் விரும்பும் இன்பமெலாம் அனுபவித்தே
இங்குறைய நினைக்காத மாந்தர் இல்லை;
இந்தமனப் பாங்கறிந்த குள்ளர் கூட்டம்,
அங்குண்டு சொர்க்கத்தில் அவைகள் என்றார்;
அதைநம்பப் பலகதைகள் புனைந்து வைத்தார்;

பொங்கிவரும் களிப்புடனே இன்பம் எய்திப்
பூவுலகில் வாழ்வதுவே சுவர்க்கமாகும். 59

கவலையெனும் தேள்கொட்டக் கலங்கி நின்று
கடும்பசியும் பெரும்பிணியும் பிடுங்கித் தின்ன,
அவலமுடன் வாழ்வதுவே நரகமாகும்;
அறிவுடையோர் துன்பத்தை நரகம் என்றார்;
புவனத்தே நரகமிலை வான கத்தே
பொலிகின்ற ஓர்உலகம் அதுதான் என்பார்;
உவமங்கள் பலகாட்டி ஏய்க்கப் பார்ப்பார்;
உண்மையினை மக்களெலாம் உணரச் செய்வீர்! 60

ஊரெல்லாம் தமதாக்கி வளைத்துக்கட்டி
உயரத்தே வாழ்கின்ற சிறிய கும்பல்,
பாருள்ளே மதமென்னும் வேலி போட்டுப்
பாழ்செய்தார், பாமரர்கள் வாழ்வு தம்மை;
போரெல்லாம் தமக்காகப் புரியச் செய்தார்;
போசனமும் கிடைக்காமல் காயவைத்தார்;
சீரெல்லாம் அழிந்தனவே அவர்கள் செய்த
சிறுமையினால், இனி இதுதான் பலிக்காதையா! 61

ஒருவருக்கும் சொந்தமிலா நிலத்தை எங்கள்
உடைமையென ஒருசிலர்கை யாக்கிக்கொண்டார்;
பெருங்கொடுமைக் காடுதனில் வெருட்டி நம்மைப்
பேதையராய்த் திரியும்வகை செய்துவிட்டார்;
வருவதுவும் போவதுவும் செல்வம் என்றே
வறியவர்க்கே வேதாந்தம் சொல்லி வைத்தார்;
அருந்தவத்தால் யாம்பெற்றோம் செல்வம் என்றே
அனைவரையும் மயக்கினார், மோசம் போனோம். 62

மரம் உயர்ந்து புதர்செறிந்து கொடிகள்மூடி
மனிதர்புக வழியின்றிப் புலிகள் சிங்கம்

குரல் உயர்த்தி ஊளையிடு நரிகள் பாம்பு
குடியிருந்த காடெல்லாம் கழனி செய்தோம்;
உரம் அடித்துப் பயிர்செய்து தான்யமாக்கி
உழைப்பற்ற வஞ்சகர்பால் இழந்து விட்டோம்;
இரக்கமிலார் அவர்கயவை நோக்கி நின்றால்
இன்பமுற வழியில்லை எழுந்து நிற்பீர்! 63

மேடுபள்ளம் சரிசெய்து மட்ட மாக்கி
மேகங்கள் விருந்துண்ணத் தோப்பு செய்தோம்;
நாடுகளை உலகெங்கும் செழிக்க வைத்தோம்,
நாம்வாழும் ஊரெல்லாம் தோன்றச் செய்தோம்;
வீடுகளை அமைத்திட்டோம், வீதி செய்தோம்;
வெயில் இல்லை மழையில்லை என்று ழைத்தோம்;
கேடுதரும் சுயநலத்தார் நமது வாழ்வைக்
கீழாக்கித் தனியின்பம் நுகரு கின்றார். 64

மாதர்எனக் கிளிபேசிக் குயில்கள் கூவி
மயிலாடும் சிங்கார வனங்கள் வைத்தோம்
மோதிவரும் நீர்ப்பெருக்கு நதிகள் வாய்க்கால்
முன்னின்றே உயிர்கொடுத்து வெட்டி விட்டோம்
தீதறியா மனம்படைத்த நம்மை யெல்லாம்
தீச்சூழ்ந்த புழுப்போலத் துடிக்க வைத்தார்
பேதைமையால் இத்தனைநாள் பொறுத்து நின்றோம்
பெருவெள்ளம் பாய்வதுபோல் திரண்டு விட்டோம். 65

சுதந்தரத்தின் சுவையறியா நாளில் எங்கள்
சுகவாழ்வைக் கவர்ந்துண்டு கொழுத்து நின்றீர்!
பதம்பெற்று வாழ்வதற்கு நினைந்து விட்டோம்
பகட்டுரையில் இனிமயங்கி வீழ மாட்டோம்
மதம் உரைத்த கலையுரைத்த மகான்கள் சொன்ன
மாய்மாலப் பேயுரைகள் நம்ப மாட்டோம்

இதமாக எல்லோரும் சேர்ந்து வாழ்வோம்
இப்பொழுதே கொடுமையினை மறந்து வாழ்வோம். 66

பரம்பரையாய் அடிமையினில் வாழ்ந்து விட்டோம்
பாழானோம் தலைவிதியை நம்பிக் கெட்டோம்
அரம்பையர்கள் பொன்னுலகம் அமுத பானம்
அங்குண்டு நாம் தருவோம் என்று கூறி
குரங்குகளைப் பழங்காட்டிப் பிடித்தல் போலே
குருமார்கள் நம்மறிவை மயக்கி விட்டார்
உரம்பெற்றோம் ஒளியறிந்தோம் இனியும் இந்த
உலகத்தே கோழைகளாய் உலவ மாட்டோம். 67

வஞ்சகத்தால் தமதுசுகம் வளர்த்துக் கொண்டார்
வரும் செல்வம் முழுவதையும் வாரிக்கொண்டார்
பஞ்சைகளாய் எலும்புருவாய் எளியோர் வாழப்
பகுத்தறிவு வளராமல் பாழே செய்தார்
நஞ்சாகி உழைப்பாளர் வாழ்க்கை யின்பம்
நாசமுறச் செய்தார்கள் ஒன்று சொல்வேன்,
அஞ்சாமல் பாட்டாளி மக்கள் கூட்டம்
ஆர்த்தெழுந்தால் அவர்வஞ்சம் அழிந்து போமே. 68

எத்தனைநாள் இனிவஞ்சர் ஆட்சி செய்வார்
என்றேங்கி மனங்குழம்பித் தவிக்க வேண்டாம்
உத்தமர்கள் உழைப்பாளர் என்ற உண்மை
உலகமெலாம் இன்றோடிப் பரந்த தப்பா
இத்தரையில் இருள் வாழ்வு மறைந்து போக
எழுந்து கதிர் வீசுகிறான் அறிவுச் சூர்யன்
கத்துகடல் கைவீசிக் கயவர் வாழ்வு
கரைந்ததென முழங்குவதும் கண்டு கொள்வாய். 69

இத்தரையில் மனிதர்களை மிருக மாக்கி
இழிந்தவினை செயத்தூண்டும் கார ணந்தான்

உத்தமனே சொல்கின்றேன் உணர்ந்து கொள்வாய்
உடனேநீ அதைஒழிக்க முயற்சி செய்வாய்
சொத்துரிமைக் கொடும்பேய்தான் மக்கள் தம்மைச்
சுரண்டற்குச் சிலபேரை ஏவிற் றையா!
ஒத்தவராய் எல்லோரும் உழைத்து நின்றால்
உலகினிலே துன்பமெலாம் ஒழிந்து போமே. 70

இயற்கையிலே இன்பத்தே வடித்த ருந்தி
இவ்வுலகில் களிப்பெய்தித் தமிழர் வாழ்ந்தார்
அயர்க்காமல் எப்பொழுதும் நிதிகள் தம்மை
அலைக்கரத்தால் ஏந்திநமக்கு அளித்துக்காக்கும்
உயிர்க்கூட்டம் வாழ்கடலைத் தெய்வ மாக
உரைத்தார்கள் முன்னோர்கள் உணர்ந்து கொள்வாய்
புயல்உண்டோ மழையுண்டோ நீரும் உண்டோ
புசிப்பதற்கு உணவுண்டோ கடல்தான் இன்றேல். 71

பலசெல்வம் வாரிநமக் களிப்ப தாலே
பழந்தமிழர் வாரிஎனக் கடலைச் சொன்னார்.
அலைவழியே வருகின்ற நலங்கள் நோக்கி
அதைவருணன் எனுந்தெய்வம் ஆக்கி வைத்தார்
நிலையாத உலகமென உரைப்போர் தம்மை
நீலநிறக் கடல்எள்ளி நகைத்தல் போலே
உலையாமல் எப்பொழுதும் ஓசை காட்டும்
ஒருசெயலை உன்மனத்துள் எழுதிப் பாரே. 72

கன்னியர்கள் மிகவிரும்பித் தலையிற் சூடக்
கைநீட்டிப் பறிக்கின்ற தாழைக் காடும்
மின்னுபல நிறக்கிளிஞ்சில் மீனின் முட்கள்
மிகக்கிடக்கும் மணல்வெளியாம் கடலின் சார்பை
இந்நிலத்தில் நெய்தல்நிலம் என்று வைத்தார்
இவ்விடத்தே கடற்செல்வம் எல்லாம் சேரும்

எண்ணிடுமின் கடல்பெருக்கும் உதவி முற்றும்
இனியும்நீர் பிளவுற்று வாழு வீரோ! 73

காக்கின்ற ஒருகடவுள் திருமால் என்றார்
கார்மேக நிறங்கொண்டான் மார்பின் மீதே
நீக்கமறத் திருமகளார் என்றும் நின்றே
நிறைசெல்வம் பலதருவார் அலையின் மேலே
ஊக்கமுடன் மால் துயில்வான் என்று முன்னோர்
உரைத்ததொரு கற்பனையின் உண்மை தேர்க,
ஏக்கமற மழைபெய்தே உலகங் காக்கும்
எழில்மேகம் வாழ்வது தான் கடலில் அன்றோ. 74

வயல்எல்லாம் தாமரைகள் பூத்து நின்று
வனிதையரின் முகங்காட்டி மகிழ்ச்சி நல்கும்
அயல்எல்லாம் வாழைமரம் பாக்கு தென்னை
அழகாக வளர்ந்துபலன் அளித்து நிற்கும்
கயல்மீன்கள் ஒளிவீசிக் கரையில் பாயும்
கால்வாய்கள் சூழ்ந்த நிலம் மருத மாகும்
உயர்வான இந்நிலமும் தெய்வம் என்றார்
உருவகித்தார் இதன்தெய்வம் வேந்தன் என்றோ. 75

இந்திரனை வேந்தன்எனத் தமிழிற் சொன்னார்
இவனுலக சித்திரத்தை எண்ணிப் பார்ப்பீர்
சந்ததமும் சாகாமல் இளமை பெற்றுச்
சலிப்பின்றி வாழவைக்கும் அமுதம் உண்டு
எந்தநலம் வேண்டுமென எண்ணினாலும்
இமைப்பொழுதில் அவையளிக்கும் நிதிகள் உண்டு
சுந்தரத்தில் நிகரற்ற அரம்பை மாதர்
சுகமுண்டு வானுலகில் என்று சொன்னார். 76

நீர்ப்பெருக்கும்நிலவளமும் தேனை யூற்றும்
நிறைமலர்ப்பூஞ் சோலைகளும் கனிகள் சிந்தி

பார்ப்பவர்கள் மனங்கவரும் நிலத்தில் வாழ்வார்
பலசெல்வம் பெற்றிடுவார் ஒன்றாய் நின்றால்
வார்க்கின்ற பொற்பதுமை போலக் காட்சி
வழங்குபல வனிதையர்கள் இன்பம் கொள்வார்.
ஏற்பவர்கள் இரப்பவர்கள் யாரும் அற்ற
எழில்நிலமாய் மருதநிலம் இருக்கும் அன்றோ. 77

மருதநில வளங்கொண்டு மகிழ்ந்து வாழ
மாட்டாத மதியற்றோர் அந்த ரத்தே
தருநிறைந்த உலகுண்டு சென்றே அங்குத்
தங்கிநலம் பெறவென்றே தருமம் செய்வார்
ஒருசிறிதும் உண்மையினை உணர மாட்டார்
ஊராளப் பேயாகப் பறந்து நின்றார்
இருநிதியம் இன்பமெலாம் மருதம் ஈனும்
எல்லாரும் ஒன்றாகி உழைத்து வாழ்வீர். 78

உயிருடனே உலகத்தை வாழ வைக்கும்
உயர்ந்ததொழில் உழவென்றே உரைத்தார் முன்னோர்
வயிறார மக்களெலாம் உண்டு வாழ்ந்தால்
வானத்தே உண்டென்று சொல்லும் இன்பம்
அயராமல் அடைவார்கள் ஆத லாலே
அனைவோரும் உணவுண்ணப் பயிர்கள் செய்வீர்
வயலெல்லாம் உழுவோர்க்குச் சொந்த மானால்
வானுலகே மருதநிலம் ஐயம் உண்டோ. 79

காட்டினையும் அதைச்சுற்றிப் பசுமையான
காட்சிதரும் நிலத்தினையும் முல்லை என்றார்
மாட்டினையும் ஆட்டினையும் மேய்த்தெந் நாளும்
மகிழ்வோடு கனியுண்டு தேனும் உண்டு
தாட்டிகமாய் நோயின்றி வாழ்வ தற்கே
தந்தார்கள் மாலினையே தெற்வமாக

பாட்டினிலே கண்ணனது விளையாட் டெல்லாம்
பகர்ந்தார்கள் அதையறிந்தால் பயனும் உண்டே. 80

மாடுகளை மேய்த்திட்ட முல்லைக் கண்ணன்
மகிழ்வாக்க வெண்ணெய்பால் அருந்தி வாழ்ந்தான்
நாடிவரும் மங்கையர்கள் யாரும் இன்ப
நலம்பெற்று வாழமிக அன்பு செய்தான்
காடுகளை அழியாமல் காத்து நின்றான்
கால்நடைகள் செழிப்புறவே பெருக்கி வாழ்ந்தான்
தேடிநமை யடையாதோ இன்ப மெல்லாம்
தேசத்தார் இதன் உண்மை தெரிந்து கொண்டால். 81

கனியுதிர்க்கும் உயர்ந்தமரச்சோலை தம்மால்
கண்மறைக்கும் புதர்நிறைந்த வனங்கள் தம்மால்
இனிமைதரு பால்தந்து நிலத்திற் கென்றும்
எருவூட்டி வளம்படுத்தும் மாடு தம்மால்
மனிதகுலம் வறுமைப் பேய்க் காளா காமல்
மகிழ்வுடனே வாழும் எனக் கண்ணன் தன்னைத்
தனிமுல்லைத் தெய்வமாய் நாட்டி னார்கள்
தரணியிலே இவ்வுண்மை தெரிந்து கொள்வாய்! 82

நாடெல்லாம் கனிமரங்கள் வளர்ந்து நின்றால்
நறுமலர்ப்பூஞ் சோலைதேன் ஊற்றி நின்றால்
மாடெல்லாம் செழிப்பாக வளரு மானால்
மக்களெலாம் பால்நெய்மோர் அருந்து வாரேல்
வீடெல்லாம் மங்கையர்கள் களித்துக் கூடி
விளையாடித் தொழில்செய்து வாழு வாரேல்
பாடெல்லாம் பறந்தின்பம் ஓங்கும் என்ற
பயன்கருதி முல்லைநிலம் கண்ணன் என்றார். 83

வறுமையினால் மனிதரெலாம் வாடிப் போவார்
வரைகடந்த கொடுமைகளும் செய்து நிற்பார்

அறமெல்லாம் பாழ்செய்வார் என்ப தற்கே
அறிகுறியாப் பாலைநிலம் கூறி னார்கள்
கரியநிறக் காளியினைத் தெய்வ மாகக்
காட்டினார் பயங்கரமாய் அமைத்து வைத்தார்
எரிகின்ற சுடுவெய்யில் மணலின் காட்டை
இயம்பினார் பாலைநிலம் என்று முன்னோர். 84

பாலையிலே நீரில்லை மணல் உண்டு
பயமுறுத்தி உயிர்கவரும் கள்வர் உண்டு
சோலையில்லை, சுவாசிக்கத் தென்றல் இல்லை
சுடுநெருப்பை வீசுமொரு பேய்க்காற் றுண்டு
வேலையில்லை செய்வதற்கும் அங்கே சென்றால்
வெட்டவெளிப் பாழ்நிலந்தான் பயனொன் றில்லை
சாலவுமே துயர்விளைக்கும் இந்தப் பூமி
சரதமிலை மறைந்துடும் என்றே சொன்னார். 85

தீதான பாலைவனம் நிலைப்ப தன்று
திருந்திபலன் கொடுக்குமொரு நிலமாய் மாறும்
ஆதாரம் இதற்குண்டு காண்க வென்றார்
அறிந்திடுவீர் இதன்உண்மை உலகில் உள்ள
போதாமை ஒழிந்துவிடின் பயத்தை யூட்டும்
புன்செயல்கள் மறைந்துவிடும் புவியோர் எல்லாம்
காதாரக் கவியின் பம் அருந்து வார்கள்
கடும்பசியும் ஒழிந்திங்கே களித்து வாழ்வார். 86

வந்தவர்கள் எவரேனும் அவர்கள் எல்லாம்
வாழ இடம் தந்துபல வளங்கள் நல்கும்
எந்தநிலை வந்தாலும் அச்சம் இன்றி
எழுந்துயர்ந்து கெம்பீர மாக நிற்கும்
சந்ததமும் நீர்மேகம் வடிந்து நின்று
சலசலென நீர்சிந்தி நிலத்தைக் காக்கும்

இந்தமலை இதைச்சார்ந்த பகுதி தன்னை
இயம்பினார் குறிஞ்சிநிலம் என்று முன்னோர். 87

மணிசிந்திப் பொன்பரப்பி மலர்கள் ஏந்தி
மாநிலத்தில் வீழ்ந்தோடும் அருவிக் கூட்டம்
பிணிகொண்ட மக்களுடல் காப்ப தற்காம்
பெருமருந்து மூலிகைகள் கிழங்கு வேர்கள்
கனிகொண்ட மரச்சோலை, மாதர் கூட்டம்
களிப்புடனே எடுத்தணியும் மலர்ப்பூஞ் சோலை
அணியணியாய்க் காட்சிதரும் குறிஞ்சி தன்னை
அறிவுடையார் முருகன் தன் உருவே என்றார். 88

குன்றினிலே குடியிருக்கும் மக்கள் எல்லாம்
குறையாத வலுவுடையார் களிப்பும் உள்ளார்
என்றும்அவர் இளமையொடு தோன்றி நிற்பார்
இனிய சுவைக் காதல்தேன் அருந்தி வாழ்வார்
கன்றுகளை யீன்றபசு, எருமை, ஆடு
கணக்கின்றிப் பால்சொரிந்து கருணை காட்டும்
நின்றுவளர் மலைகள் தமை முருகன் என்று
நினைப்பதிலே சொல்வதிலே தவறொன் றில்லை. 89

முருகுதனை முருகன் என வழங்க வைத்தார்
முன்னோர்கள் அதற்கின்னும் பெயர்கள் சொன்னார்
அருமையுடன் செவ்வேள் என்றதனைச் சொன்னார்
அழைத்தார்கள் வேலன்எனவேறு சொல்லால்
கருதியுணர் முருகென்றால் இளமையாகும்
வேள் என்றால் முயற்சிஎனக் கண்டு கொள்வாய்
வருபகையை வெல்பவனை வேலன் என்று
வழங்கினார் தமிழ்மக்கள் உண்மை கண்டே. 90

மக்களெலாம் நெஞ்சினிலே வஞ்சம் இன்றி
மகிழ்ந்தொன்றாய் உறைவாரேல் விருத்த ராகார்

எக்காலும் சோர்வின்றி முயலு வாரேல்
எண்ணங்கள் நிறைவேறும் வெற்றி கொள்வார்.
முக்கனியும் சுவைத்தேனும் பசுவின் பாலும்
முத்தொளியை வீசிநகை மாத ரோடு
தொக்கிருந்து பரிமாறி இன்பமென்னும்
தோணியிலே ஏறிமகிழ்க் கடலில் வாழ்வார். 91

இத்தகைய வளம்ஊறும் குன்று சேர்ந்த
எழில்நிலத்தைக் குன்றுதனை முருகென் றார்கள்
நித்தமுமே அழகொழுகும் இளமை காட்டி
நிலைமுருகை முருகன்என ஆண்பால் ஆக்கி
எத்தனையோ கதைகட்டிப் புராணஞ் சொல்லி
இயற்கை நலம் உணராமல் செய்து விட்டார்
உத்தமனே உரைக்கின்றேன் முருகின் தன்மை
உளங்களிப்பாய் குதூகலிப்பாய் உணர்ந்து கொண்டால். 92

அப்பாநீ முருகென்றால் ஏதோ வென்றே
அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்
எப்பாலும் நிறைந்தின்பத் தேனே பெய்யும்
இல்லாத இடம் இந்த உலகில் இல்லை
தப்பாக உணர்ந்தார்கள் கதைகள் நம்பித்
தமிழ்ச்சொல்லின் பொருள் அறியாத் தன்மை யாலே
முப்பாலாம் காலத்தும் அழிவே யின்றி
முருகுநிலை நிற்கும் இதை அறிந்து கொள்வாய். 93

மாறாத பேரிளமை முயற்சி வெற்றி
மனங்கவரும் பேரழகு முருகின் நாமம்
தாராள மாகநினை அறிவினாலே
தரணியிலே இயற்கைதரும் காட்சி காண்பாய்
நீராரும் கடல் அலையில் முருகு தோன்றும்
நீதிநெறி கடவார்பால் அழகு நிற்கும்

காராரும் சோலையிலே மயில்கள் ஆடிக்
களிப்படையும் காட்சியிலே முருகு காணும். 94

தகதகத்து வெயில்வீசும் கதிரோன் பாலும்
தண்ணிலவால் மகிழ்விக்கும் மதியின் கண்ணும்
நகுதல்என மினுமினுத்து வானில் வாழும்
நாண்மீன்கள் கூட்டத்தும் நதியின் கண்ணே
மிகவிரைந்து சுழித்தோடும் நீரின் மேலும்
மேவுமிரு கரையில்வளர் சோலை யெங்கும்
அகமுருக்கும் தமிழ்க்கவியின் ஓசை போன்ற
அழகுகுயில் பாட்டினிலும் முருகு தோன்றும். 95

பலநிறநூல் எடுத்தழகு பூக்கள் நெய்த
பசுமை நிறை பட்டாடை விரித்தாற் போன்ற
இலகுபசும் புற்றரையில் மலர்கள் சிந்தி
இருக்குமொரு காட்சியிலே முருகு வாழும்
கலகலென மணிசிந்தி வான வில்போல்
காணஒலி எழுப்பி வீழ் அருவி பாலும்
மலையதனை மரகதத்தின் திரளாய்க் காட்டி
மகிழ்ச்சிதரும் காவினிலும் முருகு தோன்றும். 96

வெண்மணல்சேர் வெளியின்மேல் விதவிதத்தில்
விரிமலர்வீழ் கொடிபடர்ந்த மரங்கள் நிற்கத்
தண்ணிலவு பால்போலச் சொரிய வாங்கே
தவழ்கின்ற அழகிளமை முருகே யாகும்
கண்கவரும் அழகுஇயற்கைப் பொருளிலேனும்
கைவல்லார் அறிவால்செய் பொருளி லேனும்
நண்ணிடுமேல் நமக்கின்ப அமுதம் ஊட்டும்
நல்லபுது உணர்வுதரும் முருகு தானே. 97

காதல்விளை நல்லறிவு குணங்கள் எல்லாம்
கற்றறிந்து வனப்பெல்லாம் திரண்டு நிற்கும்

மாதர்களின் நடையினிலே, அமுதம் சிந்தி
மருண்டுவிழிப் பார்வையினிலே மதிமுகத்தே
கீதமென இன்னிசையும் பொருளும் சேரும்
கிளிவியினில் கேடற்ற ஒழுக்கந் தன்னில்
தீதெல்லாம் கதிர்ஒளியால் பனிபோல் ஓடத்
தேசுதரும் தமிழ்முருகைத் காண லாமே. 98

பாலொடுதேன் கனிரசமும் கலந்தாற் போன்ற
பழையதமிழ்க் காவியத்தில் அறிஞர் பாட்டில்
சாலவுமே மகிழ்ச்சிதரும் மழலை சிந்திச்
சந்ததமும் புதியவிளை யாடல் காட்டிக்
கோலங்கொள் குழந்தைகள் பால் பண் இசைத்துக
குதூகலஞ்செய் வீணைமுதல் கருவி கள்பால்
நீலமணி படிந்ததென நிறைநீர்ப் பொய்கை
நின்றொளிரும் தாமரைபால் முருகு தோன்றும். 99

இந்தவகை முருகுவளர் இடங்கள் எல்லாம்
இவையிவையாம் எனக்கூறப் புகுவோம் ஆயின்
அந்தமிலை அதையெழுதல் ஆகா தம்மா!
அலைகடல்நீர்த் துளியெண்ணும் கணக்கில் ஆகும்
செந்தமிழில் பெருகுசுவை போல இன்பம்
செறிந்துயிர்க்குத் துணைசெய்யும் முருகு வாழ்வே
சிந்தையுடன் கண்கொண்டு கண்டு தேர்மின்
செகத்திணிலே பேரின்பம் எய்த லாமே. 100

பொல்லாத சாதிமத சாத்தி ரபேய்
போய்மாளும் நம்முள்ளே புகுந்து சண்டை
எல்லாமும் அடிசாயும் இன்பம் பொங்கும்
எழில்விளங்கும் ஓவியத்தில் காவியத்தில்
நல்லார்கள் காதல்தனில் கவிதை யூற்றில்
நாளும்வளர் சங்கீத சாக ரத்தில்

வல்லாராய்ச் சுதந்தரராய்க் கவலை யின்றி
வாழ்வீர்கள் தமிழ்முருகை அறிந்து கொள்வீர். 101

நாட்டிலே வளங்கொழிக்கும் இயற்கை தம்மை
நமதென்று சிலபேர்கள் கொண்ட தாலே
போட்டியிலே குதித்தார்கள் சுயந லத்தார்
போர்செய்து பகைவராய்ப் புகைந்து போனார்;
வாட்டமின்றி அமைதியுடன் உலக மக்கள்
வாழ்வார்கள் நிலமெல்லாம் பொதுவாய் வைப்பீர்
கூட்டாளி யாய்மக்கள் உழைத்து நின்றால்
குறையாத நலம் பெற்று நீடு வாழ்வார். 102

பழந்தமிழர் முருகறிந்து வாழ்ந்த தாலே
பாரெல்லாம் புகழ்மணக்க நிமிர்ந்து நின்றார்
எழுந்துதுயர் வளர்க்கின்ற பேதம் எல்லாம்
இல்லாமல் ஒருகுலமாய் இன்பம் உற்றார்
இழிவுதரும் சோம்பல்பயம் ஆண்மை யின்மை
எனதுநலம் பெரிதென்னும் மிருகத் தன்மை
அழிந்துபடும் இழந்ததனம் கிடைத்தாற் போல
அளவற்ற மகிழ்ச்சிதரும் முருகு தேர்வீர். 103

சாதிபல உண்டென்று மனிதர் தம்மைச்
சதிகாரர் தனித்தனியாய்க் கலைத்து வைத்தார்
ஆதியிலே பிரிவுண்டோ அறியச் சொல்வாய்
அந்நாளில் ஒருகுலமாய் இன்பந் துய்த்தார்
நீதியிலே மனங்கொள்ளா வஞ்சவர்கூட்டம்
நிருமித்தார் பலசாதி வேறு பாட்டை
பாதியிலே நமைப்பிடித்த பாசி யாகும்
படுகுழியில் சாதியினை மூடு வாயே. 104

ஓரிடத்தே மனிதரினம் உதித்துப் பின்னர்
உலகமெலாம் பரவியதென்று உரைக்கின் றார்கள்

பாரிடத்தே விஞ்ஞான முறைகள் தேர்ந்த
பலபெரியோர் மதநூல்கள் பகரும் வார்த்தை
நேரிடவே கடவுள் தனது இச்சையாலே
நிலவுலகில் மனிதகுலம் படைத்தான் என்றால்.
சீருடைய இரண்டினையும் எண்ணிப் பார்மின்
சீவரெலாம் பிறந்தவிடம் ஒன்றே என்பீர். 105

காற்றாலும் நீராலும் நிலத்தினாலும்
கடுங்குளிரால் வெய்யிலினால் மழையினாலும்
வேற்றுருவம் மக்களிடம் சிறிது காண்போம்
விதவிதமாய்ப் பலமொழிகள் பேசக் கேட்போம்
ஆற்றலிலே அறிவினிலே பேதம் இல்லை
அனைவோரும் ஒருதரத்தில் இருக்கக் காண்போம்
மாற்றமெலாம் மறைந்துவிடும் அவர்கட் குள்ளே
மணவாழ்வு பெருவழக்காய் நிகழுமானால். 106

ஒருதாயின் வயிற்றினிலே பிறந்த வர்க்குள்
உருவத்தில் ஒற்றுமையைக் காண மாட்டோம்
கரியவனாம் ஒருபிள்ளை, மாநிறமாய்க்
காண்கின்றான் ஒருவன், மற்றொருவன் செம்மை
ஒருவன், ஒருவன் குள்ளன்
பேதம் இவை ஆனாலும் பிறப்பி னாலே
சிறியனிவன் பெரியனிவன் என்று சொல்லிச்
சிறப்பிழிவு கற்பித்தல் பொருந்து மோதான். 107

பெரியோர்கள் வகுத்தமத போதம் இன்றேல்
பேராசை உருக்கொண்ட மனிதர் கூட்டம்
சிறிதேனும் அமைதியுறார் ஒழுக்க மெல்லாம்
சிதைப்பார்கள் மிருகங்கள் ஆகி நிற்பார்
அறிவாய்நீ என்றுபலர் முழங்கு கின்றார்
அவ்வுரைதான் உண்மையோ பொய்யோ வென்றேன்

தெரியவுனக் குரைக்கின்றேன் மதங்கள் தன்மை
    தெளிந்திடுக என்றெனது சிந்தை கூறும். 108

முன்னாளில் மக்கள் தமை அடக்கி யாண்ட
    முரட்டுவெறி பிடித்தபல மன்னர் என்போர்
எண்ணாத கொடுமைபல செய்து வந்தார்
    எதேச்சாதி காரிகளாய் இன்னல் செய்தார்
அந்நாளில் மன்னரெலாம் கடவுள் அம்சம்
    அறிகவென மதக்காரர் துணைநின் றார்கள்
இந்நாளில் மத்ம்வேறு அரசு வேறாம்
    எனக்கண்டோம் மன்னரெலாம் மறைந்து போனார். 109

இல்லார்கள் உடையார்கள் இரண்டு மற்றோர்
    எனும்பேதம் இல்லாத நிலையை ஆக்கி
எல்லாரும் இன்பங்கள் யாவும் துய்க்க
    இவ்வுலகில் அரசாங்கம் செய்யு மாயின்
பொல்லாங்கு தலைசாயும் மடிந்து போகும்
    பொய்யுரைகள் களவாடல் குற்றம் செய்தல்
சொல்லாமல் அழிந்துவிடும் இன்பம் நல்கும்
    சுகந்தநறு மலர்ச்சோலை புகுந்து வாழ்வோம். 110

எல்லோரும் ஓர்குலமாய் இனமும் ஒன்றாய்
    இணைந்துறைய வழியொன்றைக் காட்ட வேண்டும்
பொல்லாத வறுமையினால் கீழ்மேல் என்று
    புகல்கின்ற பேதமெலாம் போக்க வேண்டும்
கல்லாத பேர்வேண்டாம் கள்வர் வேண்டாம்
    கடும்பசியால் உயிர் துறப்போர் வேண்டாம் என்றே
நல்லாராய் மக்கள்குலம் வாழ வேண்டும்
    நம்மையிவை மதம்செய்தால் போற்றி போற்றி. 111

ஏழையரைக் கழுதைகளாய் வேலை வாங்கி
    இரக்கமிலாது அவர் உழைப்பைக் கவர்ந்து தங்கள்

பாழ்வயிற்றைக் குதிராக்கிக் கொண்டு நிற்கும்
பாவியர்கள் மதப்பாட்டு பாடி நிற்பார்
தாழ்வான பலசெய்து பொருள்கள் சேர்ப்பார்
தரணியோர் அவைமறக்கத் தருமம் செய்வார்
கூழினுக்கும் வழியின்றி வாடிச் சோரும்
கூட்டத்தை வசமாக்கி ஆட்சி செய்வார். 112

பாம்புதேள் பூரான்கள் ஆகி நின்றே
பாமரர்கள் வாழ்வெல்லாம் பாழே செய்யும்
தீம்பான மதப்புதர்கள் சாம்ப லாகத்
தீமூட்டி எரித்துவிட முந்து வீரேல்
நாமுலகில் ஓர்குலமாய் மகிழ்ந்து வாழ்வோம்
நலமென்னும் குளிர்நிலவால் வெம்மை தீர்வோம்
சோம்பல்பிணி துயர்எல்லாம் ஒழிந்து போகும்
சுகமென்னும் வெளிதன்னில் உலவி நிற்போம். 113

இவ்வுலக வாழ்க்கையிலே இன்பம் எய்த
ஏழையர்கள் எந்நாளும் உழைத்து நிற்பார்
எவ்வின்பம் வேண்டிடினும் அவைகள் எல்லாம்
எய்தும்வழி இங்கில்லை சுவர்க்கம் நல்கும்
திவ்வியமாய் ஆங்கிற்றே இன்பம் துய்ப்பீர்
தேடுகின்ற பொருளெல்லாம் கொடுப்பீர் என்றே
ஒவ்வாத பொய்யுரைகள் பலவும் சொல்லி
ஒடுக்கினார் ஏழையரை மதத்தின் பேரால். 114

அழுகின்ற குழந்தைகளின் அழுகைபோக்க
அதோபார் பூச்சாண்டி என்றால் போல
விழுகின்ற கொடுநகரம் பலவாய்க் காட்டி
வித்தையிலா மாந்தர்களை நடுங்கவைத்தார்
தொழுகின்ற புத்தியினி வேண்டாம் ஐயா!
துண்ணென்று கிளம்புவீர் மயக்கந் தீர்வீர்

எழுகின்ற சுதந்தரமாம் தேவி பாதம்
எப்பொழுதும் மறவாமல் பணிகள் செய்வீர். 115

நல்லொழுக்க வாழ்வுக்குத் துணையாய் நின்று
நாட்டினரை மேம்படுத்தும் மதங்கள் வாழ்க
வல்லவர்கள் அறிவொளியை அடக்கச் சொன்ன
வார்த்தைகளே மதமாயின் அழிந்து வீழ்க
தொல்லைதரு மதநெறியால் உலக மெல்லாம்
தொடர்ந்துபல போர்மூண்ட கதைகள் கேட்டோம்
எல்லையிலா அனற்காற்றாய்ச் சுழன்று வீசி
இவ்வுலகில் மாந்தர்குலம் திகைத்த தையா. 116

குடியிருக்க முடியாத ஓட்டை வீடு
குந்தினால் பிடுங்கிவிடும் விரியன் பாம்பு
வடிகட்டி நீர்போக்கித் தங்கி நிற்கும்
வண்டலது உள்ளெல்லாம் போரை யாகி
அடிசாய நிற்கின்ற மரமே யாகும்
அணுகாதீர் அதனருகே ஆபத் துண்டு
நொடியிலே இவ்வுண்மை தெரிந்து கொள்வீர்
நோய் செய்யும் வெறிபிடித்த மதந்தான் ஈதே. 117

மதமான பெருநெருப்புப் பிடித்து விட்டால்
மனிதமலர் வனமுற்றும் மடிந்து போகும்
இதமில்லை வெறிச்செயலால் என்று கண்டு
ஏன்இன்னும் அதைக்கட்டி அழுகின் றீர்கள்
உதவாத கலைகள் பல எழுதி வைத்தீர்
உலகர்மனக் கோயில்களில் அழுக்குச் சேர்த்தீர்
நிதம் இங்கே வெறுப்பென்னும் விதைவிதைப்பீர்
நிலவுலகில் கடுகளவும் நம்மை யுண்டோ. 118

நாடகங்கள் காவியங்கள் கலைகள் எல்லாம்
நசித்திடவே மதநஞ்சு கலந்து வைத்தீர்

கூடகத்தே பசுங்கிளியை அடைத்து வைத்துக்
கொலைசெய்யும் கணக்கினிலே மாதர் தம்மை
வீடகத்தே துயரடையச் செய்து விட்ட
வீணான மதப்பேயைத் துரத்தும் ஐயா!
கேடுதரும் இருட்டறையில் வாழ லாமோ
கிளர்ந்தெழும் ஓர் கதிரொளியில் மகிழ்ந்து வாழ்வீர். 119

வேதாந்த மார்க்கத்தை நாடுகின்றோம்
விடுபடுவோம் மாயையினால் மயங்க மாட்டோம்
தீதாகும் சம்சார பந்தம் என்பார்
திண்ணையிலே உட்கார்ந்து பிதற்று வார்கள்
ஆதார மென்றுபல பாடல் சொல்வார்
அதன் உண்மை சிந்தனையின் விளக்காற் காண்பாய்
காதாரக் கேட்டுன்றன் மனத்தில் வைப்பாய்
கருதும் அறி வில்லாதார் இதுபோற்சொல்வார். 120

கருத்தாலே அறிவதுதான் வேதமாகும்
கண்டறிந்த முடிவதுதான் அந்த மாகும்
திருத்தமுறக் கண்டறிந்த உண்மை தன்னை
தெரிவித்தார் வேதாந்தம் என்று முன்னோர்
வருத்தமுறா வாறிந்த உலக மக்கள்
வாழ்வதற்காம் திட்டங்கள் கோரி இன்பம்
ஒருத்தருக்கே உரியதெனும் பேதம் நீங்கி
ஒன்றாகி வாழ்வது வேதாந்த மாகும். 121

மனமுருகி அமுதமொழி மகிழ்ந்து பேசி
மாசற்ற அன்புடனே உணவும் ஊட்டித்
தினமுந்தன் காதல்தேன் அருத்தி நம்மைத்
தேசுபெறக் காக்குமொரு மனைவி தன்னைத்
துணைவரையும் பொய்யென்று வெறுத்துத் தள்ளித்
துறவென்னும் மார்க்கத்தில் ஓடு வாரேல்

அணுவளயும் நலமில்லை அவர்கள் இந்த
அவனிக்குப பாரமெனில் பொய்யே அல்ல. 122

துறவறந்தான் தவறல்ல சிறந்த தாகும்
தூயமனம் படைத்தவராய்த் தமது நம்மை
அறமறந்தே மண்ணுலகில் வாழ்வோ ரெல்லாம்
அன்புடனே ஒன்றாகும் வழியைச் செய்தால்
பிறமனிதர் உழைப்பினிலே காலம் போக்கும்
பேதையர்கள் வேடத்தால் உலகை ஏய்க்கும்
கரவுமனம் படைத்தவர்கள் துறவி யல்லர்
வேதாந்தங் கண்டவர்கள் அவரும் அல்லர். 123

மாதர்களைப் படிப்பின்றி அறிவு மின்றி
மனம்புழுங்க வீட்டுள்ளே புதைத்து வைத்துக்
காதலினை மிகப்புகழ்ந்து நாடகங்கள்
காவியங்கள் கவிதைகளும் கனிந்து பாடி
மோதுதிரைக் கடல்போல முழங்கு கின்றார்
முறையிதுவோ சிந்தனையே மொழிவாய் என்றேன்
ஓதுகின்றேன் பெண்கள்நிலை பற்றி என்றே
உரைத்ததனைச் சொல்கின்றேன் உணர்ந்து கொள்வீர் 124

ஆதியிலே ஆண்களெலாம் பெண்கள் பாலே
அடங்கியே நடந்தார்கள் சரித உண்மை
காதலுடன் பெற்றவர்கள் வளர்த்து விட்டுக்
கனிவுடனே மழலைமொழி கற்றுத் தந்தார்
பூதலத்தில் பின்னாளில் கடிய நெஞ்சர்
பூவையரைத் தமக்கடிமை யாக்கிக் கொண்டார்
சீதமதி முகமாதர் ஆண்கள் போலச்
சிறந்ததொழில் பலசெய்ய இன்று வந்தார். 123

கற்பென்னும் ஒருபாசக் கயிற்றி னாலே
கனிமொழியார் தமையடிமை யாக்கி வைத்தார்

பற்பலவாம் கல்விகலை அறிந்து நல்ல
பயன்பெற்றே இவ்வுலகில் இன்ப மெய்தும்
அற்புதங்கள் முழுவதையும் மாதர் எல்லாம்
அறிகவெனக் கற்புதனை அமைத்து வைத்தார்
அற்பர்களே அதுமாதர்க் குரிமை என்றார்
ஆராய்ங்கால் இருவர்க்கும் உரிமை கற்பே. 126

பணிகின்ற தெய்வங்கள் உருவ மெல்லாம்
பாவையரோடு ஒன்றாகித் தோன்றும் வண்ணம்
அணிபெறவே கைத்திறத்தால் ஆக்கி வைத்தீர்
அதற்கான ஆதாரக் கலைகள் செய்தீர்
துணிகின்றீர் பெண்ணுரிமை மறுப்ப தற்கே
ஏன்உமக்குத் துர்ப்புத்தி பெண்கள் எல்லாம்
கனிகின்ற உளத்தோடு இந்த நாட்டைக்
காய்கின்ற துயர்துடைக்க எழுந்து விட்டார். 127

ஆண்மக்கள் செய்கின்ற தொழில்கள் எல்லாம்
ஆற்றுதற்கு முன்வந்தோம் அறிவு கொண்டோம்
வீண்மக்கள் போலினிமேல் அடிமை யாகோம்
விழித்திட்டோம் சமதர்மம் விளங்க வைப்போம்
மேன்மக்கள் என்று சிலர் பெருமை பேசி
மேதினியில் படுகுழியும் மேடும் செய்தார்
ஏன்மக்கள் இதைச்சமமாய் ஆக்க வில்லை?
இதற்குப்பெண் அடிமையே தடைக்கல்லாமே. 128

கண்ணே என் கண்மணியே காதல் ஊற்றும்
கற்பகமே பசுங்கிளியே கனியின் தேனே
பண்ணேஎன் மனங்கவரும் பழைய பாட்டே
பாருலகில் உனையன்றி இன்பம் உண்டோ
எண்ணேன் நான் பிறமகளை என்று சொல்வார்
இவர்மனைவி மகள் மார்கள் உரிமை கேட்டால்

பெண்ணாவார் பேதையர்கள் பேசு வீரேல்
பெருஞ்சினத்தீ மூளும் எனக்குதித்து நிற்பார். 129

ஐவருக்குத் தான்காதல் அமுதம் ஊட்டி
அழகொழுகு பசுங்கொடியாய் வளர்ந்து நின்ற
மைவிழியாள் பாஞ்சாலி உரிமை தன்னை
மதியாமல் குருடன் மகன் மானங் கெட்டான்
பொய்யாமல் பெண்ணுரிமை காப்ப தற்கே
போரிட்டார் பாண்டவர்கள் என்னும் உண்மை
ஐயா இவ் வுலகறிந்தால் மாதர் தம்மை
அவமதிப்பார் தலைகுனிந்து மறைவார் அன்றோ. 130

வீரத்தே வெற்றியிலே சிறந்து நின்றும்
வீணான கர்வத்தால் பெண்குலத்தைச்
சோரத்தால் கொன்றடிமை யாக்குதற்காம்
சூழ்ச்சியிலே இராவணனும் ஈடுபட்டான்
தீரத்தை மறந்தவனாய்ச் சீதா தேவி
சிந்தையினை மதிக்காமல் திருடிச் சென்றான்
கோரத்தால் அறிவிழந்த அவன் குலத்தைக்
கொன்றொழித்தான் சீராமன் கொள்கை காண்பீர். 131

பரமசிவன் பார்வதியை இடையில் வைத்தான்
படைக்கின்ற தொழில் செய்யும் பிரமதேவன்
சரசுவதி தேவி தனை நாவில் வைத்தான்
சலியாமல் எப்பொழுதும் மார்பின் மேலே
திருமாலும் இலக்குமியை இருக்க வைத்தான்
தேவர் இவர் நமைக்காப்பர் என்று சொல்வீர்
தருகாதல் மாதர்தமை இழிவு செய்வீர்
தருமமே உமது செயல் கூறுவீரே. 132

மூச்சடக்கி உட்கார்ந்து யோகம் செய்தால்
மூவுலகும் ஆளலாம் என்று நம்பிப்

பேச்சடக்கிக் கண்மூடி முணமுணப்பார்
    பெறற்கரிய முத்தியதும் கிட்டும் என்பார்
வீச்சுற்ற நல்காற்றைச் சுவாசிப்போர்கள்
    விளங்குவார் திடகாத்ர மக்க ளாகி
ஏச்சற்று வாழ்வார்கள் எண்ணும் எண்ணம்
    எல்லாமும் பெறுவார்கள் இதற்கே யோகம். 133

சுவர்வைத்துச் சித்திரங்கள் தீட்டவேண்டும்
    என்னுமொரு சொல்லினிலே யோகம் உண்டு
தவறான பொருள் கொண்டோர் யோகம் என்று
    தாழ்இட்ட அறைக்குள்ளே புகுந்து குந்தி
அவமாகி அவ்வறையின் அழுக்குக் காற்றை
    அனவரதம் நஞ்சாக அருந்தி மக்கள்
எவராலும் பரிகசிக்கும் நோய்கள் பெற்றே
    இளைத்துடலம் குறுகிஉயிர் வாடி நிற்பார். 134

நீரோடை மலைப்பாங்கு மலர்கள் பூத்து
    நின்றசையும் செடிகொடிகள் மரங்கள் மேலே
நேராகத் தங்கிவரும் நல்ல காற்றில்
    நிமிர்ந்து வரும் செங்கதிரின் கிரணந் தன்னில்
சோராமல் நமதுயிரை உடலைக் காக்கும்
    சோதியணு மிகவுண்டு மூக்கி னாலே
வாரிஅதை அமுதாக அருந்தி யின்ப
    வாழ்க்கையிலே மிதப்பதுவே யோகம் ஆமே. 135

குருவென்று சிலபேர்கள் துவசம் கட்டிக்
    குவலயத்தார் அறிவொளியை மறைத்து விட்டார்
அறிவாய்நீ குருவென்றால் ஒளிஎன் றர்த்தம்
    அறிவினையே குருவென்று காணமாட்டார்
இருளான வழிசென்று தளருகின்றார்
    இவ்வுலகில் அடிமைகளாய் வாழுகின்றார்

ஒருபோதும் துன்பமிலை கவலை யில்லை
உலகத்தின் போக்குதனை உணர்ந்து கொள்வாய். 136

மனிதகுலம் பகையின்றி ஒன்றாய்க் கூடி
மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு வழிகள் சொல்வார்
கனிகின்ற மனமின்றி மனிதர் தம்மைக்
கசக்கிஉயிர் குடிக்கின்ற கயமை நீக்கார்
இனிமைதரும் செல்வமெலாம் சுரக்கும் இந்த
எழில் உலக வாழ்க்கையினைத் துன்பம் என்பார்
புனிதமிலார் இவர் தம்மைக் குருவென்றெண்ணிப்
பூவுலகில் அறிவில்லார் தவித்துநிற்பார். 137

எப்பொருளை யார்சொல்லக் கேட்ட போதும்
இதயத்தில் அப்படியே பதித்துக் கொள்ளேல்
அப்பொருளை நன்றாக அறிவினாலே
அலசி அதன் உண்மையினை அறிதல் வேண்டும்
தப்பாத அறிவுடைமை இதுவே யாகும்
தமிழ்ப்பெரியார் வள்ளுவனார் சொன்ன வார்த்தை
இப்பாரில் எல்லோரும் இதனைச் செய்தால்
ஏமாற்றும் குருமார்கள் ஒழிந்து போவார். 138

மனத்திலெழும் நினைப்புகளை எடுத்துக் கூற
மாநிலத்தில் மொழிகள் பல பிறந்த தப்பா!
சினத்துடனே மொழிச்சண்டைத் தீயில் மூழ்கிச்
சீறுகின்றீர் பாம்பாகிப் பூனை யாகிக்
கனைக்கின்றீர் தெய்வமொழி எமதாம் என்றே
காசினியில் எம்மொழியும் தெய்வ மாகும்
வனப்புடைய பலகலைகள் அறிவு நூல்கள்
வழங்குமொரு மொழியிலே தெய்வம் வாழும். 139

பொய்மாயப் படுகுழியில் வீழா வாறு
புத்தியிலே அறிவொளியை ஏற்றி வைத்தே

மெய்யான வழியேகி இன்ப வெள்ளம்
　　மேவுமொரு சோலையினை அடையும் வண்ணம்
நையாத பலநூல்கள் எழுதிக் காட்டும்
　　நன்மொழியே தெய்வீகம் நிறைந்த தென்பர்
ஐயா நீ வீண்வாதம் பேச வேண்டாம்
　　அறிவுக்குத் துணையாக மொழியைக் கொள்வாய். 140

இயற்கையிலே வாழ்கின்ற செல்வ மெல்லாம்
　　இன்னின்ன வெனக்கூறி விளக்க வேண்டும்
தயக்கமற மக்கள்எலாம் அவைகள் கொண்டு
　　தளராமல் வாழவழி காட்ட வேண்டும்
வியக்கும்வகை பலபுதிய தொழில்கள் கண்டு
　　வேதனைகள் தவிர்ந்துலகம் ஓங்க வேண்டும்
நயக்கும்வகை இவைகூறும் நூல்கள் கொண்ட
　　நன்மொழியே தெய்வமொழி நம்புவாயே. 141

அந்நாளில் எம்மொழியில் நூல்கள் எல்லாம்
　　அடுக்காக இருந்தனவாம் அவைகள் முற்றும்
இந்நாளில் இருந்தவிடம் அறிதற் கில்லை
　　எனவிங்கே பழம்பெருமை பேச வேண்டாம்
எந்நாட்டில் எப்புதுமை தோன்றினாலும்
　　எழுதியதை நம்மொழியில் குவிக்க வேண்டும்
பின்னாளில் நமதுகுலம் அறிந்து கொள்ளப்
　　பெருநூல்கள் பலசெய்து சேர்க்க வேண்டும். 142

உலகமொரு கூட்டுறவாய்ச் சேர்ந்து நின்றால்
　　ஒருநாடும் துன்பத்தில் வாழ்தல் இல்லை
கலகமெலாம் அழிந்துவிடும் கலைகள் ஓங்கும்
　　காசினியில் இன்பத்தேன் ஆறாய் ஓடும்
பலமொழிகள் வேற்றுமைகள் நீங்க வேண்டும்
　　பயனுடைய ஒருமொழியே ஓங்க வேண்டும்
நிலவுலகம் இந்நிலையை அடையுங் காலம்
　　நிச்சயமாய் உண்டென்று நம்பு வாயே. 143

வறுமையெனும் கொடும்பாவிப் பேய்பிடித்தால்
வனிதைமார் அழகழிவர் கற்பை விற்பார்
அருமையுடன் நேசித்த மனைவி மக்கள்
அன்னையரைத் தந்தையரைப் பார்க்க மாட்டார்
பெருமையெலாம் மறைந்துவிடும் நாட்டில் எங்கும்
பேதைமையே தலைதூக்கி ஆட்சி செய்யும்
ஒருமையுடன் நாமுறைந்தால் இந்தப் பேயை
ஒழித்துரிமை யுடன்வாழ்வோம் உணருவீரே. 144

கொத்தான மலர்தேடி வண்டு தேனைக்
குடித்தினிய இசைபாடிப் பறந்து நிற்கும்
பித்துடையார் இதைக்காணார் கவலை கொள்வார்
பேதைமையால் சோதிடங்கள் பார்த்து நிற்பார்
எத்தினந்தான் துயர்நீங்கும் இன்பம் எய்தும்
என்றறியக் கைரேகை அளந்து பார்பார்
சத்தியமே உரைக்கின்றேன் உயர்வு தாழ்வு
சமமாகும் தளராமல் உழைப்போ மானால். 145

இன்புறுதற் கிவ்வுலகில் பிறந்தோம் என்றே
எண்ணுபவர் எந்நலமும் எய்தி வாழ்வார்
துன்புறவே மனிதகுலம் தோன்றிற் றென்பார்
துயர்ச்சேற்றில் எந்நாளும் அழுந்தி நிற்பார்
அன்புறுவீர் பிரிவினைகள் அழித்து நிற்பீர்
அறிவென்னும் விளக்கேற்றி இருள் கெடுப்பீர்
என்செய்வோம் எனவெண்ணும் கோழை நெஞ்சம்
இல்லாத வகைசெய்வீர் வெற்றி சேர்வீர். 146

கரும்புதரும் சாறருந்த விருப்பம் உற்றால்
கடித்ததனை மென்று உறிஞ்சிச் சுவைக்க வேண்டும்
இரும்பாலை தனிலாட்டிப் பிழிந்திட் டாலும்
இனியசுவை ரசம்பெற்று மகிழ்ந்து நிற்போம்

பெரும்புவியில் செல்வமெலாம் வாழும் என்றே
பேசிடினும் முயற்சி ஒரு சிறிதும் இன்றி
இருந்துவிடின் அவைநம்மை அடைதல் இல்லை
என்றும்போல் இருள் உலகில் வாழு வோமே. 147

ஒளிவீசி எழும்கதிரின் சுழற்சி யின்றேல்
உலகுநிலை நிற்றல்இலை உதிர்ந்து போகும்
களியூட்ட நிலவெறிக்கும் மதியும் இல்லை
கடலும் அலை வீசாமல் ஓய்ந்து நிற்கும்
தெளிவான மகிழ்ச்சியுடன் மாந்த ரெல்லாம்
தேசத்தில் அமைதியுடன் வாழ மாட்டார்
வெளியாகும் கலையில்லை தெய்வம் இல்லை
வேதமிலை இன்பமிலை ஒன்றும் இல்லை. 148

நாத்திகனே என்றென்னை யிகழ வேண்டாம்
நான்சொன்ன வார்த்தையெலாம் புதிய தல்ல
ஆத்திரத்தை மனங்கொண்டால் உண்மை காணாய்
அறிவின்முனை மழுங்கிவிடும் ஆய்ந்து பார்ப்பாய்
சாத்திரத்தில் உள்ளபொருள் நாஸ்தி என்றால்
சகத்திலே இல்லையெனும் அர்த்தம் அப்பா
காத்திரமாய் எல்லோரும் வாழ்வ தற்கே
காசினியின் இயற்கைவளம் காண்பாய் என்றேன். 149

மெய்யாகச் சொல்கின்றேன் கண்டு கொள்வாய்
மேதினியில் இன்பத்தேன் அருந்தி வாழ்வாய்
பொய்யான கதைகளெலாம் நம்ப வேண்டாம்
புலம்பாதே சுயநலத்தார் வலையில் வீழ்ந்தே
கையாலே ஆகாத சோம்பர் கூட்டம்
கடவுள் தலை விதியென்று வருந்தி நிற்பார்
நையாமல் உள்ளத்தை ஆண்மை கொள்வாய்
நலமளிக்கும் துணையாகும் அறிவே காண்பாய். 150

# கடவுள் எங்கே?

## 1

“அன்னியர்கள் ஆள்கின்ற எந்த நாடும்
அரும்பசியால் நோயினால் வறுமைப் பேயால்
தன்நிலைமை கெட்டழியும்; மக்கள் எல்லாம்;
தவிப் பார்கள்; தன் மானம் பறி கொடுப்பார்;
இந்நிலைமை மாறுதற்கே உரிமை வேண்டும்;
எல்லோரும் ஒன்றாகி முழக்கம் செய்வோம்;
எந்நிலைமை வந்தாலும் அசைய மாட்டோம்;
அகிம்சை வழிப் போர் புரிவோம்” என்றார் காந்தி. 1

## வெற்றி பெற்றோம்

சத்தியமும் நேர்மையுமே துணையாக் கொண்ட
சாதுமகான் காந்தியார் மொழியை நம்பி
உத்தமர்கள் எண்ணற்றோர் எழுந்து வந்தார்
உழைத்தார்கள்;தாய் நாட்டுக்கு உயிர் கொடுத்தார்;
பத்தியாய்ப் பாட்டாளர், உழவர், வீரர்
படை திரண்டார்; காந்தி வழி பற்றி நின்றார்;
அத்தியிலே சுரங்கண்ட ஆங்கி லேயர்;
ஆத்திரத்தால் அடக்குமுறைக் கொடுமை செய்தார். 2

“எக்கொடுமை செய்தாலும் அஞ்ச மாட்டோம்;
எம்நாட்டு விடுதலைக்காய் எதுவும் செய்வோம்;
துக்கமெலாம் பார்த்துவிட்டோம் அடிமை வாழ்வில்;
துணிந்துவிட்டோம் சுதந்திரத்தைப் பெறுவ தென்றே”

மக்களெல்லாம் திரண்டெழுந்த நிலையைக் கண்டார்;
மனம்நடுங்கிப் போனார்கள் வெள்ளைக் காரார்;
இக்கணமே அரசு ஏற்பீர் என்று போனார்;
எளிதிலே குடியரசை நாமும் பெற்றோம். 3

## கொண்டாட்டம்

நாடெங்கும் கொடிஏற்றி விழாக்கள் செய்தோம்;
நாம்பெற்ற சுதந்திரத்தை வாழ்த்தி நின்றோம்;
ஓடிப்போம் வறுமைப்பேய் என மகிழ்ந்தோம்;
உழைப்பார்கள் எல்லோரும் குதுகலித்தார்;
பாடினோம் நமது அடிமை ஒழிந்தது என்றே;
பலித்துவிடும் காந்தியார் வாக்கும் என்றோம்;
கூடினவே துயர்,வறுமை; இவைகள் எல்லாம்
கொஞ்சமும் குறையவிலை; உண்மை யுண்மை. 4

இப்படியே பத்தாண்டு கழிந்த பின்னும்;
ஏதும்ஒரு மாறுதலும் காணவில்லை;
உப்பு, அரிசி, புளி பருப்பாம் உணவுப் பண்டம்
உடை, மருந்து முதலான பொருள்கள் எல்லாம்
தப்பாமல் விஷம்போல விலைகள் ஏறி
விற்பதையே காண்கின்றோம்; குறைய வில்லை;
அப்பா! ஈது என்னசுய ராஜ்யம்! என்றே
அலுப்படைந்தார்;எல்லோரும் வெறுப்புக் கொண்டார் 5

## ஆளுவோர்

அதிகார பீடத்தில் ஏறி நிற்போர்,
‘ஆகட்டும் , பார்க்கின்றோம், பொறுங்கள்’ என்பார்.
கதியின்றித் தினந்தோறும் செத்துப் போகும்
மக்கள் துயர் காணாத குருடர் ஆனார்;
சதிகாரர் சுகமாக வாழு கின்றார்
சாதி மத இனம் எனும் படைப்பலத்தால்;

கொதிநீரில் அகப்பட்ட புழுவைப் போலக்
    கொடுமையால் வேகுகின்றார் ஏழை மக்கள். 6

இத்தகைய நிலை எண்ணி ஏங்கும் நாளில்,
    எம் தலைவன் காந்தியார் விழாவைக் காண
சுத்தவெண் ணிறஉடையை உடுத்திக் கொண்டேன்;
    ஊர் சுற்றப் புறப்பட்டேன் கால் நடையாய்;
எத்திசையில் போவதெனும் எண்ணம் குன்றி
    எங்கெங்கோ கால்போன வழியே சென்றேன்;
புத்திசரி இல்லாத கார ணத்தால்
    சந்து பொந்துகளில் எல்லாம் புகுந்து போனேன். 7

போன இடங்களில் எல்லாம் ஏழையர்கள் துன்பத்தால்
    புலம்புதலே என் காதைத் தொளைக்கக் கேட்டேன்;
மானம் அதைப் பசியினுக்கே பலிகொடுத்த மாந்தர்பலர்
    'மவராசா! எங்கள் துயர் பார்ப்பீர்' என்றார்;
வானத்தைப் பார்த்திருக்கும் சீமையிலே வளர்ந்தபயிர்
    போல் அவர்கள் எலும்புருவாய் வற்றிநின்றார்;
நான் அவர்கள் படுகின்ற வேதனையைப் பார்த்துமனம்
    நைந்து, வெயில் புழுப்போலத் துடித்து விட்டேன். 8

## 2
## இதுவா சுயராஜ்யம்?

"அன்னியர்கள் நம்நாட்டுச் செல்வம்எல்லாம் சுரண்டுகின்றார்
    ஆதலினால் நம் நாட்டில் செல்வம் இல்லை;
அன்னியர் போய் விட்டால் நம் நாட்டின் ஆறெல்லாம்
    பால் தேனாய் பெருக்கெடுக்கும் ; வறுமை நீங்கும்,
இன்னதற்கே 'சுயராஜ்யம்' என்று சொன்ன காந்திமகான்
    சொல்லை நம்பி இளைஞர்பலர் தியாகம் செய்தார்;
என்ன இது! சுயராஜ்யம் பெற்ற பின்னும் இந்நிலையா?
    இதற்குத்தான் உழைத்தோமோ! நீண்ட காலம்? 9

எறிகின்ற எச்சில்இலைப் பருக்கைக்கே எப்பொழுதும்
வீதியிலே வாசலிலே காத்து நிற்கும்
சொறி பிடித்த நாய்க் கும்பல் தம்மை ஓட்டிச் சுகமாக
அவ்விலைகள் முன் அமர்ந்து வழித்து நக்கும்
வறியவர்கள் தமைக் கண்டேன்; நாமும் ஒரு சமூகம் என
வாழ்த்துகின்றோம்; மானம்இலை;மனிதர் தாமோ!
வெறிபிடித்த சுயநலத்தார் கைக்கொண்ட உளுத்துபோன
வீண்முறைதான் வேதனையை விளைக்கும் அன்றோ? 10

நடைபாதை, ஒதுங்கும் இடம், அவர்ஓலம் சகிக்க ஒண்ண;
நாற்றம்உள சாக்கடைநீர்ப் பக்கம் எல்லாம்
இடமாகக் குடியிருப்போர் எத்தனையோ குடும்பத்தார்;
இருமல், சொறி குட்டநோய் ஏந்தி நின்றார்;
அடைமழையும், கடுவெயிலும், பனிகுளிரும் அவர் உரிமை;
அநுபவிக்கும் நோய் பிறர்க்கும் பரவச் செய்வார்;
திடம்அற்றார்; எலிக்குஞ்சோ! குழந்தையோ, என்றெண்ணும்
தேராத பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்தார். 11

வெளுப்பான கதராடை அணிந்துகொண்டு மிக முறுக்காய்
விறுவிறுவென வீதிவழி நடந்த யானும்
களைப்பாகி நின்றுவிட்டேன்; கந்தையுடை தரித்த பலர்;
கண்கலங்கி நிற்கின்ற ஆண்பெண் கும்பல்,
வளைத்தார்கள்;எனைச்சூழ்ந்தார்;‘நாங்கள் எல்லாம் வேலையின்றிப்
பட்டினியால் வாடுகின்றோம் எம்மைக் காப்பீர்!
இளைத்தவர்கள் தமையெல்லாம் காப்பதற்கே இவ்வுலகில்
உயிர் துறந்த காந்திமகான் இயக்கத் தீரே’’ 12

என்று அவர்கள் மனங்குமுறிச் சொன்னமொழி சுருக்கென்றே
என்நெஞ்சில் பாய்ந்துவிடத் திகைத்து நின்றேன்;
“இன்று நீர் இவ்வாறு தெருவிலே நின்று ஏங்கக்
காரணந்தான் என்ன? அதைக் கூறும்” என்றேன்;

'நன்றாகப் பெரியதொரு நெசவாலைதனில் உழைத்தோம்
நாங்கள், ஒருநாள், கூலி உயர்த்தக் கேட்டோம்;
சென்றிடுவீர் உமக்கு இங்கே வேலைஇல்லை; என்று எம்மைச்
சீறினார் முதலாளி விரட்டி விட்டார். 13

'பலநாள்கள் பட்டினியால் களைப்புற்றோம் பரிதவித்தோம்;
பாலர்களைப் பெண்கள் தமைப் பறிகொடுத்தோம்,
அலையாத நாள் இல்லை வேலைதேடி; ஆதரவாய்,
'அஞ்சாதீர்' எனச் சொல்ல ஆளே காணோம்;
தலைவர்என உமையெண்ணிக் குறைசொல்லி முறையிட்டோம்
தயவுடனே எங்கள் துயர் தீர்ப்பீர்!'' என்றார்;
கலகலலெனக் கண்ணீரைச் சிந்திவிட்டேன், ''காத்திருங்கள்
கலங்காதீர்! அரசினரைக் காணுகின்றேன்.'' 14

இவ்வாறு சொல்லி, அவர் தமைநிறுத்தி,ஏகினேன்
அரசாங்க யந்திரத்தை இயக்குவோர்பால்;
'எவ்வகைதான் தீர்ப்பார்கள், இவர்களைப் போல் திண்டாடும்
ஏழையர்கள் எத்தனையோ கோடிப் பேர்கள்;
செவ்வையிலா அரசாங்கம்; பழம்பசலிச் சட்டதிட்டம்;
சீர்பட்டால் ஒழிய வழி வேறே இல்லை;
கைவிரிப்பார் அரசியலார்' எனும் நினைப்பும் இடைத்தடுக்கக்
கால்கடுக்க அவர்களிடம் சென்று சொன்னேன். 15

நான் நினைத்தபடி அவர்கள் கைவிரித்தார்;ஏதொன்றும்
நடக்கவில்லை;நம்பிக்கை இழந்து விட்டேன்;
தீனர்களாம் இவர்கள் உயிர் காப்பதற்கு வழி என்ன
என்றெண்ணி மனம்குழம்பித் திகைக்கும் போது
கானகத்தே திசை மயங்கிப் போனவர்கள், நேரான
வழிஒன்று கண்டு களிப்பு உற்றதே போல்,
வானத்தில் நிலவுலகில் எங்கும்வாழ் கடவுள் அடி
வணங்கி அவர் துயர் தீர்க்க முடிவு செய்தேன். 16

பஞ்சத்தால் நோய்களால் உடல்தேயும் அம்மக்கள்
பரிதாபநிலைகண்டு கலங்கிப் போனேன்;
'அஞ்சாதீர் நீங்கள் எலாம் மனிதர்களாய் வாழந்திடலாம்;
அதற்கான வழி வேறு காண்பேன்' என்றேன்;
எஞ்சாதபெரும் கருணைக் கடவுளிடம் இவர் துன்பம்
எடுத்துரைக்கும் துணிவுடனே தேடிப் போனேன்;
கொஞ்சம் அலநான்பட்ட துன்பங்கள் அவைகளையே
கூறுகிறேன் சுருக்கமாய்க் கேட்டுக் கொள்வீர். 17

## கோயில் காட்சி

உலகத்தைக் காக்கின்ற ஒரு கடவுள் திருமால் என்றே
வரைகின்ற பல நூல்கள், வார்த்தை கேட்டேன்;
'நலம் பெறலாம் அவர் மூலம்;நடக்கின்ற கொடுமைகளை
நவிலுவோம்' என்று நான் துணிவு கொண்டேன்.
கலகலெனப் பறவையினம் கூச்சலிடும் சோலைசூழ்
காவிரியின் கரைவழியே நடந்து போனேன்;
பலமக்கள் பணிந்தேத்திப் புகழ்கின்ற சீரங்கம்
பார்த்து அரங்கர் கோயிற்குள் புகுந்து நின்றேன். 18

படுத்திருக்கும் அரங்கரிடம் திடுதிடென நான் சென்றேன்;
பார்த்தேன்; ஓர் சிலை உருவம்! அசையவில்லை;
அடுத்தவர்கள் தமை நோக்கி.'ஐய்யா இக்கடவுள் தான்
அவனியினைக் காப்பதோ' என்று கேட்டேன்;
திடுக்கிட்டார்; எனைப்பார்த்தார்.''யார் ஐய்யா! புது மனிதன்;
திருவரங்கன் புகழ் அறியாய்!என்று சொன்னார்.
கொடுத்தார்கள் அரங்கர்க்குக் காணிக்கை, கும்பிட்டார்
கோவில்தனை வலமாகச் சுற்றி வந்தார். 19

கோவிலிலே அது சமயம் நான்கண்ட காட்சிகளைக்
கூறுகிறேன். பதைக்காமல் குறித்துக் கொள்வீர்;
பாவம் எலாம் போக்கும் இடம் ஆதலினால்,வேசையர்கள்,
பாதகர்கள், பண்டங்கள் பதுக்கி விற்போர்,

சீலர்களை வதைசெய்யும் வஞ்சகர்கள், ஏழைகளின்
செல்வத்தைக் கொள்ளை கொள்ளும் இரக்கம் அற்றோர்
யாவருக்கும் உறைவிடமாய் இருக்கும் ஒரு காட்சிதான்
யான் கண்டேன்; மனமயக்கம் தீர்த்துவிட்டேன். 20

முத்தொழிலும் செய்கின்ற சிவபெருமான் முதற்கடவுள்
முறையிடுவோர் குறைஎல்லாம் தீர்த்து வைப்பான்;
இத்தரையில் அவன் இருக்கும் இடம் தில்லை திருநகரம்
என்பவர்கள் சொல்லறிய, அங்குப் போனேன்;
பத்தர் பணி நடராஜர் உருவத்தை நன்றாகப்
பார்த்தேன் நான் அது சிறிதும் அசையவில்லை
வைத்தகால் கைகளெல்லாம் வைத்தபடி இருந்தனவே;
வாய்திறந்து பேசும் எனத் தோன்றவில்லை. 21

பேசாத பதுமையிடம் குறை சொல்லி என்ன பயன்
என எண்ணிப் பின்வாங்கி வந்து நின்றேன்
ஆசாட பூதிகளாய் ஆண்பெண்கள் பலபேர்கள்
அங்குநடம் ஆடுவதைப் பார்த்து விட்டேன்;
வேசையர்கள் வாழுகின்ற விடுதிகளே கோவில், என
விளம்பினார் காந்திமகான்; உண்மை கண்டேன்;
பூசை, நை வேத்யங்கள், அர்ச்சனைகள் செய்யஎனப்
பொருள்பறிக்கும் பூசாரிக் கும்பல் கண்டேன். 22

ஞானம் இலாக் காரணத்தால் கோவில்களில் வாழ் கடவுள்
நமைக் கண்டு பேசவில்லை என்று கொண்டேன்;
ஆனதனால் அறிவுடைய குருமார்கள் இடம் போனேன்.
'ஆண்டவனைக் காட்டுங்கள்' என்று கேட்டேன்;
'தீனதயா பரன்வாழும் இடம் இது தான்' என்றுனக்குத்
தெரிவிக்க தனிஇடமே இல்லை அப்பா;
மோனமுடன் அவன் எங்கும் நிறைந்திருக்கும் ஒருசோதி,
முடிவில்லா அருளாளன்; உணர்க என்றார். 23

**4**

ஐயன்மீர் உமதுமொழி மனங்கொண்டேன், அருளாளன்
கடவுள் எனில், சில கேள்வி கேட்கிறேன் நான்
வையத்தே பாழ்நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்வார்
வயிறார உணவின்றி வாடுகின்றார்;
கையலுக்க உடல் வேர்க்க துணிநெய்து களைக்கின்றார்கள்
கட்டுதற்கு உடையின்றிக் கவலுகின்றார்;
வெயிலிலே தலைவெடிக்க நின்று மனைகட்டுவோர்கள்
வீடின்றி, வெறுவெளியில் வாடுகின்றார். 24

உடல் வருந்தி நீர்பாய்ச்சிக் களைக்கொத்திப் பலகனிகள்
உதிர்கின்ற தோட்டங்கள் வளர்த்து வைத்தார்
நடமாடும் பிணங்கள் எனத் திரிகின்றார்; நல்லஒரு
பழந்தின்று சுவை பார்க்க வகையும் இல்லை;
திடங்குறைத்து கண் குழிந்து. கன்னங்கள் பொந்தாகித்
தெய்வமே என்றேங்கித் தவித்து நின்றார்,
அடிவயிறும் முதுகெலும்பும் ஒன்றாகி ஒடிகின்ற
அவர் நிலையை ஏன் கடவுள் காணவில்லை? 25

ஏழைகளின் கண்ணீரைக் கண்டுள்ளம் இரங்கிடார்;
இளங்குழந்தைப் பசிதணிக்கப் பாலும் ஈயார்;
சூழாமல் கற்சிலைமேல் தேன் எண்ணெய் பால் வார்ப்பார்;
சுவைப் பஞ்சா மிர்தத்தைச் சும்மா சாய்ப்பார்;
பாழாகச் செய்வார்கள்; பக்தர்களைப் போல் நடிப்பார்;
பசித்தோர்க்குப் பிடிச்சோறும் கொடுக்கமாட்டார்;
வாழாமல்எளியோரை வதைக்கின்றார். கல்மனத்தார்;
வஞ்சகரை ஏன்கடவுள் கேட்கவில்லை? 26

நிலத்திலே நடந்தறியாச் சிறுகும்பல், 'நெல்விளைதல்
மரத்திலோ செடியிலோ? என்று கேட்பார்;
பலத்திலே மிகுந்தவராய்ப் பண்டங்கள் முழுவதையும்
பதுக்குவார்; ஏழைகளைப் பசிக்க வைப்பார்;

குலத்திலே உயர்ந்தவராய்க் கபோகம் அடைவார்கள்;
குதூகலாமாய்க் கும்மாளம் கொட்டி வாழ்வார்;
கலத்திலே இருந்துநடுக் கடல்வீழ்ந்தார் போல் தவிக்கும்
ஏழைகளைக் காக்கும் ஒரு கடவுள் காணேன். 27

உழைக்கின்றான் உணவில்லை; உடையும் இல்லை; நிம்மதியாய்
உறங்குதற்குச் சிறுகுடிசை கூட இல்லை;
தழைக்கின்றார் வாய்வீச்சுச் சோம்பேறிக் குள்ளமக்கள்;
தயவுடையீர்! இது கடவுள் நீதி யாமோ?
அழைக்கின்றார், 'கடவுளே எம்துயரம் அழிப்பாய் என்றே;
அவர் குறையைக் கேட்கவில்லை; காது செவிடோ?
பிழைக்கின்றார் சுயநலத்தார் தெய்வத்தின் பேர் சொல்லி
என்றுசிலர் பேசுவதில் பிழைதான் உண்டோ? 28

மனிதர்களைப் பிரிப்பதுஎது ஆனாலும் அதனை முற்றும்
மாற்றுவதே இவ்வுலகில் இனிநாம் செய்யும்
புனிதமாம் பணியென்று சொல்வோரைத் துரோகிஎனப்
புகல்கின்றார்; சட்டத்தால் அடக்கு கின்றார்;
கனிவுள்ள மனம் படைத்த கடவுள் இதை அறியாரோ?
கண்மூடி மவுனியாய் இருப்ப தேனோ?
அநியாயம் செய்வோரே செல்வாக்குள் வாழுகின்றார்;
அவர்திமிரை அடக்க ஒருகடவுள் காணோம். 29

ஏமாறோம் இனி நாங்கள் முன்போல; எமது உழைப்பின்
பெரும்பயனை இன்னதென உணர்ந்து விட்டோம்;
பூமியிலே யாருக்கும் இனி அடிமையாகோம்; புழுபூச்சி
போல் ஒடுங்கி உயிர் வாழ ஒப்ப மாட்டோம்;
சேமம்உற நாமெல்லாம் ஒன்றாவோம்; சிறந்ததொரு
புதிய சமுதாயத்தைச் சிருஷ்டி செய்வோம்;
தீமையிலா வாழ்வடைவோம்; என்று சொன்னால், சுயநலத்தார்
தீவிரமாய் அடக்கிவிட முனைகின் றாரே. 30

## கடவுள் இருந்தால்?

எல்லோரும் ஒரு குலமாய் வாழ வேண்டும்;
இழிந்தநிலை, உயர்ந்த நிலை என்னும் பேதம் ஒழிய வேண்டும்;
பொல்லாத சாதி மதப் போர் கிளம்பிப்
பூவுலகில் நஞ்சுதனைப் பயிர்செய்வோர் மடிய வேண்டும்,
இல்லாத பொல்லாத எடுத்துரைத்தே
ஏழைகளை ஏமாற்றும் புரட்டர்களை எதிர்க்கவேண்டும்;
செல்லாத காசாகிச் சுரண்டுவோர்கள்
சீர் அழிந்து கெடவேண்டும் கடவுள் உயிர் வாழும் ஆனால் 31

எளியோரை உயிர்வருத்த வதைக்கின்ற வலியார்தம்மை
இந்நிலத்தே தெய்வந்தான் வதைக்கும் என்றார்;
களிமிகுந்தே கொள்ளையர்கள் வாழுகின்றார்; ஏழைமக்கள்
காற்றில்லாப் புழுக்கறையுள் வெந்து சாவார்;
தெளிவாகக் காண்கின்றோம்; கொடியாரிடம் மலைபோல
தினந்தினமும் சுகம் செல்வம் சேரக் காண்போம்;
ஒளிவாகிக் கடவுள் தான் ஓடியதோ;விரைவாக
ஓடுங்கால் விழுந்துயிரை விட்ட தேயோ! 32

பெண்ணாகப் பிறந்த ஓர் ஏழைதான் கணவன் தன்னைப்
பிள்ளைகளை இழந்து அகதி யாகிவிட்டால்
மண்மீதில் அவள் தனியாய் வாழ்வதற்கு வழியே இல்லை;
மானத்தை விலைபேசி வாழ வேண்டும்;
கண்கண்ட காட்சியிது; திமிர்பிடித்தோர் அப்பெண்ணின்
கற்புறிஞ்சி நடுத்தெருவில் அலைய வைப்பார்;
அன்புடனே இப்பெண்கள் கடவுள் தன்னை அழைத்தாலும்
அவர் வந்து மானத்தை காப்ப தில்லை. 33

"நாட்டிற்கே உழைப்பதென முன்வந்தோம், நாங்கள் உங்கள்
நலம் பெருக எந்நாளும் பணிகள் செய்வோம்;
ஓட்டு எமக்கே கொடுங்கள்" எனப் பல் இளிப்பார்; பெற்ற பின்னர்
ஒரு சிறிதும் நமைப்பற்றி நினைக்க மாட்டார்;

கூட்டாக அவர்களெல்லாம் குறுக்கு வழி சென்று பொருள்
குவிப்பதிலே குறியாக நடந்து கொள்வர்;
கேட்டாலோ சினங்கொள்வார்; கெடுதி பல செய்வார்கள்;
கீழ்மக்கள் தமைக்கேட்கும் கடவுள் காணேன். 34

இத்தகைய பலகேள்வி மடமடென்று கேட்டவுடன்
ஏதொன்றும் புரியாமல் திகைத்து விட்டார்;
பித்துடை மனிதனோ, அன்றியொரு பேதைதானோ
எனவெண்ணி விழிசிவந்து வெறித்துப் பார்த்தார்
உத்தரந்தான் எதிப்பார்த்தேன்; ஒருபதிலும் வரவில்லை;
உடல் நடுங்கி வியர்வையினால் நனைந்து போனார்;
வித்தகர்கள் முகங்களிலே பிணத்தோற்றம் குடியேற,
வேதனையால் தலைமேலே கையை வைத்தார். 35

"ஏதடா சனியனாய் இவன் வந்தான்; இன்று நம்மை
ஏதேதோ கேள்விகளால் குத்துகின்றான்;
போதனையால் இவன் மனதை மாற்றுதற்கு முடியாது;
புத்தியுள்ளான்; பகுத்தறிவு பிடித்து நின்றான்;
பாதகனால் நாம்செய்த பலகால மாயமெலாம்
பஞ்சுபோல் பறக்கும்" என நினைத்து விட்டார்;
ஆதலினால் அவர்நெஞ்சில் பயமெனும் தீப் பற்றிவிட
அசையாத சிலைகள் போல விழித்து நின்றார். 36

என்கேள்விக்கு ஏற்றவிடை ஒன்றும் அவர் தரவில்லை;
இவையெல்லாம் கடவுள் திரு விளையாட் டென்றார்;
"அன்புடையோன் தன் குழந்தை அழக்கண்டால் இரக்கமின்றி
அடித்தடித்தே அதன்உயிரைப் போக்கு வானோ?
கண்படைத்த கடவுள் இதைச் செய்யவானோ?சொல்லுகின்ற
காரணந்தான் சரியல்ல" என்று சொன்னேன்;
உன்போன்ற எண்ணத்தார் நாத்திகர்கள்; கெடுப்பார்கள்
உலகத்தை; முன் நில்லேல்! போ! போ! என்றார். 37

## தீர்மானித்தேன்

இருட்டறையில் புகுந்தவுடன் மின்சார விளக்கேற்றி
இருக்கின்ற நிலைகண்டான் தன்னைப் போலப்
புரட்டெல்லாம் கண்டறிந்தேன் என்மனத்தேதி டீரென்று
புகுந்ததோர் ஆவேசப் பெருக்கி னாலே;
குருட்டுக்கண் உள்ளவர்கள் பார்வையினைப் பெற்றதுபோல்
குழப்பம் எனும் இருள் நீங்கி வெளிச்சம் கண்டேன்;
திருட்டு மனம் உள்ளவரும் ஒளிகின்ற திரையாகும்
கடவுள்எனத் தீர்மானம் செய்துவிட்டேன். 38

அவன் அன்றி ஓர் அணுவும் அசையாதென்று உரைத்த மொழி
அபத்தம் எனத் தெளிவாகத் தெரிந்து கொண்டேன்;
எவன் வலியன், பழி அஞ்சான், கொடுங்கோலன், இரக்கம் இல்லான்,
கல்நெஞ்சன் ஆய்இங்கே இருக்கின்றானோ
அவனே இவ்வுலகத்தை அலங்கோலம் செய்து ஆள்வான்,
ஆற்றல் இலார் அவன்பாதம் பணிந்து நிற்பார்;
தவம் உடையான் செல்வம்உளான்; ஆள்வதற்கே பிறந்தான் என்று
தவறாக ஏழையர்கள் எண்ணி விட்டார். 39

"ஆபத்தில் அழைப்பவரைக் கைவிட்டு விடமாட்டான்
ஆண்டவனே எதிர்வந்து காப்பான்" என்றார்;
"கோபத்தால் துரோபதையைத் துகிலுரிந்த காலத்தே
கோபாலன், கண்ணனே காத்தான்' என்றார்
"சாபத்தால் முதலைவாய் அகப்பட்ட யானையையும்
சக்ரதரன் தோன்றி உயிர் மீட்டான்" என்றார்;
"பாபத்தால் கடவுள் இலை என்றுரைத்த இரணியனைப்
பதைக்க உயிர் போக்கினான் அவனே"என்றார். 40

"பிடி அவலால் கோபாலன் குசேலனுக்குச் செல்வங்கள்
பெருகவைத்தான்" என்று கதை பேசினார்கள்;
அடிமைசெய்யும் வறியவர் பழம்தேங்காய் அர்ப்பணித்தும்
அவர்கள் தாம் செல்வத்தை அடைய வில்லை;

படிமீதில் உணவின்றி நோய்களால் ஏழைபடும்
பாடழிக்க; வரும்கடவுள் ஒன்றும் இல்லை;
கொடுமை பல செய்பவரே செல்வத்தில் மிதக்கின்றார்;
குற்றங்கள் புரியாதார் வருந்து கின்றார். 41

"அவதியினால் மனம் ஒடிந்த அடியவரைக் காப்பாற்ற
அளவற்ற விளையாடல் புரிந்தான்" என்றே
சிவபெருமான் தனைப்பற்றிப் பலகதைகள் கற்பனைகள்
சிறப்பாக எழுதிதினம் படிக்கின் றார்கள்;
"புவி தனிலே வாழ்மக்கள் துன்பங்கள் போக்கவே
புனிதராம் ஏசும் அவதரித்தார்" என்றார்
"கவலை ஒழிந்து இன்பமுடன் மக்கள் எலாம் வாழவே
கடவுள் பல அவதாரம் எடுத்தார்" என்றார். 42

எத்தனையோ பலகதைகள் இவ்வாறு புனைந்தார்கள்;
ஏழைகளுக்கு இவைகளால் பயனேயில்லை
சொத்தை மொழி என்றறியார்; வீழ்ந்தார்கள் படுகுழியில்
சோரர்களால் நலம் இழந்தார்; சோர்ந்து போனார்;
இத்தரையில் எண்ணற்றோர் " எமைக் காப்பாய் ஆண்டவனே "
என புலம்பித் தெருவெல்லம் அலைகின்றார்கள்;
அத்தகையோர் துயர்போக்கும் கடவுள் இல்லை; ஆதலினால்
ஆண்டவனை நம்புவதால் பயனும் உண்டோ? 43

## வழி உண்டா !

"இன்றிருக்கும் மதநீதி புராணங்கள் சட்டங்கள்
எல்லாமும் கொள்ளையர்க்கே காவலாகும்;
நன்றாக அவர் சுகிக்க வகுத்திட்ட கோட்டை; அவை
நாசம் உறச் செய்தால்தான் நமக்கு வாழ்வு;
சென்ற கதை இனிபேசிப் பயன் இல்லை; பொதுமக்கள்
சிந்தையிலே அறிவுநீர் பாய்ச்ச வேண்டும்"
என்றுநான் தீர்மானம் செய்துவிட்டேன்;
ஏதேனும் வேறுவழி இருந்தால் சொல்வீர் 44

இன்னதொரு முடிவுக்கு வந்தபின்னர், ஏழைகளின்
    எலும்புருவம் என் நெஞ்சில் எழுந்து வாட்ட
அன்னவர்கள் இருந்ததிசை வந்தேன்நான்; அவர்கள்எல்லாம்
    ஆனந்தமுடன் என்னை வரவேற்றார்கள்;
“என்ன வழி எங்கட்குக் காட்டுகிறீர் இவ்வுலகில்
    மனிதர் என யாம்வாழ மார்க்கம் உண்டோ?
சொன்னபடி செய்கின்றோம்” என்றார்கள்; சுகமிழந்து
    சோர்வுற்ற கூட்டத்தார் என்னைச் சூழ்ந்தார். 45

## புது விதி செய்வோம் !

கதியற்ற தோழர்காள் ! உங்கள் துயர் கடிதிலே
    ஓட்டும் வழி நான் ஒன்றும் காணவில்லை;
புதியதொரு விதிசெய்வோம்; பழமை சாய்ப்போம்!பூவுலகில்
    அதைக் காப்போம்; பசிப்பேயை மாளவைப்போம்!
அதிகார வெறி முளைக்கும் குழி தூர்ப்போம் ! அக்கிரமக்
    காரர்களின் திட்டமெலாம் தீயில்வைப்போம்
மதியுடைய மனிதர்களை மடையராக்கும் கருவிகளை
    மண்ணோரு மண்ணாகப் பொடிகள் செய்வோம்! 46

ஒற்றுமையாய் நாமெல்லாம் ஒன்றுகூடி
    உரிமைபெற ஆவேசம் கொண்டு விட்டால்,
சற்றும்நமைத் தடுப்பவர்கள் சகத்தில் இல்லை;
    சடசடெனச் சாய்வார்கள் எதிர்த்து நிற்போர்;
முற்றும் இனி ஒருவரையும் நம்பவேண்டாம்!
    பகுத்தறிவைத் துணைக்கொள்வீர்! மூர்க்கர்எலாம்
புற்றில் உறை பாம்பாகச் சீறினாலும்
    புறங்கொடோம்; அவர்பல்லை போக்குவோமே! 47

கடவுள் விதிஎன்னும் கயிறு கொண்டே
    கட்டிநமை அடக்கினார் வஞ்சக் குள்ளர்;
திடமுடனே நாம்எல்லாம் வீதத்தோடு
    திரண்டெழுந்தால் அப்பாசம் அறுந்துவிழும்;

கிடுகிடெனச் சரிந்துவிடும் அடிமை வாழ்வும்;
கீழ்மேல்கள் ஒழிந்துசமம் ஆகிவாழ் வோம்;
படையுடனே யார்நம்மை எதிர்த் திட்டாலும்
பயப்படோம்! பகுத்தறிவுக் கருவி கொண்டோம். 48

நமைக்கடவுள் காக்கும்என நம்பவேண்டாம்;
நயவஞ்சகக் கூட்டத்தார் வாழ்வதற்கே
தமைக்காக்கும் மதில்களாம் கடவுள், மதம்,
தலைவிதிகள்; அழியாமல் காத்து நின்றார்;
உமையெலாம் பஞ்சைகளாய் உழைப்பதற்கே
உண்டாக்கி னான்என்றே உளறிவைத்தார்;
இமைப் பொழுதும் இனிப்பொறுமை காட்டவேண்டும்
இப்பொழுதே ஒற்றுமையாய் அணிவகுப்பீர்! 49

ஒருதனியாய்க் காட்டுதற்குக் கடவுள் இல்லை;
உம்உள்ளே அவன் இருப்பான் உணர்ந்து கொள்வீர்!
அறிவுருவே அவன் வடிவம்; அன்புள்ளம்
ஆண்மை,ஒளி, முயற்சி எலாம் அவனே ஆவன்;
கருதுவீர் இவ்வுண்மை; உறுதிகொள்வீர்!
கலங்காமல் போர்செய்வீர்; வெற்றி காண்பீர்!
சிறிதும்நீர் அஞ்சாதீர்'' என்றுச் சொன்ன
சித்தர்களின் மொழி மனத்தில் கொள்வீர் என்றேன். 50

எல்லோரும் ஆண்மையுடன் எழுந்துவிட்டார்;
''இவ்வுலகில் எமையின்றிக் கடவுள் இல்லை;
பொல்லாமை கொடுஞ்சிறையில் கிடந்து விட்டோம்;
புத்தியிலாத் தன்மையினால் வாழ்விழந்தோம்;
கொள்ளாமல் விடுவதில்லை அடிமைப் பேயை;
குதித்தெழுந்தோம்!'' என்றவர்கள் முழக்கம் செய்தார்;
நல்லதொரு காலம் இது நாட்டுக்கென்றே
நம்பினேன் என்மனத்தில் அமைதிகண்டேன். 51

**''சரஸ்வதி'' 10.11.1958**

# பஞ்சப் பேய்

இந்நாட்டில் எத்திசையும் உணவுப்பஞ்சம்!
என்செய்வோம்! என ஏங்கும் ஓசை கேட்போம்
கன்னெஞ்சம் படைத்தவர்கள் காதின் உள்ளே
கதறி அழும் ஏழைக்குரல் நுழைவதில்லை
எந்நிலைமை வந்தாலும் அவர்கட் கென்ன ?
எப்படியும் தமதுசுக வாழ்வே காண்பார்!
முன்எந்தக் காலத்தும் இதுபோற் பஞ்சம்
மூண்டதிலை; உண்மையிது உணர்ந்து கொள்வீர்! 1

தினந்தோறும் எழுந்துவரும் செய்தி கேட்டால்
திடுக்கிடுவார் மனிதஉளம் படைத்தோர் யாரும்?
மனமுவந்து பெற்றெடுத்து வளர்த்து வந்த
மக்களையும் விற்றார்கள்; பெற்றோர் தம்மை
அனவரதம் அன்புசெய்யும் மனைவிதன்னை,
ஆதரிக்க வழியற்றோர் மாண்டே போனார்;
இனி என்ன வாழ்வென்று பசியால் வாடி
எத்தனையோ குடும்பங்கள் மாளும் அந்தோ! 2

எண்ணற்ற வளங்கொழிக்கும் இந்த நாட்டில்
இறந்தார்கள் பட்டினியால் என்னும்போது
கன்னத்தில் அறைந்தாற் போல் இருக்குதையோ!
காங்கிரசார் ஆள்கின்ற இந்த நாளில்,
அன்னத்திற் குதவாமல் நெல்லை, மற்ற
ஆகாரப் பொருள்களையும் பதுக்குகின்றார்;

தன்னொத்த மனிதர்களின் வாழ்வை எண்ணார்
தப்பித்து வாழ்கிறார்; கேட்பார் இல்லை. 3

கரியநிறக் காகத்தின் வாழ்வு காணார்!
கரைந்தழைக்கும் தன்னினத்தை உணவுக் கண்டால்!
அரியதொரு பிறவிதான் மனிதர் என்பார்!
அவர்செய்யும் அடாத செயல் எண்ணப் போமோ!
சிறியமனம் படைத்தவர்கள் பண்டம் எல்லாம்
சேர்த்தொளிப்பார்; பிறர்க்குதவார்; தாமும் உண்ணார்;
தருமம்என ஏதேதோ தனக்குச் செய்வோர்
தமது குறை பிறர்காணா திருப்பதற்கே. 4

அக்கிரமம் செய்பவரைத் தெய்வம் கொல்லும்
அதைப்பற்றி நமக்கெதற்குக் கவலை யென்பார்
பக்குவமாய்ப் பாமரர்கள் இடையே கோபம்
பரவாமல் செய்வதற்கே இந்த வார்த்தை
அக்காலம் மலையேறி விட்ட தென்போம்!
அரசாங்கம் அவர்வாலை நறுக்க வேண்டும்;
தக்கபடி ஆளுவோர் அடக்கா விட்டால்!
தாமதியார் பொது மக்கள் கிளர்ச்சி செய்வார்; 5

கடமைதனை விரைவாகச் செய்தல் விட்டுக்
கண்டபடி பேசுவதில் பயன் தான் என்ன?
குடிமக்கள் மெலிகின்றார் சாப்பாடின்றி
குடிதண்ணீர் கூடபல இடத்தில் இல்லை;
மடமடெனச் செடி நடுவீர் விதை புதைப்பீர்!
மரமாகும்படி வளர்ப்பீர்! மழையும் பெய்யும்
கொடும் பஞ்சம் இனித்தோன்றா; தென்று கூறிக்
கும்மாளம் போடுவதால், பசியும் போமோ! 6

பொதுமக்கள் பஞ்சமெனும் நெருப்பினாலே
பொசுங்காமல் காப்பதுவே ஆள்வோர் வேலை;

மது வொழித்தோம்! மாற்றினோம் ஜமீனையெல்லாம்
மனிதரெல்லாம் கோயிலுக்குள் போகவிட்டோம்!
புதிய பல திட்டங்கள் எழுதி விட்டோம்!
பொறுப்பாட்சி இது புதிது! பொறுங்கள்! என்றால்
அதிக பசி தாளாமல் வயிறு காயும்
ஆர்தான் இவ்வுபதேசம் கேட்டு நிற்பார். 7

உண்ணுகின்ற உணவுதனை மாற்றிக்கொள்வீர்!
உயர்சத்து பருத்தியிலே உள்ளதென்பார்!
தின்னுதற்குப் பண்டங்கள் கிடைக்கா விட்டால்
தீப்பசியின் கொடுமையினைத் தவிர்க்க வேண்டி
மண்ணினையும் தின்பார்கள்; எதையும் உண்பார்
மாற்றுங்கள் உணவைஎனக் கூறவேண்டாம்!
அன்னவர்கள் தமைவாட்டும் பஞ்சப் பேயை
அழிப்பதுவே அரசினரின் கடமை ஆமே. 8

**“லோகோபகாரி” 30.8.1950**

## கால மழையில்லை

காலை மழையில்லை; கதிரவன் கோபத்தைக்
    காட்டி வதைக்கின்றான் காணீர்
பாலர் பசித்தழும் தன்மையைப் போல் இங்கு
    பலரும் துடிக்கின்றார் பாரீர்! 1

பார்க்கக் குளுமையாய் நன்கு வளர்ந்திட்ட
    பற்பல செடி கொடி எல்லாம்
வார்க்கும் மழையின்றி வாடி வதங்கியே
    வற்றி உலர்ந்திடும் கல்லாய். 2

வானத்து மேகத்தை வாவென் றழைத்திங்கே
    வைத்து விருந்துகள் செய்யும்
கானம் தழைத்த குன்றுகளும் மழை
    காணமல் தம்பித்து நிற்கும். 3

தன்கை மலர்களில் தேன்துளி தாங்கியே
    தாழ்ந்து குடியென்று சொல்லி
அன்பு புரிகின்ற நல்ல மரங்களும்
    ஆடித் தளர்ந்திடும் நின்று. 4

நெற்றி வேர்வைநீர் சிந்தி நிலத்திலே
    நித்தம் உழைக்கின்ற பேர்கள்
வற்றும் கிணறுகள் ஏரிகள் கண்டுள்ளம்
    வாடித் தவிக்கின்றார் சோர்ந்து. 5

பச்சை நிறமுள்ள கம்பளம் போலிங்கு
பார்வைக்குத் தோன்றிய பூமி
வைச்ச அடிவெந்து போகவே செய்திடும்
வண்ணம் எரியுதே சாமி. 6

நெஞ்சத்தில் ஈரம் அற்றவர் போலவே
நீண்ட நதிகளும் கண்டோர்
அஞ்சும் படிஅனல் வீசும் மணலுடன்
அமைந்து கிடந்திடும் இன்றே. 7

பறவை யினங்களும் பருகிடும் நீருக்குப்
பலதிசை நோக்கியே ஓடும்
கறவை மாடுகள் கனல்கண்டு வாடியே
கன்றை அணைத்திட்டு வாடும். 8

**"லோகோபகாரி" 30.8.1950**

## சுழல் காற்று

சுழன்றடிக்குது சுழன்றடிக்குது
    சூறாவளி எனும் காற்றிதுவே
சுற்றிலும் உள்ள புழுதியை வாரிக்
    கண்களில் தூவுது காற்றிதுவே. 1

விரைந்தடிக்குது விரைந்தடிக்குது
    வீட்டின்மேற் கூரைபுரண்டிடவே
வீதியில்உள்ள குப்பைகளைக் கொண்டு
    விண்ணுக்குத்தாவுது காற்றிதுவே. 2

ஏமாறும்மூடர்கள் கண்களில் மண்ணள்ளித்
    தூவிப் பொருள் கொள்ளும் துட்டரைப்போல்
எதிர்படும் ஆடவர் பெண்கள் உடைகளை
    எற்றிப்பறித்திடும் காற்றிதுவே. 3

பள்ளிக்குச்சென்ற பாலகர் தங்கள்
    கைகளில் பற்றிப் புத்தகங்கள்
அள்ளிக் கொண்டேகிடும் காற்றினை கண்டவர்
    ஆவென்றலறியே ஓடிடுவார். 4

ஓட்டைக் குடிசையுள் ஒண்டி உறைந்திடும்
    உத்தம ஏழைகள் துன்புறவே.
காட்டுத்தனமாக உள்ளே புகுந்தவர்
    கையின் உணவினில் மண்ணிடுமே. 5

தாழிட்ட கதவுகள் சாளரம் தம்மையும்
    தட்டித்தடபுடல் செய்வதனால்

வாழ்மனைச் சிறுவரும் மாதரும் என்னென்று,
வந்தெட்டிப் பார்த்துத் திகைத்திடுவார். 6

ஏழைமனிதரைச் செல்வர்கள் தங்கள்
இஷ்டப்படி யாட்டி வைப்பது போல்
வாழை கமுகு போன்ற மரங்களை
வாட்டி வளைத்து முறித்திடுமே. 7

மாமரம் தென்னை மரங்கள் உலுக்கி
மாங்கனி. தேங்காய் பறித்ததனால்
நாமினிச் செய்வ தென்னென்று நின்று
நடுங்கித் தளர்ந்திடும் காற்றிதனால். 8

மலையும் குலுங்குது மண்ணும் நடுங்குது
மாறி மாறிச் சுழல் காற்றிதனால்
கடலுங் குமுறுது கப்பல் புரளுது
கண்ணும் கலங்குது காற்றிதனால். 9

வானத்தில் வந்து வளைத்திட்ட மேகங்கள்
வாடிப் பலதிசை யோடும்படி
ஆன பலத்துடன் வீசியடித் திடும்
ஆற்றல்மிகுசூழல் காற்றிதுவே. 10

வீசி அடித்திற்ற காற்றும் அடங்கிற்று
வேதனை நீங்கிய எவ்வுயிரும்,
பேசினர் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே
பெரும் சுழல் காற்றின் கொடுமை தன்னை 11

ஆசைதுறந்தவர் நெஞ்சத்துள் என்றும்
அமைதி குடிபுகுந் திருப்பது போல்
நாசம் புரிந்த காற்று மறைந்த பின்
நாட்டியம் ஆடினள் அமைதி யன்னை. 12

**“லோகோபகாரி” தீபாவளி மலர் 1949**

# மழை! கோடை மழையின் சிறப்பு

## 1

என்னென் றுரைப்போம்! என்னென் றுரைப்போம்!!
இம் மழை இயல்பை என்னென் றுரைப்போம் !!!
விழாச்சீர் காண விழையுடன் கூடிய
மாந்தர் குழுவினில் தோன்றும் ஒலி போல்
இரைந்து பொழியும்; அன்றியும் இல்லின்

கூரையில் விழுங்கால் குதிரைகள் ஓடும்
குளப்படி முழக்கெனக் குறித்திடப் பெயுமால்!
மலையினின் றிழியும் அருவியை மான
நிலைபெறும் மாளிகை மேனிலை நின்றும்
மழைநீர் வீழ்ந்திடும் மாட்சியைக் காண்மின்

பசித்துயர் பொருது பரிதவித் தோர்க்கே
பல்சுவை உணவை நல்கிய தொப்பவும்
புழுக்கரைப் பட்டுப் புலம்புவோர் தமக்குச்
செழிப்புறு தென்றற் சென்றது பொலவும்
ஆதவன் சூட்டிற் காற்றா திளைத்த

மன்னுயிர் அனைத்தும் மழையைக் கண்டபின்
சாற்றற் கரிய மகிழ்க் கடல் சார்ந்தன.
ஆதலின் இந்த அருமை மழை யினைப்
போற்றுதும் வாழ்கெனப் போற்றுதும் பெய்கெனப்
போற்றுதும் மகிழ்ந்தே போற்றுதும் யாமே

## 2

மழை பெயுங் காலை மாநிலத் துயிர்கள்
ஒவ்வொன்றினையும் உற்றுநீர் நோக்குமின்
பசும் புல் மேயும் பல விலங் குகளில்
ஒருமைகள் யாவும் இன்பமிக் கூர்ந்தே
ஆமைகள் நகர்ந்தே அழகுறச் செலவும்

விடையும் பசுக்களும் விரைவொடு முகத்தை
முன்னங் கால்களில் மோதுறக் கவிழ்த்தே
ஓடவும்; அவைகளை ஓட்டும் சிறுமகார்
ஆடையின்றி வாடையால் மெலிந்து
கைகளைக் கொண்டு மெய்யது பொத்தி

மரந்தொறும் மரந்தொறும் மறைந்தனர் செலவும்;
உழுதொழில் புரிவோர் உறுகளை பறிப்போர்
மண்தொடு படையால் மாநிலங் கிளறு வோர்
நாற்று முடிகளை நட்டிடும் மாதர்கள்
யாவரும் தந்தொழில் ஓயவே நின்று

மழையினைக் கண்டு மனக்களி கொண்டு
களைப்பு நீக்குறும் காட்சி யதுவே
கொடுங்கோல் மன்னன் கொலையுண் டிறக்கச்
செங்கோற் செல்வன் ஆட்சியைப் பெற்ற

மக்கள் மனமென மிக்குற விளங்கவும்;
உணவின் பொருட்டே யுலவிச் சென்ற
பறவையின் குலங்கள் துணையுடன் பறந்து
கூட்டினை யடையுங் குறிப்புடன் ஓடவும்;
வாடிய பயிரெலாம் வளமிகக் கொண்டே

அரும்பொருள் பெற்ற அற்பர்கள் போலத்
தலைநிமிர்ந் தோங்கித் தாவறத் தோன்றவும்;
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைகளில்

உறைந்திடுஞ் செல்வர்கள் உளமகிழ் பூப்பவும்,
பகலவன் குடிபுகும் பழஞ்சிறு கூரையில்

வாழ்ந்திடும் வறியோர் செய்வகையின்றி
அகந்துயர் அடையவும் அடைந்தவிம் மழையின்
அருமையை எங்ஙனம் அறைகுவம் அடியேம்
பெருமையை எங்ஙனம் பேசுவம் யாமே.

### 3

அமிழ்தம் பொழிவதே அனையஇம் மழையால்
ஆயநற் பயனை அறைந்திடக் கேண்மின்!
மறுகில் நடப்போர் கண்களை மறைக்கும்
புழுதிக் குழுவின் பொலிவெலாம் அடங்கின.
செல்வோர் கால்கள் சிதைந்திடக் கொளுத்தும்

வெப்பம் தணிந்தது வியத்தகப் பரந்து
தெருவெலாம் பலப்பல சிறுநதி தெரிந்தன.
பள்ளியின் அகன்ற பாலர்கள் அனைவரும்
அடங்காக் களிப்புடன் தட தட வென்றே
அந்நதிக் கரைகளை ஆவலோ டண்மி

சிறு சிறு கப்பல்கள் செய்து விடுத்தவை
செலவினை நோக்கிச் சிந்தை உவப்புறும்
செய்தியைக் காண்மின்! செவ்விதிற் போற்றுமின்!
குளங்கள் ஆறுகள் குட்டைகள் ஏரிகள்
ஓடைகள் வயல்கள் யாங்கணும் ஓடித்

தண்ணீர் நிரம்பிய தன்மையைக் காணுமின்!
நல்லோர் வரவால் நகைமுகம் கொள்ளும்
பெரியோர் மனமெனப் பெருநிலங் குளிர
விழுந்தஇம் மழையை விருப்புடன் யாமே
தொழுதனம் புகழ்ந்தே தொழுதனம் புகழ்ந்தே.

**"அறிவுக்கொடி" 15.4.1937**

## மழை ! மழை !!

வையம் நடுங்கிட வாய்விட்டுக் கத்துது
வானத்தில் மேகங்கள் கூடிநின்றே;
வெய்யில் மறைந்தது வெப்பம் குறைந்தது
வெதனை நீங்கிற்றிவ் வேளையிலே. 1

திக்கும் இருளுது, தேகங் குளிருது,
தீங்குரல் மாதர்கள் கூடி நின்றே
மிக்க நடுங்கியே பார்த்துக் களிக்கின்றார்.
மேதினி எங்கணும் இந்நிலையே. 2

ஓவென் றிரையுது, மின்னல் சொலிக்குது,
ஊற்றும் மழைத்துளி முத்துகள் போல்;
ஆவென்றலறியே மேயும் பசுவினம்
அன்புடன் கன்றுகொண் டோடிடுமே. 3

பொத்தல் குடிசையுள் போசனம் இன்றித்தம்
புத்தி கலங்கியே வாழ்பவர்கள்
இத்தினம் நாமென்ன செய்குதும்? என்றவர்
ஏங்கித் தவித்திடப் பெய்திடுமே. 4

வீதிகள் எங்கணும் வெள்ளம் பெருகிடும்
வேடிக்கை யைப்பாலர் கண்டு களிப்பார்;
ஓதிடும் பள்ளியின் பிள்ளைகள் யாவரும்
ஓங்கும் களிப்புடன் ஓடிடுவார். 5

செங்கதிர் வெப்பத்தில் சோர்ந்து வதங்கிய
செடி கொடி பயிர் பச்சை யெல்லாம்

அங்கு மழைபெய்ய ஆனந்த மாகிய
அழகுடன் தோன்றி நிற்பனவே. 6

நீல நிறங் கொண்டவானத்தின் மாசற்ற
மேனியில் கார்வந்து சூழ்ந்ததனால்
ஓலம் இட்டுக்கண் ணீர்விடும் தன்மைபோல்
ஓங்கி இடித்திங்குப் பெய்திடுமே. 7

தானெனும் கர்வங்கொள் மாந்தரும் இந்தத்
தாரையின் வீழ்ச்சிகண் டோடுவதை
வானமும் பார்த்துச் சிரிப்பது போலவே
வாய்விட்டு மின்னுது மேகங்களே! 8

மக்களைப் பட்டினி போட்டு நிதிமிகச்
சேர்த்த மனிதர்கள் செல்வ மெல்லாம்
மிக்க அருள்மனம் கொண்டவர் கைப்பட்டு
மேன்மைச் செயல்களுக் காவதுபோல். 9

உண்ணற் குதவாமல் தன்னிடம் கொண்டுறை
உப்புக்கடல் நிறை நீர் முகந்தே
மண்ணில் உயிர்த்தொகைவாழ மழைதரும்
மாசற்ற சோதிக் கதிரவனே. 10

தண்ணென் மழைத்துளி கண்டு களிப்புற்ற
தாவரம் பெய்மழை நின்ற பின்னே
இன்னும் மழைபெய்ய வேண்டி யழுதல்போல்
ஏங்கித் தம்கண்ணின் நீர்கள் சிந்தும். 11

சுடர்தரும் வில்லுகைக் கொண்டிங்கு வாழுயிர்
சோர்வுறச் செய்வெம்மை மேற்கணைகள்
விடுதலைப் போலவே வானமும் விற்கொண்டு
வீசி மழைத்துளி பெய்திடுமே. 12

**“அறிவுக்கொடி” 15.3.1937**

# உழவோர் உரிமை

வஞ்சமின்றி நாள் முழுதும்
    வயல்களிலே உழுதோம்;
வகை வகையாய்ப் பயிர் செய்து
    தானியங்கள் விளைத்தோம்
கஞ்சியின்றி பட்டினியால்
    வாடுகின்றோம் நாங்கள்
கட்டுதற்கும் கந்தைத் துணி
    கிடைக்கவில்லை காணீர்! 1

வளர்ந்த கதிர் அறுத்தடித்துத்
    தானியங்கள் குவிப்போம்;
வாரிக் கொண்டே செல்வர் சிலர்
    வாய்பிளந்தே நிற்போம்!
உளங்குமுறிப் பார்த்திருப்போம்
    உழைத்த பலன் காணோம்!
உழைப்பவர்கள் கதியிதுவோ
    உரைத்திடுவீர்நீதி! 2

நிலவுரிமை உழைப்பவர்க்கே
    இருப்பதுதான் நியாயம்
நிறைந்த பண்டம் விளையும் இந்த
    விதி வகுத்தால் என்றே
தலைவர் மகான் காந்தி சொன்னார்;
    உண்மை மொழி அன்றோ?

தயங்குகின்றீர் ஏனிதனைச்
செய்வதற்கே நீங்கள்? 3

வறண்ட நிலந்தனில் முளைத்த
செடிகளைப் போல் நாங்கள்
வற்றியுடல் இளைத்திடுவோம்
தினந்தினமும் துரும்பாய்;
"அறந்தழைக்கப் பாபம் எல்லாம்
வீழ்க " வென்றே பேசும்
அறிவுடையோர் கண்கள் எமைப்
பார்க்கவில்லை ஏனோ? 4

"எங்கள் நிலம்; அதற்குரிமை
நாங்கள்" எனச் சொல்வார்,
இருக்கும் இடம் அவர் அறியார்;
உழைப்பவரும் வேறே;
தங்கியந்த நிலத்தினிலே
பாடுபடும் பேர்கள்
தம்முழைப்பால் வரும் பயனைச்
சுரண்டி யிங்கே வாழ்வார். 5

அன்று நிலம் உடையவரும்
உழுபவரும் ஒன்றாய்
அன்புடனே ஒரு குடியாய்
வாழ்ந்து வந்தார் நன்றாய்;
இன்று பெரும் நிலக்காரர்,
"உழுபவர்கள் அடிமை;
ஏதுரிமை அவர்க் "கென்றே
எண்ணுகின்ற காலம். 6

கால நிலை மாறி விட்ட
காரணத்தால் உழுவோர்

கண்திறந்து பார்த்து விட்டார்;
　உலக நிலை கண்டார்;
வேலை செய்தால் தான் பயனும்
　பெற முடியும்; இன்றேல்
வெறுமையுடன் கிடந்து யிரை
　விடுவது தான் நடக்கும். 7

ஆதலினால் எமக் குரிமை
　வேண்டும் எனக் கேட்டார்;
அவர் உரிமை கோருவதில்
　தவறுண்டோ சொல்வீர்!
வேதனைகள் படும் உழவர்
　துன்ப மெலாம் நீங்கின்,
விளைபொருள்கள் மிகப் பெருகும்
　சாந்தி நிலை கொள்ளும். 8

**"லோகோபகாரி" 30.7.1950**

# உழைப்போர் கண்ட உண்மைச் சுடர்

## (சிந்து)

எப்பொழுதும் உழைத்திருப்போம், இன்பசுகம் காணோம்;
தப்பிதங்கள் செய்தறியோம் தாழ்ந்து விட்டோம் நாமே. 1

துன்பமெனும் கடல் கடக்கக் கப்பல் துணை காணோம்;
இன்பமெனும் கரை சேர்தற் கிச்சை மிக வுடையோம். 2

கழனிகளில் உழைத்திடுவோம் களைப்படைவோம் நாங்கள்;
பழஞ்சோறும் வயிறார உண்டறியோம் நாங்கள் 3

ஆலையிலும் சாலையிலும் பணிபுரிவோம் நாங்கள்
காலமெலாம் பசிப்பிணியாற் கருத்தழிவோம் நாங்கள். 4

தரிசு நிலம் வளம்படுப்போம் தானியங்கள் விளைப்போம்;
அரிசிகிடை யாமல் துயர் அடைந்திருப்போம் நாங்கள். 5

எட்டடுக்கு மாளிகைகள் எழுப்பிவைப்போம் நாங்கள்;
கட்டடங்கள் இன்றிவெய்யில் கடுங்குளிரால் மாய்வோம். 6

ஆடுகளும் மாடுகளும் வளர்த்திருப்போம் நாங்கள்;
வாடுமிளங் குழந்தைகட்கும் பாலுட்டும் வகையறியோம். 7

பூமியினுள் உள்ள பொருள் கொணர்ந்திடுவோம் நாங்கள்.
சேமமுடன் வாழ்தல் இலோம் சிரமமுற்றோம் நாங்கள். 8

கடல்கடந்து குடிபுகுந்து நிதிவிளைப்போம் நாங்கள்;
உடல் இளைப்போம் உயிர் துடிப்போம் உணவுபெறோம் நாங்கள். 9

காடுகளும் வளர்த்திடுவோம்; கழனிகளும் செய்வோம்;
வீடுவெறும் வழியறிவோம்; வீணுழைப்பில் மடிவோம். 10

பருத்திகளை விதைத்தெடுப்போம்; பாடுபட்டு நூற்போம்;
திருத்தமுறும் உடைகள் பல செய்திடுவோம் நாங்கள்; 11

உடுப்பதற்கும் உடைகள் பெறோம்; உளம் வருந்தி வாழ்வோம்;
கடுங்குளிரைக் கைகளினால் மெய்பொத்திக் கழிப்போம். 12

ஒரு வினைக்கும் உதவாத பொருளையெல்லாம் உழைப்பால்
பெருநலங் கொள் பல பொருளாய்ச் செய்தமைத்தோம் நாங்கள். 13

அப்பொருளை அனுபவித்து மகிழ்வதில்லை நாங்கள்
எப்பொழுதும் வறுமையினால் ஏங்கிடுவோம் நாங்கள். 14

ஊரார்கள் உழைப்பினிலே உயிர் வளர்க்கும் மாந்தர்
பேராசை கொண்டம்மைப் பெருந்துயரில் வைத்தார். 15

கண்குழிந்து பல் நீண்டு கன்னமெல்லாம் வற்றி
உண்ணுதற்கும் உணவின்றி உடல் இளைத்தே அசைவோம். 16

பாலரெல்லாம் பசித்தலறும் பரிதாபக் குரலால்
நீலவிழி மனைவியர்கள் நிலைகலங்கி அழுவார். 17

மக்கள்மனை படுதுயரைப் பார்த்தறியோம் மனத்துள்
அக்கணத்தே புரிவதொன்றும் அறியாமல் அயர்வோம். 18

சாக்கடையும் குப்பைகளும் சார்ந்திருக்கும் குடிலில்
நீக்கமறும் பிணிகளுடன் நிலைகுலைவோம் நாங்கள். 19

மூட்டை கொசு விஷவுயிர்கள் மூஞ்சூறும் எலியும்
ஓட்டைகளில் உறைபாழுங் குடிசைகளில் வாழ்வோம் 20

சாமிகளை நம்பிநின்றோம் சடங்குபல செய்தோம்
நாமிவற்றால் ஒரு சுகமும் பெற்றறியோம் சலித்தோம். 21

உழைப்பவர்க்கே உலகசுகம் என்று மனங் கொள்வோம்;
பிழைப்பில்லை சோம்பருக்கே என்றுவிதி செய்வோம் 22

துன்பமுற்ற காலமெல்லாம் போதுமினித் துயிலோம்;
இன்பமுறும் வாழ்வினுக்கே போர்புரிவோம் இனிதே. 23

செல்வரிலை வறியரிலை கொடியரிலை எனவே
நல்வகையில் உலகிருக்க நாமுழைப்போம் இனியே. 24

**"லோகோபகாரி" 15.9.1950**

## உழைப்பே உயர்வு

இன்பம் உண்டு துன்பம்இல்லை; என்னும் எண்ணம் கொள்ளுவோம்!
அன்புகொண்டு பேதம் நிங்க நற்பணிகள் ஆற்றுவோம்!
தன்சுகத்தை மட்டும்நாடித் தளர்வடையும் மாந்தரே!
கண்விழித்துக் கண்டுகொள்வீர் உலகியற்கைக் காட்சியை! 1

அண்டைவீட்டுத் தோட்டந்தன்னில் அலர்ந்திருக்கும் பூமணம்
கொண்டுவந்து காற்று நம்மைக் குதூகலிக்கச் செய்யுமே
உண்டு நம்மை என் றுநம்பி ஊக்கமுடன் உழைப்பவர்
கண்டுகொள்ளும் பலன் அவர்க்கு மட்டும் இல்லை காணுவீர்! 2

பொற்கிரணம் வீட்டெறிந்து புவிபுரக்கும் சூரியன்
தற்பெருமை ஏதும்இன்றித் தன்கடமை ஆற்றுமே,
அற்பசுகம் வேண்டும் என்ற ஆவல்ஏதும் இன்றியே
நற்பணியேசெய்வதிலே நாட்டங்கொள்வார் ஞானிகள் 3

ஆச்சிரம வாழ்க்கையென்றும் ஆத்மஞானம் என்றுமே
பேச்சடித்துப் பெரும்பொருளைச் சேர்த்துவைப்போர், தம்முளே
மூச்சடக்கி யோகம் செய்யும் மூதறிஞர் என்றுவாய்
வீச்சடிக்கும் வீணர் நெஞ்சில் விளக்கொளியை ஏற்றுவோம்! 4

எத்தகைய உழைப்பும்இன்றிஇவ்வுலக பாரமாய்
பத்தர்தொண்டர் என்று சொல்லிப் பிறர் உழைப்பின் பாகத்தைக்
கொத்தியண்டு சுற்றுவார்கள், கொடுங்கழுகு தம்மையே
ஒத்தவர்கள் என்றுரைத்தல் உண்மை உண்மை உண்மையே! 5

பேதம்இன்றி யாவருக்கும் நிழல்கொடுக்கும் மரங்களைப்
பூதலத்தில் காணுகின்றோம்; புத்தியுள்ள மக்கள் நாம்
சூதுகொண்ட நெஞ்சராகிச் சுயநலத்தில் மூழ்கினோம்
பாதகத்தைப் பிறர்க்கிழைத்தும் பணம்குவித்தும் வாழ்கின்றோம். 6

கொத்தர்கொல்லர் உழவர்தச்சர் ஊலிநெசவுக்காரர்கள்
அத்தனைபேர் செய்யும்வேலைப் பயனால்நாமும் மனிதராய்
இத்தரையில் வாழுகின்றோம்; எண்ணிஎண்ணிப் பாரும்நீர்,
புத்தியின்றித் தற்பெருமை பேசும்கர்வம் போக்குவீர் 7

**லோகோபகாரி 15.6.1950**

# வெற்றி

நிச்சயம் வெற்றி கிடைத்திடும் உண்மை,
நினைக்கும் நினைப்பில் உறுதியும் கொண்டால்;
இச்சக மீதினில் சோர்வுகள் இன்றி
என்றும் முயற்சிகள் செய்திடல் வேண்டும்;
அச்சம் அடைந்திடும் தன்மை அழிப்பாய்!
ஆண்மை யுடன்செயல் செய்யமுன் நிற்பாய்!
கச்சையை நன்கு வரிந்து நீகட்டி
காரண காரியம் கண்டு புரிவாய்! 1

நித்தமும் தோல்வி நிகழ்ந்திடு மேனும்
நின்மனம் சோர்ந்து குழைந்திடல் தீது;
எத்தனை தீமைகள் வந்தன வேனும்
என்செய்வோ மென்று தளர்வது நீக்கு!
சத்தியை நழுவிடச் செய்வது வேண்டாம்!
சந்ததம் ஊக்கம் கொண்டு முயல்வாய்!
எத்தொழில் செய்யினும் யாவினும் வெற்றி
எய்துதல் நிச்சயம் என்ப துணர்வாய்! 2

ஆதிதிரம் கொண்டெதும் செய்திடல் வேண்டாம்!
அறிவில் உணர்ந்தபின் செய்கை புரிவாய்!
நேத்திரம் யாவினும் சோர்வின்மை கண்டாய்!
நீயிந்த உண்மை மறந்திடல் வேண்டாம்!

# சேர்ந்து வாழ்வதே சிறந்தவலிமை

கண்ணையும் மனதையும் கவர்மலர்ச் செடிகள்;
விண்ணை நோக்கி விரிமலர் ஏந்தி
பலகிளை பரப்பிப் பச்சிலை தழைத்து;
நலமுடன் வளரும் பற்பல மரங்கள்;
சூழ்ந்தோர் மலையின் சூழ்நிலை காண்மின்!

வேழம் ஒன்று ஆங்கே மேய்ந்தது; வெம்புலி
தாழாது பாய்ந்து தந்தமும் கையும்
வீழக் கடிக்கும் ; வேதனை தாங்காது
காடும்மலையும் கலங்கத் துள்ளிப்
போடும் ஓசையைக் கேட்டதும்,பொருக்கென
ஓடிவந்து அங்கே உருத்துப் பார்க்கும்
கோடு சேர் யானையின் கோபம் காண்பீர்!

தனக்குத் துணையாய் வந்து எதிர் நிற்கும்
இனக்கரி யானையை எதிரே கண்டதும்
ஆண்மை கொண்டுதன் கையினை உயர்த்தி
அடுபுலி பால்நின்று விடுபட முயலும்
காட்சியை மூன்று கவிகள் கண்டனர்;
சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமையாம்
தேர்ந்தோம் இன்றுஎனத் தெளிந்து ஆடினவே.

*குறிப்பு : சூழல் -- பக்கம், வேழம் -- ஆண்யானை -- உருத்து -- கோபித்து, கோடு -- தந்தம், அடுபுலி -- கொல்லு கின்ற புலி, கவிகள் -- குரங்குகள்.*

*(லோகோபகாரி, தீபாவளி மலர் 1949)*

சாத்திரம் பார்த்து வினைசெயல் ஏனோ?
சமயம் இடம்பொருள் கண்டு புரிவாய்!
காத்திரன் ஆகிய வெற்றி பெறுவாய்!
கலக்கம் இன்றிநற் காரியம் செய்வாய்!

**"அறிவுக்கொடி" 15.11.1936**

# வாழ்க சுதந்திரம்

பாடுவோமே வெற்றி பாடுவோமே -- நாம்
பாரத சுதந்திரம் வாழ்க வென்றே

காட்டுநதி வெள்ளம் எனத் திரண் டெழுவோம் - கெட்ட
காரியங்கள் செய்பவர்கள் வாழ்வு குலைப்போம்
நாட்டுப் பணி என்று சொல்லிக்கொள்ளை யாடிக்கும் - எந்த
நயவஞ்சக் காரரையும் நம்பமாட்டோம் (பாடுவோமே) 1

பட்டினியில் நோயில் இனிக் கிடந்து சாகோம் - இந்த
பாரததேசம் எங்கும் இன்பம் செய்வோம்
திட்டமிட்டு ஒன்றுகூடி வேலைசெய் வோம் - இங்கே
திருடர் புரட்டர்க்கினி வேலையில்லை (பாடுவோமே) 2

பழம்பெருமை வாய்புளிக்கப் பேசிநின்றே - இந்தப்
பாருலகில் சோம்பல் எனும் நீரைப் பாய்ச்சும்
கிழங்கள் மொழி நம்பியினி நிற்கமாட்டோம் - நாம்
கீழ்மைகளைப் போக்கும் புதுவழிகள் காண்போம் (பாடுவோமே) 3

வெள்ளையர்கள் நமையாண்ட காலந்தனில் - அவர்
விரித்துவைத்தார் வலைகள் பல நமைப்பிடிக்க
கள்ளர்சிலர் இன்னும் அந்த வலைகளாலே - நம்மைக்
கட்டிஆள நினைக்கின்றார் உண்மை காண்பீர் (பாடுவோமே) 4

பண்டங்களை உண்டுபண்ணும் மக்கள் தாமே - இந்தப்
பாருலகைக் காக்கின்ற வீரர் ஆவார்

கண்டறிந்தோம் உண்மையினை இனிவஞ்சர் - தம்
காலடியில் கிடந்தடிமை யாகமாட்டோம் (பாடுவோமே) 5

பாடுபடும் ஏழையர்கள் ரத்தம் குடித்தே - நல்ல
பஞ்சனையில் படுத்துறங்கும் பாவிமக்கள்
கேடுகளை யாவருக்கும் புட்டுக்காட்டி - அவர்
கீர்த்தியினைப் பழிச்சொல்லாய் மாற்றி வைப்போம் (பாடுவோமே) 6

சமத்துவச் சுதந்திரக் கப்பல் தனிலே - நாம்
சாந்தம் மகிழ்ச்சியெனும் தேவியுடனே
அமைதிப் பெருங்கடல் தன்னில் மிதப்போம் - இதை
ஆதரிக்கா தவரைக் காறி உமிழ்வோம் (பாடுவோமே) 7

சுதந்திரம் மனிதர்க்கே என்று சொல்வோம் - எல்லாச்
சுகங்களும் மக்களுக்குப் பகிர்ந்தளிப் போம்
இதந்தரும் மார்க்கமிதே என்று சொல்வோம் - நாம்
எட்டுத் திக்கும் சென்று வெற்றி நாட்டுவோமே (பாடுவோமே) 8

**"லோகோபகாரி" சுதந்திர மலர் 13.8.1949**

# உலகப் பெரியார் காந்தி

இது வரையில் காந்தி மகான் தன்னைப் போல
    இவ் வுலகில் எவருமே பிறந்த தில்லை
புது வகையில் சாத்வீகப் போர்வகுத்தார்
    பூ வுலகில் அறிஞரெல்லாம் போற்ற நின்றார்
அதிக நாள் அடிமையிலே ஆழ்ந்து நின்றே
    சுதந்திரத்தின் அருமையினை அறிதல் இன்றிப்
பொதிமாடு போல் வாழ்ந்த மனிதர்க் கெல்லாம்
    புதுவாழ்வு வழி காட்டிப் போதித் தாரே. 1

பலசாதி மத பேதத் தலைக் கிறுக்கால்
    பாமரரும் மேதைகளும் பிரிந்து நின்றார்
சுலபமாய் அந்நியர்கள் இங்கே வந்து
    சூழ்ச்சி யினால் நமையடக்கி ஒடுக்கி வைத்தார்
கலை, அறிவு , செல்வங்கள்,காதல் வாழ்வு
    தியாகம் எலாம் காற்றோடு போக விட்டே
நிலை குலைந்து நடமாடித் திரிந்த நம்மை
    நில்லுங்கள் மனிதர்களாய் என்றார் காந்தி 2

தீண்டாமைக் கொடும்பாவி அரக்க னோடும்
    தீமையே உருவான மதுவி னோடும்
மூண்டபெரும் போர்தொடுத்து வெற்றி கண்டார்.
    மூக்கின் மேல் விரல் வைத்தார் உலக மக்கள்.
ஆண்ட வனின் வடிவந்தான் சத்யம், அன்பு,
    அறிந்திடுவீர்! ஒன்றாகிக் கூடி வாழ்வீர்!

வேண்டாமே மனிதர்க்குள் கலகம் என்றார்
    விவேகமே உருவெடுத்த மாகாத்மா காந்தி. 3

"இந்நாட்டில் ஏழையர்கள் உழைத்து நின்றார்
    வாழ்க்கை யினில் இன்பமிலை வருந்து கின்றார்
அன்ன வர்கள் உணவு, துணி, வீடுபெற்றே
    ஆரோக்ய முடன்இங்கே வாழவேண்டும்;
என்னுடைய சுயராஜ்யம் இதுவே யாகும்"
    எனக் கூறிச் சாத்வீகப் போர் புரிந்தார்
முன்னெவரும் காணாத புதுப் போரட்ட
    முனை நின்று ஜெயமுரசம் முழக்கி நின்றார் 4

ஏமாற்றும் வஞ்சகர்கள் இந்த நாட்டில்
    இனிவாழ இடமில்லை, ஒன்று சேர்வோம்
பூமியெல்லாம் பாரதத்தின் பழம் பெருமை
    பரவும் வகை புதுமுயற்சி பலவும் செய்வீர்!
நாமார்க்கும் இனிஅடிமை ஆகமாட்டோம்
    என்னுமொரு ஞானநீர் அருந்தி நிற்பீர்!
சேமம்உற வழி காட்டும் இந்த ஞானம்!
    சிறிதும் இதை மறவாதீர் என்றார் காந்தி. 5

இந்துக்கள் முஸ்லிம்கள் என்று சீறி
    இரு பிரிவாய்ப் பேயாட்டம் ஆடிநின்றே
முந்தியொரு நாளும் இல்லா மூர்க்கமோடு
    குத்து கொலை வெட்டினிலே முனைந்து நின்ற
சொந்த நில மனிதர்களின் கோலங்கண்டு
    சோர்வடைந்தார்; சாகும்வரை உண்ணேன் என்றார்,
அந்தவுரை முரடர்களின் வெறியை மாற்ற
    அவரெல்லாம் ஒன்றானர் காந்தியாலே. 6

தந் நலத்தைத் துறக்க மகான் காந்தி, யாரின்
    தயவுக்கும் தன் கொள்கை மாற்ற மாட்டார் ;

இந்நிலத்தே சாந்தமெனும் தண்ணீர் பாய்ச்சி
அகிம்சை யெனும் பயிர் செய்தார், இன்பம் என்னும்
பொன்னான தான்யத்தை விளைத்து விட்டார்
புவி யெல்லாம் சாத்வீகம் பேசச் செய்தார்
அன்னவரின் சமதர்ம நோக்கங் கண்டார்
அதிகார வெறி பிடித்தோர் வெறுத்து நின்றார். 7

கதிரவர்கள் பலகோடி சேர்ந்து நின்றே
காசினியில் ஒளிபரப்பி மறைந்தார் போல
அதிக புகழ் உடனிங்கே இருந்து சென்றார்.
அப்பெரியார் காந்தி மகான் தன்மை கேளீர்!
எது வரினும் கலங்காத சித்தம் உள்ளார்
எப்பொழுதும் ஒரேநிலையில் வாழ்ந்த மேதை
மதியுடையார் பாராட்டும் பெருங் குணத்தார்
மாநிலத்தார் மனமெலலாம் கவர்ந்து நின்றார். 8

வற்றாத ஜீவநதி கிளைக ளோடு
தீடீரென்று வறண்டதுபோல் காந்தி தேகம்
உற்றார்கள், உறவினர்கள் உலகம் எல்லாம்
ஓவென்று கதறியழ மறைந்த தேனும்
கற்றார்கள் கவியாகக் கனிவு மாகக்
கலையாக, வறியோர்கள் உருவமாகச்
சற்றேனும் பின்வாங்காத் தியாக மாகச்
சகமுழுதும் காந்தி மகான் வாழ்கின்றாரே. 9

**“லோகோபகாரி” தீபாவளி மலர் 1949.**

# அண்ணலுக்கு அஞ்சலி

நன்றுதரும் உபதேச மொழிகள் சொன்னார்;
நாள்தோறும் உண்மைக்கே உழைத்து நின்றார்;
இன்றுவரை இவ்வுலகில் அவரைப் போன்ற
இணையற்ற பெரியமகான் பிறந்த தில்லை;
கொன்றுவிடு வோம் என்று கூறி னாலும்
கொள்கைக்கே வாழ்ந்துயிரை விட்டார் காந்தி.
சென்றவரை நாம்நினைந்து செய்யும் வேலை
சிறப்பாக அவர்வழியில் நடப்ப தொன்றே! 1

உணவின்றி உடையின்றி இடமும் இன்றி
உளங்குமுறி உலர்ந்த மரமாக வாழ்வார்
மணம் அற்ற மலர்போன்ற ஏழை மக்கள்;
மனம்படித்த வேதனைதான் நெருப்பாய் மூளின்
கணமேனும் பொறுத்திருக்க விரும்ப மாட்டார்;
கலகமே வளர்ந்துவிடும்; அமைதி போகும்;
பணம்பெரிதாம் எனக்கருதி வறியோர் தம்மைப்
பதைபதைக்க விடவேண்டாம் என்றார் காந்தி. 2

தீது வரும் முன்னறிந்து காத்தல் வேண்டும்;
தீர்க்கதரி சனம் இதுவே தெரிந்து கொள்வீர்!
ஓதுகிறேன் அனைவருமே ஒன்றாய் வாழ்வோம்;
உயர்வான உண்மைநெறி கண்டு கொள்வோம்!
மோதுதலை விட்டொழிப்போம்! மோசக்காரர்
மொழி நம்பி முரடர்களாய் மாற வேண்டாம்!

வேதனையால் உடல்நெஞ்சம் சோர்வ டைந்தே
  வீழ்கின்றார் துயர்தீர்ப்பீர்! என்றார் காந்தி. 3

உத்தமராம் காந்தி மகான் பெயரைச் சொல்லி
  ஊரையெலாம் ஏமாற்றும் வஞ்ச மக்காள்!
சத்தியமாய்ச் சொல்கின்றேன் மனதிற் கொள்வீர்!
  சதிகாரர் என்றும்மை மக்கள் கண்டால்,
பத்திரமாய் உயிர்வாழ விடவே மாட்டார்!
  பாமரர்கள் கோபத்திற் காளா காதீர்!
இத்தனைநாள் இழைத்தபல தீமை போதும்;
  இனியேனும் நல்வழியில் நடந்து கொள்வீர்!

**“லோகோபகாரி” 6.10.1950**

## ஆ! என்ன அழகு!

உலகெலாம் வாழும் உள்ளத் துடனே
இலகொளிச் சூரியன் எரிக்கும் கதிரால்
தன்னுடை ஆவியைத் தயங்காது அளித்து
பின்னுடை மேகமாய் மேலே பரவி
மாரியாய் இறங்கி மாநிலம் காக்கும்
நீர்சூழ் கரைகளில் நிமிர்ந்து நிற்கும்
தென்னைகள் காண்பீர்! தெளிவீர் உண்மை!
தன்னலம் இன்றித் தரணியோர்க் கெல்லாம்
இளநீர், தேங்காய், எண்ணெய்,ஓலைகள்
வளம்பெறத் தந்து வாழ்வது காண்மின்!
இம்மர மாண்புகள் எல்லாம் கண்டோர்
தம்மனக் களிப்புத் தாங்காது
அம்மரச் சோலையில் உலவுதல் அறிமினோ!

**(லோகோபகாரி, தீபாவளி மலர் 1949)**

# இலக்கியச் சோலை

நாளையினி என்செய் வோம் எனுங்கவலை நாசமுறும்;
நாம் முன்னே பட்டதுயர் நினைப்பெல்லாம் மறைந்து விடும்;
காளை தனிப் பருவத்தே பெறும் இன்பம் நுகர்ந்திடுவோம்;
கரைகாணாக் களிப்பென்னும் கடல் மூழ்கிச் செருக்கடைவோம்;
வேளையிலே கைகொடுத்து வேதனைகள் அழித்துவிடும்;
வித்தை பல பொங்கி வரும்; வியப்பு தரும் செயல் காட்டும்;
வாளனைய விழிமாதர் வதனமென மகிழ்ச்சி தரும்;
வளங்குலவும் இலக்கிய மாஞ்சோலைலே புகுந்திடுவோம். 1

புத்தமுதம் போல் இனிக்கும் புதுமொழிகள் நுகர்ந்திடலாம்;
புலன்யாவும் களிப்படையும் பொருள்வளங்கள் அறிந்திடலாம்;
தித்திக்கும் கவிதைத்தேன் தெவிட்டாமல் அருந்திடலாம்;
தேனுண்டவண்டினம்போல் தெம்மாங்கு பாடிடலாம்;
இத்தரையில் நாம் அடைந்த சோர்வெல்லாம் எழுந்தோட
இன்ப மெனும் வானூர்தி தனிலேறி உலவிடலாம்;
சித்தத்தே ஊக்கமெனும் ஒளிபரவி விளங்கிடலாம்
சீர்திகழும் இலக்கியத்தண் சோலையுள் நுழைந்திடினே. 2

புள்ளினங்கள் களிப்புடனே பொருந்து வதைக் காணுறுவோம்;
புந்தியிலே சுதந்தரமாம் சோதியுறப் பெற்றிடுவோம்;
தெள்ளுதமிழ் ஓசையெனும் குயிலினங்கள் தீங்குரலைத்
தேர்ந்துமனங் கிளர்வுறு வோம்; திசை கெட்ட மரக்கலம் போல்
கொள்ளை துயர் கொண்டமனக் குழப்பமெல்லாம் தவிர்ந்திடுவோம்;
கொடுமை வழி செல்ல நீங்கிக் குணமென்னும் நெறியறிவோம்;

கள்ளை நுகர் மாக்கள்மனத் துயரொழிந்து களிப்பது போல்
காவியக்கள் அருந்திடலாம் இலக்கியமாம் கானிடையே. 3

பண்டுறைந்த புலவோர்கள் பலருடனும் பழகிடுவோம்;
பல உண்மைப் பொருள் தேறிப் பகுத்தறிவு சிறந்திடுவோம்;
அண்டினவர் தமையெல்லாம் ஆதரித்த வள்ளல்களின்
அருஞ்செயல்கள் அறிந்திடு வோம்; அவர் செயலால் வியப்புறுவோம்;
கொண்டதொரு கொள்கையிலே பிழையாமல் கொலைவரினும்
கோமன்னர் எதிர்த்தாலும் நிறைவேற்றும் இயல்புடைய
திண்டிறல் சேர் வீரர்களின் தீரங்கள் கண்டுணர்ந்தே
திடசித்தர் ஆயிடுவோம் இலக்கிய மாஞ்சோலையிலே. 4

நீதியிலே தற்போது மனிதர்களின் ஒற்றுமையை
நிலைகுலையச் செய்தவர்க்குள் கலகங்கள் நிலைநாட்டும்
சாதியிலே, பலமூட வழக்கங்கள் உண்டாக்கிச்
சதிபுரியும் மதங்களிலே வேற்றுமைகள் இல்லை யென்றும்,
ஆதியிலே இவை தம்மில் சுய நலத்தை மனங்கொண்ட
அறிஞர்களே வேற்றுமைகள் கற்பித்தார் என உணர்வோம்
சோதியிலே இருளழிந்து மாள்வாது போல், இலக்கியமாம்
சோலையிலே சென்றிடினே பேதமனம் விட்டொழிப்போம். 5

மங்கையரும் ஆடவரும் உயிர் வளர்க்கும் காதலிலே
மனம்போக்கி, யதன் வழியே தடையின்றிச் சென்றனராய்ப்
பொங்குபெரும் இன்பமெலாம் துய்த்ததிறம் உணர்ந்திடுவோம்;
புத்தமுதம் பொழி கவிதைக் கனிகள்ரசங் குடித்திடுவோம்;
இங்குலக வாழ்கைதனை அறிவாண்மை சுறுசுறுப்பு
இன்பமெலாம் திகழும் விதம் நடத்துதிறம் அறிந்திடுவோம்;
பங்கமற உலக மெலாம் நலம் பெற்று மகிழும் வகை
பணிபுரியும் மனம் பெறுவோம் இலக்கியத்தண் சோலையிலே. 6

**“அறிவுக்கொடி” 15 - 2 - 1937**

## கலை உணர்ச்சி

இயற்கையிலே பொங்கிவரும் அழகுக்கு நிகராக
எக்கலையும் தலைநிமிர்ந்து நிற்பதிலை; இதை உணர்வீர்!
உயர்வானம் பூமிகளில் உறைகின்ற வனப்பேதான்
உளமகிழ்ச்சி மிகவூட்டும் கலாரசிகர்தமக்கெல்லாம்;
சுயமான நுண்ணறிவால் இதையறியார், மனிதர்செயும்
தொழில்களில் தான் கலையழகு தோன்றுமென உரைப்பார்கள்;
மயங்கும் அறிவுடையர் அவர் ; கலையுண்மை காணாதார்;
மாநிலத்திற் பொய்க்கலைஞர் அவர்கள் தாம் ஐயமில்லை. 1

மக்களொலம் இருள்வழியைக் கடந்தேறி ஒளிகண்டு,
மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு வழிகாட்டும் இலக்கியமே.
மிக்கவனப்புடையனவாய் வாழ்கின்ற மெய்க்கலையாம்
மேன்மைமிகு கருத்துரைகள் உதிர்க்கும் இதில் ஐயமில்லை.
சர்க்கரையோ கனிரசமோ பொருட் சுவைச்சொற் சுவை என்ன
சலிப்பற்ற இன்பமே இலக்கியத்தில் ஊற்றெடுக்கும்;
ஒக்குமிது கலைகளுக்கும்; இயற்கையிலே மனம்போக்கி
உணர்பவரே இதை அறிவார்; உலகுக்கும் பயன்படுவார். 2

கண்கொண்டு பார்த்துமகிழ் அழகென்னும் பொருள் ஒன்றே
கலைப்பயனாம்; இதுவன்றி வேறுபல நீதியோ,
நம்மையோ, பெறும்பயனோ அமைவதிலை கலையில்,என
நலிலுவோர் அழகுண்மை அறியாத பேர்கள் தாம்
உண்மைதான் உலகிலே தலை சிறந்த கலையாகும்
உயர்வான குறையற்ற அழகுந்தான் அதுவாகும்;

திண்மைபெறு நீதியொடு நம்மைபயன் இவையெல்லாம்
தேங்கிஉற வாடுதலே கலைப்பண்பாம்; தெளித்திடுவீர்! 3

மனிதர்களின் வாழ்வுக்குப் பயனாகும் கருவிகளில்
மகிழ்ச்சிதரும் கலைத்திறமை படித்திருத்தல் நன்றாகும்;
இனிமைதரும் கலையழகு படிந்தபொருள் எல்லாமும்
ஏற்றபயன் தருவனவாய் இருக்கும்விதம் செயல்வேண்டும்
அநீதிக்கு வழிகாட்டிக் கொடுமைபல புரிவதற்கும்
அடிகோலும் கலைகளிலே அழகுகுடி இருந்தாலும்
புனிதகலை அவையல்ல; பொய்யழகால் பயனில்லை;
பொல்லாத பெருஞ்சனியன்; அவையென்றே அறிந்திடுவீர். 4

கலையென்னும் பெயர்கொண்டு மக்கள்மனத் தூய்மையினைக்
கறைசெய்து பேராசைப்பெருநோயை வளர்க்கின்ற
கொலைத்தன்மைவாய்ந் தவைகள் கலையாமா; இனியசுவை
கலந்துள்ள நஞ்சாகும் கயவர்களின் கருவியது.
நலமென்று வெறுங்காமச் சுவைபுனைந்து கவிபாடி
நாசவழி போதிக்கும் ஆபாச நூலைப்போல்
விலகென்று கண்டிப்பாய்வெறுத்தொதுக்கித்தள்ளிவிட
வேண்டியதே அக்கலைதான் ; கண்டுணர்வீர். 5

**"லோகோபகாரி" 30.6.1950**

## திரைப்படத்தின் தெளிவுரை

படக்காட்சி என்னுமொரு பகைவன் தோன்றி
    நாடகத்தைப் பாழாக்கி விட்டான் என்றார்
அடசனியே! திரைப்படமே நீயா எங்கள்
    அரியகலைச் செல்வத்தை அழித்தாய் என்றேன்
திடுக்கிட்டே அது சொன்ன மொழிகள் கேளீர்;
    தேராதார் தெளிந்தார்கள் அந்த வார்த்தை
நடக்கிறதா நாடகந்தான், எங்கே அங்கே
    நாம்போவோம் எனும் ஆசை வளர்த்தேன் நானே. 1

எக்கேடு கெட்டாலென் இவ்வுலகம்,
    எமக்குவர வேண்டியது பணந்தான் என்றே,
மக்களிடம் பொருள் பறிக்கப் பலவழியில்
    மாயங்கள் செய்வோருள் ஓரினத்தார்,
இக்காலம் கலைவளர்ச்சி கலை வளர்சி
    என்று சொலி எனைப்பிடித்துக் காட்டியிங்கே
மிக்கபணம் குவிக்கின்றார் அவர்களாலே
    மேன்மையெலாம் இழந்திட்டேன் சிரிக்க நின்றேன். 2

மனிதர்களின் இயற்கையுரு தன்னை மாற்றி
    மாபூதம் எனக்காட்டி அஞ்சச் செய்தார்
இனியமொழிக் குயில்குரலை முழுதும் மாற்றி
    ஏகரா ரூராவென்றே கத்த வைத்தார்,
கனியமரங்கள் நிறைகாடு பூஞ்சோலை
    ஆறுமலை மாளிகைள் காட்சியெல்லாம்

சினிமாவில் பார்த்ததையே மீண்டுங்காட்டிச்
சீச்சீயென் றிகழும்விதம் செய்துவிட்டார். 3

தலைவெடிக்க வெயில்காயும் பாழ் வெளியில்
தடுமாறித் திரிந்தவர்கள் உள்ள மெல்லாம்
இலைதழைக்கும் நெடுமரங்கள் செறிந்த சோலை
இனியசுவைக் குளிர்ந்தநீர் எங்கே என்றே
அலைவதைப் போல் சினிமாவைப் பார்த்துப் பார்த்து
அருவெறுப்பும் மனச்சோர்வும் கொண்ட மக்கள்
கலைகளிலே மிகச்சிறந்த நாடகத்தைக்
காண்பதிலே மிகமிகவே காதல் கொண்டார். 4

படித்தறிந்து பலசெய்தி தெரிந்துகொள்ள
வசதியில்லாப் பாமரர்கள் தங்கட்கெல்லாம்
நடிப்பின் வழி நாடகத்தே பல செயல்கள்
உண்மையிலே நடப்பனபோல் எடுத்துக்காட்டி
முடிப்பதனால் நல்லொழுக்கம் முன்னோர் செய்கை
முற்போக்குச் சீர்திருத்தம் சமூக வாழ்வு
குடித்தனத்தைக் துரைத்தனமாய் நடத்து மார்க்கம்
கூறுதற்கே நாடகங்கள் வகுத்து வைத்தார். 5

இத்தகைய நலங்களெலாம் சிதைந்து போன
எனைப்பார்க்க வெறுப்படைந்தார் மக்கள் எல்லாம்
முத்தமிழின் ஒரு தமிழாய் முன்னோர் செய்த
நாடகத்தில் மோகமுற நானே செய்தேன்
பித்துடையார் பொதுமக்கள் என்றே எண்ணிப்
பெருமோசம் செய்வதினிப் பலிக்கா தையா,
என்றுரைத்துப் படக்காட்சி என்னை நோக்கி
இன்றும் நீ எனைப்பழித்துப் பேசுவாயோ; 6

நன்றி எனக் குரைப்பாயோ? என்ன நானும்
நான் உன்னை இனிப்பழியேன்; நன்றி செய்வேன்
சென்ற வெலாம் போகட்டும் உனைக்கெடுத்த
செல்வநெறி கொண்டவர்கள் நாடகத்தைக்
கொன்றுவிட அதையும் கைப்பற்ற வேண்டாம்;
கும்பிடுதான் அவர்க்கென்றே கூறிவிட்டேன். 7

**"லோகோபகாரி" தீபாவளி மலர் 1947**

# இன்பநெறி

செல்வக் கல்வியிற் சிந்தையைச் செலுத்திப்
பல்வகைக் கலைகளும் பலகறப் பயில்வோம்!

பிறநா டுறைவோர், பெருஞ்செயல் அனைத்தையும்
திறமுடன் ஆய்ந்து பலநலம் தெளிவோம்!

செயற்கைப் பொருள்கள் செய்வகைகள் அறிய
இயற்கையின் மாண்புள் எல்லாம் உணர்வோம்!

“இது என் தாய்நிலம்; இவர் என் சோதரர்;
இது என் தாய் மொழி” என மனங் கொள்வோம்!

மன்னுயிர் யாவும் நன்னிலை வாழ்வுறப்
பன்னலம் இயற்றப் பரிவுடன் புகுவோம்!

“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை” எனும் மொழியை

உண்மையாய்க் கொள்ளுவம்! உயரிய ஒழுக்கமும்
வண்மையும்; பொறையும், வளம் பேர் அன்பும்,

ஒற்றுமை உணர்ச்சியும் உலகியல் அறிவும்
பெற்றிமை, வீரம், பெருமை, உரிமை

ஆயவை பிறவும் அடைந்து இவ்வுலகில்
தூய பேரின்பம் துய்க்குவம் மகிழ்ந்தே.

*குறிப்பு :- 1928 இல் சாமி.சிதம்பரனார் அவர்கள் எழுதி வெளியிட்ட II படிவம் பாட புத்தகத்தில் வெளிவந்த செய்யுள்.*

# நாட்டின் மேன்மை

*தமிழறிஞர் திரு. சாமி. சிதம்பரனார் அவர்கள் தனது 16 வயதில் (1916-ம் ஆண்டு) எழுதிய பாட்டு;*

உலகிற் சிறந் தொளிர்வ தெங்கள் நாடே - பல
    உண்மைகள் தோன்றிய தெங்கள் நாடே
கங்கை பரவுவ தெங்கள் நாடே - திருக்
    காவேரி சூழுவ தெங்கள் நடே
பங்கயத் தடமுள தெங்கள் நாடே - தமிழ்ச்
    சங்க மிருந்ததும் எங்கள் நாடே
செந்தமிழ் வளர்வதும் எங்கள் நாடே - வெகு
    சிவத்தலம் மன்னுவ தெங்கள் நாடே

வைணவத் தலமுள்ள தெங்கள் நாடே - உயர்
    வானவர் போற்றுவ தெங்கள் நாடே
சேரர்கள் ஆண்டதும் எங்கள் நாடே - நலச்
    சோழர்கள் ஆண்டதும் எங்கள் நாடே
காண்டற் கினியதும் எங்கள் நாடே - தமிழ்ப்
    பாண்டியர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
தத்துவக் கலையுள தெங்கள் நாடே - நல்ல
    தாபதர் வதிந்ததும் எங்கள் நாடே

வாணிகம் வளர்ந்ததும் எங்கள் நாடே - திரு
    வள்ளுவர் பிறந்ததும் எங்கள் நாடே
பைம்பொன் விளைவது மெங்கள் நாடே - கவிக்
    கம்பன் பிறந்ததும் எங்கள் நாடே

அருட்கிடம் ஆவதும் எங்கள் நாடே - பெரும்
    அடியவர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
சித்தர்கள் உதித்ததும் எங்கள் நாடே - மிகச்
    சிறந்த மருந்துள தெங்கள் நாடே

கைத்தொழில் கண்டதும் எங்கள் நாடே - கொடைக்
    காவலர் வாழ்ந்ததும் எங்கள் நாடே
சிற்பம் சிறந்ததும் எங்கள் நாடே - தரும்
    கற்பகத் தருவென்ப தெங்கள் நாடே
நெசவுத் தொழிலுடைத் தெங்கள் நாடே
    நேசம் விளைப்பது மெங்கள் நாடே
கப்பல்கள் கட்டிய தெங்கள் நாடே - நீதி
    காவியம் நிறைந்துள தெங்கள் நாடே

உண்ணும் பொருளுடைய தெங்கள் நாடே - திருக்
    கண்ணகி தோன்றிய தெங்கள் நாடே
ஔவை வளர்ந்ததும் எங்கள் நாடே - சுய
    அரசு பெறுவதும் எங்கள் நாடே
சாந்தம் பொருந்திய தெங்கள் நாடே - நய
    வேந்தர் ஆண்டதும் எங்கள் நாடே
தஞ்சைத் தலைநக ரெங்கள் நாடே - மகிழ்
    தாண்டவ மாடுவ தெங்கள் நாடே

# முந்துவோம்

முத்துவோம்! முந்துவோம்! முந்துவோம்!

இனிய புதிய தமிழகத்தை
    ஏற்படுத்த முந்துவோம்!
ஏழை அடிமை நிலைமை மாற்றி
    எவரும் ஒன்றாய் வாழுவோம்?
மனிதர் தம்மை மனிதர் ஏய்க்கும்
    மாயவாழ்வை வீழ்த்துவோம்!
மக்கள் வாழ்வில் இன்பம் வளரும்
    வழிகள் கண்டு மகிழுவோம்! 1

அன்னியர்கள் நமது நாட்டில்
    ஆட்சி செய்ய இனிவிடோம்!
அவர்கள் தோட்டம் தொழில்கள் யாவும்
    நமக்குச் சொந்தம் ஆக்குவோம்
இன்னும் உழவர் வாழ்வை உறிஞ்சும்
    முறைமை நாட்டில் இருப்பதா?
இந்த நிலையை நீக்கி உணவுப்
    பண்டம் பெருக் வழி செய்வோம்! 2

தமிழில் ஆட்சி, தமிழில் கல்வி
    தாயகத்தில் நாட்டுவோம்!
தரணியெங்கும் தமிழைக் கலையைப்
    பண்பைப் புகழைப் பரப்புவோம்!

தமிழர் என்று தலை நிமிர்ந்தே
உரிமையோடு வாழுவோம்!
தயக்கம் இன்றிப் பிறரும் நமது
நிலையில் வாழ உதவுவோம்!

*குறிப்பு:- 1950ஆம் ஆண்டு வெளிவந்த திரு சாமி. சிதம்பரனார் அவர்களின் புதிய தமிழகம் என்ற நூலில் பக்கம் 3இல் வெளிவந்த செய்யுள்*

✸ ✸ ✸

# புதுக்குறள்

(1960)

# பதிப்பாசிரியர் குறிப்பு

"புதுக்குறள்" போற்றுதற்குரிய சிறந்த பகுத்தறிவு நூல். அறிவை - நல் வாழ்க்கையை விளக்கும் அணையாத விளக்கு. அறிவின் ஒளியால் நம்மிடம் காலமெல்லாம் பேசும் "புதுக்குறள்'.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்

என்ற வள்ளுவரின் வாய் மொழிக்கு ஒப்பாக நற்குணங்கள் நிறைந்து சிறப்புடன் வாழ்ந்த என் கணவர் - பேரறிஞர் திரு. சாமி. சிதம்பரனார் அவர்கள் எழுதி வைத்திருக்கும் கை எழுத்துப் பிரதிகளாக உள்ள நூல்களில் முதலில் வெளியிடப் படும் நூல் இது.

'சாமி. சிதம்பரனாரின் புதுக்குறள்' எனும் இந்நூலுக்குப் பத உரையும், கருத்துரையும், வேண்டாமல் நூலாசிரியர் தமக்கே உரிய அழகிய எளிய நடையில், சிறந்த முற்போக்குக் கருத்தில், புதுமையான கற்பனையில், இனிய செந்தமிழில், எல்லோரும் படித்துப் பயனடையும் முறையில், மக்கள் நல் வாழ்விற்கு வழிகாட்டும் நோக்கத்துடன் எழுதப்பட்ட நூல்.

"புதுக்குறள்" எனும் இந்த ஒப்பற்ற நூல் 17-8-1953ல் எழுதி முடிக்கப்பட்டது. நூலாசிரியரின் புலமை நிறைந்த முன்னுரை யுடன் கூடியது. இத்தனை ஆண்டுகளாக வெளியிடப்பட முடியாமலோ இருந்தது. காரணம், சதா எழுதுவதிலும், படிப்பதிலும் ஆர்வம் கொண்டு சில சமயங்களில் தன்னையே மறந்து, குளிப்பது, சாப்பிடுவதுகூட மறந்த நிலையில் கட்டுரைகளும், நூல்களும் எழுதிக்கொண்டிருப்பார்கள். நூல்களை வெளியிடும் வேலைகளைக் கவனிப்பதால் தனது எழுதும் நேரம் குறையுமே என்ற எண்ணம். சிந்தனையில் உதித்த -திட்டமிட்டு - குறிப்புகள் எழுதி வைத்திருந்த இன்னும் மற்ற

*நூல்களும் எழுதி முடித்த பிறகு வெளியீட்டு வேலையை ஆரம்பிப்போம் என்ற ஆசையுடன் இருந்தார்கள்.*

*நல்ல முன்னுரைகளடங்கிய இருபதிற்கு அதிகமான கையெழுத்துப் பிரதிகள் இன்னும் தொடமர்ந்து நூல்வடிவில் வெளியிட வேண்டிய கடமையும் நம்முன் இருக்கிறது.*

*சிந்தனை, சொல்,செயல் அனைத்தும் ஒன்றிணைத்து அருமையான கருத்து மிகுந்த புகழ் மிக்க, தமிழ்ச் செல்வங்களை எளிய நடையில் எழுதிப் படைத்தவர்கள் அதனை நூல் வடிவம் பெற்று தமிழ் மக்கள் பயனுறுவதை - உத்தமர் - தமிழ்த் தாயின் தவப் புதல்வர் - திரு. சாமி. சிதம்பரனார் அவர்கள் காணமுடியாமல் நம்மைவிட்டுப் பிரித்து விட்டது! பொல்லாத இயற்கை.*

தமிழ்ப் பெரியார் மறைந்தாரா?

- இல்லை.

*தன் அறிவின் ஒளியால் நம்மில் ஒருவராய், தமிழறிந்த மக்களிடம் காலமெல்லாம் ஒளிவிட்டு, அறிவின் வளர்ச்சிக்கு விருந்திட்டு, ஊக்கம் அளித்து தன் நூல்களின் மூலம் நிச்சயமாக நம்மிடையே உரையாடிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.*

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்

*எனும் பொய்யாமொழிப் புலவரின் வார்த்தைகளின் நினைவுகள் தாம்நமக்குச் சாந்தி அளிக்கும். நமக்கு விட்டிருக்கும் வேலைகளை, -ஆவல் மிகுந்த இலட்சியங்களை - நினைவுகளை, யாவும் நாம் நல்ல முறையில் நிறைஏற்ற வேண்டும். அதுவே எனது ஆறுதல். சீக்கிரத்தில் தொடர்ந்து நூல்கள் வெளியிடப் படும். வேண்டுவது வாசக அன்பர்களின் ஆதரவே.*

*அன்புடன் இந்தநூல் வெளியிட முன்வந்த என்.சி.பி.எச். பிரைவேட் லிமிடெட் நூல் வெளியீட்டாளருக்கு நன்றி.*

*7வது தெரு சவுராஷ்டிர நகர் — சிவகாமி சிதம்பரனார்.*
*சென்னை 24 — இலக்கிய நிலையம்*
*25-7-1961*

# நூலாசிரியர் முன்னுரை

*புதிய கருத்துக்களைக்கொண்டது புதுக்குறள். பாட்டு பழைய குறள் வெண்பாதான். குறள் என்பது ஒருவகைப் பாடலின் பெயர். இரண்டு வரிகள் - அடிகள் கொண்ட வெண்பாப் பாட்டுக்குக் குறள் வெண்பா என்று பெயர்.*

*பழங்குறள் திருவள்ளுவரால் செய்யப்பட்ட திருக்குறள். அது 133 அதிகாரங்களைக்கொண்டது. அதன் பாடல்கள் 1330. அது எழுதப்பட்ட காலம் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன். அக்காலத்துப் பழக்க வழக்கக்கங்களை அதன் மூலம் அறியலாம்.*

*இது புதிய காலம். மக்கள் பல வகையில் மாற்ற மடைந்துவிட்டனர். 2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த பழக்க வழக்கங்களிலே பல இப்பொழுது மறைந்துவிட்டன. பழங்காலத்து நீதிகளிலே சில இன்று அநீதிகளாகக் கருதப்படுகின்றன. மக்களின் மனப்பான்மையும், நடத்தையும் மாறிவருவது போலவே, மக்களின் நீதியும், ஒழுக்கமுங்கூட மாறிக்கொண்டு வருகின்றன. இவ்வாறு மாறுவது இயல்பு; மாற்றத்தைத் தடுக்கமுடியாது; மாற்ற மில்லாவிட்டால் நாகரிகமில்லை.*

*இந்தப் புதுக்குறளிலே, பழங்குறளுக்கு மாறான கருத்துக்களும் உண்டு. இது கால மாறுபாடு. இக்காலத்து மக்களின் எண்ணங்களையும் கொள்கைகளையும் பிற்காலத் தாரும் அறிந்துகொள்வதற்காகவே இக்குறள் எழுதப்பட்டது.*

*காலத்திற்கேற்ற கருத்துக்களைக் கூறவேண்டும் என்பது தான் இந்தப் புதுக்குறளின் நோக்கம். எல்லாப் புதிய கருத்துக் களும் இதில் அடங்கி விட்டன என்று சொல்லுவதற்கில்லை. ஒரு சில கருத்துக்கள்தான் உரைக்கப்பட்டிருக்கின்றன. சொல்லப்பட்டவை சில; சொல்லாமல் விடப்பட்டவை பல; என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்.*

எல்லாப்பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்று வள்ளுவர் பழங்குறளைப்பற்றி அறிஞர்கள் பாராட்டிக் கூறியிருக்கின்றனர். அத்தகைய அரும்பெரும் செந்தமிழ்த் திருக்குறளுக்கு இது எந்த வகையிலும் ஈடாகாது. திருக்குறள் ஒரு பூரணச் சந்திரன். இப்புதுக்குறள் ஒரு மின்மினிப்பூச்சி. வள்ளுவர் குறள் ஒரு செங்கதிர்; இப்புதுக்குறள் ஒரு தீப்பொறி.

ஓய்வு நேரத்தில் அவ்வப்போது எண்ணிய செய்திகளை அமைத்துப் பாடியதே இப் புதுக்குறள். சிந்திப்பதற்குப் போதுமான நேரமும், வசதியும் உள்ளவர்களே சிறந்த நூல்களை எழுதமுடியும். வாழ்க்கைப் போராட்டத்தில் உழல்பவர்கள் உயர்ந்த கருத்துள்ள நூல்களை எழுதுவது அரிது. எப்படியோ சிறு பிள்ளைகள் வீடு கட்டுவதுபோல் காமாச் சோமாவென்று இதைஎ ழுதிமுடித்தேன்.

இப்புதுக்குறள் நான்கு இயல்களைக்கொண்டது.அவை அரசியல், சமூகவியல், அறிவியல், பொதுவியல் என்பன. 75 அதிகாரங்கள். அதிகாரம் ஒன்றுக்கு 10 பாடல்கள் 750 குறள் வெண்பாக்களைக் கொண்டதே இப் புதுக்குறள் இவ்வாறு இயல்களும், அதிகாரங்களும் அமைக்கும் எண்ணத்தைத் தூண்டியது திருக்குறளே.

எல்லார்க்கும் புரியும் எளிய நடையிலே பாடல்கள் இருக்கவேண்டும் என்பது என் ஆசை. கூடியவரையிலும் எளிய சொற்களை அமைத்தே பாடல்களை எழுதியிருக்கிறேன். பெரிய செய்திகளை சிறிய இரண்டடிகளிலே அமைத்து எழுதுவது அவ்வளவு எளிதல்ல. எழுதிப் பார்ப்போர்க்குத்தான் இதில் உள்ள தொல்லை தெரியும். திருவள்ளுவர் போன்ற பேரறிவு படைத்தவர்களால்தான் அரிய செய்திகளைச் சிறிய பாடல்களால் அறிவிக்கமுடியும்.

எத்தகைய ஆற்றலும் இல்லாத நான் இப் புதுக்குறள் எழுதத் துணிந்தது நெஞ்சழுத்தத்தைத் தவிர வேறில்லை. கானத்தில் மயிலாடுவதை ஒரு வான் கோழி கண்டதாம். உடனே தானும் தனது சிறகை விரித்தாடத் தொடங்கியதாம். அந்தக் கதைக்கும் திருக்குறளைப்போல் புதுக்குறள் எழுதத் தொடங்கிய என் கதைக்கும் வேற்றுமையில்லை.

*இப்புதுக்குறளால், திருக்குறளின் சிறப்பு இன்னும் ஏற்றமடையும். இதுவே என் கருத்து. கசப்பு என்று ஒன்று இருந்தால்தானே இனிப்பின் உயர்வு தெரியும். வெய்யில் இல்லாவிட்டால் நிழலின் அருமையை உணரமுடியுமா?*

*ஒரே கருத்து பல அதிகாரங்களில் திருப்பித் திருப்பி இப் புதுக்குறளிலே கூறப்பட்டிருப்பதைக் காணலாம். ஒரு அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் என்று ஒரு வேலி போட்டுக் கொண்டதால்தான் இந்தத் தொல்லை. திருவள்ளுவருக்குக்கூட இந்தத் தொல்லை இருந்ததென்றால் என் போன்றவர்களுக்கு இத்தகைய தொல்லை ஏற்படுவதில் அதிசயம் இல்லை.*

*இப்புதுக்குறள் தமிழிலே எழுதப்பட்டது. பல கருத்துக்கள் தமிழ் மக்களிடம் உலவிக்கொண்டிருப்பவை. இப்பாடல்கள் செவிக்கினிமை தரும் செய்யுட்களாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் செந்தமிழ்ச் சொற்களேமிகுதி. இன்றைய புதுஉலகக் கருத்துக்களும் இப்புதுக்குறளில் புகுந்திருக்கின்றன. ஆகையால் தமிழ் மக்கள் என்னை அவ்வளவாக வெறுக்க மாட்டார்கள். வெறுப்பவர் சிலர் இருந்தாலும் பாராட்டு வோரும் சிலர் இருப்பர். இத்தகைய துணிவுதான். எண்ணந் தான் என்னை இதை வெளியிடுவதற்குத் தூண்டியது.*

*ஆகையால் தமிழன்பர்கள் என் முயற்சியைக் குற்றமாகக் கருதமாட்டார்கள் என்று நம்புகிறேன்.*

*அன்பன்,*

*இலக்கிய நிலையம்* — *சாமி சிதம்பரன்.*

*சென்னை - 24.* — *17-8-1953.*

## சாமி - சிதம்பரனாரின்
## புதுக்குறள்
## இயல்களும் அதிகாரங்களும்

# 1. அரசியல்

1. நாடு
2. நல்லாட்சி
3. தீயாட்சி
4. அமைச்சர்
5. அதிகாரிகள்
6. தனி அதிகாரம்
7. குடிமக்கள்
8. மக்களுரிமை
9. அடக்குமுறை
10. உற்பத்தி
11. பாட்டாளிகள்
12. பணத் தலைமை
13. விவசாயம்
14. நிலவுரிமை
15. வேலையின்மை
16. போர்
17. வெறுப்பு
18. ஆத்திரம்
19. தோழமை
20. பகைமை
21. பொறுமை
22. அறிஞர்
23. எழுத்தாளர்
24. விளம்பரம்

# 1. அரசியல்

## 1. நாடு

1. அன்புக் கனிநுகர்ந்து ஆனந்தமாய்ய மக்கள்
இன்புற்று வாழ்வதே நாடு.

2. இரப்போரும் ஈவோரும் இல்லாமற் செல்வம்
சுரக்கின்ற நாடே சுகம்.

3. ஊர்கள் நகரங்கள் ஒன்றாய்த் தழுவுதற்கு
நேர்வழிகள் கொண்டதே நாடு.

4. கல்வி விவசாயம் கைத்தொழிற் பண்டங்கள்
செல்வம் கொழிப்பதே நாடு.

5. நீர்ப்பா சனமும் நிறைந்த விளைபொருளும்
ஏர்த்தொழிலும் நாட்டுக் கினிது.

6. பூமிக்குள் ஆழ்ந்து கிடக்கும்புதை பொருள்கள்
சேமிக்கும் நாடே சிறப்பு.

7. வானோங்கு சோலை வளர்ந்தரு நீர்த்தேக்கம்
தாமெந்த நாட்டக்கும் கண்.

8. வான்நீர் நிலப்படைகள் வாய்ந்திருந்து சாந்திரமரம்
தான் தழைத்து நிற்பதுவே நாடு.

9. விஞ்ஞானத் தால்மக்கள் வேதனைகள் தீர்த்துவளம்
செய்வதுவே சிறந்த நாடு.

10. வெளிப்பகை உட்பகை வேர்களைந்து மக்கள்
களிப்புற்று வாழ்வதே நாடு.

# 2. நல்லாட்சி

1. நாட்டுக் குடி மக்கள் நல்லின்ப வாழ்வுபெறக்
காட்டுவதே நல்லாட்சி ஆம்.

2. வீட்டுக்குக் கூறை விளங்குவது போலிந்த
நாட்டுக்கு நல்லர சாம்.

3. நாளும் குடிமக்கள் எண்ணங்கள் நன்கறிந்து
ஆளுவதே நல்லர சாம்.

4. இல்லாமை நோயால் எவரும் இறவார்கள்
நல்லர சாட்சிநடந் தால்.

5. நீரால் வறட்சியால் நேரும் கொடுமைகள்
வாராமல் காப்ப தரசு.

6. பஞ்சத்தை வீழ்த்திப் பகைமையை வேர்அறுக்க
அஞ்சா அரசே அரசு.

7. வருவாய் பெருக்கி வரிகள் குறைக்கும்
அறிவாளர் ஆள்வ தரசு.

8. ஆற்றின் அணைபோல் அவனிக்கு நல்லரசு
வீற்றிருந் தால்நன்மை யுண்டு.

9. வாலிபர்கள் வீரராய் வாழ வழிவகுத்து
ஆளுவதே மக்களர சாம்.

10. நாசவலை வீசும் நயவஞ்சக் கும்பலின்
மோசம் களைவ தரசு.

# 3. தீயாட்சி

1. அன்புநீர் பாய்ச்சார் அடக்குமுறைத் தீவைப்பர்
துன்பக் கொடுங்கோலர் தாம்.

2. உழவர் தொழிலர் உயிர்குடிக்கும் ஆட்சி
பழயமரம் ஆகி விழும்.

3. தங்கள் குறைசொல்லி வாதிடுவோர் தம்மையெலாம்
இங்கெதிர்க்கும் தீயாட் சியே.

4. நலம்செய்ய நாடா நயவஞ்சர் ஆட்சி
கலகப் புயல்கி ளப்பும்.

5. பஞ்சத்தை வாலறுத்துப் பட்டினிச் சாவொழிக்கா
பஞ்சைகள் ஆட்சி படும்.

6. பதவி வெறிபிடித்த பாதகர்கள் ஆட்சி
உதவாது; தொல்லை தரும்.

7. பேதங்கள் பாராட்டும் பேயர்கள் ஆட்சியிலே
நீதிமுறை வாழ்வ தில்லை.

8. மக்கள்துயர் காண மறுக்கின்ற தீ யரசால்
எக்காலும் இன்ப மில்லை.

9. வல்லார் துணையாய், வறியோர்க்குப் பேரிடியாய்த்
தொல்லை தருவதர சோ?

10. வேலையில் லாமையை வீங்கவிடும் வீணாட்சி
காலொடிந்த வண்டியே காண்.

# 4. அமைச்சர்

1. அண்டை அரசுகளோடு அன்புடன் வாழவழி
கண்டுநடப் போர்அமைச் சர்.

2. உலக நடப்பறிந்து ஒட்டி ஒழுகும்
கலைஞர்தாம் மந்திரி கள்.

3. எதிர்காலம் கண்டுணர்ந்து ஏற்ற படிசெய்யும்
மதிவேண்டும் மந்திரிக் கே.

4. எல்லோரும் பாராட்டும் இன்சொல்லும் நற்செயலும்
உள்ளவரே நல்லமைச் சர்.

5. கால நிலைஉணர்வு, கல்வி, அறிவு திறம்
சாலவுடை யோர்அமைச் சர்.

6. சிக்கல் களைப்போக்கிச் சீர்திருத்தம் செய்வதற்குத்
தக்கவர் தாம் மந்திரி கள்.

7. தந்திரத்தில் வல்லமையும் தாராளச் சிந்தனையும்
மந்திரிகட் கேற்ற குணம்.

8. நெஞ்சத் துணிவோடு நேர்மைக் குயிர்வழங்க
அஞ்சார் அமைச்சரென் பார்.

9. பொதுமக்கள் தங்கள் தலைவர் எனப்போற்றும்
தகுதி அமைச்சர் தரம்.

10. வஞ்சத் துடன்எதிர்ப்போர் வாயடக்கித் தன்கடமை
அஞ்சாமற் செய்வரமைச் சர்.

# 5. அதிகாரிகள்

1. அதிகாரக் கர்வத்தால் ஆகாத செய்வோர்
சதிகார ஊழியர் கள்.

2. ஆட்சிக் கடிப்படையாய் நிற்குமதி காரிகள்
தாழ்ச்சிச் செயல்புரி யார்.

3. ஆட்சியை வேரறுக்கும் அப்பகைவர் ஆரென்றால்
மாட்சியிலா ஊழியர் கள்.

4. ஏழையரை வாட்டி இலஞ்சம் பெறுவோரால்
வீழும் அரசழிந் தே.

5. குடிமக்கட் குள்ள குறைபா டுணர்ந்து
நடப்பவரே ஊழிய ராம்.

6. தன்னல ஊழியர் தங்கள் பொறுப்புணரார்
இன்னல் விளையுமவ ரால்.

7. நல்ல மரத்தின் நடுப்புகுந்த செல்லனையர்
பொல்லாத ஊழியர் தாம்.

8. நீதி முறைதவறி நிர்வாகம் செய்கின்ற
பாதகரே ஆட்சிப் பகை.

9. நெற்குதிருள் வாழும் எலிகளுக்கு நேராவர்
அற்பவதி காரிகள் தாம்.

10. நேர்மை திறமை யிலார் நிர்வகிக்கும் நாட்டிற்குள்
போரெழுந்து பாழ்செய்யு மே.

# 6. தனி அதிகாரம்

1. எங்கும் உரிமை முழக்கமிடும் இந்நாளில்
தங்காத் தனிஅதிகா ரம்.

2. ஒருமனிதன் ஆளும் உலகமினி யில்லை;
வருவதினி மக்களாட்சி யே.

3. காட்டு மிராண்டிக ளாய்வாழ்நத காலத்தில்
நாட்டினர்சர் வாதிகா ரம்.

4. கொள்ளைக்குத் தோழன் கொடுமைப் பிறப்பிடம்
துள்ளும் தனிஅதிகா ரம்.

5. சர்வாதி காரம் சரிந்த கதை கண்டவர்கள்
கர்வத்தை கைவிடு வார்.

6. சாதி யினவெறிகள் சர்வாதி காரத்தின்
ஆதியாய் நிற்பன வாம்.

7. தர்மம் அவதாரம் தெய்வம் தலைவிதிகள்
சர்வாதி காரப் படை.

8. தேசத்தைப் பாழ்படுத்தும் தீராத போர்வளர்க்கும்
மோசம் தனியதிகா ரம்.

9. பாட்டாளர் முன்னணியைப் பாழாக்கிப் பிற்போக்கை
நாட்டும் தனியதிகா ரம்.

10. வேட்டைநாய் போல வெறிபிடித் தாள்நோக்கிந்
நாட்டில் இடமினி யேது?

# 7. குடி மக்கள்

1. அன்போ டிணைந்தே அனைவரும் ஓர்குலமாய்
இன்புறு வோர்குடிமக் கள்.

2. ஆக்கவினைத் திட்டம் அமைக்க அரசினர்க்கு
ஊக்கம் தருபவர்மக் கள்.

3. ஆட்சியிலே பங்கெடுத்து ஆளுவோ ரைத்திருத்தும்
மாட்சிகுடி மக்கள் கடன்.

4. ஆராண்டால் என்னென் றலட்சிய மாயிரார்
வீரப் பொதுமக்கள் தாம்.

5. ஓயா துழைக்கும் குடிமக்க ளால்அரசு
சாயாமல் ஓங்கிவள ரும்.

6. தன்னலங்கொண் டாள்வோர்தகாதன செய்யுங்கால்
முன்சென்று தாக்கல் முறை.

7. நல்லவற்றை ஆட்சி நடத்துங்கால் ஒத்துழைக்க
வல்லவரே குடிமக் கள்.

8. நன்மைக்கும் தீமைக்கும் நாமே பொறுப்பென்ற
உண்மையுணர் வோர்குடி கள்.

9. நாடு நமதென்னும் நம்பிக்கை யோடுபுகழ்
தேடுவோர் தாம்குடி கள்.

10. வஞ்சனை பொய்நீக்கி வாழ்க்கையிலே முன்னேற
அஞ்சாரே நற்குடி கள்.

# 8. மக்கள் உரிமை

1. ஆருக்கும் நீதிமுறை ஒன்றாய் அமைக்கவெனக்
கூறுதல் மக்கள் கடன்.

2. உரிமை மறவாத உத்தமர் வாழ் நாடே
பெருமையிலே முன்னிற்கு மாம்.

3. ஊருக்குக் கல்விசுகா தாரமெலாம் வேண்டுமெனும்
கோரிக்கை மக்கள் கடன்.

4. எண்ணம் எழுத்துரிமை சொல்லுரிமைக் காகப்போர்
பண்ணுவது மக்களுரி மை.

5. கைப்பூட்டு வாய்ப்பூட்டால் காலூன்றி வாழரசைத்
தப்பாமல் மாற்றல் தகும்.

6. செல்வத்தைப் பாழாக்கிச் சீரழிக்கும் ஆட்சியினை
நல்வழியில் மாற்றல் நலம்.

7. எல்லா நிகழ்ச்சிகளும் எம்மொழியில் வேண்டுமெனச்
சொல்லுவது மக்களு ரிமை.

8. தங்கள் குறைமுழுதும் தாராள மாய்ச்சொல்ல
இங்குரிமை உண்டெவர்க் கும்.

9. நாட்டாரைத் துன்புறுத்தி நாசம் புரியரசை
ஓட்டுதல் மக்களு ரிமை.

10. மக்கள் மனத்திற்கு மாறுவழி போமரசை
தக்கவழி மாற்றல் தகும்.

# 9. அடக்கு முறை

1. அன்புக்கு மாறாய் அடக்குமுறை கையாள்வோர்
துன்பத்தில் வீழ்ந்திறப் பார்.

2. ஆதரிப் போரும் அடக்கு முறைத்துயரால்
மோதும் எதிரிகளா வார்.

3. ஆத்திரத் தையெழுப்பி ஆள்வோரைப் பாதலத்தில்
வீழ்த்தும் அடக்கு முறை.

4. உறங்கும்சிம் மத்தை உசுப்பிவிடல் ஒக்கும்
அறமில் அடக்கு முறை.

5. கோழை களைச்சிறையில் கொண்டுபோய் வைத்திருத்தல்
வீரர்கள் ஆக்கும் வழி.

6. தானிருக்கும் வீட்டைத் தரைமட்டம் ஆக்குவதே
ஈன வடக்கு குறை.

7. நல்வினையால் அன்பால் நாடாள மாட்டாதார்
கொல்வார் அடக்குமுறையால்.

8. நீதிக்குப் போராடி நிற்போர் அடக்குமுறைப்
பாதகத்தால் சோர்ந்துவி டார்.

9. வைக்கோல் குவியலுள் தீமறைத்து வைப்பதே
மிக்க அடக்குமு றை.

10. வளரும் செடிவேரில் வார்க்கும்வெந் நீராம்
அளவில் அடக்குமு றை.

# 10. உற்பத்தி

1. ஆடையூண் வீடுகளுக் கானபொருள் உற்பத்தி
கூடுதலே முக்கிய மாம்.

2. உள்நாட்டின் தேவையறிந் துற்பத்தி செய்முறையை
எந்நாடும் கொள்ளல் நலம்.

3. வேண்டும் பொருள்களெலாம் விஞ்ஞானத்தின் துணையால்
ஈண்டியற்றல் நல்ல முறை.

4. நல்லபல யந்திரகள் நாட்டித் தொழில்செய்தால்
இல்லாமை மாய்ந்து விடும்.

5. புத்தம் புதியமுறை கண்டு பொருள்பெருக்க
நித்தம் உழைத்தல் நலம்.

6. கூட்டுமுறை கொண்டுதொழில் செய்தால் குறைநீங்கும்
நாட்டிற்குள் பஞ்சம் இலை.

7. பொன்னாசை கொண்டுபொருள் உற்பத்தி செய்வதனால்
என்னபலன் மக்களுக் கே?

8. பணப்பண்ட உற்பத்தி ஊக்கந்தான் பாரில்
உணவுப் பொருள்குறைக் கும்.

9. ஏனோர்பால் ஈவிரக்கம் இல்லாரே ஏற்றுமதிக்
கான பொருள்விளைப் பார்.

10. பற்றாமை காட்டிப் பணம்பறிக்கும் மாக்களே
உற்பத்தி யைக்குறைப் பார்.

# 11. பாட்டாளிகள்

1. நாட்டிலே நாகரிகச் செல்வம் கொழிப்பதற்குப்
பாட்டா ளரேகா ரணம்.

2. கல்லும் பெரும்புதரும் காடும் களைந்துலகில்
நல்லநிலம் கண்டவர்கள் யார்?

3. பொன்னும் நவமணியும் தேடிப் புவிமுழுதும்
நன்னிதிகள் சேர்த்தவர் யார்?

4. உண்டுறங்கி இன்புறுதற் கோங்குபல மாளிகைகள்
கண்டோர் உழைப்பாளி கள்.

5. மலைபிளந்து கற்செதுக்கி மாநிலத்தில் நல்ல
கலைவளர்த்தோர் பாட்டா ளர்கள்.

6. பூமலர்ச் சோலைகளும் போகவரச் சாலைகளும்
தாமமைப் போர்பாட்டா ளர்.

7. நீர்நிலம் வானத்தின் நீளம் கடப்பதற்கு
ஓர் துணை பாட்டாள ரே.

8. ஆடைபல நெய்துதரும் மக்கள் அடுபசியால்
வாடையினால் நொந்துமடி வார்.

9. பல்வளமும் தேடித் தருகின்ற பாட்டாளர்
நல்குரவில் வாடுவ தேன்.

10. சிந்தனையைச் செய்வினையால் சீர்செய்யும் நல்லாண்மை
சொந்தம் உழைப்பவர்க் கே.

# 12. பணத் தலைமை

1. ஆளுகையைக் கைப்பற்றி ஆகாமை செய்வதெந்
நாளும் பணத்தலை மைதான்.

2. உற்பத்திக் கான உடைமையெலாம் கைப்பற்றும்
அற்பம் பணத்தலை மைதான்.

3. உழைப்போர் இரத்தம் உறிஞ்சிக் கொழுத்துத்
தழைக்கும் பணத்தலை மையே.

4. குள்ள முதலாளிக் கும்பலே ஏழையரைப்
பள்ளத்தில் வீழ்த்தி வைக்கும்.

5. நாட்டுக்குள் போர்மூட்டும்; நாசம் விளைவிக்கும்;
போட்டி முதலாளித் வம்.

6. முன்னாள் கலைகள் முதலாளி கள்வளர்த்தார்
இந்நாள் குறியிலா பம்.

7. ஆதாயத் துக்கே அலையும் கழுகுகளால்
தீதேஎந் நாட்டினுக் கும்.

8. பணத்தலைமை வேர்விட்டு வாழ்கின்ற நாட்டில்
இனச்சண்டை தோன்றிநிற் கும்.

9. ஊராரைக் கொள்ளை யிட்டு உண்டு கொழுப்போர் தம்
பேர்முத லாளிக ளாம்.

10. இல்லார்க்கு வாழ்வில்லை உள்ளார்க்கே இன்பமெனும்
கள்ளம் பணத்தலை மைகாண்.

# 13. விவசாயம்

1. உழவுத் தொழில்சுருங்கி உற்பத்தி வீழ்ந்தால்
இழவே உலகுக்கெல் லாம்.

2. உண்டி குறைந்தால் உலகெல்லாம் பஞ்சநோய்
மண்டும்; ஒழுக்கமழி யும்.

3. ஊக்கம் உழவர்களுக் கூட்டுவதே நாட்டை வளம்
ஆக்கும் பெருநெறி யாம்.

4. ஊரார்க் குணவூட்டும் உண்மை உழைப்பாளர்
ஏராளர் இவ்வுல கில்.

5. ஏழை உழவர்கள் எல்லோர்க்கும் வாகனமாய்
வாழுவது நன்றல வாம்.

6. ஓடு நீர் தேக்கி உழவுத் தொழில் பெருக்கி
நாடுவளம் செய்வருழ வர்.

7. பண்படுத்தி நின்று பயிர்விளைப் போர்க்குத்தான்
உண்டு நிலவுரிமை யே.

8. பாழ்பட்ட பூமியினைப் பண்படுத்தி நெல்விளைத்து
வாழ்வளிப் போர்உழ வர்.

9. நாகரிகம் ஓங்கி நடைபோடக் காரணம்
ஆகும் விவசாய மே.

10. வீடுநலம் இன்றி விவசாயிகள்நெஞ்சம்
வாடல் முறையல்ல வாம்.

# 14. நிலத்தலைமை

1. உழுவோர் நிலத்தலைவர் பேதம் ஒழிந்தால்
செழுமை நிலைத்துநிற் கும்.

2. எங்கே நிலமுள்ள தென்ப தறியாதார்
இங்கே நிலத்தலைவ ராம்.

3. ஏழைஉழவர்தம் இன்பத்தைக் கொள்ளைகொண்டு
வாழும் நிலத்தலை மை தான்.

4. நிலத்தலைமை ஆட்சி நிலைத்திருக்கும் நாட்டில்
பலத்த போராட்டம் எழும்.

5. நிலத்தலைமை வேரோடி நிற்கும் இடத்தில்
உலவும் உணவுப்பஞ் சம்.

6. ஓட்டை விழுந்துடைந்து போன நிலத்தலைமைக்
கோட்டையால் என்ன பயன்?

7. கொள்ளைப் பணத்தார் கொடுத்தகடன் வட்டிக்கே
இல்லார் நிலமிழந் தார்.

8. நீர்பாய்ச்சிப் பண்படுத்தி நெல்விளைக்க மாட்டாதார்
பேரில் நிலமிருப்ப தேன்.

9. பாடு கருதாமல் பண்டம் விளைப்போர்க்குக்
கேடு நிலத்தலை மை தான்.

10. மன்னர் மரபோடு மாண்ட நிலத்தலைமை
இன்னம் உயிர்வாழ் வதேன்?

# 15. வேலையின்மை

1. ஆக்கவினைத் திட்டங்கள் தீட்டி வேலையின்மை
போக்குவதே நல்லமு றை.

2. இல்லையெனும் துன்பங்கள் ஏக வழிவகுத்தால்
பொல்லாத வேலையின்மை போம்.

3. உற்பத்திப் பங்கீடும் ஓய்வும் கிடைத்துவிட்டால்
நிற்காது வேலையின்மை தான்.

4. எந்திரத்தால் வேலையின்மை இவ்வுலகில் வந்ததெனில்
தந்திரத் தாலொழிக்க லாம்.

5. எவ்வளவு பேர்உலகில் இன்னும் பிறந்தாலும்
செய்வதற்கு வேலைகள் உண்டு.

6. நாட்டின் அமைதிகெடும் நல்லொழுக்கம் மாண்டுவிடும்
வாட்டும் தொழிலின்மை தான்.

7. வேலைகளுக் கின்னும்ஆள் வேண்டுமெனச் செய்வதுவே
ஆளுவோர் தம்கட னாம்.

8. வேலைகளைச் செய்ய விரும்புகிறோம் என்றுவரும்
காளையரைக் காத்தல் கடன்.

9. வேலையற் றோர்தொகை வீணிற் பெருகிவிட்டால்
ஆளுவோர்க் கேஆபத் தாம்.

10. வேலையில் லாமையின் வேரைக் களைவதுதான்
ஆள்வோர் முதற்கடமை யாம்.

# 16. போர்

1. ஆளும் வெறிபிடித் தாடுகின்ற மூர்க்கரால்
மூளுவ தேயுலகப் போர்.

2. பச்சை இரத்தவெறி கொண்ட பணப்பேய்கள்
இச்சகத்தில் போர்விரும் பும்.

3. பண்டங்கள் விற்றுப் பணம்குவிக்கும் பாதகரே
கிண்டுவார் போர்நெருப்பை யே.

4. பாடுபட்டுச் சேர்க்கின்ற பண்டமெலாம் போர்மூண்டால்
கேடுபட்டுப் பாழாய் விடும்.

5. போரால் உழவு, தொழில் போய்விடும் பாழாகி
பாராளும் பட்டினிப் பேய்.

6. போரில் மடிவோர் பொதுமக்கள் என்பதனைத்
தேறுவோர் போர்மறுப் பார்.

7. தாயர் மனைவியர் தாமலற நாட்டிளைஞர்
போயழிவர் போரெழுந் தால்.

8. மக்களை ஊர்களை மண்ணோடு மண்ணாக்கும்
இக்காலப் போர்க்கொடுமை தான்.

9. முன்னேற்றப் பாலத்தை முற்றும் தகர்த்துவிடும்
பின்னிழுக்கும் மக்களைப் போர்.

10. போர்மறுப் போம் என்று பொதுமக்கள் ஒன்றானால்
பார்முழுதும் சாந்திநில வும்.

# 17. வெறுப்பு

1. அன்னியர்கள் மேற்பகையும் ஆத்திரமும் மூட்டுவோர்
எந்நிலத்தும் கொள்ளையர் கள்.

2. உழைப்போர்கள் வாழ்வை உயர்த்தவழி காணார்
அழிப்பார் பகைவளர்ப் பார்.

3. ஏழைகளைக் கொள்ளையிடும் ஈவிரக்கம் அற்றவரே
பாழ்செய் பகைவளர்ப் பார்.

4. ஓட்டாண்டியாய் மக்கள் உள்ளம் குமுறவழி
காட்டும் வெறுப்புணர்ச்சி தான்.

5. சாதி வெறிகிளப்பிச் சண்டைக்கு நீர்பாய்ச்சும்
பாதகம் நாட்டுப் பகை.

6. சாதிவெறிவாழ்வே சமுதாயக் கொள்ளையரின்
பாதுகாப் புப்படை யாம்.

7. தீதை வெறுத்தெதிர்க்கும் தீரம் வளர்வதனால்
பூதலத்தில் இன்பமுண் டாம்.

8. நாகரிகப் போராட்டம் நாட்டில் வளர்வதனால்
ஆவதென் ஏழைகட் கே.

9. மொழிவெறுப்பு நஞ்சூட்டி மோதவிடும் செய்கை
அழிக்கும் அறிவினை யே.

10. பிறப்பால் நிறத்தால் பேதங்கள் தூண்டி
வெறுப்பை வளர்ப்பது வீண்.

# 18. ஆத்திரம்

1. அநீதியைக் கண்டவிடத் தாத்திரம் கொள்ளாதார்
மனிதரே அல்லர்; மரம்.

2. ஆத்திரம் மக்கள் இயற்கை அதையடக்கிக்
காத்து நடத்தல் கடன்.

3. ஆற்றுநீர் தன்னை அதன் கரைகள் காத்தல்போல்
ஆத்திரத்தைக் காத்தல் அறிவு.

4. ஆத்திரமும் உண்டென்று அறிந்தால்தான் நஞ்சனையார்
ஏய்த்திடற் கெண்ணார் எளிது.

5. பஞ்சைகளை ஏமாற்றும் பாவிகளின் சூதழிக்க
அஞ்சாமல் ஆத்திரம் கொள்.

6. மானங் கெடுத்து மக்களைப் பாழாக்கும்
ஈனர்பால் ஆத்திரம் கொள்.

7. வல்லாராய்ச் சட்டம் வகுத்துக்கொண் டேழைகளைக்
கொல்வார்மேல் ஆத்திரம் கொள்.

8. நெறிநாயை வீழ்த்தும் குறுந்தடிபோல் நிற்கும்
அறிஞரிடம் ஆத்திரந் தான்.

9. வெறுப்பு விதைதெளித்து மக்கள் தொடர்பை
அறுப்பவர் பால்ஆத்திரம் கொள்.

10. வேட்டைக்குத் துப்பாக்கி வேண்டும் வெறியரை
ஓட்டற் குதவுமாத்தி ரம்.

# 19. தோழமை

1. உள்ளும் புறமும் ஒருமித்த தன்மையுளோர்
கொள்ளுவதே தோழமை யாம்.

2. வேண்டுகோள் இன்றி விரைந்து துயர் தடுப்போர்
ஈண்டினிய தோழர்க ளாம்.

3. புரியாமல் குற்றம்செய் போதிலதை மாற்றும்
பெரியோரே தோழர்கள் காண்.

4. தன்னலத்துக் காகத் தழுவுமோர் தோழமை
சின்னாளில் நைந்து விடும்.

5. நன்மை பிறர்க்காற்றார் நாடுவார் பேருதவி
இன்மையாய் நட்பவர்க் கே.

6. என்றும் பிறர் துயரம் தீர்க்கும் இயல்பினர்க்குள்
நின்றோங்கும் தோழமை தான்.

7. சிறுகுற்றம் கண்டாலும் சீறிவிழு வோர்க்குள்
ஒருபொழுதும் தோழமை யில்லை.

8. நல்லார்க்குள் தோழமைதான் நன்றாக வேரூன்றி
வல்லமர மாய்வள ரும்.

9. கல்லின்மேல் வீழ்ந்த விதைபோல் கருகிவிடும்
பொல்லார்தம் தோழமை தான்.

10. பள்ளத்தில் வீழுங்கால் பார்த்துத் தடுப்போரே
நல்லவர் தோழர்கள் தாம்.

# 20. பகைமை

1. அன்னியரைத் துன்பத்தில் ஆழ்ந்த நினைப்பதே
தன்னைக் கெடுக்கும் பகை.

2. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
கள்ளர் பகைவரெனக் காண்.

3. கூடியிருந்து குடிகெடுக்கும் குள்ளரே
கேடு பெரும்பகை யாம்.

4. சாதிமத நஞ்சால் சமுகத்தைப் பாழ்செய்யும்
பாதக ரேபகைவ ராம்.

5. தப்புகள் செய்தாலும் தட்டிக் கொடுப்பவர்
அப்பா! கொடும்பகை வர்.

6. தன்வீட்டுத் தீயேனும் தன்னைச் சுடுமாப்போல்
தன்எண்ணம் தன்னைச் சுடும்.

7. பக்கத்து வாழ்வோர் பகைகொண்டு நிற்பவர்கள்
இக்கட்டுக் காளாகு வார்.

8. பாம்பாகி மக்கட்குப் பாதகம் செய்வோரை
நாம்பகைமை கொள்ளல் நலம்.

9. பொய்வேடம் பூண்டிந்தப் பூவுலகை ஏய்ப்போரை
மெய்யாய்ப் பகைவரெனக் கொள்.

10. வாயடக்கம் இன்றி வசைத்தீ மொழிதெளித்தால்
தாயும் பகைகொள்ளு வாள்.

# 21. பொறுமை

1. அறிவுடையார் தம்மை அணிசெய்யும் பூண்கள்
பொறுமையும் அன்புமே யாம்.

2. ஆரிடத்தும் வெஞ்சினம் காட்டாமல் அன்புமொழி
கூறல் பொறுமைக் குணம்.

3. காற்றில் பறக்கின்ற காய்ந்த சருகனையார்
ஆத்திரத்தின் வாய்ப்படு வார்.

4. தீமை புரிவாரைத் தேற்றி அறநெறியில்
போமாறு செய்தல் பொறை.

5. நாடாள் அறிஞர்க்கு நல்ல படைத்துணை
ஓடாப் பொறுமை யினை?

6. நீரை எதிர்க்கும் நெருப்புண்டோ வெல்வார் யார்?
சோராப் பொறுமை யினை?

7. பதற்றம் அடக்கிப் பணிவுமொழி சொல்லல்
இதத்தைத் தரும்பொறுமை ஆம்.

8. பொங்கினார்க்குக் காடு பொறுத்தார்க்கு பூமியெனல்
தங்கப் பழமொழி ஆம்.

9. பொறுமை யுடையார் புகழ்வீழ்தல் இல்லை
கருங்கல்லைத் தூக்குமோ காற்று.

10. பொறுமைப் பொதிய மலைமீது வாழ்வார்.
அருமைத் தென்றல் போல் வார்.

# 22. அறிஞர்

1. அறிஞர் பலர்கூடி ஆராய்ந்து செய்யும்
பெருந்திட்ட மேவெற்றி யாம்.

2. ஆக்க வினைமுடிக்க வல்ல அறிஞரை
ஊக்குவதே நன்மைக் குயிர்.

3. ஆழ்ந்துமிகச் சிந்தித்து அடக்கமுடன் செய்வோரால்
வாழ்வுபெறும் எத்தொழிலும்.

4. எத்தொழிலே யானாலும் வெற்றிபெற வல்லவர்கள்
ஒத்துழைப்பால் நன்மை வரும்.

5. எந்தவினை யானாலும் எண்ணித் துணிந்துசெய
முந்துவது நல்லறி வாம்.

6. சிந்தனா சக்தியும் செய்திறமும் உள்ளவர்கள்
எந்தநாட் டிற்கும் உயிர்.

7. திட்டமிட்டுச் செய்யத் தெரியாத காரியங்கள்
நட்டத்தில் வீழ்ந்து விடும்.

8. நல்லறிஞர் ஒத்துழைப்பை நாடாத ஆட்சிமரம்
நில்லாது செத்து விடும்.

9. நாட்டிற் பெருகிவரும் நாகரிகம் நல்லறிஞர்
காட்ட வளர்வது வாம்.

10. நாட்டுக்கு நல்லறிஞர் வேண்டும் உயர்ந்துவளர்
காட்டுக்கு நன்மழை போல்.

# 23. எழுத்தாளர்

1. ஆட்சி செயுந்தவறை அஞ்சா தெடுத்துரைக்கும்
மாட்சிஎழுத் தாளர் கடன்.

2. இன்பமே காணாமல் ஏங்கித் தவிப்போர்தம்
துன்பந் துடைப்பதெழுத் தாம்.

3. உண்மைகளை ஆராய்ந் தெழுதி உவப்பவரே
வன்மை எழுத்தாளர் கள்.

4. உயிர்க்கிறுதி வந்தாலும் உள்ளதைக் கூறப்
பயமற் றவனெழுத்தா ளன்.

5. எத்தகைய மாற்றமும் வேண்டாம் எனவெழுதும்
பித்தர் எழுத்தாள ரோ?

6. ஒடுங்கிக் கிடப்போர்தம் உள்ளத்தைக் கிள்ளத்
தொடங்கு வர்எழுத்தா ளர்.

7. காசுக் கெழுதித் தம்காலம் கடத்துவார்
மாசாம் எழுத்துலகுக் கே.

8. குப்பை களை எழுதிக் கோபுரம்போற் குவிப்போர்
அப்பா! எழுத்தாள ராம்.

9. நீர்சுரக்கும் ஊற்றாய் நிலவிப் பொருள் விளக்கும்
நேரெழுத் தேசிறந்த தாம்.

10. வெள்ளத்தில் ஓடம்போல் வேதனைக்கு நன் மருந்தாய்க்
கொள்ளத் தகுவதெழுத் தாம்.

# 24. விளம்பரம்

1. செய்யத் துணிந்த சிறந்த வற்றையெலாம்
வையத்தார் காணவைப் பீர்.

2. நற்றிட்ட மானாலும் நாட்டார் எதிர்ப்பரேல்
முற்றுமது தோற்று விடும்,

3. நீதிநிர் வாகமுறை இன்னதென எல்லோர்க்கும்
போதித்தல் ஆட்சி முறை.

4. நல்லசுக வாழ்வுமுறை நாட்டினர்க்கெல்லாம் விளங்கச்
சொல்லுவ தாட்சி கடன்.

5. எப்பொருள்கள் எங்கெங்கே வாங்கலாம் என்றுவிலை
செப்புவது நல்ல செயல்.

6. நல்லவைகள் கெட்டவைகள் இன்னவைகள் என்று தினம்
சொல்லுவது நல்ல முறை.

7. திரைக்காட்சி நாடகங்கள் தேசத்தில் கல்வி
பரவுதற்குச் சாதனங் கள்.

8. நாட்டுப் பகைவர் நடத்தைகளை யாவர்க்கும்
காட்டுவதே நன்மை தரும்.

9. ஊக்கத் தால்உழைப்பால் ஊரார்க்குத் தொண்டு செய்வோர்
வாழ்க்கையறி வித்தல் நலம்.

10. சொல்லால் எழுத்தால் சுதந்தர தாகத்தை
எல்லோர்க்கும் ஊட்டல் நலம்.

## சாமி - சிதம்பரனாரின்
## புதுக்குறள்
## இயல்களும் அதிகாரங்களும்
# 2. சமூகவியல்


1. குடும்பம்
2. காதல்
3. மணம்
4. பாலகர்
5. வீரம்
6. கோழை
7. ஒற்றுமை
8. நன்னடத்தை
9. தன்னலம்
10. வஞ்சகர்
11. சாதி வேற்றுமை
12. வெறியர்
13. அறம்
14. மறம்
15. செருக்கு
16. ஆசிரியர்
17. கலை
18. இலக்கியம்
19. இலக்கியப் போலி
20. முயற்சி
21. சோம்பல்
22. ஆண்பெண்
23. துறவு
24. பொதுப்பணி

# 2. சமூகவியல்

## 25. குடும்பம்

1. அன்புப் பயிரோங்கி ஆனந்தம் வாழ்கழனி
இன்பக் குடும்பமே ஆம்.

2. காதல்மனைவி கனிவாய்ச் சிறுவர்களின்
ஆதரவே குடும்ப மாம்.

3. மனித இயல்பனைத்தும் மாசின்றி வாழும்
புனிதமனை தான்குடும்ப மாம்.

4. கூட்டுறவு வாழ்க்கைமுறை தோன்றி வளரவழி
காட்டு வதுகுடும்ப மாம்.

5. ஊக்கத்தை ஊட்டி உழைக்கவழி காட்டிநலம்
ஆக்கு வதுகுடும்பந் தான்.

6. துரைத்தனமும் நல்ல குடித்தனமும் ஒன்றென்
றுரைத்தனர் முன்உணர்ந் தோர்.

7. கட்டுப்பா டும்நெறியும் காலூன்றி வாழுமோர்
வட்டம் குடும்பமே யாம்.

8. இலக்கியச் சோலைகளுக் கின்னீரைப் பாய்ச்சி
வளர்ப்பது குடும்ப மாம்.

9. இல்லத்திற் கெவ்வறமும் ஈடாகா தென்றுண்மை
சொல்லினர் முன்னறி ஞர்.

10. நாட்டிற் குடும்பமெலாம் நல்வாழ்வு வாழவழி
காட்டுவது மக்கள் கடன்.

# 26. காதல்

1. காதலே இன்பநெறி காட்டும் பெருவிளக்காம்
ஆதலின் ஓங்கவளர்ப் போம்.

2. மாறாத அன்புக்கு மாற்றுப்போர் காதலென
ஓராதார் உண்மையுண ரார்.

3. காதல் கதைபேசிக் காமத்தீ மூட்டுவோர்
நீதிக்கு நஞ்சூட்டு வார்.

4. ஆண்டான் அடிமையினால் ஆண்பெண் உயர் விழிவால்
மாண்டழியும் காதல் மலர்.

5. பேதம் ஒழிக்கப் பெருமுயற்சி செய்யாதார்
காதற் கொலைபுரி வார்.

6. ஒத்த நிலையுடையார்க் குள்ளேதான் காதலொளி
மெத்த விளங்கிநிற் கும்.

7. காதல் எனும்கயிறால் கட்டுண்டு வாழ்பவரே
வேதனைத் தீயழிப் பார்.

8. நாடகத்துக் காவியத்துக் காதல் நலமென்பார்
வீடகத்தில் வாழ விடார்.

9. காதற் கவிபாடிக் கன்னியரைக் கற்பழிக்கும்
பாதகரும் உண்டு பலர்.

10. காம வெறிகொண்ட கயவர்தாம் காதலினைப்
பூமியிலே மாளவைத் தார்.

# 27. மணம்

1. அன்பை வளர்க்கும் அமைதிக்கு வழிகாட்டும்
இன்பம் தரும்இல் லறம்.

2. நல்லறமும் ஒற்றுமையும் நாட்டில் செழிப்படைய
இல்லறமே ஏற்ற நிலம்.

3. ஊக்கமுடன் மக்கட் பணிசெய்யும் உள்ளத்தை
ஆக்குவதே நன்மண மாம்.

4. ஒற்றுமையும் அன்பும் உயர்ந்த திருமணத்தின்
நற்றுணைகள் ஆகிநிற் கும்.

5. தங்கட் கிசைந்த துணைவரைத் தாமணக்க
இங்குரிமை உண்டெவர்க் கும்.

6. ஆண்பெண் இருவோரும் அன்பால் இணைவதற்கு
வீண்சடங் கொன்றும்வேண் டாம்.

7. மந்திரம் சொல்லி மணமக்கள் ஆக்கிவைத்தல்
அந்தநாள் ஆசாத மாம்.

8. இல்லறத் தம்பதிகள் என்றும் ஒருகருத்தாய்
நல்லநெறி காத்தல் கடன்.

9. மாதர் பலரை மணக்கும் முறையினால்
காதல் சிதைந்து விடும்.

10. இச்சை யிலைமணத்தில் என்றுதனித் திருத்தல்
நிச்சயம் தீது தரும்.

# 28. பாலகர்

1. உரத்தால் பயிர்வளரும் உள்ளத்தில் ஏறும்
கருத்தால் வளர்விளை ஞர்.

2. ஊக்கம் உடலுறுதி உள்ளவராய்ப் பாலகரை
ஆக்குதலே நற்பணி யாம்.

3. கெட்ட வசைமொழிகள் சொல்லிக் குழந்தைகளைத்
திட்டும் செயல்மறப் பீர்.

4. சோம்பேறிப் பாலர் சுறுசுறுப்பாய் முன்னேறிப்
போமுறைகள் காணல் நலம்.

5. துள்ளித் திரிகின்ற பாலருளம் தூயவழி
செல்ல வளர்த்தல் சிறப்பு.

6. நாட்டன்பும் நற்பணியும் நாடோறும் பாலகர்க்கு
ஊட்டுதலே உத்தம மாம்.

7. பற்றெந்த வித்தையிலே பாலகருக் கென்றறிந்து
கற்றறியச் செய்தல் கடன்.

8. பொல்லாத பேய்பூதப் பூச்சாண்டி யாற்குழந்தை
உள்ளம் குழப்பிவி டேல்.

9. வீரர்க ளாய்வளர்ந்து வெற்றிபெறப் பாலகர்க்குக்
கூறுவீர் நல்லுரை கள்.

10. வேதனைகள் இன்றி விளையாட்டாய்ப் பாலகர்க்குப்
போதனைகள் செய்தல் நலம்.

# 29. வீரம்

1. அன்பும் இரக்கமும் வீரமெனும் அன்னையின்
இன்பக் குழவிக ளாம்.

2. செல்வத் திமிரால் சிறுமை புரிவோர்க்கு
நல்லறி வூட்டல்வீ ரம்.

3. உள்ளத்தே தேர்ந்த உறுதிகளில் நல்வெற்றி
கொள்ளுவதே வீரக் குணம்.

4. படைவலிமை கொண்டிருந்தப் பாரில்போர் மூட்டும்
கடையரை மாற்றல்வீ ரம்.

5. துன்பமெனும் காட்டாற்றில் வீழ்ந்து துடிப்போரை
இன்பத்தில் சேர்ப்பர்வீ ரர்.

6. வல்லார்க்குத் தாழார் வறியோர்க்குப் பின்னிற்பார்
நல்லதொரு வீரர்என் பார்.

7. நெஞ்சத் துறுதியும் நேர்மைக் குணமுமே
அஞ்சாத வீரர்க் கணி.

8. இரத்த வெறிப்பேயர் ஏழைகளைக் கொல்வோர்
உரத்தைச் சிறைப்பர்வீ ரர்.

9. துன்பங்கள் சூழ்ந்துபல தொல்லை கொடுத்தாலும்
புன்முறுவல் கொள்ளல்வீ ரம்.

10. வாக்குத் தெளிவும் வயிர மனமும்
ஆக்குமே வீரத் தனம்.

# 30. கோழை

1. வாழ்க்கைத் துயரத்தைப் போக்க வழிதெரிந்தும்
தாழ்க்கைபயம் கொள்ளித் தனம்.

2. உள்ளத்தின் உண்மைகளைக் கூறா தொளிப்பவர்கள்
குள்ளர்கள் கோழைகள் தாம்.

3. செப்பித் திரிவார் செயலுக்குப் பின்னடைவார்
எப்பொழுதும் கோழைகள் தாம்.

4. பாழும் பசிக்கே படையேந்திப் போர்புரிந்து
வாழுவோர் கோழைக ளாம்.

5. படைக்கும் பணத்துக்கும் அஞ்சிப் பணியும்
கடையர் பயங்கொள்ளி கள்.

6. கொள்ளைக் கொடியோர் கொழுக்கத் துணைசெய்யும்
புல்லர் பயங்கொள்ளி கள்.

7. ஏழைகளைத் துன்புறுளுத்தும் ஈனர்களைக் கண்டஞ்சித்
தாழுவோர் கோழைகள் தாம்.

8. தன்னலந் நீக்கார் தவிப்போரைக் காப்பாற்ற
முன்வரார் கோழைகள்என் பார்.

9. மறைவாகக் குற்றம் மனந்துணிந்து செய்தே
உறைவார் பயங்கொள்ளி கள்.

10. தீமையிவை என்று தெரிந்தும் எதிர்ப்பதற்குத்
தாமதிப்பார் கோழைகள் தாம்.

# 31. ஒற்றுமை

1. அன்புடனே மக்கள் அனைவரும் ஒன்றாயின்
இன்பம் பெருகிவள ரும்.

2. எல்லோரும் ஒன்றென்னும் எண்ணம் பிறந்தாலே
தொல்லை ஒழிந்துவி டும்.

3. நாடு மொழி பேதம் நவில்வதுவே ஒற்றுமைக்குக்
கேடுசெயும் நஞ்சரவ மாம்.

4. ஓர்மரத்தில் பல்கிளைகள் ஓங்கி வளர்வதுபோல்
பார்ஒன்று நாடுபல வாம்.

5. உலகத்தில் மக்கள்முன் ஓரிடத்தில் தோன்றிப்
பலதிசை யும்பரவி னர்.

6. ஆதிமொழி ஒன்றே அதுவே பலமொழியாய்ப்
பூதலத்தில் வாழ்கின்ற தே.

7. எண்ணத்தில் வாழ்க்கையில் எல்லோரும் ஒன்றுபடின்
மண்ணுலகம் ஒன்றுபடு மாம்.

8. சாதி மதபேதம் சற்றும் இருந்ததிலை
ஆதி மனிதகுலத் தில்.

9. இச்சை பிறப்பிறப் பெல்லா மனிதர்க்கும்
இச்சகத்தில் ஓர்விதமே யாம்.

10. வாழ்வளிக்கும் ஒற்றுமை வல்லமையும் சேர்ப்பிக்கும்
வீழ்வளிக்கும் வேற்றுமை தான்.

# 32. நன்னடத்தை

1. நல்லொழுக்கம் இல்லார்க்கு நாட்டில் மதிப்பில்லை
செல்லா தவர்வாயிற் சொல்.

2. மக்கட் சமுதாயம் ஒன்றாய் மகிழ்வடையத்
தக்கசெயல் நன்னடத்தை யாம்.

3. காலத்திற் கேற்ற கருத்தும் நடத்தையுமே
ஞாலத்தில் நல்லொழுக்க மாம்.

4. பேசுவதைச் செய்து பிறர்க்குவழி காட்டுவதே
மாசற்ற நன்னடத்தை யாம்.

5. முன்னாள் தவறுகளை முற்றும் உணர்வதுவும்
நன்னடத்தை சேரும் நெறி.

6. கூடா நடத்தையெனக் கூறிய செய்கைகளை
நாடாமை நன்னடத்தை யாம்.

7. நெஞ்சில் உறுதியும் நேர்மையும் உள்ளவர்கள்
அஞ்சார் நெறிதவ றார்.

8. எண்ணத்தைத் தன்போக்கில் போகா தியக்குவதே
நன்னடத்தை காக்கும் வழி.

9. கட்டுண்டு நன்னெறியில் வாழ்வதற்குக் கற்றவரே
முட்டின்றி நன்மைபெறு வார்.

10. கல்வி யறிவிருந்தும் கட்டற்று வாழ்பவர்கள்
பல்பழிகட் காட்படு வார்.

# 33. தன்னலம்

1. சாதி வெறிகிளப்பிச் சண்டைத்தீ மூட்டுது
நீதியிலாத் தன்னல மாம்.

2. நாசப் படுகுழியில் நாட்டைக் கவிழ்த்துவிடும்
மோசமெலாம் தன்னல மாம்.

3. பூனைச் செயலாற்றி வாழ்வார் புகழ்பெறுவார்
ஈனச் சுயநலத் தார்.

4. ஏழை உழைப்பாளர் இரத்தம் உறிஞ்சியே
வாழுவது தன்னலந் தான்.

5. வட்டிக்கு வட்டியென வாங்கிக் குடிகெடுக்கும்
திட்டம் சுயநல மாம்.

6. செல்வாக்குக் காகவே செய்யும் தடபுடல்கள்
பொல்லாமை வாழும் புதர்.

7. ஊருக்குச் சங்கொலிப்பார் ஒன்றையும் பின்பற்றார்
நேர்மையிலாத் தன்னலத் தார்.

8. எல்லார்க்கும் தொண்டேஎன் கொள்கையெனப் பேச்சளவில்
சொல்லல் சுயநலந் தான்.

9. ஊர்எரியும் காலத்தும் உண்டுகளித் தாடுவார்
பேராசைத் தன்னலத் தார்.

10. பேசிச் சிறுவர்க்குள் பேதம் வளர்ப்பவர்கள்
நீசர் சுயநலத் தார்.

# 34. வஞ்சகர்

1. பொதுமக்கள் அஞ்சும் புலைத்தொழில்கள் செய்வோர்
அதிவஞ்சப் பாதகர் கள்.

2. உள்ளம்சொல் செய்கையிவை ஒன்றுபட வாழாதார்
கள்ளர் கருணையற் றோர்.

3. தித்திக்கும் சொற்பேசித் தீமைகளைச் செய்பவர்கள்
எத்திக்கும் வாழ்ந்திருப் பார்.

4. வேடத்தைக் கண்டவுடன் ஏமாந்து வீண்போகேல்
நாடு நடத்தையினால்.

5. தேசத்தின் பக்தரெனத் தில்லுமுல்லு பேசுவார்
மோசத்தில் முன்னிருப் பார்.

6. நஞ்சை உணவென்று நாவால் சுவைப்பதாம்
வஞ்சகரை நம்பிவாழ் தல்.

7. வேதம் கலைகள் விளம்புவதே உண்மையென
ஓதுவோர் சூதர்க ளாம்.

8. எல்லாம் அவன்செயலே என்று பிறர்க்குரைத்துக்
கொள்ளை யடிப்பார்வஞ் சர்.

9. உங்கள் துயரனைத்தும் ஓட்டுவோம் என்றுபணம்
இங்குபறிப் பார்வஞ்ச கர்.

10. நாணலும் கூனலும் பூண்டு நடிப்பவர்கள்
வீணர் நயவஞ்ச கர்.

# 35. சாதி வேற்றுமை

1. சாதிக் களையெடுத்தால் அன்றிச் சமூகத்தில்
நீதிப் பயிர்விளை யாது.

2. கட்டு விரியனாம் சாதிக் கொடுமைகளைச்
சுட்டெரித்தால் உண்டு சுகம்.

3. மனித குலவாழ்வுக் கானதொழில் செய்வோர்
புனிதர் ஒருகுலத் தார்.

4. ஒருவகுப்புக் கோர்நீதிச் சட்டம் வகுத்தோர்
பெருஞ்சமூகப் போர்மூட்டி னார்.

5. கொள்ளைச் சுயநலக் கும்பலே சாதியெனும்
பள்ளம் பறித்துவைத் தார்.

6. பள்ளம் படுகுழிசேர் பூமியே, மேல்கீழாய்
உள்ள சமூகம் உணர்.

7. நிலத்தின் இயல்பால் நிறம்திரிந்த மக்கள்
குலத்தில்வே றாவதுண் டோ?

8. எக்குலத்தார் ஆனாலும் இன்ப மணம்புரிந்தால்
மக்கட் பெறுவார் மகிழ்ந்து.

9. நல்லபசும் பாலிற் கலந்ததுளி நஞ்சாகும்
பொல்லாத சாதிப் புழு.

10. சாதியெனும் வேர்தான் சமூகத்தில் ஊன்றாமல்
ஆதி யுடனறுப் பீர்.

# 36. வெறியர்

1. என்குடியே மேற்குடியாம் எல்லோரும் என்னடிமை
என்பர் குடிவெறி யர்.

2. எங்கள் இனத்தால்தான் இவ்வுலகில் நாகரிகம்
பொங்குவதென் பார்வெறி யர்.

3. தாய்மொழியைப் போற்றல் தகவே; பிறமொழியை
நாய்போலச் சீறல் வெறி.

4. தங்கொள்கை போற்றலே பற்றாம்; பிறர்கொள்கை
இங்குபழித் தல்வெறி யாம்.

5. நிறத்தால் பிறர்தமை நிந்திக்கும பேயர்
அறங்கொல் வெறியர்க ளாம்.

6. யாமே அறிவுடையோம் எம்மொழியே உண்மையெனத்
தாமுரைப் பார்வெறி யர்.

7. யார்மொழியும் காதிலே ஏற்கார் தமதுரையே
கூறியுறை வார்வெறி யர்.

8. எல்லோரும் எம்சொல்லைக் கொள்க எனவுரத்துச்
சொல்லுத லேவெறிக் குணம்.

9. வெறியரே இவ்வுலகில் வேற்றுமைத் தீயைப்
பெரிதாய் வளர்த்துவிட் டார்.

10. மக்களினப் பண்பை மாற்றியிம் மாநிலத்தைத்
துக்கத்தில் ஆழ்த்தும் வெறி.

# 37. அறம்

1. இன்பமும் துன்பமும் எல்லாம் விதியென்று
நம்புவதை மாற்றல் அறம்.

2. இல்லையென வந்தவர்க் கீதல் அறமன்று
தொல்லை வளர்க்குமது தான்.

3. பிச்சைத் துயர்வாழ்வின் வேரைப் பிளந்தெறிதல்
மெச்சுபுகழ் நல்லற மாம்.

4. உழைப்பவர் வாழ்வை உறிஞ்சும் கொடுமை
அழிப்பதே நல்லற மாம்.

5. பட்டினிச் சாவென்னும் பாதக நச்சரவைச்
சுட்டெரிப்ப தேயற மாம்.

6. ஊரார் மதிக்கும் ஒழுக்கம் உடையோரைப்
பாராட்ட லேயற மாம்.

7. இன்னதொழில் செய்தல் எனக்கெளி தென்பவர்கள்
அன்னதையே செய்தல் அறம்.

8. சாதி நிலைப்பதற்குச் சாற்றும் மொழிகளெலாம்
நீதியல வென்றல் அறம்.

9. காலத்திற் கேற்ற கருத்தும் செயல்களும்
சீலமாய்க் கொள்ளல் அறம்.

10. செல்வத்தில் வீழ்ந்து சிந்தை கலங்காமல்
நல்வழி போற்றல் அறம்.

# 38. மறம்

1. அறத்தைச் சிதைக்கின்ற செய்கை அனைத்தும்
மறத்தை வளர்க்கும் நெறி.

2. நல்லன யாவையென நாடாமல் தன்னலத்தால்
அல்லன செய்தல் மறம்.

3. நெஞ்சைத் தமதாக்கி நேர்வழியில் போக்காத
பஞ்சைகளே பாவிக ளாம்.

4. அன்பர் மனம்பதைக்க ஆற்றும் கொடும்செயல்கள்
துன்பம் கிளைக்கும் மறம்.

5. நாசச் செயல்புரிந்து நல்லோர் பகைகொள்ளல்
நீசத் தனம்தீ மறம்.

6. நீதி வழிநடப்போர் நேசத்தை நாடாமல்
பாதகரைச் சேர்தல் மறம்.

7. சாலை நிழல்மரத்தைச் சாய்த்துக் கொலைசெய்யும்
வேலை பழிதருவ தாம்.

8. காலத்திற் கேற்ற ஒழுக்கத்தைக் கைவிட்டுச்
சீலம் குலைத்தல் மறம்.

9. மக்கள் மனக்கொம்பில் மாசுக் கொடிபரத்
தக்கவையெல் லாம்கொடுமை தாம்.

10. தன்னைப்பாழ் பண்ணல் தகாத செயல்புரிய
எண்ணுதல் தீய வினை.

# 39. செருக்கு

1. அழுக்கால் இரும்பும் அழிந்து மறையும்
செருக்கால் சிதையார் இலர்.

2. கண்ணைக் குருடாக்கிக் காதைச் செவிடாக்கும்
புண்ணாம் செருக்கென் றுணர்.

3. மேலே நிமிர்ந்து மிகச்செருக்கிச் செல்பவன்
தானே இடறிவிழு வான்.

4. சிறியார்என் றெண்ணிச் செருக்கால் எதிர்ப்போர்
மரியாதை கெட்டழி வார்.

5. அனைத்தும் அறிந்தவர்கள் ஆர்இவ் வுலகில்
மனத்தில் செருக்கோர் மாசு.

6. வெற்றுமதி யுச்சியிலே வீற்றிருக்க யார் போவார்?
சற்றுமணு கார்செருக்கர் பால்.

7. நல்லோர் செருக்கடையார், நாளும் மதிவளர்ப்பார்
அல்லோரே கர்வமடை வார்.

8. வெறிநாயை மக்கள் விரட்டு வதுபோல்
கருவமுளார் தம்மைவெறுப் பார்.

9. மண்டைக் கிறுக்கால் பிறரை மதியாதார்க்
குண்டோ உலகிற் சுகம்.

10. எத்தனையோ கற்பதற் கின்னுமிருக் கின்றவெனும்
புத்தியே கர்வமழிக் கும்.

# 40. ஆசிரியர்

1. அருமைத் தொழில்புரியும் ஆசிரியர் எல்லாம்
பெருமைக் குரியவர் கள்.

2. அறிவுக்கு நீர்பெய்து உரமிடுவோர் என்றும்
பெரியவர் ஆசிரி யர்.

3. இளைஞர்களின் நெஞ்சில் எழுந்தீ நினைப்புக்
களைபறிப்பார் ஆசிரி யர்.

4. எதிர்காலச் சிற்பி எனத்தம்மை நன்கு
மதியாதார் ஆசிரிய ரா?

5. தங்கள் பொறுப்பினைத் தாமறியா ஆசிரியர்
எங்கிருந் தென்ன பயன்?

6. தடையின்றிக் கேள்விகளுக் கெல்லாம் தகுந்த
விடைதருவார் ஆசிரி யர்.

7. தேசத்தைச் சீர்செய்யும் திட்டம் தெரிவிப்பார்
ஆசிரியர் என்பவர் கள்.

8. பகுத்தறிவும் வீரமும் பாலகர்கள் நெஞ்சுள்
புகுத்துவோர் ஆசிரி யர்.

9. பாலகர்கள் நெஞ்சில் படந்தீட்டும் ஓவியரே
சீலமுள ஆசிரியர் கள்.

10. மூட இருட்டை முடுக்கும் விளக்காவார்
கேடிலா ஆசிரியர் கள்.

# 41. கலை

1. ஆக்கக் கலைவளர்ப்ப தொன்றே அறிவுடைமை
போக்கும் துயர்முழு தும்.

2. ஆடைக்கும் பேர்கலை என்றமைத்தார் அக்கருத்தை
நாடி அறிதல் நலம்.

3. உழைப்பும் கலைகளும் ஒன்றென்று கண்டால்
தழைக்கும் கலையுல கில்.

4. எல்லோரும் இன்புற்று வாழ்வதற் கேகலைகள்
வல்லார் வகுத்துவைத் தார்.

5. காது செவிடாகக் கலைக்கே கலையென்பார்
பாதகம் கலைக்கிழைப் பார்.

6. கற்பன வெல்லாம் கலையென்று காணாதார்
விற்பனர் என்பார், வியப்பு.

7. செய்யுந் தொழிலிற் சிறப்பிழிவு கற்பித்தார்
வையக் கலையழித் தார்.

8. சோம்பேறி யாகிச் சுகவாழ்வு வாழ்பவரே
தீங்கு கலைக்கிழைப் பார்.

9. காலங் கழிக்கும் கலைகளால் எப்பொழுதும்
ஞாலத்தில் நன்மை யிலை.

10. வாய்ப்பும் வசதியும் வாய்ந்தோர்க் கெனும்கலைகள்
ஏய்க்கின்ற வித்தைக ளாம்.

# 42. இலக்கியம்

1. ஏங்கி இருக்கின்ற ஏழைகள் ஆசைமனப்
பாங்குரைப்ப தேஇலக்கி யம்.

2. ஊர்செல்லக் காட்டும் வழிபோல வாழ்வுக்கு
நேர்பாதை சொல்வதே நூல்.

3. ஏதேனும் ஓர்நோக்கம் கொண்ட திலக்கியம்
ஓதுவதற் கேற்றது மாம்.

4. நல்ல குறிக்கோள் நவிலும் இலக்கியங்கள்
செல்லரித்துப் போவ திலை.

5. இன்சொல் அடுக்கே இலக்கியம் என்பவர்கள்
நன்செய்க் கெருவிடா தார்.

6. உண்மையை அப்பட்ட மாக உரைப்பதுவே
நன்மை இலக்கிய மாம்.

7. காரிகைக்கு ஆடையணி; கற்பனையும் சொற்பொலிவும்
பேரிலக்கிய த்தின் அணி.

8. நற்சொல்லும் மெய்ப்பொருளும் பின்னி நடப்பனவே
அற்புத விலக்கியங் கள்.

9. நொண்டிக்குக் கோலாகும் நோய்க்கு மருந்தாகும்
பண்டை இலக்கியங் கள்.

10. பண்டை இலக்கியப் பண்பில் புதுநூல்கள்
கொண்டுவரல் நன்முயற்சி யாம்.

# 43. இலக்கியப் போலி

1. அச்சழகாய்க் கண்டாலும் ஆபாசக் கற்பனைகள்
நச்சுக் குளங்களே யாம்.

2. எத்தனைதான் கற்பனைகள் வைத்தாலும் நோக்கின்றேல்
பித்தளையில் பொன்முலா மாம்.

3. ஓர்முறை பார்த்தால் ஒதுக்கும் கதைகளை
ஆர்தான் இலக்கியமென் பார்.

4. காமாந்த காரத்தைக் கக்கும் பிதற்றல்கள்
ஏமாற் றிலக்கியங் கள்.

5. பட்டாலே நோய்மறைத்து ஏமாற்றம் பாவையரே
மட்ட இலக்கியங் கள்.

6. மட்டரகச் செய்திகளை மக்கட்குக் கூறுவன
கெட்ட கொடுமொழி கள்.

7. போலி இலக்கியங்கள் போற்றிப் படிப்பவர்கள்
காலத்தை வீண்கழிப் பார்.

8. மல்லிகைப் பூவால் மலத்தை மறைப்பதாம்
சொல்லடுக்கில் நஞ்சுவைத் தல்.

9. வாலிபர்க்குக் கெட்டவழி காட்டும் வெறியுரைகள்
போலி இலக்கியங் கள்.

10. வெள்ளைநீர் பாலாமோ வீண்ஒலிக் குப்பைகளைக்
கொள்ளுவரோ நன்னூல்க ளாய்.

# 44. முயற்சி

1. அடிமை விலங்கை அறுத்தெறியக் கையில்
பிடிவான் முயற்சியே யாம்.

2. உடைமை முயற்சிதான் என்ப துணர்ந்தால்
கிடவார் வறிஞர்கள் கீழ்.

3. உள்ளத் துணிவும் உடலுழைப்பும் ஊக்கமும்
தள்ளா முயற்சித் துணை.

4. எய்தாத நன்மைகள் இல்லை முயற்சியால்
மெய்யிதே ஐய மிலை.

5. ஏழை பணக்காரர் இல்லா உலகமைக்கத்
தாழா முயற்சி துணை.

6. ஓயா உழைப்பும் ஊக்கமும் உள்ளவர்கள்
மாயாப் புகழ்பெறு வார்.

7. குன்றை அகழ்ந்து குளமாகச் செய்யலாம்
என்றும் முயற்சியினால்.

8. கூட்டு முயற்சி குவலயத்தில் இன்பத்தை
நாட்டும் இதுவுண்மை யாம்.

9. சிட்டாய்ப் பறந்துவினை செய்பவர்கள் இவ்வுலகில்
இட்டமெலாம் பெற்றிருப் பார்.

10. வற்றாக் கலைச்சிற்பம் வானோங்கு கோபுரங்கள்
முற்றும் முயற்சியினால்.

# 45. சோம்பல்

1. இல்லாமை நோய்சேர்க்கும் இன்பத்தை வேர்அறுக்கும்
பொல்லாத சோம்பற் குணம்.

2. உப்பு நிலத்திற்கே ஊக்கமிலா மக்கள்தாம்
ஒப்பாவர், வீணர் அவர்.

3. உள்ளம் உடைந்தால் உடலும் தளர்வடையும்
தள்ளியுதை சோம்பல் தனை.

4. என்செயலால் ஒன்றும் இயலா தெனும்எண்ணம்
புன்சோம்பல் தோன்றும் புலம்.

5. சிந்தனைக்குப் பூட்டிட்டுச் சிச்சீ எனவெறுக்கும்
தொந்தரவே சோம்பல் தரும்.

6. சும்மா விருத்தல் சுகமென்ற சோம்பற்சொல்
அம்மா பெருங்கெடுதி யாம்.

7. சோம்பல் குடிகொண்ட சோதாக்கள் எந்நாளும்
தேம்பித் திரிந்துழல் வார்.

8. தேக உழைப்பின்றித் தின்று துயில்வோரைச்
சோகமே தேடிமணக் கும்.

9. பிச்சை புகுத்தும் பிறர்க்கடிமை யாக்கிவிடும்
நச்சுநோய் சோம்பற் குணம்.

10. வேதனைக்கு வித்தாய் விளங்கி உருக்குலைக்கும்
தூதுவன் சோம்பலே யாம்.

# 46. ஆண் பெண்

1. ஆண்பெண் சமம்என்று அறியாத காரணம்
தான்பல தொல்லைக் கிடம்.

2. எத்தகைய வேற்றுமையும் இல்லாமல் ஆண்பெண்கள்
ஒத்துழைத் தால்உயர்வுண் டாம்.

3. ஆணுக்குப் பெண்ணடிமை ஆவாள் எனும் கொள்கை
வீணர் வகுத்த விதி.

4. ஆற்றலும் ஞானமும் ஆண்பெண் பொதுவென்று
போற்றாதார் பேதைமக் கள்.

5. ஆண்செய்வினைகள் அனைத்தையும் பெண்செய்வாள்
வீண்தடைகள் ஏன்விதித் தீர்.

6. வீட்டுள் அடைந்து விலங்காக வாழ்வோர்கள்
நாட்டிலே பேதைய ராம்.

7. அச்சமடம் நாணம் பயிர்ப்பென்னும் அந்நான்கும்
இச்சகத்தே கோழை குணம்.

8. அன்பும் பணிவும் அமைதியும் இன்செல்லும்
இன்பம் தரும்பெண் இயல்பு.

9. பெற்று வளர்க்கின்ற பெண்ணினத்தை நிந்திப்போர்
சற்றும் இரக்கம்இல் லார்.

10. அன்னையர் தங்கள் அறிவும் திறமுமே
இந்நிலத்தே மக்கள் குணம்.

# 47. துறவு

1. இடம்பொருள் ஏவல்கள் எல்லாம் உடைய
மடத்தார் துறவியல் லர்.

2. எல்லாரும் நன்மைபெற எண்ணி உழைப்பவர்கள்
உண்மைத் துறவிக ளாம்.

3. எப்பொறுப்பும் இல்லாமல் இன்பமுற எண்ணுகின்ற
அப்பாவி கள்துறவி யா?

4. உடையுருவம் மாற்றி உலகைஏ மாற்றும்
கடையர் துறவிகளல் லர்.

5. இவ்வுலகில் இன்பமிலை என்றெண்ணும் பேதையரே
துன்பத் துறவுகொள் வார்.

6. காதல் பழித்துரைத்துக் கள்ளத்தில் காமநுகர்
சூதர் துறவிக ளா?

7. துன்பப் படுவோர் துயர்போக்கும் தொண்டுக்கே
முன்பு துறவுகொண் டார்.

8. பிச்சை எடுத்துப் பிழைக்கும் சிறுவாழ்வில்
இச்சை துறவறம் அன்று.

9. மக்கள்துணை சுற்றமுடன் வாழ்ந்து மகிழ்வதற்குத்
தக்கதறி யார்துறப் பார்

10. வையத்தில் வாழ்வில்லை வானத்தில் உண்டென்போர்
பொய்யர் துறவிக ளாம்.

# 48. பொதுப்பணி

1. இரக்கம் ஒழுக்கம் இரண்டும் பொதுப்பணி
பிறக்கும் இடம்என் றறி.

2. இன்று பொதுமக்கட் கென்ன பணிசெய்தோம்
என்றுநினைப் பார்அறி ஞர்.

3. ஊரார் நலத்திற் குழைக்காதார் யாரெனினும்
கூர்முள் மரம்என் றுணர்.

4. தனக்கென் றுழைத்தே தவிப்பவன் மக்கள்
இனத்தில் பிறந்தவிலங் காம்.

5. கல்லாதார் தங்கட்குக் கல்வி அறிவுறுத்தல்
நல்ல பொதுப்பணி ஆம்.

6. கல்லார் அறிவுபெறக் கற்ற அரும்பெருளைச்
சொல்லல் பொதுப்பணி ஆம்.

7. பஞ்சம் புகுந்தால் பகுத்துண்ண வேண்டமென
அஞ்சா துரைத்தல் பணி.

8. மழைபோல மாநிலத்து மக்களெலாம் வாழ
உழைத்தல் பொதுப்பணி ஆம்.

9. பீதி கிளப்பும் பேயர்களின் பொய்மோசச்
சூதழித்தல் நற்பணி ஆம்.

10. நாட்டை நரகாக்கும் பாதகரை நாடறியக்
காட்டிக் கொடுத்தல் பணி.

## சாமி - சிதம்பரனாரின்
## புதுக்குறள்
## இயல்களும் அதிகாரங்களும்

# 3. அறிவியல்

1. அறிவு
2. அறியாமை
3. கல்வி
4. கல்லாமை
5. குருட்டுத்தனம்
6. மதம்
7. கோவில்கள்
8. விழாக்கள்
9. பக்தி
10. யாத்திரை
11. சோதிடம்
12. மந்திரம்
13. வீடு
14. நரகம்
15. பழமை
16. புதுமை

# 3. அறிவியல்

## 49. அறிவு

1. அறிவே வலிமையாம்; அச்சமிருள் ஓட்டும்
ஒருவிளக் காம்என் றுணர்.

2. எப்பொருளின் தன்மையையும் எண்ணிமெய் காண்பதுவே
ஒப்பற்ற நுண்ணறி வாம்.

3. எத்தனை தான் துன்பம் எதிர்வந்து நின்றாலும்
அத்தனையும் ஓட்டும் அறிவு.

4. எண்ணும் அறிவிருந்தும் இன்பத்தைத் தேடாதார்
மண்ணலே ஆனசுவர் கள்.

5. தோழனாய் நல்லறிவைக் கொண்டவரே தொல்லையின்றி
வாழுமுறை கண்டறி வார்.

6. குப்பைகளைத் தீயெரித்தல் போலே குறைபோக்கும்
இப்புவியில் நல்லறிவு தான்.

7. வெய்யில் மழைதடுத்து வேதனை களைப்போக்கும்
கய்யில் குடைகாண் அறிவு.

8. வனவிலங்காய் வாழ்ந்த மனிதர்களை மேலாம்
இனமாகச் செய்த தறிவு.

9. முக்காலப் போக்கு முழுதும் உணர்வதற்குத்
தக்கது அறிவொன்றே தான்.

10. நீரூற்றால் செல்வம் கொழிக்கும் நிலம்போலப்
பேரறிவால் இன்பம் மிகும்.

# 50. அறியாமை

1. எல்லாம் உணர்ந்தோம் என்னுமறி வின்மையே
பொல்லாமை வாழும் புதர்.

2. வேதனைக்குக் காரணம் கண்டறியா விணரே
பேதைமையால் வாடிநிற் பார்.

3. போனதையே எண்ணிப் புலம்பும் மனிதர்கள்
ஈனமுழு மூடர்கள் ஆம்.

4. செம்மறி ஆடுபோல் சிந்திக்கா மற்செல்வார்
இம்மி அறிவும் இல்லா தார்.

5. நம்மால் எதுவும் நடவா தெனநினைப்பார்
அம்மாமுழுமூடர் கள்.

6. தக்கார் மொழியுணரார் தாமும் பகுத்தறியார்
எக்காலும் நன்மையடை யார்.

7. தலையின் எழுத்துவழி தம்வாழ்வென்று எண்ணி
அலைவார் அறிவில்லா தார்.

8. மாநிலத்தின் போக்கறிந்து மாறும் மதியற்றார்
வீணர்; துயர்உறு வார்.

9. எண்ணுதல் ஐயுறல் எல்லாம் தவறென்னும்
அண்ணனுக் கேதிங் கறிவு.

10. உண்மைகளைக் கண்டறியார் உள்ளத்தில் இன்பமுறார்
எண்ணுமதி அற்றவர்கள் தாம்.

# 51. கல்வி

1. எல்லோரும் கற்றறிந்து வாழ்வரேல் இவ்வுலகில்
பொல்லாமை மண்ணாகிப் போம்.

2. கண்களால் காண்பதினும் கல்வியால் கற்பவைகள்
எண்ணிலாச் செய்திகள் ஆம்.

3. உடற்குணவு போலே உளத்திற்குக் கல்வி
திடமளிக்கும் நன்மருந் தாம்.

4. பூமியெனும் ஏட்டின் புதைபொருளைக் கற்பதுவே
சேமமுறும் ஓர்கல்வி யாம்.

5. முன்னோர் நெறிகாட்டிப் பின்னோர்க்குச் சாலையிடல்
இந்நிலத்திற் கல்வியே தான்.

6. நாகரிகச் செல்வமெலாம் நாசமுறா மற்காத்தற்
காகவே கல்வி யறிவு.

7. வாழ வழிகாட்டும் கல்வியே கல்வியாம்
தாழவைத்தல் கல்வியன் றாம்.

8. கல்விக் களவிலை கற்பதற்கு நாளில்லை
நல்வழிகள் காட்டுநூல் நாடு.

9. உள்ளம் பதியாமல் ஓங்கிப் படிப்பதனால்
எள்ளளவும் நன்மை யிலை.

10. பயிர் வளர்க்கும் நீர்போல் பலருக்கும் வாழ்வில்
உயர்வளிக்கும் கல்வியே தான்.

# 52. கல்லாமை

1. இரவில் விளக்கற்ற இல்லமே கல்வி
பரவாத நாடுகள் தாம்.

2. கண்ணிருந்தும் பாராதார் காதிருந்தும் கேளாரே
எண்ணெழுத்துக் கற்றறியா தார்.

3. கல்லார்க் கழகிருந்தென்? கண்கவரும் பொம்மைகள்
நல்லின்ப துன்பமறி யார்.

4. வற்றாத செல்வம் வளர்க்கின்ற கல்வியினைக்
கற்காதார் கற்சுவர் தான்.

5. ஏடெடுத்துக் கற்பதற் கென்றும் முயலாதார்
காடுவளர்ந் தோங்குமரங் கள்.

6. உள்ளத்தின் ஊற்றை உரைப்பரோ ஊமையர்?
கல்லாரும் அப்படியர் காண்.

7. எல்லோரும் கேட்க இனியமொழி பேசுதல்
கல்லாதார்க் காகாத தாம்.

8. கற்றாரை நாடெல்லாம் காதலிக்கும், செத்தவர்போல்
மற்றாரை எண்ணுவர்மக் கள்.

9. உருவத்தில் வேறாய் உலவிடினும் கல்லார்
மிருகத்தின் வேறல்ல ராம்.

10. எல்லாரும் கற்பதற் கேற்றவழி செய்வதுவே
நல்லரசு செய்கடமை ஆம்.

# 53. குருட்டுத்தனம்

1. சாத்திரம் சொன்ன வெலாம் சத்தியம் என்பவர்கள்
நேத்திரம் அற்றவர்க ளாம்.

2. முன்னோர் பழக்கமெலாம் முற்றுமுயர் வென்பதால்
இந்நாளில் என்னப லன்?

3. பண்டையோர் கொள்கையெலாம் பாதகம் என்றுரைத்துக்
கண்டித்த லுந்தீதே யாம்.

4. செத்தவர்கள் வேறுலகில் சென்றுறைவார் என்பவலொம்
இத்தரையில் ஏமாற்றும் சொல்.

5. சாவுக்கும் வாழ்வுக்கும் செய்யும் சடங்குகளால்
ஆவதோர் நன்மை யிலை.

6. பல்லிநம் உள்ளத்தை நாடிப் பகருமெனச்
சொல்லுவது மூடத் தனம்.

7. நாளும் கிழமைகளும் நன்மைசெயும் என்பவர்கள்
ஆளுமறி வில்லா தவர்.

8. செம்பாலும் கல்லாலும் செய்தவை தெய்வமென
நம்புவது மூடத் தனம்;

9. எல்லாம் துறந்தோம் எனவேடம் பூண்டவர்பின்
செல்லுவது மூடத் தனம்.

10. பழம்பெருமை பேசிப் பாராட்டி வாழ்தல்
முழுமூடர் தம்செய்கை யாம்.

# 54. மதம்

1. எல்லோரும் ஒன்றாய் இணையவழி கூறுகின்ற
நல்லமதம் நாட்டில் எது?

2. வேடத்திற், கொள்கையினில், வேற்றுமை பூண்டவர்கள்
கூடி மகிழ்வ திலை.

3. சாதிக்கு வேராம், சமூகத் தொழுநோயாம்,
நீதிக்கு நஞ்சு மதம்.

4. வல்லவர்க்கு, ஏழைகள் வாகனமாய் வாழ்வதற்கே
சொல்லிவைத் தார்மதங் கள்.

5. பாதகம் செய்வோர் பதுங்கும் பெரும்புதரே
தீது புரிமதங் கள்.

6. மோச நடிப்புகளும், மூடச் சடங்குகளும்,
நாச மதத்தூண்கள் ஆம்.

7. மாதர் சுதந்தரத்தை மாய்த்துக் கொடுமை செயும்
போதனை மூட்டை மதம்.

8. அன்பற்ற கொள்ளையர்கள், அக்கிரமக் காரர்கள்
இன்பத்திற் காம்மதங் கள்.

9. நாகரிகம் காணாத நாளிற் பிறந்தமதம்
சாகும் அறிவுல கில்.

10. பாழுங் கிணறான பண்டை மதங்களெல்லாம்
வாழுவதால் என்ன பலன்?

# 55. கோவில்கள்

1. மக்களெலாம் ஒன்றாகக் கூடி மகிழ்வதற்குத்
தக்கவிடம் கோயில்க ளாம்.

2. கோயிற் பொதுவிடமாய்க் கொண்டு கலைவளர்ப்பார்
ஆயின் அதுநல மாம்.

3. ஊரில் அறம்பரப்பி ஒற்றுமை நீர்பாய்ச்சின்
ஆருக்கும் கோவில் நலம்.

4. கள்ளர் குடியிருக்கும் கற்கோயிற் கட்டிடங்கள்
எள்ளத் தகுவதே யாம்.

5. கன்னியரைக் கற்பழிக்கும் காலிகள் வாழுமிடம்
இந்நிலத்திற் கோவில்க ளாம்.

6. ஏழைகளை ஏமாற்றி இன்பத்தைக் கொள்ளையிடும்
பாழுமிடம் கோவில்க ளாம்.

7. கோயிலிலே தெய்வம் குடிகொண் டிருக்குமேல்
தீயரங்கு வாழ்ந்திருப்ப ரோ?

8. பொய்வஞ்சச் செய்கைகளைப் போற்றித் திரைபோடச்
செய்யுமிடம் கோவில்க ளாம்.

9. கோயில் நிதிகள் குடிமக்கள் நன்மைக்கே
ஆயின் நலம்பெரு கும்.

10. கல்வி நிலயமும் கைத்தொழிற் சாலைகளும்
நல்லபல கோவில்க ளாம்.

# 56. விழாக்கள்

1. அறிவு வளர்ச்சியும் ஆனந்த வாழ்வும்
   தருவன வேவிழாக்கள் ஆம்.

2. கொட்டி வெடிவெடித்துக் கூத்தடிக் கும்விழாவால்
   எட்டுணையும் நன்மை யிலை.

3. நாட்டை வளமாக்க நல்லுணர்ச்சி யைத்தூண்டிக்
   காட்டும் விழாக்கள் வேண்டும்.

4. மக்களுக் கேயுழைத்து மாண்டோர் புகழ்காட்டத்
   தக்க வைவிழாக்கள் ஆம்.

5. உதிர்ந்து கிடப்போரை ஒன்றாகச் சேர்க்கத்
   தகுந்த செயல்விழாக்க ளாம்.

6. பாட்டாளி மக்களெலாம் பார்த்துக் களிப்பதற்கு
   நாட்டில் விழாக்கள் வேண்டும்.

7. எல்லாரும் கண்டுகேட் டின்புறும் செய்கைகள்
   நல்ல விழாக்களே யாம்.

8. கல்விச் சிறப்பும் கலைச்சிறப்பும் மக்கள்தம்
   உள்ளத்தில் ஆக்கல்விழா.

9. இரக்கமிலா வஞ்சர் இழிந்தசெயல் காட்டிப்
   பறக்கடிப்ப தேதிரு விழா.

10. கைத்தொழில் விஞ்ஞானக் கண்காட்சி தாம்மக்கள்
    புத்தி வளர்க்கும் விழா.

# 57. பக்தி

1. எண்ணாமல் ஓர்பொருளை ஏற்றலே பக்தியாம்
எண்ணிப்பின் நம்பலறி வாம்.

2. ஐய வினாக்களே ஆராய்ச்சி தோன்றுமிடம்
உய்யவழி காட்டும் அவை.

3. புத்தகத்தைப் பூசிப்போர் உள்ளே பொதிந்தவற்றைப்
புத்தியால் கண்டறி யார்.

4. செங்கதிரைத்ெ தய்வமெனச் சிந்தித்துக் கும்பிடுவோர்
இங்கதன் தன்மைகா ணார்.

5. உள்ளத்தில் நுண்ணறிவை ஓங்காமல் தீய்க்கின்ற
கொள்ளியே பக்தி நெறி.

6. பக்திப் பரவசத்தில் ஆழ்ந்தவர் பாருலகில்
பித்தர்க ளாகிவிடு வார்.

7. பாபம்போம் புண்யமாம் பக்தியதால் என்பவர்கள்
தீபம்காண் கண்ணிலா தார்.

8. பத்தியால் இவ்வுலகில் பாழகும் பண்டங்கள்
எத்தனையோ கோடி பல.

9. பாலர் பசிக்கிரங்கார் பால்கல்லின் மேற்சொரிவார்
சாலவும் பக்தியுள் ளார்.

10. மாண்டவர் இன்பமுறு மார்க்கமே பக்தியென
ஈண்டுகதை கள்புனைந் தார்.

# 58. யாத்திரை

1. உள்ளம் தெளிவடையும் உல்லாச யாத்திரையால்
நல்ல உடல்நலமும் ஆம்.

2. பன்மொழி நாகரிகப் பண்புகலந் தொன்றாகும்
இந்நிலத்தே யாத்திரை யால்.

3. பண்டைவர லாறுகளும் பற்பல வித்தைகளும்
கண்டறிய யாத்திரைக ளாம்.

4. சுற்றுப் பிராயணம் செய்வதனால் உண்மைபல
கற்றறிந்து கொள்ளமுடி யும்.

5. பலரோடும் பேசிப் பழகுவதால் நெஞ்சில்
நிலவுமறி யாமை கெடும்.

6. பாவம் கழிக்கப் பலதலங்கள் சுற்றுவதால்
ஆவதுதான் என்ன புகல்.

7. காசிக்குச் சென்றால் கருமம் தொலையுமெனப்
பேசுவது மூடத் தனம்.

8. புண்ணியம் உண்டென்று போகின்ற யாத்திரையால்
எண்ணும் மதிவளரு மோ?

9. பிள்ளைபெற யாத்திரை போகின்றோம் என்பவர்கள்
உள்ளம் வறண்டவர் கள்.

10. காலால் வழிநடந்து காடுமலை ஊர்காணல்
மேலையோர் யாத்திரை யாம்.

# 59. சோதிடம்

1. சொந்த மதியற்றோர் சோதிடத்தை நம்புவோர்
நொந்து மனங்கலங்கு வார்.

2. தன்னாற்றல் நம்பாதார் தாம்சா தகங்காட்டி
என்னபலன் என்றுகேட் பார்.

3. ஒன்பதுகோள் காட்டி உரைக்கின்ற சோதிடத்தை
நம்புவார்க் கேதுமதி.

4. எண்ணைக் கணக்கெடுத் தின்னபலன் உண்டென்றல்
கண்துடைக் கும்வித்தை யாம்.

5. வானநூ லோடுபொய் வாய்வீச்சுச் சோதிடத்தை
வீணரே ஒன்றிணைப் பார்.

6. போர்க்களத்தில் போய்மாள்வோர் சாதகங்கள் அத்தனையும்
ஓர்கணக்கே என்றுரைப்பார் யார்?

7. கள்ளரைச் சோதிடர்கள் தேர்ந்துரைத்தால்
எல்லோர்க்கும் நன்மையுண் டாம்.

8. தீது புரிந்தோரைச் சோதிடர்கள் காட்டிக் கொடுப்பரேல்
நீதியுரை மன்றங்கள் ஏன்?

9. சோதிடமும் சொல்லும் குறிகள் சகுனமெலாம்
சூதர்கள் வாழ்மனைக ளாம்.

10. சோதிடம் பார்த்துச் சுகமடைந்து வாழ்ந்தவர்கள்
பூதலத்தில் யாரும் இலை.

# 60. மந்திரம்

1. அச்சம் தருமொலியும் அர்த்தமிலாச் சொற்களும்
இச்சகத்தே மந்திரங் கள்.

2. மாங்காய் விழுவதிலை மந்திரத்தால் என்னுமுரை
ஈங்குணர்ந்தார் ஏமா றார்.

3. மாயும் பிணிகளெலாம் மந்திரத்தால் என்பரேல்
ஆயும் வயித்தியங்கள் ஏன்?

4. மந்திரம் மாற்றார் மனமாற்ற வல்லதேல்
இந்தவுல கிற்போ ரிலை.

5. மாற்றார் பலமழிக்க மந்திரத்தால் ஆகுமேல்
ஆற்றல் படைதிரட்டல் ஏன்?

6. வான மழைபொழிய வைக்குமேல் மந்திரந்தான்
மாநிலத்தில் பஞ்ச மிலை.

7. எத்தகைய தீங்கும் இழைப்பதற் கஞ்சாத
பித்தரே மாந்திரி கர்.

8. மந்திர வாதிகளின் மாய நடிப்புகளால்
நொந்தழி வர்மூடர் கள்.

9. ஏவ லொடுபில்லி சூன்யங்கள் என்பவெலாம்
பாவிகள் தில்லுமுல் லாம்.

10. மக்களினப் பண்பற்ற மாந்திரிகர் தம்வலையிற்
சிக்குவோர் கோழைக ளாம்.

# 61. வீடு

1. உள்ளக் கவலை ஒழிந்திங்கு வாழ்வதுவே
நல்லின்ப வீடாகு மாம்.

2. துன்பப் புயலால் துயர்ப்படா திவ்வுலகில்
இன்புற்று வாழ்வது வீடு.

3. வீடென்ற சொல்லின் பொருளறியா வீணர்களே
காடுமலை தேடியலை வார்.

4. உலகின்பம் விட்டால்தான் வீடென் றுரைக்கும்
கலைகளெலாம் சூதுரை கள்.

5. செத்தபின் வைகுந்தம் சிவலோகம் என்பவர்கள்
பித்தர்கள் வீடுண ரார்.

6. வீடிவ் வுலகிலிலை வேறெங்கோ உண்டென்றார்
கேடு புவிக்கிழைத் தார்.

7. எல்லாரும் இன்பக் கனியருந்தி வாழவழி
சொல்லுவதே வீட்டுநெறி யாம்.

8. இல்லாமைக் கள்வனை இவ்வுலகில் வாழாமல்
கொல்லுவதே வீட்டு நெறி.

9. எல்லாரும் எல்லாப் பெருநிதியும் எய்தவழி
சொல்லுவதே முத்தி நெறி.

10. அடிமைத் தளைநீங்கி ஆநந்தம் எய்தும்
விடுதலையே வீடென் றுணர்.

# 62. நரகம்

1. வாழ்வதற் கென்செய்வோம் என்று வருத்தத்தில்
ஆழ்வது வேநரக மாம்.

2. வேதனை யால்உள்ளம் வெந்து மடிவதே
தீது தருநரக மாம்.

3. சாதித் தொழில்மறந்தால் சார்வீர் நரகிலெனப்
போதித்தார் பொய்யுரைத் தார்.

4. எங்கோ நரகம் இருக்கின்ற தென்னும்சொல்
இங்குநமை ஏமாற்ற லாம்.

5. பட்டினி யால்வாடிப் பாழ்நோய்கட் காளாகிக்
கெட்டலைவ தேநரக மாம்.

6. ஏழைய ரைச்சுரண்டி இன்புற்று வாழ்வோரே
பாழும் நரகமைத் தார்.

7. இன்ப வழிமறித் திவ்வுலகில் ஏழையரைத்
துன்புறுத்த லேநரக மாம்.

8. பாம்புதேள் பூரான் வாழும் பழங்குடில்கள்
தீங்கே தருநர காம்.

9. துயரத்தால் மக்கள் துடிக்குமிடம் எல்லாம்
பயங்கர மாநர காம்.

10. எங்கே வறுமையும் இன்னலும் உள்ளனவோ
அங்கே நரகுண் டறி.

# 63. பழமை

1. பழங்கதைகள் சொல்லியவை பாராட்டும் பேச்சால்
எழுஞ்செல்வம் ஏது மிலை.

2. பாட்டனார் வாழ்ந்ததெனப் பாழடைந்து வீழ்ந்துவிட்ட
வீட்டில்ஆர் வாழ்ந்திருப் பார்.

3. பழமையினை வற்புறுத்திப் பாராட்டல் என்றும்
கிழவர்களின் வாய்ப்பேச் சாம்.

4. பாழடைந்து நாறும் பழங்கேணி நீர்முகந்து
ஆருண்பார் இவ்வுல கில்.

5. பழமையிலே நல்ல பண்பிருந்தால் அத்தை
அழியாமல் காத்தல் நலம்.

6. பண்டைமுறை மாற்றல் பழமைக் கெதிரென்பார்
கண்டறியார் உண்மை நிலை.

7. அந்நாளில் மக்களணி ஆடையின்றி வாழ்ந்ததுபோல்
இந்நாளில் வாழ்வரெ வர்.

8. எல்லாப் பொருளும் எனக்கே எனச்சுரண்டும்
கள்ளம் பழமையன் றாம்.

9. ஆருக்கும் நாமடிமை அல்லோம் எனுநினைவில்
ஊறு வதுபழமை யாம்.

10. கோழைத் தனம்விட்டுக் கொல்லும் கொடுமைகளை
வீழச்செய் தல்பழமை யாம்.

# 64. புதுமை

1. என்றும் ஒளிவீசி எல்லோரும் இன்பமுற
நின்றுவள ரும்புதுமை தான்.

2. பற்பல கோலங்கள் பூண்டு பயனற்று
நிற்றல் புதுமையன் றாம்.

3. புதுமையெலாம் தீயனவே என்று புகல்வார்
மதியில் மறுவுடை யார்.

4. நாட்டு நடப்பனைத்தும் நன்றாய் உடனறியக்
காட்டு வதுபுதுமை யாம்.

5. பத்திரிகை புத்தகங்கள் பாரில் பரவவழி
வைத்த தேபுதுமை தான்.

6. மலையைத் தரையாக்கி மாகடல்மே டாக்கும்
கலையெல் லாம்புதுமை யாம்.

7. கங்கை நதிநீரைக் காவிரியில் பாய்ச்சிவளம்
பொங்கச்செய் தல்புதுமை யாம்.

8. சாவாத வாழ்வளிக்கும் சாந்தி நதிபெருகும்
ஆஆ புதுமைவளர்ந் தால்.

9. பொய்யர்கள் செல்வாக்கைப் போக்கிப் புதுவுலகம்
செய்வது வேபுதுமை யாம்.

10. புதுமைப் பெரு வெள்ளம் பொங்கி எழுங்கால்
எதுதான் அதைத்தடுக் கும்?

## சாமி - சிதம்பரனாரின்
## புதுக்குறள்
## இயல்களும் அதிகாரங்களும்

# 4. பொதுவியல்

1. மக்கட் பண்பு
2. உலகப் போக்கு
3. மாற்றம்
4. இன்பம்
5. துன்பம்
6. பேச்சு
7. மனம்போல் வாழ்வு
8. படிப்பகம்
9. பேராசை
10. அமைதி
11. கலவை

# 4. பொதுவியல்

## 65. மக்கட்பண்பு

1. உண்மைக் குழைக்க ஒருபொழுதும் அஞ்சாத
திண்மையே மக்கள் திறம்.

2. வல்லார் நெருக்குதலால் வாய்மை வழிதவறிச்
செல்லா தவர்மனி தர்.

3. உள்ளத்தில் ஒன்றும் உரையிலே மற்றொன்றும்
சொல்லா தவர்மனி தர்.

4. நெஞ்சத்தால் நன்மையென நேர்ந்த வினைமுடிக்க
அஞ்சார் மனிதர்என் பார்.

5. நல்லவையில் ஆண்மையும் தீமைகளில் நாணமும்
உள்ளவரே மக்களென லாம்.

6. தமக்குதவி செய்தவரைத் தாம்உள் ளளவும்
மறக்கா தவர்மனி தர்.

7. துன்பத்தால் வாடித் துடிக்கும் உயிர்களிடம்
அன்புசெலல் மக்களியல் பாம்.

8. எந்நாட்டிற் பஞ்சமெழுந்து இன்னல் புரிந்தாலும்
முன்சென் றுதவுவர்மக் கள்.

9. மூடர்கள் செய்பிழையை முற்றும் மறந்துநலம்
நாடுதலே மக்களியல் பாம்.

10. எவ்வளவு செல்வங்கள் எய்தினும் தீமைசெய்ய
ஒவ்வார் மனிதர்என் பார்.

# 66. உலகப்போக்கு

1. இனிக்கின்ற வாழ்வை விரும்பாதார் இல்லை
தனிப்பட்டோர் தன்மையு மிது.

2. எல்லோர் குறிக்கோளும் ஒன்றாய் இருந்திடினும்
செல்லார் ஒருவழியில் சேர்ந்து.

3. எல்லோரும் இன்புற் றிருக்க முயல்வதுவே
நல்லமுறை யாகுமிந் நாள்.

4. தன்னோடு தன்மக்கள் தான்வாழ்ந்தால் போதுமெனல்
முன்னாள் மனிதர் மொழி.

5. மக்கள் இனத்தைப் பிளவுசெய் மார்க்கமெலாம்
இக்காலத் தார்விரும் பார்.

6. எப்பொருட்கும் உள்ள நியதியே இவ்வுலக
மக்களுக்கும் உண்டென் றறி.

7. வல்லாரால் மோதுண்டு வாடிக் கிடந்தவர்கள்
எல்லாரும் கண்விழித் தார்.

8. உலகத்தின் போக்கறிந் தொழுகாத மக்கள்
நலமின்றி நாசமுறு வார்.

9. விஞ்ஞானம் ஓங்கி வளர்ந்தபின் வீண்பழமை
அஞ்ஞானம் சாகும் அறி.

10. எத்தனையோ காட்சிகள் இந்நாளில் காண்கின்றோம்
அத்தனையும் மக்களறி வாம்.

# 67. மாற்றம்

1. மாற்றம் உலகியற்கை என்று மதியாதார்
நாற்றநீர்த் தேக்கம்ஒப் பார்.

2. மாற்றப் புயலை எதிர்க்கும் மனிதரெலாம்
தேற்றோடிப் போய்விடு வார்.

3. மேகத்தின் தோற்றம்போல் மேதினியில்எப்பொருளும்
வேகமாய் மாறிவரு மே.

4. மாற்றம் அடைந்துலகில் வாழ மனங்கொள்ளார்
வீற்றிருத்தல் வீண்சுமை யாம்.

5. காலத்திற் கேற்றபடி காரியங்கள் செய்யார்க்கு
ஞாலத்தில் இன்ப மிலை.

6. வெள்ளப் பெருக்காய் விரைந்துலகம் மாறுவதைத்
தள்ளிவைக்க லாகுமோ தான்.

7. வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனுமுளறல்
செல்லா தினியுல கில்.

8. அந்நாள் விலங்குகளுக் கஞ்சி ஒளிந்தார்கள்
இந்நாள் அவையடக்கு வார்.

9. ஆடைநடை தோற்றம் அனைத்தும் புரண்டாலும்
ஓடவிலை மூடமதி தான்.

10. கண்ணும் கருத்தும் உடையவர்கள் காலத்தை
எண்ணி நடப்பார் இயல்பு.

# 68. இன்பம்

1. என்றும் மனக்கவலை இல்லா மகிழ்ச்சியே
நன்றுதரும் இன்பமென லாம்.

2. துன்பத்துக் கஞ்சாமல் வாழும் துணிவொன்றே
இன்பத்தை எய்தும் வழி.

3. நாளை உயிர் வாழ நாமென்ன செய்வதெனும்
ஓலம் ஒழிவதின் பம்.

4. ஆண்டு முதிர்ந்தபின் ஆர்காப்பார் என்றதுயர்
ஈண்டின்றி வாழ்வதின் பம்.

5. ஏகாந்த மாகி இருப்பதே இன்பமெனல்
ஆகாத பேச்சென் றறி.

6. ஒத்த மனத்தார் உடன் கூடி வாழ்வதனால்
நித்தமும் இன்புற லாம்.

7. உள்ளத்தில் மாசின்றி நாட்டுக் குழைப்பவர்கள்
நல்லின்ப வாழ்வுறு வார்.

8. பொல்லாமை யார்க்கும் புரியாமல் வாழ்வதே
நல்லின்பம் எய்தும் நெறி.

9. பேரின்பம் சிற்றின்பம் வெவ்வே றெனப்பேசல்
ஒரும்மதி யற்றார் உரை.

10. உழைப்புடனே ஒற்றுமையும் ஓங்கும் உலகில்
தழைக்குமே இன்ப தரு.

# 69. துன்பம்

1. பக்கத்து வீட்டுத்தீ பற்றாதோ நம்மனையில்
துக்கமும் இத்தகைய தாம்.

2. பாறை உமிழுமனல் பக்கத்தா ரைப்புழுக்கும்
ஊரார் துயர்நமக்கும் உண்டு.

3. உண்டி உலகத் துயிராகும் இவ்வுண்மை
கண்டறியார் துன்புறு வார்.

4. அச்சின்றி வண்டி அசையாது உணவின்றேல்
இச்சகம் பாழாய் விடும்.

5. இன்றைக்கு நாளைக் கெனமொழிவோர் சொல்நம்பல்
என்றைக்கும் துன்பமே தான்.

6. வாக்களித்த வாறு நடக்க வழியின்றேல்
தாக்கும் பெருந்துயர் தான்.

7. முற்றாக் கிளையேறல் ஒக்கும் மொழிந்ததைப்பின்
பற்றார் தொடர்புகொள் ளல்.

8. எண்ணித் துணியாத செய்கையினால் எப்பொழுதும்
நண்ணும் பெருந்துய ரம்.

9. ஆழந் தெரியாமல் கால்விடுவோர் எல்லோரும்
வாழ்விலே துன்புறு வார்.

10. உள்ளத்தே தோன்றும் உணர்ச்சிக்குத் தாழ்போட்டால்
கொள்ளைத் துயர்வள ரும்.

# 70. பேச்சு

1. உள்ளக் கொதிப்பை உடனடக்க வல்லவரே
சொல்லுவார் நன்மொழி கள்.

2. உள்ளத்தில் தீமூட்டி ஊக்கம் கெடுத்துயிரைக்
கொல்லும் கொடுமொழி கள்.

3. உள்ளத்தின் வேதனையை ஓட்டி மகிழ் செய்மருந்து
கள்ளமிலா நன்மொழி கள்.

4. ஊரார் பகைவளர்க்கும் உற்றாரை ஓட்டிவிடும்
தீராக் கடுமொழி கள்.

5. எத்தனைதான் நன்மைகளைச் செய்தாலும் ஓர் கொடுஞ்சொல்
அத்தனையும் பாழாக்கு மாம்.

6. கல்லால் அடித்துக் காயப் படுத்தலாம்
சொல்லத் தகாததோர் சொல்.

7. கோபத்தால் மூண்டகொடும் சொல்லே கொலை செய்யும்
ஆபத்துண் டாக்கி விடும்.

8. சந்தனத்தை விட்டுச் சகதி எடுத்தணியும்
அந்தகரே தீதுரைப் பார்.

9. நண்பர்க ளைப்பெருக்கி நன்மைபல உண்டாக்கும்
அன்புகனி நல்லுரை கள்.

10. நன்மை தரும்சொற்கள் நாடி யுரைப்பதுவே
அன்புடையா ருக்கழ காம்.

# 71. மனம் போல் வாழ்வு

1. உள்ளமே சொல்லுக்கும் செய்கைக்கும் ஊர்தியாம்
நல்லன நாடிநிற் போம்.

2. ஈடுபடல் உள்ளத் தியற்கை அதனைநீர்
கேடுவழி செல்லவிடா தீர்.

3. துன்பம் எமக்கில்லை என்னும் துணிவுடை யோர்
இன்பம் அடைந்திருப் பார்.

4. வெற்றியே தோல்வியிலை என்னுமோர் வீரமனம்
பெற்றவரே வாழ்வடை வார்.

5. செய்யும் வினைமுடியு மோவென்று சிந்தையிலே
ஐயுறல் தோல்வி தரும்.

6. திண்ணியரும் நோயுற்றோம் என்று திகைப்பரேல்
எண்ணம் பிணிவளர்க் கும்.

7. தீய நினைப்புகளே தேகத்தைத் தீய்க்கின்ற
நோயணுக்கள் ஆகிவி டும்.

8. கேடு நினைப்பான் கெடுவான் எனுமொழியை
நாடுவோர் நன்மைபெறு வார்.

9. மாசற்ற நெஞ்சினரை மாநிலத்தில் எல்லோரும்
நேசித்துப் பாராட்டு வார்.

10. ஒருவர்க்கும் தீங்கெண்ணா உள்ளம் உடையோரே
பெரியர் அறிஞர்க ளாம்.

# 72. படிப்பகம்

1. நல்ல றிவாம் இன்பத்தை நாட்டார் நுகர்கின்ற
இல்லம் படிப்பகந் தான்.

2. ஓய்ந்த பொழுதில் உவந்து படிப்பதற்கு
வாய்ந்த படிப்பகம் வேண்டும்.

3. வாசிப்புச் சாலைகளை வைத்துவிட்டால் ஊர்தோறும்
தேசத்தில் கல்விபெரு கும்.

4. கலைஞர் அமர்ந்து களிப்படைந்து வாழும்
நிலையம் படிப்பகந் தான்.

5. பண்டைப் புலவர் நிதியைப் படிப்பகத்தே
கண்டு மகிழ்ந்திடவைப் பீர்.

6. நன்னீர்க் கிணறு நடுவூருள் வாய்த்ததாம்
எந்நா ளும்படிப்ப கம்.

7. ஊரின் நடுவில் ஓங்கும் சுடர்விளக்காம்
ஓர்படிப்புச் சாலையிருத் தல்.

8. அறிஞர் பழம்புதுநூல் அவ்வளவும் பார்க்க
நிறைந்திருத் தல்படிப்ப கம்.

9. வாசக சாலைகளால் வாய்க்கும் பெரும்பயனைத்
தேசம் உணர்தல் நலம்.

10. அன்றன்றைச் செய்திகள் அத்தனையும் கண்டறிய
நின்றுத வல்படிப்ப கம்.

# 73. பேராசை

1. வாழ வழிகாட்டும் ஆசை; மனமுடைந்து
வீழவிடும் பேரா சைதான்.

2. இருப்பதால் இன்புறா தின்னுநிதி சேர்க்கப்
பறப்பது பேராசை யாம்.

3. ஈட்டும் பொருள்களால் இன்பம் நுகராமல்
வாட்டுமே பேராசைப் பேய்.

4. பிறரைத் துயர்ப்படுத்திப் பேரின்பம் துய்க்கும்
சிறுமையே பேராசை யாம்.

5. பெற்றோர் உடன்பிறந்தார் பிள்ளைகளை யும்போற்றார்
முற்றியபே ராசையினார்.

6. கல்வி யறிவினால் காணும் பெரும்பயனைக்
கொல்வது பேராசை யாம்.

7. நல்லோர் தொடர்பறுக்கும் நல்லொழுக்க வேர்சிதைக்கும்
பொல்லாத பேராசை தான்.

8. பேராசை என்னும் பெருந்தீயில் வீழ்ந்தோரை
ஆராலும் காத்தல் அரிது.

9. நன்மையெவை தீமையெவை என்றுண்மை நாடுகின்ற
வன்மைபே ராசைக் கிலை.

10. பேராசை கொண்டோரைப் பேயர் கொடியர்என
ஊரார் பழித்துரைப் பார்.

# 74. அமைதி

1. எல்லாம் நலத்திற்கே என்று பணிபுரிந்தால்
நல்ல மனவமைதி யாம்.

2. என்கடன் தொண்டியற்றல் என்ற முடிவுடையோர்
இன்பம் அமைதிபெறு வார்.

3. சென்றதை எண்ணித்தம் சிந்தை கலங்காமல்
நன்று செயலமைதி யாம்.

4. தென்றலுடற் கின்பம்; தெளிந்த நெறியொழுகல்
என்றும் அமைதி தரும்.

5. மாலைக் கடற்கரையில் குந்தி மகிழ்ந்திருத்தல்
சால அமைதி தரும்.

6. சீதமலர்க் காவில் சிறைப்பறவை கீதங்கள்
ஓதக்கேட் டல் இன்பமாம்.

7. பள்ளமெலாம் நீரும் பசுமைப் பயிர்செழிப்பும்
உள்ளத் தமைதி தரும்.

8. மானத்தை விற்றுடலைக் காக்கும் மனிதரினம்
காணாமற் போவது நன்று.

9. ஏங்கித் துடிப்பாரை இன்பமுறச் செய்வதனால்
ஈங்கு மனச்சாந்தியுண் டு.

10. அன்புடையார் தங்கள் அருகிருந்து பேசிமனம்
இன்புறுத லாலமைதி யாம்.

# 75. கல்வை

1. தற்புகழ்ச்சிக் காகத் தலைமயக்கம் கொள்வோரை
அற்பரும் ஏமாற்ற லாம்.

2. கர்வம் தலைக்கொண்ட கற்றவரைக் காட்டினும்
நிர்மூடர் பொன்அனை யார்.

3. நெஞ்சுகவர் சொல்உருவம் பூண்டு நடிப்போருள்
வஞ்சகரும் வாழ்ந்திருப் பார்.

4. வாக்குறுதி மீறி நடப்பவரே வாள்கொண்டு
தாக்குவார் நன்னெறி யைத் தாம்.

5. துன்புற்ற போதும் நிழலாய்த் துணைசெய்வார்
நண்புக் குரியவ ராம்.

6. ஊருக்குச் சோலை உடம்புக்கு நல்லுழைப்பு
பேரழகை ஊட்டுவ தாம்.

7. ஊனும் காய்கறியும் ஒத்த உணவேதாம்
வீண்உயர்வு தாழ்வு சொலல்.

8. இல்லாமைத் தீவளர்ந்தால் இவ்வுலகப் பூஞ்சோலை
பொல்லாச் சுடுகாடாய்ப் போம்.

9. பாலின பேதங்கள் பாராட்டா நாடெந்தக்
காலத்தும் மேன்மை யுறும்

10. உயிர்க்கிறுதி நேர்ந்தாலும் உண்மைக் குழைக்கத்
தயங்கா தவன்மனி தன்.

✸ ✸ ✸

# அறிவு (கவிதை)

(1964)

*(1938ல் இந்நூலாசிரியர் தமது 38ஆவது வயதில்)*

# இந்நூல் உரிமை

மனிதர்களைச் சுதந்தரமாய்
வாழ்விக்க மனங்கொண்டே
நனியுழைக்கும் சீர்திருத்த
வீரர்களாம் நல்லறிஞர்
புனிதமுறு பெருந்தொண்டைப்
போற்றுதற்கோர் அறிகுறியாய்
இனிமைமிகு செந்தமிழ்நூல்
இதைஉரிமை செய்கின்றேன்

*(சிதம்பரனார் சீர்திருத்தப் பாடல்கள் முதல் பாகத்திலிருந்து)*

*ஆசிரியர்*

**சாமி. சிதம்பரனார்**

*"தாமரை" மலரில்*

*(17-1-62 இல் ஆசிரியர் திரு. ப. ஜீவானந்தம் அவர்களின் கருத்துரை)*

# தமிழ்ப் பெருமகனார்

*இறவாப் புகழ் படைத்த இலக்கியங்கள் பல இயற்றித் தந்த மேதை சாமி. சிதம்பரனார் மறைந்து இந்தத் திங்களோடு ஓராண்டாகிறது. அவரது நினைவால் வருடந் தோறும் நமது நெஞ்சமெல்லாம் கணக்கிறது. அந்த அளவுக்கு அவர் தமிழ் மக்களிடையே ஒல்காப் புகழ் பெற்று, ஈடு செய்ய முடியாத இழப்பை விட்டுச் சென்றுவிட்டார். கடந்த நாற்பதாண்டு காலம் பொதுவாழ்வில் அவர் புரிந்துள்ள அரும்பணிகள் அளவிறந்தவை. துவக்கத்தில் சுயமரியாதை இயக்கத்திலிருந்து சமூக சீர்திருத்தப் பணியாற்றினார். ஜாதி மத கொடுமைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் அடலேறெனச் சீறி எழுந்து சாடினார்.*

*பழம் பெரும் தேசபக்தர் ம. சிங்காரவேலு முதலியவர்களோடு இணைந்து நின்று, நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பணியாற்றினார். உலகத்தின் பிணி தீர்க்கும் மருந்து சமதர்மதே என்று தெளிந்து அதனை உறுதியோடு ஆதரித்தார். 'அறிவுக்கொடி' என்னும் பத்திரிகை நடத்தி அதன் மூலம் சமதர்ம கருத்துக்களையும், சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் பரப்பினார்.*

*இருபதாண்டுகளுக்கு மேலாகவே தமிழ்நாட்டின் ஜனநாயக இயக்கத்தில் நேரடியாகப் பங்கு கொண்டார். 1943-'50 - ஆம் வருடங்களில் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற முற்போக்கு இயக்கங்களின் மீது அரசாங்கம் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டபோது, அதனை வன்மையாகக் கண்டித்து குரல் எழுப்பினார். பல்லாண்டுகளுக்கு முன்பாகவே சென்னையில் சோவியத் நண்பர்கள் சங்கம் நிறுவி, உலகத்திற்கே புதுமையான*

ஒப்பில்லாததோர் சமுதாயம் அமைத்த சோவியத் நாட்டின் மீது பொழியப்படும் அவதூறுகளுக்கெல்லாம் சுடச்சுட பதில் கொடுத்தார்.

உழவர்கள், உழைப்பாளிகளின் நியாய பூர்வமான போராட்டத்தை முன்னின்று ஆதரித்தார். உலக சமாதான இயக்கத்தில் தீவிரப் பற்று கொண்டார். சமாதானக் கவுன்சில், இந்திய சோவியத் நட்புறவுச் சங்கம், ஆசிய - ஆப்ரிக்க ஒருமைப் பாடு இயக்கம், எழுத்தாளர் சங்கம் முதலியவற்றிலெல்லாம் அரும்பணி யாற்றினார்.

இவை யெல்லாவற்றிற்கும் மேலாக அவரது தமிழ்த் தொண்டு சிறப்புடையது. தமிழ் இலக்கியத்தைப் புதுமைக் கண்கொண்டு பார்த்து இன்றைய ஜனநாயக இயக்கத்திற்கு ஏற்ப சிறந்த பல நூல்களை இயற்றினார். தமிழ் இலக்கியத்தை மக்களுக்கு எளிய இனிய முறையில் விளக்கி அவர்களது நன்மதிப்பைப் பெற்றார்.

இத்தகைய தமிழகத்தின் தலைசிறந்த முற்போக்கு எபத்தாளர், பழம் பெருந் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர், மாசு மறுவற்ற சமதர்மவாதி, உழைப்பாளரின் உற்ற துணைவர், தமிழ்ப் பெருமகனார் சாமி. சிதம்பரனாரை நினைவு தரும் வேளையில் அவர் அம் வாழ்நாளை எந்த உயரிய லட்சியத்திற்காக அர்ப்பணித்தாரோ அந்த லட்சியத்தை நிறைவேற்ற உறுதி பூணுவோமாக! வாழ்க சாமி. சிதம்பரனார் நாமம்!

# அறிஞர். சாமி. சிதம்பரனார்

### "தாமரை" மலரில்

### (17-1-63 இல் ஆசிரியர் திரு. ப. ஜீவானந்தம் அவர்கள்)

தமிழ் நாட்டு முதல் வரிசை முற்போக்கு எழுத்தாளர், தமிழால் தமக்கும், தம்மால் தமிழுக்கும் பெருமை ஏற்பட வாழ்ந்த அறிஞர் சாமி. சிதம்பரனார் மறைந்து இந்தத் திங்களோடு இரண்டாண்டுகள் ஆகின்றன.

சாமி. சிதம்பரனார், தமது அறுபத்தொரு ஆண்டுகளில், தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் 40 ஆண்டுகளுக்கு மேலாகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்.

பழைய இலக்கியங்களை முறையாகப் பயன்படுத்த வேண்டும்; அவற்றிற்கு அடிமையாகக் கூடாது. கால சக்திக்குக் குரல் கொடுக்கும் புதிய இலக்கியங்களைப் படைத்துக் குவிக்க வேண்டும். இந்தத் திசை வழியில், இன்றைய தமிழக எழுத்துக் கலைஞர்களுக்குச் சிதம்பரனார் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்கினார்.

எழுத்தாளன், தனது படிப்புச் செருக்கு ஆர்ப்பாட்டமாக வெளிச்சம்போட எழுதக்கூடாது. மக்களுக்காக எழுதவேண்டும். இதுதான் இந்த ஜனயுகத்தில் எழுத்துக் கலையின் முதல் சூத்திரம். சிதம்பரனார் இந்தச் சூத்திரத்தை உறுதியாகக் கடைப்பிடித்து எழுத்துப் பணி புரிந்தார் என்பதை அவருடைய நூல்களே பறை சாற்றிச் சொல்லும்.

'கம்பன் கண்ட தமிழகம்' 'வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்,' 'தொல் காப்பித் தமிழன்,' 'பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும்,' 'எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்' முதலிய சிறந்த நூல்களை உருவாக்கி, தமிழன்னைக்கு அவர் காணிக்கை செலுத்தியிருக்கிறார். இன்னும் 'தாமரை', 'சரஸ்வதி' போன்ற

இலக்கிய ஏடுகளில் எத்தனை எத்தனையோ ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

அவர் தலை சிறந்த எழுத்தாளர், திறனாய்வாளர் மட்டுமல்ல, வாழ்க்கையிலே முற்போக்கு வாதியாக, சீர்திருத்தச் செம்மலாக வாழ்ந்து காட்டியவர்.

துணிச்சல், மேலும் துணிச்சல், மென்மேலும் துணிச்சல் என்ற பதாகை ஏந்தி, பிரஞ்சு நாட்டுக் கலைக்களஞ்சிய வாதிகள் போன்று போராடினார் அந்நாளில் சிதம்பரனார். சிந்தனைச் செல்வரான சிதம்பரனார், தமது அறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு அந்நாளில் பகுத்தறிவுக் கிளர்ச்சி களையும் சுயமரியாதை ஏடுகளையும் செழுமை செய்தார்.

ஆரம்ப முதலே சமுதாய நீதிக்காகப் போராடும் போராட்ட மனப்பான்மை அவரிடம் அமைந்தது. பிற்காலத்தில் இது மேலும் வளர்ந்து சோஷலிஸக் கருத்துக்களின் பால் அவரை ஈர்த்தது. சமாதான இயக்கமும் அவரை ஆதரித்தது.

இவ்விதம் தொல்காப்பியத் தமிழனிலிருந்து பாரதி தமிழன் வரையில், ஏன் இன்றைய தமிழன் வரையில் வாழ்ந்து கண்டவை களையும், வாழக் கண்டவைகளையும் அவருடைய புரிதல் - தெரிதல் வழியில்,அவருடைய அலாதிப் பாணியில் வழங்கிய தமிழறிஞரின் நினைவுக்கு - மனிதகுலத்தை நேசித்த தமிழ்ப் பெரியாரின் நினைவுக்கு நமது உளமார்ந்த அஞ்சலி உரித்தாகுக!

*17-1-63ல் ஜனசக்தி மலரில் ஆசிரியர் திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் எழுதியது.*

## மறக்க முடியாத தமிழறிஞர்

*...இன்று நமது பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரியவரான தமிழறிஞர் சாமி. சிதம்பரனாரின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள்.*

*தமிழின் பழைய போக்குக்கு அழுத்தம் கொடுத்து ஆழமான அறிவோடு நுண்ணிய ஆராய்ச்சிகொண்ட நூல்கள் பல எழுதியவர்கள் பலர் உண்டு. தமிழ் இலக்கியத்தில் இங்குக் கொஞ்சம் அங்குக் கொஞ்சம் தொட்டுத் தொட்டு அவற்றில் புதுமை முலாம் பூசிப்பூசிப் சில பல நூல்கள் செய்தவர்களுண்டு. இப்படிக்கின்றி வ.வே.சு.ஐயர், வையாபுரியார் போன்ற ஆராய்ச்சி மன்னர்கள் பன் மொழிப்புலமையுடனும் நுண்மாண் நுழைபுலம் மிக்க நவீன ஆய்வுத் திறமையுடனும் பல நூல்கள் செய்து தமிழுக்கு நிலையான பெரும்பணி செய்திருக்கிறார்கள். வேறு ஒரு கோடிக்குச் சென்று மக்களுக்கு மக்கள் பகைமை உணர்ச்சியை ஊட்டும் புல்லிய நோக்கோடு உண்மைகளைத் திரித்தும் வரலாற்றைப் புரட்டியும் கைபோன வண்ணம் எழுதிக் குவிக்கப்பட்ட நூல்களும் உள.*

*ஆயினும் தமிழிலக்கியம் முழுவதையும் முற்போக்குக் கண்ணோட்டத்துடன் பேதங்களுக்கும் பிரிவினைகளுக்கும் இடம் கொடாமல், தேசபக்திதயும் சமதர்ம உணர்வும் தழுவ, தமிழனுக்கு அறிமுகப்படுத்தி வைத்த பெருமை இன்றுவரை சாமி. சிதம்பரனார்க்கே. பழைய பண்டிதர் வரிசையில் வந்தவர் அவர். ஜனநாயக யுகத்திற்குத் தம்மை நன்றாகப் பொருந்தும்படி செய்து கொண்டார். இதனை என்றும் மறக்க முடியாது.”*

சாமி. சிதம்பரனார் எந்தக் கட்சியிலும் நேர்முக அரசியல் வாதியாக விளம்பரத்துடன் விளங்கியதில்லை. நீதிக்கட்சி, காங்கிரஸ், அப்பால் காங்கிரஸ், சோஷலிஸ்ட் கட்சி, இறுதியாக

கம்யூனிஸ்ட் கட்சி என்று அவருடைய அரசியல் அனுதாபம் ஒன்றை விட்டு ஒன்றுபற்றி வந்து இருக்கிறது. ஆயினும் நீண்டகால உறுதியான அனுதாபம் (கட்சி கடுமையான சோதனைக்குட் பட்டிருந்த காலத்திலும்) கம்யூனிஸ்ட் கட்சிக்கே இருந்து வந்திருக்கிறது என்பது குறிப்பிட்டு நினைவு கூரத்தக்கது. அவர் தம் பிந்திய காலத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும் சமாதான இயக்கத்திலும் தனி அக்கரை செலுத்தி வந்தார். தமிழக முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்திலும் அடிநாள் தொட்டே அவருக்குக் குறிப்பிடத்தக்க பங்கு இருந்து வந்திருக்கிறது. பிரிவினைவாத எதிர்ப்புக்கும் தேசிய ஒற்றுமை ஆதரவுக்கும் தமது இலக்கியங்களில் கொடுக்கவேண்டிய இடங்களில் எல்லாம் அழுத்தம் கொடுத்திருக்கிறார். இவற்றிற் கெல்லாம் மேலாக சாமி. சிதம்பரனார்க்கு ஜனசக்தியோடு இருந்த உறவு ரத்த பாசத்தைவிட வலுவானது-உணர்ச்சி மிக்கது.

இறுதியாக அவருடைய பொன்னான படையல்களையும் தமிழகத்தில் முற்போக்குச் சக்திகளோடு நின்று அவர் சாதித்த சாதனைகளையும் தமிழ்ப் பெருமக்கள் இன்றும் என்றும் பசுமையாக நினைவு கூர்வர் என்பதில் ஐயமில்லை.

# திருக்குற்றாலம் தரும் நலம்

*(1960 ஜூன் மாதம் திருக்குற்றாலத்தில் எழுதப்பெற்றது)*

குற்றாலம் காட்சியிலே சிற்றூராய் விளங்கிடினும்
குறையாத புகழ் பரந்து பேரூராய்த் திகழுமே
சுற்றுருவாம் நவமணகள் பேரொளியால் சிறப்பதனை
சிந்தித்தால் இதன் உண்மை அறிந்திடுவீர் சிந்தையிலே.

அளவினிலே மிகவான ஆகாரம் உண்பவர்கள்
அரியபல வியாதிகளுக் காளாகி வருந்துவார்
வளருமந்தநோய் யொழிய வயித்தியர்கள் அணுவுருவாய்
வாய்த்தமருந் தளிக்குமொரு செயலையிங்கொள்ளுவீர்

பேரூரில் நாகரிகப் பித்தமுடன் வாழ்பவர்பால்
பேசுதலால் என்னபயன், சிற்றூர்கள் திருநலமே
நீரினிலும் காற்றினிலும் நிறைந்தசுகம் பெறுவதற்கே
நினைப்பவர்கள் இவ்வூரை மருந்தைப்போல் நேசிப்பார்.

**- சாமி. சிதம்பரனார்.**

# அறிவு
# “சீர்திருத்தப் பாடல்கள்”

## [இரண்டாம் பாகம்]

### வெண்பா

சின்னஞ் சிறுவிளக்கின் சிற்றணுக் கூட்டொளியால்
கன்னங் கரியவிருட் கட்டழிக்கும் - எந்நாளும்
உள்ளத்தே தோன்றும் உயர்அறிவே இவ்வுலகின்
கள்ள மெலாம் காட்டுவிக்கும் காண் !

### அறிவு

தள்ளாடிச் செல்லும் கிழவர்க்குத் தண்டொன்றே
மெள்ளவழி தாண்ட மிகவுதவும் - உள்ளத்தே
எப்பொருளின் தன்மையையும் எண்ணி உணர்வதினால்
தப்பலாம் தொல்லையின்றித் தான். 1

கலைஅறிவுச் செல்வங்கள் காதல்கூர் வாழ்வு
நிலையெலாம் காற்றில் நெகிழ - மலைவாய்
நிலைகுலைந்து நின்ற நிலைமாற்றி நம்மை
நிலைப்படுத்தி னர்காந்தி நெடிது. 2

கப்பல் உடைந்து கடல்நடுவில் வீழ்ந்தோர்க்குக்குத்
தப்ப ஒருபடகு தான்கிடைத்தால் - எப்படியோ
அன்னதாம் இங்கே அவலம்உறு வோர்நெஞ்சில்
மின்னும் அறிவுமிகு மேல். 3

சுற்றும் கொலைக்காரர் சூழ்ந்து பயமுறுத்தும்,
அற்றத்தே கையில் ஆயுதம் - பெற்றவன்போல்
தேறும் பகுத்தறிவால் தேர்ந்தோர்க்குத் தீங்கில்லை
ஆருக்கும் தோழனது வே. 4

செங்கதிரின் பேரொளியால் சீதப் பனித்துளிகள்
இங்குநமைத் துன்புறுத்தா தேகுங்காண் - அங்ஙனமே
ஆற்றல் தருமறிவின் முன்னே அருந்துயர்கள்
தோற்றோடும் இஃதே துணிவு. 5

எப்பொருளை யார்தான் எடுத்திங் குரைத்தாலும்
அப்பொருளின் உண்மையினை ஆராய்ந்து - தப்பின்றேன்
நன்றென்று கொள்க நலமத னால்பெறுக
என்றும் அறிவுடைமை ஈது. 6

கண்டவை கற்பவர்கள் பண்டிதர்கள் ஆவர் எனினும்
பண்டையோர் சொன்ன பழமொழியைக் கண்டுணர்க
பார்க்கும் பொருளைப் பகுத்தறிவோன் பேரறிஞன்
தீர்க்க தரிசியவன் தேர். 7

நீரால் அணையா நெரும்பில்லை நீள்நிலத்தே
தீராத் துயரில்லை தேர்ந்தறிவீர் - சோராத
உண்மைப் பொறுமையால் ஓடும் பகைக்கூட்டம்
நன்மையெலாம் வந்தடையும் நாடு. 8

கண்மூடி அண்ணாந்து கால்நடையாய்ச் செல்பவர்கள்
மண்மேல் அபாயத்தால் மாள்வார்கள் - உண்மையிதே
பக்கமெல்லாம் பார்த்துப் பதைக்காமல் போவதுவே
எக்காலும் நன்மைதரு மே. 9

வேதனைகள் சேராமல் மேதினில் வாழ்பவர்கள்
ஆதரவாய் ஏழைகளை ஆதரிப்பார் - பூதலத்தே
எல்லாரும் ஒன்றாய் இருந்தின்பம் துய்ப்பதுவே
பொல்லாங்கு ஒழியுமுறை போற்று. 10

ஏமாற்றும் வஞ்சனையும் இவ்வுலகில் இல்லாமல்
போமாறு செய்யப் பொருள் எல்லாம் - பூமியிலே
மாந்தர் சிலர்க்குரிமை ஆகும் முறை மாற்றினால்
தீர்ந்துவிடும் பேதமெல்லாம் தேறு. 11

காக்கை உணவொன்றைக்கண்டால் இனத்தையெலாம்
ஊக்கமுடன் கூவி உண்ணுவதை - நோக்காய் நீ !
இவ்வுலகில்வேண்டுவன எல்லோர்க்கும் பங்களித்தல்
எவ்வகைய தொந்தரவும் இன்று. 12

தன்னை யறியாத் தவறினால் பலமக்கள்
மண்ணில் சுகமின்றி மாள்கிறார் - எண்ணுக நீ
ஆற்றும் தொழில்வழியே ஆகும் பயனையெலாம்
வேற்றார் கவர்கின்றார் வீழ்ந்து. 13

ஜனநா யகமென்று செப்பிச் சிலபேர்
பணநா யகராகப் பார்ப்பார் - குணமுடையார்
போலப் பலசொல்லார் பூமியிலே ஏழைகளின்
காலனாய் நிற்பார்கள் காண். 14

சில்லென்று மேலே சிதறும் பனித்துளியால்
பொல்லாத நோய்க்குப் புதியவர்கள் - ஆளாவார்
நெஞ்சம் மகிழ்வடைய நின்று நயம்பேசி
வஞ்சம் புரிபவரை வாட்டு. 15

வல்லார் சுயநலத்தால் வைத்த ஒழுங்குகளை
எல்லோரும் நீதியென ஏற்றார்கள் - பல்லாண்டாய்
இந்நாள் விழிப்புற்று எழுந்தார் பொதுமக்கள்
அன்னவைகள் போகும் அழிந்து. 16

பஞ்சுக் குவியலிலே பற்றியதோர் தீப்பொறிபோல்
நெஞ்சை மயக்கும் நெறியெல்லாம் - மாய்ந்தனவே
எத்தனைநாள் குப்பை சேர்த்து கிடந்தாலும்
அத்தனையும் மண்ணும் அழிந்து. 17

கண்ணாலே பார்க்கும் கனத்த பொருளை எலாம்
மண்ணாய்ச் சிறுதுகளாய் மாற்றலாம் - எண்ணியதை
இந்தவணு மீண்டும் இறுகிப் பலபொருளாய்
வந்துலகில் வாழும் வளர்ந்து. 18

இவ்வா றுலகம் அழிந்து பிறந்ததொகை
எவ்வளவு என்றியம்ப யார் வல்லார் - ஒவ்வாது
வல்ல ஒருகடவுள் வாழும் இது செய்தென்று
சொல்லல் நிலையாது சூது. 19

காற்றுதீ மண்ணீர்வான் ஒன்றாய்க் கலந்ததனால்
தோற்றம் உலகென்று துணிந்தார்கள் - வேற்றுமை
ஆகி இவைபிரிந்தால் ஆகும் பொருள் இல்லை
போகும் அணுவாய்ப் பொடிந்து. 20

காற்றுமழை வெய்யில் கலந்துண்டு வாழ்பயிர்கள்
தோற்றும் செழிப்பாய்த் துணிவுடனே - நாற்றிசையும்
ஓடி விளையாடும் பாலர் உடம்புபலம்
கூடி வளர்வார்கள் கூறு. 21

நிழலில் வளர்ந்திங்கு நின்ற கொடிப்பூவில்
அழகும் மணமும் அறியீர் - பழகாமல்
வைத்தருமை யாய்வளர்க்கும் பிள்ளைகள் வையகத்தில்
ஒத்துறைய மாட்டார் உணர். 22

வெள்ளை நிறமாய் விளங்கும் குழந்தைகளின்
உள்ளத்தே வேற்றுமைநீர் ஊற்றாதீர் - கள்ளப்பொய்ச்
சாதி, மதபேதச் சண்டைகளே இவ்வுலகில்
தீது புரிந்தனவாம் தேறு. 23

பொய்க்கதைகள் ஒன்றும் புகலாதீர் பாலர்க்கே
மெய்க்கதைகள் சொல்லி, மிகமகிழ்ச்சி - செய்விப்பீர்
அன்னார் அறிவெய்தி ஆண்மை சிறப்பார்கள்
திண்ணம் இதுவென்றே தேர். 24

பூனை பெருச்சாளி பூச்சாண்டி பற்றுமென
வீணாகச் சொல்லி வெருட்டாதீர் - காணாத
வேறுகதை வேண்டாம்காண் விளையாடும் பாலகரைத்
தீரர்களாய்ச் செய்வீர் தெரிந்து. 25

மாட்டுச்சந் தைபோல் மாணவரைச் சேர்த்தடைத்து
ஊட்டும் கல்வி உதவாது - கூட்டிற்குள்
வைத்துக் கிளிக்கு வழங்கச் சிலசொற்கள்
கற்றுக் கொடுப்பதாம் காண். 26

ஏட்டுப் படிப்பொன்றால் ஏதும் பயனில்லை
நாட்டு நடப்பறிந்து நன்கறிவை - நீட்டும்
சிறந்தொரு கல்வியே சீர்செய்யும் நாட்டில்
பிறந்தார்க்கும் நன்மையெனப் பேசு. 27

நட்ட பயிரின் நடுவே எழுங்களைகள்
கட்டல் உழவன் கடமையாம் - கட்டங்கள்
வேண்டும் இளைஞர்கள் வீரம் அறிவொழுக்கும்
பூண்டு வளரும் பொருட்டு. 28

நாற்றநீர்ச் சாக்கடைகள் நாற்புறமும் சூழ்ந்திருந்தால்
ஊற்றெடுக்கும் நோய்கள் ஓங்கும்தீ - நாற்றந்தான்
நாட்டிலே தீங்கு நடப்பதற் கில்லாமல்
ஓட்டுவதே ஆட்சிகடன் ஓது. 29

நல்லுரையால் மக்கள் நடத்தை திருந்தும்என
சொல்லுவதால் ஒன்றும் சுகம்இல்லை - பொல்லாமை
வாழ வழியின்றி வைக்கும் முறையதனால்
வீழும் கொடுமைநமை விட்டு. 30

மேலைத் தவத்தளவே செல்வம் மிகுமென்று
பாலர்க்குச் சொல்லும் படிப்பிந்த - ஞாலத்தில்
ஊக்கம் முயற்சி உழைப்பின் உயர்வும்
போக்கிவிடும் அன்றே புகல். 31

குன்றா முயற்சி அறிவினால் கூடாதது
ஒன்றுமிலை ஆம்என்று உணர்த்துவதே - என்றும்
பாலர்க்கும் மற்றவர்க்கும் நாம்கூறும் படிப்பால்
சால நலம்பெருகும் சாற்று. 32

ஆடையிலே நூல்போல் அனைவோரும் தொண்டாற்றிக்
கூடியே வாழ்தல் குறித்துணரார் - கேடுதரும்
வேற்றுமைகள் காட்டி வினையால் உயர்விழிவு
தோற்றுவார் வஞ்சம் தொலை. 33

மேடும் குழியும் மிகுந்த நிலத்தினில்
காடும் புதரும் கலந்துறையும் - நாடுதனில்
ஒத்த சமதரையில் உண்ணும் பொருள்வினையும்
இத்தகையர் மக்களுமென் றெண்ணு. 34

எல்லாக் குழந்தைகளும் ஓரிடத்தி லேயிருந்து
நல்லமுறை கல்வி நடைகற்றுக் - கொள்ளுவரேல்
பின்னாளில் அன்னவர்கள் பேதமிலா நெஞ்சினராய்
இந்நிலத்தே வாழ்வார் இனிது. 35

செங்கதிரோன் தன்னொளியால் சிந்தை மகிழாதார்
இங்குலகில் இல்லை இதுபோல - மங்காத
பேரறிஞன் எங்கே பிறந்தாலும் அன்னவரால்
ஆரும் மகிழ்வார் அறி. 36

கற்பன வெல்லாம் கலையாகும் ஆதலினால்
அற்புதம் என்றொன்றும் இல்லை - அறிந்திடுக
பாலர் மகிழ்ந்து பழகும் தொழில்களையே
சாலப் பயிற்றல் சரி. 37

உண்ண விரும்பா உணவை வலிந்துண்ணின்
என்ன பயன்தான் இயம்புவாய் - அன்னவர்கள்
நோயால் பிணிப்புண்டு நொந்து மடிவார்கள்
ஆயுங்கால் கல்விக்கும் ஆம். 38

மாவின் கனிவிரும்பி மாமரத்தின் கீழிருந்து
வாவிங்கெனச்சொல்லும் மந்திரத்தால் - ஆவதுண்டோ
ஏறிப் பறிப்போர்க்கே எய்தும் கனியதுபோல்
சோராதோர் காண்பார் சுகம். 39

வித்திட்டு நீர்பாய்ச்சி வேலை புரிபவர்க்கே
இத்தரையும் நற்பலன் ஈந்திடுவாள் - புத்தியினால்
ஆய்ந்து தொழில்செய் அறிவுடையோர்க்கு எப்பலனும்
தேய்ந்து மறைவதிலை தேர். 40

பொல்லாப் பசிப்பேயைப் போக விரட்டுவதே
எல்லாரும் இவ்வுலகில் இன்புறும்ஓர் - நல்லமுறை
பாதக ராய்உணவுப் பண்டம் பதுக்குவோர்
தீதொழிக்க உன்மனத்தே தேர். 41

நீரின்றேல் எப்பயிர்தான் தோன்றும் நிலத்தினிலே
சோறின்றேல் உயிருண்டோ சொல்லிடுவீர் - பார்தனிலே
எல்லா உயிரும் உழைப்ப தெதற்கென்றால்
பொல்லாப் பசியின் பொருட்டு. 42

மானம் பெரிதென்று பேசும் மனிதர்களும்
ஆனபசி வந்தால் அறிவிழப்பார் - ஈனமிது
ஏற்றமில தென்றெண்ணார் ஏக்கமெனும் போதையினால்
தோற்றிடுவார் தங்கள் துணிவு. 43

ஊரார் நலத்திற் குழைப்போம் எனப்பேசிப்
பேராசை கொண்டு பிறர்க்குத்துயர் - செய்வார்
இத்தகைய பேர்வழிகள் இங்கே பலர்உண்டு
புத்தியிழந் தேமாறா தீர். 44

வஞ்சம் கொடுஞ்செயலே வாழ்க்கைத் துணையாகி
நஞ்சே உருக்கொண்டு வந்தாற்போல் - நானிலத்தே
வாழும் அரசியல் வாதிகளை நம்பாதீர்
பாழாகி வீழ்வீர் பதைத்து. 45

ஈவிரக்கம் இல்லாத கல்னெஞ்சர் இவ்வுலகில்
யாவர்எனக் காட்டுவேன் காண்பீர் - சேவையே
புரிகின்றோம் என்றுரைத்துச் சீர்திருத்தம் பேசும்
நரிகளே தானறிவீர் நன்கு. 46

ஊரார் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கின்ற
பேராசைக் காரர் பேச்சால் - பெருநடிப்பால்
ஏதும் அறியாத மக்கள்தமை ஏமாற்றிப்
பாதகம் செய்திருப்பார் பார். 47

வாழ்க்கையிலே யின்புற்று வாழ நினைப்பீரேல்
தாழ்க்காமல் எம்மைத் தலைவரெனத் - போற்றுவீர்
என்றுரைக்கும் பாதகரை எக்காலும் நம்பாதீர்
கொன்று கொலைஞரவர் தாம். 48

ஆட்சியிலே ஏறி அதிகாரம் கைக்கொண்டு
மாட்சியெலாம் கைவிட்டு மக்கள் - தமையடக்கும்
பொல்லாத வஞ்ச அரசியல் புல்லர்தமை
இல்லாமல் ஓட்டுவீர் இங்கு. 49

தேசத்தார் ஏமாறத் தேனொழுகப் பேசுவார்
மோசக் கடற்குள்ளே மூழ்கித் - திரிவார்கள்
வானகத்தை இவ்வுலகில் வைப்போம்எனவுரைப்பார்
ஈனம் செயற்கஞ்சார் என்றும். 50

எல்லாரும் சந்தனம் பூசி யிருக்குங்கால்
பொல்லா மலம்பூண்டு ஒருவன் - புகுந்துவிடின்
ஆங்கே மணமழியும் அன்றோ? ஒருகுழுவில்
தீங்குடையோன் வாழ்வதுவும் தேர். 51

நஞ்சின் ஒருதுளியால் நாசமுறும் ஓர்குடம்பால்
அஞ்சாத நெஞ்சிரக்கம் அற்றோன் - தலைமையினால்
எத்தகைய நற்கொள்கை உள்ள இயக்கமும்
செத்து மடியும் சிதைந்து. 52

மக்களை எல்லாம் மதியற்றார் என்றெண்ணி
மிக்க செருக்கோடு மீசை - முறுக்காதீர்
சர்வாதி காரிகள் சாய்ந்த கதைஅறிவீர்
கர்வம் கொடுநஞ்சம் காண். 53

ஏமாறோம் யார்க்குமினி என்றெழுந்த மக்கள்துயர்
போமாறு செய்வதற்குப் புத்தியிலார் - சாமாறு
அடக்குமுறை கையாளல் அக்கினியைப் பஞ்சால்
தடுக்க முயல்வதுமே தான். 54

நல்ல பயிர்விளைவை நாசம்செய் பூச்சிகளைக்
கொல்லாமல் விட்டுவிட லாமோநீர் - சொல்லுவீர்
எந்தப் பொதுவியக்கம் ஆனாலும் ஈனர்களின்
சந்திப்பை நீக்கல் சரி. 55

உள்ளம் குமுறும் குடிமக்கள் துன்பத்தை
எள்ளத் தனையும்மனத் தெண்ணாமல் - ஆட்சியிலே
ஏறியிருப் போர்க்கும் எறிமலைமேல் நிற்போர்க்கும்
வேறுபாடா டேது விளம்பு. 56

முன்னாள் விருந்துணவை எண்ணியுறைமூடர்களுக்கு
இந்நாள் பசிதணிந்து ஏகுமோ - எந்நாளும்
பண்டைப் பழம்பெருமை பேசுவதால் இன்றுநமை
அண்டுதுயர் போமோ அறி. 57

குற்றங்கள் தம்மை அடுக்கடுக்காய்க் கூறுவதால்
சற்றும் பயனில்லை; சாற்றுவீர் - வெற்றிபெற
நல்வினைகள் இன்னின்ன நாம்செய்ய வேண்டுமெனச்
சொல்வதுடன் செய்குவீர் சூழ்ந்து. 58

முயற்சி திருவினை ஆக்கு மெனும்சொல்லை
அயர்ச்சி திருவினை ஆக்குமென - மாற்றினார்
முன்னைத் தவத்தால் மூளுவதே செல்வமெனச்
சொன்னாதனால் வந்ததுஇச் சூது. 59

எட்டி, எடுத்தால்தான், எப்பொருளும் நம்கையில்
கிட்டுவதைக் கண்கூடாய்க் காண்கின்றோம் - திட்டமுடன்
பாடுபட்டுப் பண்டங்கள் உற்பத்தி செய்பவர்க்கே
நாடுரிமை உண்டுண்மை நாட்டு. 60

செல்வமெலாம் தம்மதெனச் சேர்த்துண்டு சீரணிப்பார்
பல்வகையில் பாட்டாளர் துன்பமுறப்பாழ் - செய்வார்
அண்டும் பொருளை அழிக்கும் நெருப்பிவர்கள்
கண்டறிந்து கொள்வீர் கடிது. 61

நல்லறிஞர் தம்மை நசுக்க முயல்கின்ற
புல்லறி வாளர் புறமிடுவார் - எல்லையிலாச்
சாகரத்தின் நீரைச் சிறுகூடை யால்வற்றிப்
போகஇறைப் போர்ஆர் புகல்? 62

நீரில்குளித்து நிலைத்த நலங் கண்டோர்
சேரில் திளைத்துச் சிறுமையினால் - வாடுவரோ
என்றும் மகிழ்ச்சிதரும் இன்சொற்கள் கூறாமல்
நின்றுரைப்ப ரோகடுஞ்சொல் நேர்ந்து. 63

நாமனம் மெய்க்கினிமை நன்மைதரும் நல்லுணவைப்
போமெனச் சொல்லிப் புசிப்பரோ - நஞ்சுணவு!
தேன்போலும் இன்சொற்கள் பேசாமல் தீமைதரும்
கூன்சொற்கள் சொல்வதேன் கூறு. 64

எரிகின்ற கொள்ளி எடுத்துத் தலைசொரியும்
அறிவிலா மக்களை யார்மதிப்பார்? - இவ்வுலகில்
எல்லோரும் சிச்சீ எனவெறுக்கும் தீச்சொற்கள்
சொல்லுவார் சீரழிவார் சோர்ந்து. 65

மாம்பழத்தின் துண்டை மகிழ்ந்து சுவைப்பவர்கள்
வேம்பின் கனியை விரும்பிப் - புசியார்கள்
நெஞ்சை மகிழ்விக்கும் நீதிமொழி சொல்லாமல்
நஞ்சுமொழி கக்குவரோ நாடு. 66

ஊரை அழிக்க உவரிநீர் மேலெழுந்தால்
ஆரோ அதைத்தடுக்கும் ஆற்றலார் - ஒருருவாய்
மக்கள் திரண்டாசை மாற்றத் துணிந்தெழுந்தால்
அக்கால் அடக்குவார் ஆர்? 67

மக்களெலாம் பஞ்சத்தால் மாளுவதை எண்ணாமல்
எக்களித்துத் தாமட்டும் இன்புற்று - வாழ்பவர்கள்
சுற்றும் சுடர்நெருப்பு சூழ மனக்கவலை
அற்றுநடம் ஆடுவர்போல் ஆம். 68

நன்றாய் உழுது எருவிட்ட நாள்பயிரே
குன்றாமல் ஓங்கிக் குறையா பலன் - அளிக்கும்
எல்லோரும் கல்விச் செல்வம் எய்தவழி செய்துவிடின்
பல்லாண்டு துன்பமிலை பார். 69

வானத்தில் வந்துலவும் வெண்மதி யால்மகிழா
ஈனத்தர் யாருமிலை இவ்வுலகில் - மானத்தர்
என்னும் படிமக்கள் எப்பொழுதும் இன்புறவே
நன்முறையில் ஆள்வதுவே நன்று. 70

அன்னை யினத்தை அடிமையிலே வைப்பதற்குச்
சொன்னபல சூதுகளைச் சுட்டெரிப்பாய் - இந்நிலத்தே
ஓர்கொத்து மாங்கனியில் தாழ்வே துயர்வேது
நீயிதனை நெஞ்சில் நிறுத்து. 71

சீனியும் மாவும் சேர்ந்துபல தின்பண்டம்
ஆனஉரு ஆகின்ற செய்தி - அறியீரோ
ஆண்பெண் உறவறுந்து விட்டால் அவனியிலே
காண்பரோ மாந்தர் குலம். 72

மண்ணிலே மாதர்தொகை பாதி எனவறிந்தால்
எண்ணுவரோ மாதர் இழிவென்று - பெண்ணடிமை
பேசுவோன் தன்னுடம்பில் பாதியினைக் கத்தியினால்
கூசாமல் புண்படுப்போன் கூறு. 73

நம்மால் நடப்பதொன்றும் இல்லை எனநம்பிச்
சும்மா இருப்போர் சுகமடையார் - அம்மாகேள்
ஆண்டவனே காவென் றலறித் திரிபவர்கள்
ஈண்டிரப் போராய் நிற்பதேன்? 74

சாதி சமய பேதமழிந் தெல்லோரும்
நீதி நெறிபற்றி வாழ - நினைப்பாயேல்
இல்லாதார் உள்ளவர்கள் என்னும் நிலைபோக்கி
நல்லவொரு வர்க்கத்தை நாட்டு. 75

முக்கி நடப்பவரும் மோட்டாரில் செல்பவரும்
ஒக்கவே ஓரிடத்தை எய்துவரோ - எக்காலும்
செல்வரும் ஏழைகளும் சிந்தையொன்று பட்டவராய்
நல்வாழ்வு வாழ்வதிலை நாடு. 76

ஆண்பெண் சமமென்ற நீதி அளித்துவிட்டால்
காண்கின்ற பேதம் கடிதில் - கருகிவிடும்
மதசாதி வேற்றுமைகள் அற்ற மணமுலகில்
நிதமும் நடக்கும் நிசம். 77

நீரில் இறங்காமல் நீந்தப் பயில்வதற்கு
ஆரால் முடியும் அறிவிப்பீர் - பாரினிலே
பாட்டா ளிகளோடு பழகாத பேர்வழிகள்
நாட்டுவளம் காண்பரோ நன்கு. 78

தேசு மழுங்கித் தேய்ந்துவிட்ட சந்திரன்பின்
வீசுமொளி பெற்று விளங்குமே - நாசம்செய்
நோயுற்றோம் என்றுள்ளம் நோக மருந்துண்டு
ஓய்வுற்றால் நன்மை உறும். 79

கூரைமேல் வீழ்ந்த கொடுநெருப்பை விட்டுவிட்டால்
நீறாகிப் போகும்இமை நேரத்தில் - யாரும்தம்
உள்ளத்தின் சோர்வை ஒழிக்கா திருப்பரேல்
பள்ளத்தில் வீழ்ந்திறப் பார். 80

வண்டினங்கள் சேகரித்து வைத்திருக்கும் செந்தேனைக்
கண்டொருவன் உண்டு களிப்படைவான் - மண்டலத்தில்
ஈட்டும் பொருளதனால் இன்பமுறார் வைப்பரேல்
நாட்டிலவர்க் கேதுசுகம் நாடு. 81

நல்ல உணவுண்டு நாளும் மகிழ்வோர்பால்
பொல்லாத நோயெதுவும் போகாதே - சொல்லுகிறேன்
மாந்தர் மகிழ்வோடு வாழ முறைசெய்தால்
சாந்தம் தழைத்தோங்கும் காண். 82

சக்கரை என்றெழுதிச் சப்ப சுவையுண்டோ
மிக்கசுகா தாரமுடன் வாழ்வதே - தக்கதெனும்
வாய்ப்பேச்சால் என்னபயன்? செல்வமின்றிவாடுவோர்
நோய்ப்படா தென்செய்வார் நொந்து. 83

பட்டினியால் வாடுகின்ற பாலகனைச் சோற்றெதிரில்
விட்டதனைக் காவென்றல் வீண்பேச்சே - சட்டங்கள்
செய்தாலும் பாட்டாளர் செல்வர்க் கினிப்படியார்
எய்துவார் தம்முரிமை இன்று. 84

அன்பால் அனைவரையும் தன்வசமாய் ஆக்கலாம்
துன்பால் ஆள்வதெனில் தோல்விதான் - நண்பால்
நடக்காத நற்செயல்கள் ஒன்றுமிலை நாட்டில்
அடக்குமுறை வீழும் அறி. 85

பன்றிதான் சந்தனத்தின் பண்பை அறியுமோ
நன்றி மறவாத நற்குணந்தான் - என்றேனும்
உள்ளங் கனியாத ஊனரிடம் தோன்றுமோ
கொள்ளுவரோ நன்மை குறித்து. 86

நல்ல உணவளித்து நாளும் குளிப்பாட்டி
மெல்லியதோர் மெத்தையின் மேற்படுக்க - வைத்தாலும்
நாற்ற மலம்விரும்பும் நாய்அதுபோல் கயவருக்கு
ஆற்றும் உதவியெலாம் ஆகும். 87

அழுக்கடைந்து விட்டதென ஆடையினை யாரும்
இழுத்தெறிய மாட்டார் எடுத்தணிவார் - வெளுத்தே
துட்ட ரெனவெறுத்துத் தூவென்று தள்ளாமல்
கெட்டவரை நல்வழி செய்வீர். 88

முள்மூடி கண்டு முதிர்ந்தப் பலாக்கனியைத்
தள்ளி விடுதல் தகுமோ - உள்ளத்தின்
அன்பை உருவால் அளந்தறிதல் ஆகுமோ
பண்பை நடத்தையினால் பார். 89

நீருக்குள் மூழ்கி நெடுமூச்சு விட்டக்கால்
ஆரும் அறிவார்கள் ஆளிருப்பை - சோரர்கள்
எத்தனைநாள் ஆனாலும் இங்கே பிடிபடுவார்
சத்தியம் என்றிதனைச் சாற்று. 90

தண்ணீரில் நிற்கின்ற தாமரைப்பூ பார்ப்போர்கள்
கண்ணை மனத்தைக் கவருமே - எண்ணுவீர்
நெஞ்சிரக்க முள்ளவராய் நீதி வழிநடப்பார்
அஞ்சலிக்கு ஆளாவார் ஆம். 91

கார்சூழ் மலையுச்சி கண்டுகுடி வாழ்வோரைச்
சூரியன் வெப்பம் சுடுவதில்லை - பார்மீது
மாந்தர் மகிழப் பணிபுரியும் நல்லோரை
தேய்ந்தழியச் செய்பவரார் தோரார். 92

காட்டு மரத்தைச் செல்லரிக்கும் கற்றூணை
ஆட்ட அதனால் ஆகுமோ - நாட்டிலே
எல்லோரும் நோய்பசிகள் இல்லா நிலைபெற்றால்
பொல்லாமை சூழ்வதிலை போற்று. 93

ஓட்டைப் படகேறி ஊர்பவர்கள் தம்கதியை
நாட்டைத் திருத்தாமல் நாசம்செய்வார் - பெறுவர்
தேசத்தார் எல்லோரும் தீதற்று வாழ்வதற்கே
யோசித்துச் செய்வதா சாரம். 94

ஆடைக்குப் பஞ்சிழைகள் ஆக்க ஒருவனால்
கூடுமோ உண்மையிதனைக் கூறுவாய் - வாடாமல்
நாமெல்லாம் ஒன்றுபட்டு நற்பணிகள் செய்தால்தான்
தீமையெல்லாம் போகுமே தீர்ந்து. 95

காவிரி நீர்ப்பெருக்கைக் கையால் தடைசெய்ய
யாவரால் தாமிங்கே யாகுங்காண் - நாவன்மை
ஊக்கம் முயற்சி உரநெஞ்சம் வாய்த்தவரைத்
தாக்களவ ரால்முடியும் தான். 96

மண்பாண்டத் துள்ளே மறைத்துப்பை வைத்தாலும்
கண்கூடாய்க் காட்டும் கசி நீரால் - உள்ளத்தே
வஞ்சகன் ஒளித்தாலும் ஊர் அறிய
மெள்ளப் புறம்கிளம்பு மே. 97

உண்டுகண் மூடி உறங்க விடமின்றித்
திண்டாடு வோர்துயர் தீர்க்காமல் - கண்டபடி
இன்பத்தில் ஆழ்ந்தே இசைகேட் டிருந்தாலும்
துன்பத்தில் ஆழ்வ துறுதி. 98

வெந்தீப் பசியால், வேகின்ற பாட்டாளர்
தந்துயரம் போக்கார் ததிங்கணத்தோம் - என்றிங்கே
எக்களித்தல் ஓங்கி எரிநெருப்பில் மண்ணெண்ணை
மிக்க வெடுத் தூற்றுவதே யாம். 99

ஊரார் வெறுக்க உலகம் பழிபேச
ஆருமே இன்புற்ற தில்லை - அவனியிலே
நன்மையுற வேண்டுமெனில் நானிலத்தில் வாழ்மக்கள்
தன்மை யறிந்தேகல் தரம். 100

## பலவகைப்பட்ட பாடல்கள்

இவ்வுலகில் மகிழ்ந்துறை எண்ணாதார் எவரும்இலை
அவ்வழியை அறிதலொரு கலையாகும் - நிசம் இதுவே

உளம் உவக்கும்செயலதனை ஓய்வின்றிச் செய்வதுவே
அளவிலாச் சுகமளிக்கும் அமுதமென அறிவுடன் மனங்கொள்வீர்.
101

சாதி இனம் மொழி, மதவெறி, பேய்களின்
சக்திய னைத்தையும் சாய்த்தே - நல்ல
நீதியித் தேசத்தில் நிலைத்து வளர்ந்திட
நேசங் கொண்டொன்றாகி நிற்போம். 102

பண்டைப் பெருமையைக் கொட்டி யளந்தே - இன்று
பாட்டிலும் உரையிலும் பேசி விட்டால்
கண்ட பயன் என்ன? மொழிந்திடுவீர் - உள்ள
கவலைகள் யாவும் ஒழிந்திடுமோ? 103

நல்லதோர் மாங்கனி என்று சொன்னால் - மட்டும்
நாவில் அதன் சுவை வருவதில்லை
சொல்லும் அந்நன்மைகள் பெற்றிடவே - இங்கு
சோர்வின்றி முயலுதல் வேண்டுமன்றோ. 104

வீர மறக்குலம் எங்கள் குலமே - என்று
வீணுரை பேசிப்பின் பிச்சை கேட்டால்
யார் அவர் தம்மை மதித்திடுவார் - நாடு
யாவும் கை கொட்டிச் சிரிக்கும் அன்றோ? 105

வள்ளுவர் கம்பர் இளங்கோவே - முன்
வாழ்ந்ததிந் நாடென்று சொல்லி நாம்
என்றும் தற்குறியாகி வாழ்ந்தால் - நமக்கு
என்ன மதிப்பிங்கே உண்டு சொல்வீர். 106

வீட்டுக்குள் உண்ணும் பொருள் பலவும் - நாம்
வேண்டும் அளவுகள் குவித்திருந்தும்
கூட்டிச் சமைத்துண்ணத் தெரிந்திலர் போல் - இங்கே
கூம்பிக் கிடந்துயிர் வாடுகின்றோம். 107

பள்ளங்கள் மேடின்றி நிரவிவிட்டால் - தண்ணீர்
பாய்ந்து பயிர்பண்ண நிலமுதவும்
கள்ளச் சமூக வர்க்க மழிந்தால் - மக்கள்
கருதும் நலம் பெற்றுக் களிப்படைவார். 108

இத்தனை நாள் துன்பப் பட்டு விட்டோம் - இனி
ஏமாற்றம் எய்தல் எந்நாளுமில்லை
நித்தியம் எங்கள் உழைப்புக் கொண்டே - எம்மை
நிர்மூலம் செய்தவர் வாழ்வழிப்போம். 109

இழந்த கலைச் செல்வம் இன்பமெல்லாம் - பெற
எல்லோரும் தோழமை கொண்டுழைப்போம்
பழந்தமிழ் வீரம் உரிமையெல்லாம் - இந்தப்
பாரெங்கும் ஓங்கப் பணிபுரிவோம். 110

மகிழ்ச்சியுடன் வாழ வழி ஒன்று நான் - சொல்லுகின்றேன்
மனதிலே பதித்து வைப்பீர்
சகத்தினிலே நமக்கு மகிழ் உள்ளதோ - இல்லையோ
என நினைக்க நேரம் இன்றி
மிகபிடித்த மானதொரு வேலையினை ஓயாமல்
மேன்மேலும் செய்யும் அதுவே
அகமகிழ்ந்து வாழும்வழி இதைமனத்தில் - அறிந்திடுவீர்
அனுதினமும் இன்பம் உறுவீர். 111

மேதினியில் நாளடைவில் மிகப் பெரிய மனிதராய்
நாமாவோம் என்று நினைப்போர் ஆதலிலை
அந்த விதம் அதிசயமாய்ச் சிலர் ஆதல்,
கூடுமில் உண்மை உணர்வீர். 112

நாசப்பிள வென்னும் நஞ்சை தெளித்திந்த
நாட்டைப் படுகளம் ஆக்கும் - கெட்ட
மோசக் கொடியர்கள் முக்காடு போட்டோட
முழங்குவோம் ஒற்றுமை கீதம். 113

வீரப் பயிரைப் பாரத பூமியில்
விளங்க வளர்த்தவர் ஆர் - புகழ்
சேரும் இந்நாட்டு மறக்குடி தோன்றிய
செழுந்தமிழ் வீரர் அன்றோ? 114

ஓங்கும் பலகலைச் செல்வங்கள் தேடி
உலகிற் களித்தவர் யார் - வளம்
தேங்கிக் கிடந்து விருந்துகள் செய்யும்
திருத் தமிழ்நாடர் அன்றோ? 115

காதல் மது வெள்ளம் ஓடும்படி பல
கவிதைகள் செய்தவர் ஆர் - இந்தப்
பூதலத்தில் முதல் தோன்றிய நற்றமிழ்ப்
புலவர் மணிகள் அன்றோ? 116

வாழ்க்கை முறைகளை நாடக மாக்கி
வழங்கியவர்கள் யார் - என்றும்
தாழ்ச்சி உயர்ச்சிகள் சொல்ல வெறுத்திடும்
தமிழ்க்குல மக்கள் அன்றோ. 117

இவ்வுலகில் ஆனந்தம் எய்தி வாழ
எண்ணாத மனிதர்கள் ஒருவர் - இல்லை
அவ்வழியை அறிதல் ஓர் கலையே யாகும்
அதை யறிந்தார்க் கென்னாளும் துன்பம் இல்லை. 118

உலகமெலாம் ஒன்றாகிச் சோதரராய் வாழ்வதற்கே
பலபெரியோர் முயன்றார்கள், முயல்கின்றார் - பலிக்கவில்லை
நிலத்தனிலே நிதிபடைத்த கும்பல் இதை விரும்பவில்லை
பலங்குறைந்த என்போன்றோர் பண்ணுவதென் பரம்பொருளே 119

## கல்வியின் பயன்

*(நாதர் முடிமேலிருக்கும் வெண்ணிலாவே)*
*(என்கிற மெட்டு)*

புத்திமிக ஓங்கவேண்டும் கல்வியாலே
பொய்யுரைகள் போகவேண்டும் கல்வியாலே
சக்திமிகத் தோன்றவேண்டும் கல்வியாலே
சங்கடங்கள் மாயவேண்டும் கல்வியாலே
இத்தரையில் அற்புதங்கள் கல்வியாலே
எளிதிற்கண்டு கொள்ளவேண்டும் கல்வியாலே
வித்தைபல காணவேண்டும் கல்வியாலே
வன்செயல்கள் நீங்கவேண்டும் கல்வியாலே 1

சாதிபேதம் ஓடவேண்டும் கல்வியாலே
சனசமூகம் கூடவேண்டும் கல்வியாலே
நீதிமுறை வாழவேண்டும் கல்வியாலே
நிர்வகித்தும் தன்மைவேண்டும் கல்வியாலே
மாதர்களும் துன்பம்நீங்கி கல்வியாலே
மனமகிழ்ந்து வாழவேண்டும் கல்வியாலே
பாதகங்கள் ஒன்றுமின்றிக் கல்வியாலே
பாருலகம் களிக்கவேண்டும் கல்வியாலே. 2

அடிமைவிலங் கோடவேண்டும் கல்வியாலே
அன்புமழை கொட்டவேண்டும் கல்வியாலே
கொடுமைக்குணம் மாறவேண்டும் கல்வியாலே
கோபதாபம் தீரவேண்டும் கல்வியாலே

விடுதலையாம் மார்க்கந்தன்னில் கல்வியாலே
விரைந்துசென்று சேரவேண்டும் கல்வியாலே
படித்தவற்றின் உண்மைகளைக் கல்வியாலே
பகுத்தறிந்து கொள்ளவேண்டும் கல்வியாலே 3

சுயநலங்கள் போகவேண்டும் கல்வியாலே
சோதரர்கள் ஆகவேண்டும் கல்வியாலே
பயப்படுதல் மாறவேண்டும் கல்வியாலே
பாரதத்தாய் ஓங்கவேண்டும் கல்வியாலே
இயற்கைப்பொருள் யாவுங்கண்டு கல்வியாலே
இன்பமுற்று வாழவேண்டும் கல்வியாலே
அயர்ச்சியின்றி ஊக்கங்கொண்டு கல்வியாலே
அற்புதங்கள் செய்யவேண்டும் கல்வியாலே 4

வனவிலங்காய் வாழ்ந்த மனிதர்களை மேலாம்
இனமாகச் செய்த தறிவு. (புதுக்குறள்)

தன்னடக்கத் திருவுருவாம் தமிழ்த் தாயின் திருமகனாம்
கன்னித்தமிழ் நாட்டின் கருத்து நிறை ஆசிரியன்
தன்கடமை பெரிதென்போன் தனிப்புகழ்ச்சி வேண்டாதோன்
அன்பருக்கு ஆட்பட்ட அன்பர்சிதம்பரனார் (ரதுலன்)

# கல்வி வளர்ப்பீர்

## (சாமி. சிதம்பரனார்)

நாடெங்கும் புத்தகச் சாலைகள் வைப்பீர்!
    நன்மை அளித்திடும் அறிவை வளர்ப்பீர்!
வீடெங்கும் காவியம் விளங்கிடச் செய்வீர்!
    விஞ்ஞான வித்தையை விரும்பியே கற்பீர்!
ஏடெங்கும் வாழ்கின்ற மக்களின் கையில்
    இறக்கும் வரைப்பிரி யாமலே செய்வீர்!
காடெங்குக் காணினும் அங்கொன்று வைப்பீர்!
    கன்னியர் ஆடவர் கற்று மகிழ்வீர்! 1

வீதிகள் எங்கணும் பள்ளிகள் வைப்பீர்!
    வேண்டிய செல்வங்கள் கோயிலிற் கொள்வீர்!
சாதிகள் தோன்றிய தீமையை யார்க்கும்
    சாற்றிடும் புத்தகம் சாலத் தொகுப்பீர்!
நீதிகள் வாயினால் பேசியே நீங்கள்
    நித்தமுங் காலத்தை வீணினிற் போக்கீர்!
வேதனை நீங்கியே சுகமுற வேண்டில்
    வித்தைகள் பற்பல நாட்டில் வளர்ப்பீர்! 2

செல்வர்கள் ஏழைகள் யாவரும் சேர்ந்தே
    செந்தமிழ்த் தாயடி சேவை புரிந்தே
பல்வகைக் கைத்தொழில் பண்ணும் முறையும்
    பார்புகழ் ஓவியம் காவியம் யாவும்
நல்வகை யாகிய ஞானங்கள் காட்டும்
    நாடக சாலைகள் காட்சிகள் காண்பீர்!

மல்கிய சீர்நிறை இந்திய நாட்டீர்
    மாநிலம் எங்கணும் உம்புகழ் செய்வீர்! 3

தேவியெனக் கல்விக்கோர் தெய்வம் வைத்தே
    தேங்காய் கனியொடு வெற்றிலை சேர்த்துத்
தூவிய வாசனைப் புகையுடன் தீபம்
    தொடுத்த மலர்களும் கொண்டு பணிந்தால்
நாவிற் பழகிடும் கல்வியும் நம்தம்
    நாட்டில் வசித்திடும் மக்களுக் கெங்கே
மேவும்? மதிப்பெற்ற மாந்தரே சொல்லும்
    மேல்நிலத் தார்இதைக் கேட்டு நகைப்பார். 4

தூங்கும் தடியவர்கள் வாழ்மடம் யாவும்
    பள்ளியும் புத்தக சாலையும் வைப்பீர்!
ஈங்குறை வோர்மனம் கற்பதில் ஓட
    இயற்றிய சிறுபெறும் புத்தகஞ் சேர்ப்பீர்!
ஆங்கொரு வண்டியிற் கொண்டுசிற் றூர்கள்
    அனைத்திலும் போயங்கு வாழ்ந்திடும் மக்கள்
தாங்கள் படித்தறி வுற்றிடும் வண்ணம்
    தந்திடும் புத்தக சாலைகள் செய்வீர்! 5

கல்வியைக் கற்றவர் யாவரும் கேளீர்!
    கற்றவை யாவையும் மற்றவர் காணப்
பல்விதம் ஆகிய சாத்திரஞ் செய்வீர்!
    பயனற்ற பேச்சுகள் இனியிங்கு வேண்டாம்
செல்வர்கள் யாவரும் சிந்தித்துப் பார்ப்பீர்!
    சிறுமையில் வாழ்ந்திடும் ஏழைகள் யாவரும்
நல்வகை வித்தைகள் கற்றின்ப வாழ்வில்
    நாளும் சுகித்திட உதவிகள் செய்வீர்! 6

**(கவிதா மண்டலம் 1935-ல்)**

# சுதந்தரக் கூத்து

*(இராகம் - வாளி, தாளம் - ஆதி)*

**பல்லவி**

பாடுவோமே - துள்ளிப் - பாடுவோமே
பகுத்தறி வுணர்ச்சியைப் பெற்று விட்டோ மென்று
(பாடுவோமே)

**சரணங்கள்**

எங்குஞ் சென்று சுதந்தர
நாதஞ் செய்வோம் - நாம்
எல்லோரும் ஒன்றெனவே
போதம் செய்வோம்
இங்குறையும் சோம்பேறி
வாழ்க்கை போக்கி - மிக
இன்பமுடன் வாழ்ந்திருக்கும்
வாழ்வை யாக்கி (பாடுவோமே) 1

பொய்மொழிகள் பேசுவோரின்
வாழ்வு போச்சே - தர்ப்பைப்
புல்லினுக்குப் பணிவோரின்
தாழ்வு போச்சே
மெய்மொழிகள் பேசுவோரின்
வாழ்வு மாச்சே - இந்த
மேதினியில் எங்குஞ்சம
வாழ்வு மாச்சே (பாடுவோமே) 2

அறிவுக்கும் உழைப்புக்கும்
    வந்தனை செய்வோம் - வீணில்
அயர்ந்திங்குக் கிடப்போரை
    நிந்தனை செய்வோம்
உரிமைக்கும் உதவிக்கும்
    உயிரை யளிப்போம் - உலகில்
உண்மைச் சம தர்மமெங்கும்
    ஓங்க வைப்போம் (பாடுவோமே) 3

மூடுபனி போன்றமதக்
    கூட்ட மெல்லாம் - இங்கு
மூண்டுபகுத் தறிவென்னும்
    சூரியன் முன்னே
ஓடியொளிக் கின்றஒரு
    காட்சி கண்டோம் - உண்மை
ஓங்கிவளர் விஞ்ஞான
    மாட்சி கண்டோம் (பாடுவோமே) 4

ஏழையர்கள் என்பவரைப்
    இகழ்வு செய்யோம் - பெரும்
எஜமானர் என்பவரைப்
    புகழ்வு செய்யோம் ஏழையர்கள் எஜமானர்
    என்னும் பேச்சே - இங்கே
இருப்பதற்கும் இடமின்றி
    ஏகச் செய்வோம் (பாடுவோமே) 5

சாதியழிந் தோடுகின்ற
    காலம் வந்ததே - கெட்ட
சமயமழிந் தோடுகின்ற
    காலம் வந்ததே
ஆதியழிந் தோடுகின்ற
    காலம் வந்ததே - நல்ல

அறிவு வளர்ந்தோங்குகின்ற
காலம் வந்ததே (பாடுவோமே) 6

சாத்திரங்கள் பொய்மொழியே
என்ப தறிந்தோம் - அவை
சஞ்சலங்கள் தந்தனவே
என்ப தறிந்தோம்
ஆத்திரக்கொண் டவையெல்லாம்
தீயில் எரிப்போம் - பெரும்
அன்புப்பயிர் ஓங்குறவே
எங்கும் வளர்ப்போம் (பாடுவோமே) 7

உலகத்துப் பொருளொன்றே
என்ப தறிந்தோம் - அதுவே
உழைக்கின்ற நம்முடமை
என்ப தறிந்தோம்
நலமற்ற வஞ்சகரின்
சூதை அழிப்போம் - சற்றும்
ஞானமில்லார் செய்கொடுமை
போக ஒழிப்போம் (பாடுவோமே) 8

தந்நலமே கொண்டுறைதல்
மிருகவாழ்வே - அதனைத்
தவிர்ந்தினிது வாழ்வதுவே
மனித வாழ்வே
இந்நிலத்தில் என்னுடைமை
என்ப தொழிந்தே - செல்வம்
எவருக்கும் பொதுவாகும்
என்ப தறிந்தே (பாடுவோமே) 9

கண்ணுமனங் காயங்கட்கும்
எட்டா ஒன்றே - இந்தக்

காசினியில் வாழுவோரை
    ஆட்டு மென்றே
மண்ணுலக வாழ்வுபோக
    வார்த்தை பேசி - நம்மை
மயங்கவைக்குங் குருவென்போர்
    வஞ்சம் போக்கி (பாடுவோமே)

# ஆக்கமும் அழிப்பும்

தேடி அழிப்போம் - பேதம்
தேடி அழிப்போம் - நன்மை தேரும் சமத்துவ வாழ்வ வளர்ப்போம்
கூடி மகிழ்வோம் - ஒன்று
கூடி மகிழ்வோம் - ஒன்றும் கோணல் வழக்குகள் சொல்லுதல்
வேண்டாம். 1

வஞ்சங் கெடுப்போம் - கெட்ட
வஞ்சங் கெடுப்போம் - இன்ப
வாழ்வினில் மக்களை வாழ்ந்திட வைப்போம்
அஞ்சல் ஒழிப்போம் - நந்தம்
அஞ்சல் ஒழிப்போம் - மிக்க ஆண்மை உணர்வுடன் ஆவண
செய்வோம் 2

மூடம் அழிப்போம் - தீய
மூடம் அழிப்போம் - இங்கு
மூளும் வினைகட்கக் காரணம் காண்போம்
நாடி அறிவோம் - நன்கு
நாடி அறிவோம் - இந்த நானிலம் இன்புற நல்வழியாதென 3

எட்டி எறிவோம் - நாமும்
எட்டி எறிவோம் - நமக்
கின்னல் விளைத்திடும் மூடச் செயல்களை
கட்டி எரிப்போம் - நன்றாய்க்
கட்டி எரிப்போம் - பெரும் கஷ்டம் விளைத்திடும் சாஸ்திர
மூட்டையை 4

சாதி அழிப்போம் - பாழும்
சாதி அழிப்போம் - வாழும்
மாந்தர் அனைவரும் ஒன்றெனக் கூறியே
சேதி உரைப்போம் - எங்குஞ்
சேதி உரைப்போம் - யாரும் சேர்ந்து சமத்துவ வாழ்வு புரிகென 5

வாதை அழிப்போம் - துயர்
வாதை அழிப்போம் - உயர்
வாழ்வு மனங்கொண்டு வாய்மையுரைப்போம்
காதல் வளர்ப்போம் - உண்மைக்
காதல் வளர்ப்போம் - இந்தக் காசினி மாந்தர்கள் யாவரும் கூடிட 6

ஆசை கெடுப்போம் - சொந்த
ஆசை கெடுப்போம் - நம்மை
ஆட்டுஞ் சுயநலப் பேயை அழிப்போம்
தேசம் புரப்போம் - நந்தம்
தேசம் புரப்போம் - இங்குத் தேடும் நிதிநலம் யாவரும் பெறுகென 7

அப்பா நீ முருகனென்றால் ஏதோ வென்றே
அறிவிழந்து தடுமாற்றம் அடையவேண்டாம்;
எப்பாலும் நிறைந்தின்பத் தேனே பெய்யும்;
இல்லாத இடமிந்த உலகில் இல்லை;
தப்பாகப் பின்னோர்கள் கதைகள் கூறித்
தம்மனம்போல் புராணங்கள் பாடி வைத்தார்;
முப்பாலாங் காலத்தும் அழிவே யின்றி
முருகுநிலை பெறுமென்றே அறிந்துகொள்வாய்? 1

மாறாத பேரிளமை, அழகு, தெய்வம்
மாட்சிதிரு இவையெல்லாம் முருகின் பேரே;
தாராள மாகநினை யறிவி னாலே
தரணியிலே இயற்கை தரும் காட்சி காண்பாய்?
நீராருங் கடல்தனிலே முருகு தோன்றும்
**நீதிநெறி தவறார்பால் அழகு நிற்கும்;**
காராரும் சோலையிலே மயில்கள் ஆடிக்
களிப்படையும் காட்சியிலே முருகு காணும். 2

தகதகத்து வெயில்வீசும் கதிரோன் பாலும்,
தண்ணொளியால் காதல்வளர் மதியின் கண்ணும்
நகுதல்என மினுமினுத்து வானில் வாழும்
நாண்மீன்கள் கூட்டத்தும், நதியின் கண்ணே
மிகவிரைந்து சுழித்தோடும் நீரின் மேலும்,
மேவும்அதன் கரைவளர்தண் சோலையெங்கும்,
அகம்உருக கருணியெனும் மாரி சிந்தும்
அழகுகுயில் கீதத்தும் முருகு தோன்றும். 3

பலநிறநூல் எடுத்தழகு பூக்கள் நெய்த
பசியநிறப் பட்டாடை விரித்தாற் போல
இலகுபசும் புற்றரையில் மலர்கள் சிந்தி
இருக்கும்எழில் காட்சியிலே முருகு வாழும்;
கலகலென மணிசிந்தி வானவில் போல்
காணஒலி எழுப்பிவீழ் அருவி பாலும்,
மலையதனை மரகதத்தின் திரளாய்க் காட்டி
மகிழ்ச்சிதரும் சோலையிலும் முருகு தோன்றும். 4

வெண்மணல்சேர் வெளியின்மேல் விதவி தத்தில்
விரிமலர்வீழ் கொடிபடர்ந்த மரங்கள் நிற்கத்
தண்ணிலவு பாலெனவே வீச ஆங்கே
தவழ்கின்ற அழகிளமைக் காட்சி யென்ன!
கண்கவரும் திறம்இயற்கைப் பொருளி லேனும்
கைவல்லார் அறிவாற்செய் பொருளி லேனும்
நண்ணியிருந் திடுமாயின் அதுவும் மாறா
நல்லபுது உணர்வுதரும் முருகு தானே. 5

காதல்விளை நல்லறிவு குணங்கள் எல்லாம்
கற்றறிந்து வனப்புக்கோர் உறையுள் ஆன
மாதர்களின் நடையினிலே கருணை ஊற்றி
மருண்டவிழிப் பார்வையிலே. மதி முகத்தே
கீதமென இன்னிசையும் பொருளுஞ் சேரும்
கிளவியிலே, கேடில்லாச் செயல்களை தம்மில்
தீதெல்லாம் பகலெதிரும் பனிபோல் ஆகத்
தேசுதரும் தமிழ் முருகைக் காண லாமே. 6

பாலொடுதேன் கனிரசமும் கலந்தாற் போன்ற
பழந்தமிழ்ச்சொல் மாலையினில், அறிஞர் பாட்டில்,
சாலமகிழ் தருங்குதலை அமுதந் தந்து
சந்ததமும் புதியவிளை யாடல் காட்டிக்
கோளங்கொள் குழந்தைகள்பால் பண்இ சைத்துக்
குதுகலஞ்செய் வீணைமுதல் கருவி கள்பால்

நீலமணி படிந்ததென நிறைநீர்ப் பொய்கை
நின்றொளிரும் தாமரைபால் முருகு தோன்றும். 7

இந்தவகை முருகுதிகழ் இடங்கள் எல்லாம்
இவைஇவையாம் என்றுரைக்கப் புகுவார்ஆயின்
அந்தமிலை எனஅதுவும் வளர்ந்து நீண்டே
அலைகடல்நீர்த் துளியெண்ணும்கணக்கில் ஆகும்
செந்தமிழ் பெருகுசுவை போல இன்பம்
செறிந்துயிர்க்குத் துணைசெய்யும்முருகுவாழ்வைச்
சிந்தையுடன் கண்கொண்டு கண்டு தேர்மின்?
செகத்தினிலே பேரின்பம் எய்தலாமே. 8

பழந்தமிழர் முருகுதனை அறிந்த வற்றால்
பாரெல்லாம் புகழ்மணக்க நிமர்ந்து நின்றார்;
எழுந்துயரம் வளர்க்கின்ற பேதம் எல்லாம்
இல்லாமல் ஒருகுலமாய் வாழ்ந்து வந்தார்;
இழிவுதரும் சோம்பல்பயம், ஆண்மை யின்மை,
எனதுநலம் பெரிதென்னும் மூடக் கொள்கை
அழிந்துபட இழந்ததனம் கிடைத்த தைப்போல்
அளவில்லா மகிழ்ச்சிதரும் முருகு தேர்வீர்? 9

பொல்லாத சாதிமத சாத்தி ரப்பேய்
போய்மாள நமக்குள்ளே இருக்குஞ் சண்டை
எல்லாமும் அடிசாய்ந்தே இன்பம் பொங்கும்;
எழில்திகழும் ஓவியத்தில் காவியத்தில்
நல்லார்கள் காதல்தனில், கவிதை யூற்றில்,
நாளும்வளர் சங்கீத சாக ரத்தில்
வல்லாராய்ச் சுதந்திரராய்க் கவலை யின்றி
வாழ்ந்திடலாம் தமிழ்முருகை அறிந்துகொள்வீர் 10

**(பரிசு பெற்ற கவிதை - 1935-ல் கவிதா மண்டலம்)**

✸ ✸ ✸

# சாமி.சிதம்பரனார் படைப்புகள்

## தொகுதி - 1

1. கதாவாசக பாடமும் செய்யுட் பாடமும் முதற்பாகம் 1929
2. கதாவாசக பாடமும் செய்யுட் பாடமும் இரண்டாம் பாகம் 1929
3. கதாவாசக பாடமும் செய்யுட் பாடமும் மூன்றாம் பாகம் 1931
4. தமிழ்ப் பாடத் தொகை நான்காம் பாகம் 1938

## தொகுதி - 2

1. தமிழர் தலைவர் (பெரியார் ஈ.வெ.ரா. வரலாறு) 1939

## தொகுதி - 3

1. அணைந்த விளக்கு (கதைச் செய்யுள்) 1944
2. அணைந்த விளக்கு (அரசியல் சமூக சீர்திருத்த நாடகம்) 1948

## தொகுதி - 4

1. திருக்குறள் பொருள் விளக்கம் 1959

## தொகுதி - 5

1. நாலடியார் பாட்டும் உரையும் 1959
2. நான்மணிக்கடிகை (பாட்டும் உரையும்) 1960

## தொகுதி - 6

1. பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும் 1956
2. எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும் 1957

## தொகுதி - 7

1. கம்பன் கண்ட தமிழகம் 1955
2. பதினெண்கீழ்க் கணக்கும் தமிழர் வாழ்வும் 1957

## தொகுதி - 8

| | |
|---|---|
| 1. சிலப்பதிகாரத் தமிழகம் | 1958 |
| 2. மணிமேகலை காட்டும் மனித வாழ்வு | 1960 |

## தொகுதி - 9

| | |
|---|---|
| 1. இலக்கியச் சோலை (புறநானூறு) | 1958 |
| 2. பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை | 1967 |

## தொகுதி - 10

| | |
|---|---|
| 1. வள்ளுவர் காட்டிய வைதீகம் | 1949 |
| 2. வள்ளுவர் வாழ்ந்த தமிழகம் | 1956 |

## தொகுதி - 11

| | |
|---|---|
| 1. பெண்மக்கள் பெருமை (அ) மாதர் சுதந்திரம் | 1929 |
| 2. காரல் ஹென்றி மார்க்ஸ் | 1937 |
| 3. ஆபுத்திரன் அல்லது சமூக ஊழியன் | 1940 |
| 4. முன்சீப் வேதநாயகம் பிள்ளை | 1955 |

## தொகுதி - 12

| | |
|---|---|
| 1. சிதம்பரனார் சீர்திருத்தப் பாடல்கள் | 1929 |
| 2. இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 1935 |
| 3. உமர்கய்யாம் | 1946 |
| 4. சிந்தனைச் செய்யுள் | 1956 |
| 5. சாமி சிதம்பரனார் புதுக்குறள் | 1960 |
| 6. அறிவு (கவிதை) | 1964 |

## தொகுதி - 13

| | |
|---|---|
| 1. தேவாரத் திருமொழிகள் | 1959 |
| 2. ஆழ்வார்கள் அருள்மொழி | 1959 |

## தொகுதி - 14

| | |
|---|---|
| 1. வடலூரார் வாய்மொழி | 1959 |
| 2. சங்கப் புலவர் சன்மார்க்கம் | 1960 |
| 3. பட்டினத்தார் தாயுமானார் பாடல் பெருமை | 1963 |

## தொகுதி - 15

| | |
|---|---|
| 1. அருணகிரியார் குருபரர் அறிவுரைகள் | 1960 |
| 2. மணிவாசகர் – மூலர் மணிமொழிகள் | 1961 |

## தொகுதி - 16

| | |
|---|---|
| 1. புதிய தமிழகம் | 1952 |
| 2. வளரும் தமிழ் | 1954 |
| 3. தொல்காப்பியத் தமிழர் | 1956 |

## தொகுதி - 17

| | |
|---|---|
| 1. பழந்தமிழர் அரசியல் | 1959 |
| 2. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் | 1960 |
| 3. தமிழர் வீரம் | 1964 |

## தொகுதி - 18

| | |
|---|---|
| 1. சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் – தத்துவம் | 1960 |
| 2. இலக்கியம் என்றால் என்ன? 1, 2 | 1963 |
| 3. சிறுகதைச் சோலை (தொகுப்பு) | 1964 |

## தொகுதி - 19

| | |
|---|---|
| 1. கம்பராமாயணத் தொகுப்பு | 1962 |

## தொகுதி - 20

| | |
|---|---|
| 1. கம்பராமாயணத் தொகுப்பு | 1962 |

## தொகுதி - 21

| | |
|---|---|
| 1. குறுந்தொகைப் பெருஞ்செல்வம் | 1955 |

## தொகுதி - 22

| | |
|---|---|
| 1. குறுந்தொகைப் பெருஞ்செல்வம் | 1955 |

# குறிப்புகள்

# குறிப்புகள்

"அறிவு என்ற இந்தச் சிறு நூலில் செய்யுட்கள் 130 அமைந்திருக்கின்றன. தமிழறிஞர் - இந்நூலின் ஆசிரியரவர்கள் பலப்பல சமயங்களில் பாடிய பாட்டுக்கள் இவைகள். சிறந்த பகுத்தறிவும் புதுமை மிக்க கருத்துக்களும் நிறைந்த செய்யுட்கள். மக்களின் நல்வாழ்விற்கு வழி வகுக்கும் அறிவு ஜோதி."

அமிழ்தம் பதிப்பகம்
பி-11, குல்மோகர் குடியிருப்பு,
35, தெற்கு போக்கு சாலை,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
பேசி : 2433 9030